அத்தியாயம் 1 (597)

## பாஸ்காவிற்கு முந்திய வியாழக்கிழமை மாலை. சேசு இராப்போஜன சாலைக்கு வருதலும் தம் தாயிடம் விடைபெறுதலும்

*17 பெப்ருவரி 1944*

**பா**ஸ்கா உணவு உட்கொள்ளப்பட வேண்டிய இராப் போஜன அறையை நான் காண்கிறேன். அதைத் தெளிவாக என்னால் காண முடிகிறது. சுவர்களில் காணப்படும் கரடு முரடான இடங்களையும் தரையின் கீறல்களையும் எண்ணிச் சொல்ல என்னால் கூடும்.

அது சம சதுரமல்லாத ஒரு பெரிய அறை; சற்று நீண்ட சதுரமானது. அதன் நீண்ட பக்கத்திற்கும், குறுகிய பக்கத்திற்கும் உள்ள வித்தியாசம், அதிக பட்சம் ஒரு மீட்டர் அல்லது சற்றுக் கூடுதலாக இருக்கும். தாழ்ந்த மேற்கூரை. ஒருவேளை அது அப்படித் தோன்றுவதாயிருக்கலாம். ஏனென்றால் அவ்வறையின் உயரம் அதன அளவோடு பொருந்தவில்லை. கூரை சற்று வளைவாக உள்ளது. அதாவது, அறையின் இரு குட்டைச் சுவர்களும், கூரை வந்து பொருந்துமிடத்தில் செங்கோணமாயில்லை. வட்டமாக உள்ளது.

இக்குட்டைச் சுவர்களில் இரண்டு தாழ்வான பெரிய ஜன்னல்கள் எதிர் எதிராயிருக்கின்றன. ஜன்னல்களின் அடைப்புகள் மூடியிருப்பதால் ஜன்னல்களுக்கு வெளியே முற்றம் உள்ளதா, வீதி உள்ளதா என்று என்னால் காணக் கூடவில்லை. ஜன்னல் அடைபபுகள என்றேன். அது சரியான வார்த்தைதானா என்று தெரியவில்லை. அவை பலகை அட்டைகளால் செய்யப்பட்ட ஜன்னல் மூடிகள். அவற்றின் குறுக்காக இரும்பு அடிதண்டாக்களால் அவை உறுதியாக்கப்பட்டுள்ளன.

தரையில், சுட்ட மண்ணால் செய்யப்பட்ட சதுரக் கற்கள் பாவப்பட்டிருக்கின்றன. பழமையால் நிறம் விட்டுப் போயிருக்கின்றன பல கிளைகளுள்ள ஒரு எண்ணெய் விளக்கு கூரையின் மத்தியிலிருந்து தொங்குகிறது.

ஒரு புற நீளச் சுவரில் எந்தத் திறப்பும் இல்லை. மற்ற நீளச் சுவரின் ஒரு ஓரத்தில் ஒரு சிறு கதவு உள்ளது. அதற்கு ஆறு படிகள் உள்ள படிக்கட்டு. கைப்பிடிக் கம்பி எதுவும் இல்லாமல் உள்ளது. அதன் மேல்படி ஒரு சதுர மீட்டர் அளவான தளத்தில் முடிகிறது. அந்தத் தளத்தில், சுவரையொட்டி இன்னொரு படி உள்ளது. அதன் மேல் கதவு உள்ளது. தெளிவாகச் சொல்கிறேனா, என்னவோ.

சுவர்கள் அலங்காரம் எதுவுமில்லாமல் வெள்ளையடிக்கப் பட்டிருக்கின்றன. வரம்புக் கோடுகள் தீட்டப்படவில்லை. அவ்வறையின் மத்தியில் ஒரு நீண்ட சதுர மேசை கிடக்கிறது. அதன் அகலத்துடன் ஒப்பிடும்போது, அது மிக நீளமானது. நீண்ட சுவர்களுக்கு இணை கோடாக அது போடப்பட்டுள்ளது. அது சாதாரண மரத்தால் செய்யப்பட்டிருக்கிறது. நீளமான சுவர்களின் ஓரங்களில் சில இருக்கைகள் உள்ளன. குட்டையான சுவர் ஒன்றின் ஜன்னலுக்கடியில் ஒரு அலமாரியும், சில பெரிய அகன்ற வட்டப் பாத்திரங்களும், ஒரு ஜாடியும் வைக்கப்பட்டுள்ளன. மற்ற ஜன்னலின் கீழ் ஒரு நீண்ட பலகை காணப்படுகிறது. தற்போது அதில் எதுவும் இல்லை.

பாஸ்கா விருந்து உட்கொள்ளப்படவிருக்கும் அறையைப் பற்றிய விரிப்பு இதுதான். நாள் முழுவதும் அதை நான் பார்த்தேன். படிகளை எண்ணவும் எல்லா விவரங்களையும் என்னால் கவனிக்கவும் முடிந்தது. இப்பொழுது மாலை இருள் பரவுவதால் என் சேசு என்னை மீதமுள்ள தியானக் காட்சிகளுக்குக் கொண்டு செல்கிறார்.

ஆறு படிகள் உள்ள படிக்கட்டு ஒரு இருட்டான முன்கூடத்திற்குச் செல்கிறது. நான் இருப்பதை வைத்துப் பார்த்தால் எனது இடது பக்கமாக அது உள்ளது. அங்கே தெருவைப் பார்க்கத் திறக்கும் ஒரு கதவு காணப்படுகிறது. அந்தக் கதவு அகலமாயும் தாழ்ந்தும் உலோகப் பட்டைகளாலும் மொட்டு ஆணிகளாலும் மிக உறுதியாக்கப்பட்டிருக்கிறது. இந்த முன்கூடத்துக்கு வருகிற கதவுக்கு நேர் எதிராக இன்னொரு சிறு கதவு அடுத்த ஒரு அறைக்கு வழி திறக்கிறது. அது சிறிய அறை.

அவ்வீட்டின் மற்ற அறைகளுக்கும் தெருவின்

நிலமட்டத்திற்கும் உள்ள உயர வித்தியாசத்தினுல் இராப் போஜன சாலேயின் அமைப்பு இப்படி உள்ளது என்று எனக்குத் தோன்றுகிறது; அசன சாலே ஒரு அடித்தளம் போலும், ஒரு நிலவறையைச் சுத்தம் செய்து திருத்தியமைக்கப்பட்டது போலும் தெரிகிறது. அது நிலத்துக்கடியில் தாராளமாக ஒரு மீட்டர் புதைந்து காணப்படுகிறது. அதன் விஸ்தீரணத்திற்கு ஏற்ப அதை உயர்த்தி அமைப்பதற்காக அப்படிச் செய்திருக்கக் கூடும்.

நான் இப்பொழுது காண்கிற அறையில் மாதா மற்ற ஸ்திரீகளுடன் இருக்கிருர்கள். மரிய மதலேனேயும், யாகப்பர், யூதா, சீமோன் ஆகியோரின் தாயையும் அடையாளம் காண்கிறேன். அவர்களே அருளப்பர் இப்பொழுதுதான் கூட்டி வந்திருப்பதாகத் தெரிகிறது. காரணம் அவர்கள் தங்கள் மேல் வஸ்திரங்களேக் கழற்றி மடித்து அங்குமிங்கும் கிடக்கிற இருக்கைகள் மேல் வைக்கிருர்கள். அவர்கள் வெளியே புறப்பட்டுச் செல்கிற அருளப்பருக்கு விடை கொடுக்கிருர்கள். அவர்கள் வந்து சேர்ந்ததும் அங்கே ஒரு மனிதனும், ஸ்திரீயும் வேகமாய் வந்து மாதாவுக்கு மரியாதையுடனும், நட்புறவுடனும் நடந்து கொள்கிருர்கள். இதிலிருந்து நான் அவர்கள் தான் இவ்வீட்டின் சொந்தக்காரர்கள் எனறும் நசரேயன் மேல் அனுதாபமுள்ளவர்கள் என்றும் யூகிக்கிறேன். மாதா ஒரு ஆழ்ந்த நீல நிற உடையணிந்திருக்கிருர்கள். ஊதா கலந்த நீலம். தலேயில் ஒரு வெண் முக்காடு உள்ளது. அது, அவர்களின் தலேயையும் சேர்த்து மூடியிருந்த மேல் வஸ்திரத்தை அகற்றிய போது காணப்படுகிறது. வயதானவர்களேப் போலும், களேப்புற்றவர்களேப் போலும் மாதா தோற்றமளிக்கிருர்கள். அவர்கள் மிகத் துயரமாயிருக்கிருர்கள். ஆயினும் அன்போடு புன்னகை செய்கிருர்கள். மிக வெளிறிப் போயிருக்கிருர்கள். சிந்தனே வசப்பட்டவர்களிடம் உள்ளது போல அவர்களின் அசைவுகள் தயக்கத்துடனும் களேத்தும் காணப்படுகின்றன.

திறந்து வைக்கப்பட்ட கதவின் வழியாக வீட்டெஜமான் வருவதைக் காண்கிறேன். அவர் முன் கூடத்தின் அறைக்கும், இராப் போஜன சாலேக்கும் போகிருர். பெரிய எண்ணெய் விளக்கில் ஏற்றப்படாமலிருந்த திரிகளேயெல்லாம் ஏற்றி வைக்கிருர். பின் அவர் தலேவாசலுக்குப் போய் அதைத் திறக்கவும், சேசு அப்போஸ்தலர்களுடன் உள்ளே வருகிருர். இருள் பரவுவதை நான் காண்கிறேன். உயர்ந்த வீடுகளுக்கிடையில் தெருவில் இரவின்



நிழல்கள் இறங்குகின்றன.

சேசுவுடன் அனேத்து அப்போஸ்தலர்களும் இருக்கின்றுர்கள். "இவ்வீட்டிற்கு சமாதானம்!" என்று தம் வழக்கமான வந்தனத்தைக் கூறி சேசு வீட்டெஜமானுக்கு முகமன் சொல்கிருர். அப்போஸ்தலர்கள் இராப்போஜன சாலேக்குள் செல்கிருர்கள். சேசு மாதா இருக்கிற அறைக்குப் போகிருர். பக்தியுள்ள ஸ்திரீகள் ஆழ்ந்த மரியாதையுடன் சேசுவுக்கு உபசாரம் சொல்லி, பின் தாயையும், குமாரனேயும் சுயாதீனமாய் இருக்க விட்டு வெளியே வந்து கதவைச் சாத்தியபின் போய் விடுகிருர்கள்.

சேசு தம் தாயை அரவணேத்து நெற்றியில் முத்தமிட, மாதா முதலில் தன் குமாரனின் கரத்திலும், பின் வலது கன்னத்திலும் முத்தஞ்செய்கிருர்கள். சேசு மாதாவை அமர வைத்து, தாமும் அருகில் அமருகிருர். இரண்டு இருக்கைகளேப் பக்கத்தில் போட்டு அமர்ந்திருக்கிருர்கள். சேசு மாதாவின் கரத்தைப் பிடித்தபடியே இருக்கைக்குக் கூட்டிச் சென்று அமர வைத்து தாமும் அமர்ந்துள்ளார்.

சேசுவும் சிந்தனேயில் ஆழ்ந்தவராய் புன்முறுவல் செய்ய முயன்றுலும், அவர் துயரமாகவேயிருக்கிருர். அவருடைய முகபாவங்களே மாதா கவலேயுடன் கணக்கிடுகிருர்கள். இந்நேரம் எப்படிப்பட்டதென்று வரப்பிரசாதத்தாலும், அன்பாலும் புரிந்து கொள்ளும் தாய், பாவம்! வேதனேயான துடிப்புகள் அவர்களின் முகத்தில் காணப்படுகின்றன. ஆழ்ந்த துயரத்தில் உள்ளரங்கக் காட்சியால் கண்கள் அகலமடைகின்றன. ஆனுல் அவர்கள் அதைக் காட்டிக் கொள்ளாமல் தன் குமாரனேப் போன்றே பெருந்தன்மையுடன் இருக்கிருர்கள்.

சேசு மாதாவிடம் பேசி உபசாரம் கூறி தமக்காக அவர்கள் வேண்டிக் கொள்ளும்படி கேட்கிருர்.

"அம்மா, உங்களிடமிருந்து திடத்தையும், ஆறுதலேயும் பெற்றுக் கொள்ள வந்திருக்கிறேன். தன் துயரத்திற்கு தன் தாயின் இருதயமும் தன் திடத்திற்குத் தாயின் அமுதும் தேவைப்படுகிற சிறு குழந்தை போல் நானிருக்கிறேன். இந்நேரத்தில், நெடுநாளேக்கு முன்னுலிருந்த உங்கள் சின்ன சேசுவாக நான் ஆகிவிட்டேன். அம்மா, நான் போதகரல்ல, உங்கள் மகன்தான் - நாசரேத்தில் சிறுவனுயிருந்தது போலவும், என் மறைந்த

வாழ்விலிருந்து நாசரேத்தை விட்டுப் பிரிந்து செல்லுமுன் இருந்தது போலவும் இருக்கிறேன். உங்களைத் தவிர எனக்கு வேறு யாருமில்லை. இப்பொழுது மனிதர்கள் உங்கள் சேசுவுக்கு நட்பாகவும், பிரமாணிக்கமாகவும் இல்லை. அவர்கள் நன்மை செய்வதில் தீவிரமாகவுமில்லை. தீயவர்கள்தான் தீமை செய்வதில் திடமாகவும் நிலையாகவும் இருக்கிறார்கள். ஆனால் நீங்கள் எனக்குப் பிரமாணிக்கமானவர்கள். இந்நேரத்தில் நீங்களே என் பலமாக இருக்கிறீர்கள். உங்கள் அன்பினாலும், ஜெபத்தினாலும் என்னைத் தாங்கிக் கொள்ளுங்கள். என்னைக் கூடுதலாகவும், குறைவாகவும் நேசிக்கிறவர்களுள் இந்நேரத்தில் எப்படி ஜெபிக்க வேண்டுமென அறிந்தவர்கள் நீங்கள் மட்டும்தான். ஜெபிப்பதற்கும் கண்டுபிடிப்பதற்கும் அறிந்தவர்கள் நீங்கள். மற்றவர்கள் திருவிழாச் சிறப்புகளில் ஈடுபாடு கொண்டும், மகிழ்ச்சியான நினைவுகளில் ஈடுபட்டும், அல்லது குற்றமுள்ள சிந்தனைகளை நினைத்துக் கொண்டுமிருக்கிறார்கள். நானோ எத்தனையோ காரியங்களில் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறேன். இந்நேரத்திற்குப் பிறகு அநேக காரியங்கள் மடியும். அவற்றுடன் அவர்களுடைய மனிதத் தன்மையும் இறக்கும். அவர்கள் எனக்குத் தகுதி பெற்றவர்களாயிருக்க அவர்கள் அனைவருக்கும் கூடுமாயிருக்கும். இழக்கப்பட்டவனைத் தவிர. எந்த சக்தியும் அவனை மனஸ்தாபத்துக்கும் கூட கொண்டு வர இயலாது. ஆனால் தற்பொழுது அவர்கள் உணர்வில்லாத மனிதர்களாயிருக்கிறார்கள். நான் சாகிறேன் என்பதைக் கண்டு பிடிக்காமலிருக்கிறார்கள். என் வெற்றி முன்னையெல்லாம் விட சமீபத்திலிருப்பதாக எண்ணி சந்தோ□ப்படுகிறார்கள். சில நாட்களுக்கு முன் ஒலித்த ஓசான்னாக்கள் அவர்களை போதையடையச் செய்துள்ளன. அம்மா, இந்நேரத்திற்காகவே நான் வந்துள்ளேன். சுபாவத்திற்கு மேலான முறையில் பார்த்தால் இந்நேரம் வருவது ஒரு மகிழ்ச்சியேயாகும். ஆனால் என்னுடைய சுயமனது இதைக் கண்டு பயப்படவும் செய்கிறது. ஏனென்றால் இந்தப் பாத்திரத்தின் பெயர்: துரோகம், ஆணையிட்டு மறுதலித்தல், கொடூரம், தேவ தூ□ணம், கைவிடப்படல் ஆகியவை. அம்மா, என்னைத் தாங்கிக் கொள்ளுங்கள். உங்களுடைய ஜெபங்களால். உங்கள் மீது தேவனுடைய ஆவியானவரை நீங்கள் இறங்கச் செய்தபோது, அதன் வழியாக மக்களால் எதிர்பார்க்கப்பட்டவரை உலகிற்கு நீங்கள் கொடுத்தது போல், இப்பொழுது நான் செய்ய



வந்த கைங்கரியத்தைச் செய்து முடிப்பதற்கு உதவக் கூடிய திடத்தை உங்கள் குமாரன் மேல் இறங்கச் செய்யுங்கள். அம்மா, போய் வருகிறேன்; என்னை ஆசீர்வதியுங்கள். பிதாவின் பெயராலும் என்னை ஆசீர்வதியுங்கள். எல்லாரையும் மன்னியுங்கள். நாம் சேர்ந்து மன்னிப்பளிப்போம். இந்நேரமுதல் நம்மை வாதைப்படுத்துகிறவர்களையும் மன்னிப்போம்.”

இப்படிக் கூறுகையில் சேசு தம் தாயின் பாதங்களுக்கடியில் முழங்காலிட்டு, அவர்களை இடுப்பில் கட்டிப் பிடித்து அவர்களை ஏறிட்டுப் பார்க்கிறார்.

மாதா மவுனமாய் அழுது, கடவுளை நோக்கி உள்ளரங்க ஜெபத்தில் தலையை சற்று உயர்த்தியிருக்கிறார்கள். கண்ணீர் வழிந்து அவர்களின் வெளிறிய கன்னங்களில் பாய்ந்து மடியிலும், அவர்களின் நெஞ்சில் தலைசாய்த்திருக்கும் சேசுவின் தலையிலும் விழுகின்றன. பின்பு மாதா சேசுவின் தலைமேல் ஆசீர்வதிக்கிறது போல் கைவைத்து, குனிந்து அவருடைய தலைமுடிமேல் முத்தமிட்டு அவருடைய தோள்பட்டையிலும், கரங்களிலும் தொட்டு அவர் முகத்தைக் கரங்களில் எடுத்து நெஞ்சில் சார்த்தி, கண்ணீர் வடிய வடிய அவர் நெற்றியில் முத்தஞ் செய்து... களைத்துப் போன அவருடைய சிரசை சிசுவாயிருக்கையில் மலைக் குகையில் நான் கண்டது போல சீராட்டுகிறார்கள். இப்பொழுது அவர்கள் பாடவில்லை. “மகனே! சேசு! என் சேசு!” என்று மட்டும்தான் சொல்கிறார்கள். எப்படிப்பட்ட குரலில் என்றால் அது என் இருதயத்தைப் பிளக்கச் செய்கிறது.

இதன்பின் சேசு எழுந்து நிற்கிறார். தம் மேல் வஸ்திரத்தைச் சரி செய்து அழுகின்ற தம் மாதாவின் முன்பாக நின்று அவர்களை ஆசீர்வதிக்கிறார். பிறகு கதவை நோக்கி நடக்கிறார். வெளியே செல்லுமுன்: “எனக்காகக் காத்திருக்கும் வேளையில் ஜெபியுங்கள்.” என்று கூறி வெளியேறுகிறார்.

அத்தியாயம் 3 (598)

## பாஸ்கா இராப்போஜனம்

*9 மார்ச் 1945*

பெரிய வியாழக்கிழமையின் துன்பங்கள் தொடங்குகின்றன.

பத்து அப்போஸ்தலர்களும் இராப் போஜன சாலையை ஆயத்தம் செய்வதில் பரபரப்பாயிருக்கிறார்கள்.

யூதாஸ் மேசை மேல் ஏறி பெரிய சரவிளக்குச் சட்டத்தின் எல்லா அகல்களிலும் எண்ணெ இருக்கிறதா என்று கவனிக்கிறான். அந்தச் சரவிளக்கு இரட்டை ஃப்யூஷியா என்ற செடியின் பூவிதழ் போல் உள்ளது. அதன் அடித்தண்டைச் சுற்றிலும் ஐந்து இதழ் வடிவிலுள்ள விளக்குகள் உள்ளன. அவற்றிற்கடியில் இன்னொரு கிரீட வரிசையில் சிறிய சுடர்களும், மேலும் அதிலிருந்து சங்கிலிகளில் தொங்கும் பூவிதழ்களின் அடிப்பாகம் போன்ற மூன்று விளக்குகளும் உள்ளன. அதன் பிறகு அவன் மேசையிலிருந்து கீழே குதித்து, மிக நல்ல துணி விரிக்கப்பட்டுள்ள மேசைமேல் கலையுணர்வுடன் வைக்க வேண்டிய பொருள்களை எடுத்து வைப்பதில் பிலவேந்திரருக்கு உதவி செய்கிறான்.

"என்ன அருமையான சணல் மேசை விரிப்பு இது!" என்று பிலவேந்திரர் சொல்வது எனக்குக் கேட்கிறது.

அதற்கு யூதாஸ்: "லாசருடைய மிகச் சிறந்த துணிகளுள் இதுவும் ஒன்று. இதைக் கொண்டு வரும்படி மார்த்தா மிகவும் வற்புறுத்தினாள்" என்கிறான்.

அப்போது தோமையார் சொல்கிறார்: "இந்தப் பான பாத்திரங்களும் ஜாடிகளும் எப்படி?" என்று. அவர் அந்த விலை உயர்ந்த ஜாடிகளில் கொஞ்சம் திராட்சை ரசம் ஊற்றுகிறார். அவற்றின் ஒடுங்கிய வயிற்றுப் பாகத்தில் தன்னையே பார்த்தபடி, செதுக்கப்பட்ட அவற்றின் கைப்பிடிகளை கலைத்திறமை கொண்டவனைப் போல் தொட்டுப் பார்க்கிறார்.

"பூ! இவை என்ன பெறும்!" என்கிறான் யூதாஸ்.

அதற்கு தோமையார்: "இது உளி வேலை. என் தகப்பனார் இதற்கு கொள்ளை ஆசைப்படுவார். தங்க வெள்ளித் தகடுகளை



சூடேற்றி எளிதாக வடிவங் கொடுத்து விட முடியும். ஆனால் இந்த முறைப்படி செய்வது... ஒரு விநாடியில் எல்லாம் சேதமாகி விடும். தவறான ஒரு அடி போதும். ஒரே சமயத்தில் பலமாகவும், மெல்லியதாகவும் அடிக்க வேண்டும். இக் கைப்பிடிகளைப் பாரும்! அவை முழுப் பாளத்திலிருந்து செதுக்கப்பட்டுள்ளன. அவை ஒட்டப்படவில்லை. பணம் படைத்தவர்களுக்குரியவை... செதுக்கப்பட்ட எல்லாத் துகள்களும், கழிவுகளும் இழக்கப்பட்டு விட்டால் எப்படியாகும் என்று நினைத்துப் பாரும். நான் சொல்வதைக் கண்டுபிடிக்கிறீரா என்று தெரியவில்லை."

"உம்மை நான் நன்றாகவே கண்டுபிடிக்கிறேன். சுருக்கத்தில், இது சிற்ப வேலை போன்றது."

"அப்படியேதான்."

எல்லாரும் அதை வியந்து விட்டு தங்கள் தங்கள் வேலைக்குப் போகிறார்கள். சிலர் இருக்கைகளை ஒழுங்குபடுத்துகிறார்கள். சிலர் பக்கத்துப் பலகைகளைத் தயாரிக்கிறார்கள்.

அப்போது இராயப்பரும் சீமோனும் உள்ளே வருகிறார்கள்.

"ஆ! கடைசியில் வந்து சேர்ந்து விட்டீர்களா? மறுபடியும் எங்கே போயிருந்தீர்கள்? போதகரோடும், எங்களோடும் வந்தபின் மறுபடியும் ஓடிவிட்டீர்களே!" என்கிறான் யூதாஸ்.

"இராப் போஜனத்திற்கு முன் எங்களுக்கு இன்னொரு அலுவல் இருந்தது" என்கிறார் சீமோன் சுருக்கமாக.

"மன சஞ்சலத்தால் கஷ்டப்படுகிறீர்களா?"

"அதற்குப் போதிய காரணம் இருக்கிறதென்றே நினைக்கிறேன். ஒருபோதும் பொய்க்காத உதடுகளிலிருந்து கடந்த நாட்களில் நாம் கேட்டுள்ளவற்றை வைத்துப் பார்த்தால் அது அப்படித்தான்."

"அதிலும் இந்த நாற்றத்தோடு..." என்று கூறிய இராயப்பர் உடனே தனக்குத்தானே: "அமைதி கொள் இராயப்பா" என்று உதட்டுக்கடியில் முணுமுணுக்கிறார்.

"நீரும் அப்படித்தான்... கொஞ்ச நாட்களாக உமக்குப் பைத்தியம் பிடித்த மாதிரி இருக்கிறீரே. உம்முடைய முகத்தைப் பார்த்தால் நரி துரத்துகிறதாக அறிந்து கொண்ட முயல்

மாதிரி இருக்கிறீர்'' என்று பதிலளிக்கிறான் யூதாஸ்.

''உன் முகம் மரநாயின் மூஞ்சி மாதிரி, கடந்த சில நாட்களாக நீயும் அழகாகத்தான் இருக்கிறாய். உன் முழி அப்படி இருக்கிறது... பார்வையும் ஓரக் கண்ணாயிருக்கிறது... நீ என்ன எதிர்பார்க்கிறாய்? அல்லது என்னத்தைக் காணப் போகிறாய்? சுய நம்பிக்கை கொண்டவனாகக் காணப்படுகிறாய். அப்படிக் காணப்பட விரும்புகிறாய். ஆனால் பயந்தவனைப் போல் காட்சியளிக்கிறாய்'' என்று பதிலுக்குக் கொடுக்கிறார் இராயப்பர்.

''ஓ! பயப்படுவது பற்றி!... நீரும் வீரனல்லவே!''

அதற்கு அருளப்பர் பதிலளிக்கிறார்:

''யூதாஸ், நாம் யாருமே அப்படியல்ல. நீர் மக்கபேயரின் பெயரைக் கொண்டிருக்கிறீர். ஆனால் அவரைப் போல் நீர் இல்லை. ''கடவுள் வரங்களை அருள்கிறார்'' என்ற பெயரை நான் வைத்துக் கொண்டிருக்கிறேன். ஆனால் சத்தியமாகச் சொல்கிறேன், நான் துரதிர்ஷ்டத்தைக் கொண்டு வருபவனாக இருப்பதை அறிந்திருக்கிற ஒரு மனிதனைப் போல் நான் நடுங்குகிறேன். எதற்கும் மேலாக கடவுளின் கிருபையை இழந்து விட்டவனைப் போலிருக்கிறேன். ''பாறை'' என்று மறுபெயரிடப்பட்ட யோனாவின் சீமோன் இப்போது நெருப்புக்கருகேயுள்ள மெழுகைப் போல் மென்மையாகி விட்டார். அவர் இப்பொழுது தன் சொந்த சுயாதீனத்தின் திசை திரும்புதலைத் தன்னிடம் கொண்டிருக்கவில்லை. இவ்வளவிற்கும் மிகக் கடுமையான புயல்களிலும் அவர் பயப்பட்டதை நான் கண்டதில்லை. மத்தேயுவும், பார்தலோமேயுவும், பிலிப்புவும் உறக்கத்தில் நடக்கிறவர்களைப் போலிருக்கிறார்கள். என் சகோதரனும் பிலவேந்திரரும் பெருமூச்செறிவதை விட வேறெதுவும் செய்வதில்லை. ஒன்று விட்ட சகோதரர்கள் இருவரும் தங்கள் குடும்ப உறவாலும், ஆண்டவர் மேலுள்ள அன்பாலும் துயரப்படுகிறார்கள். அவர்களைப் பாருங்கள்! அவர்கள் ஏற்கெனவே வயது சென்றவர்களைப் போலாகி விட்டார்கள். தோமையார் தன் மகிழ்ச்சித் தன்மையை இழந்து விட்டார். சீமோன் மூன்றாண்டுகளுக்கு முன் இருந்த களைப்புற்ற குஷ்டரோகியாக மறுபடி ஆகியுள்ளார். அவர் துயரத்தால் எவ்வளவு மெலிந்து விட்டாரென்றால், மரண வெளிறுதலடைந்து சலிப்புற்றிருக்கிறார்.''

''ஆமாம். போதகர் அவருடைய மனத்தளர்வினால் நம்



எல்லாரையும் பாதித்து விட்டார்'' என்கிறான் யூதாஸ்.

அப்போது அல்பேயுஸின் யாகப்பர்: ''என் சகோதரன் சேசு, என் போதகரும் ஆண்டவருமாயிருக்கிற அவர் தளர்வுற்றும், தளர்வுறாமலும் இருக்கிறார். அவர், நாம் அறிந்துள்ளது போல, அனைத்து இஸ்ராயேலிலும் இன்னும் அவருக்கு மட்டுமே தெரிந்துள்ள மறைந்த துயரங்களினாலும் கவலையாயிருக்கிறதாக அந்த வார்த்தைக்கு அர்த்தம் கொண்டால் அப்போது ''நீர் சொல்வது சரி'' என்று நான் கூறுவேன். ஆனால் மனத் தளர்வு என்ற வார்த்தையை புத்திக் கோளாறு என்ற கருத்தில் நீர் சொன்னால் அப்படிச் சொல்லக் கூடாது என்று நான் தடுக்கிறேன்.''

''ஒரு நிலைத்த மனத் தளர்வான சிந்தனை புத்திக் கோளாறு இல்லையா? நான் உலக சம்பந்தமான காரியங்களையும் கற்றிருக்கிறேன். எனக்குத் தெரியும். அவர் அதிக மிகுதியாகத் தம்மைக் கொடுத்து விட்டார். இப்போது மனத் தளர்வடைந்து விட்டார்.''

''அதாவது பைத்தியம். அப்படியா?'' என்று அடுத்த சகோதரர் யூதா ததேயுஸ் அமைதியாகக் காணப்பட்டபடியே கேட்கிறார்.

''அதேதான்! ஆசீர்வதிக்கப்பட்ட நினைவுகூருதலுக்குரிய உம்முடைய தந்தை எவ்வளவு சரியானவர்! நீதியிலும், நியாயத்திலும் அவரை நீர் அதிகம் ஒத்திருக்கிறீர். ஒரு புகழ்பெற்ற குடும்பத்தின் துயர முடிவுதான் சேசு. அவர் இப்போது அதிக முதுமையடைந்து மன மூப்படைந்து விட்டார். இந்த நோய்க்கு அவரிடம் எப்போதுமே ஒரு சார்புத்தன்மை இருந்தது. முதலில் அது இலேசாக இருந்தது. வர வர கூடிவிட்டது. அவர் பரிசேயர்களையும், வேதபாரகர்களையும், சதுசேயரையும், ஏரோதியரையும் எப்படித் தாக்கினார் என்று நீங்கள் பார்த்தீர்களே! கற்சல்லிகள் சிதறப்பட்ட ரோட்டைப் போல் அவர் தம் வாழ்க்கையை வாழக் கூடாததாக ஆக்கிக் கொண்டார். அவற்றை அவரே சிதறிக் கொண்டார். நாம்... அவரை எவ்வளவு நேசித்தோமென்றால் நம் அன்பு நம் கண்களை மறைத்து விட்டது. ஆனால் அவரை விக்கிர ஆராதனை முறையில் நேசியாதவர்கள் - உம்முடைய தந்தை, உம் சகோதரர் ஜோசப், இன்னும் தொடக்க நாட்களில் சீமோன் - இவர்களெல்லாம்

சரியாகக் கண்டுபிடித்தார்கள்... அவர்களுடைய வார்த்தையைக் கேட்ட நாம் அனைவரும் ஒரு நோயாளியின் சாந்தமான கவர்ச்சியால் இழுபட்டுப் போனோம். இப்பொழுது... யார் அறிவார்கள்!''

யூதா ததேயுஸ், யூதாஸின் முன்பாக நின்று கொண்டிருக்கிறார். யூதாஸின் அளவிற்கு உயரமாயிருக்கிறார். அவன் சொன்னதை அமைதியாகக் கேட்டுக் கொண்டிருப்பவர் போல் காணப்படுகிறார். ஆனால் திடீரென அவர் கோபம் மூண்டு தம் புறங்கையால் ஓங்கி அறைந்து, அவனைப் பின்புறமாய் ஒரு இருக்கையில் வீழ்த்துகிறார். பினனும் கோபத்தை அமுக்கிய குரலில் அவன் முகத்தின் பக்கமாய்க் குனிந்து: ''ஈனப் பயலே! இது அவரின் பைத்தியத்திற்கு! அவர் அடுத்த அறையில் இருப்பதாலும், இது பாஸ்கா மாலையானதாலும் உன் கழுத்தை நெரிக்காமல் விடுகிறேன். ஆனால் இதை மட்டும் நன்றாக நினைவில் வைத்துக் கொள். அவருக்கு ஏதும் கேடு நேரிட்டு என் வலிமையைத் தடுக்க அவரும் அங்கே இல்லாவிட்டால் உன்னை யாரும் காப்பாற்ற மாட்டார்கள். உன் கழுத்தைக் கயிறு சுற்றியது போல்தான். மீதி வேலையை கலிலேய உழைப்பாளியும், கோலியாத்திற்குக் கவண் வீசியவனின் வாரிசில் வந்தவனுடையவும் கைகள் கவனித்துக் கொள்ளும். முதுகெலும்பில்லாத பரத்தையனே, கவனித்து நடந்து கொள்'' என்று சொல்கிறார்.

யூதாஸ் எழுந்து நிற்கிறான். வெளிறிப் போனான். ஆனால் கொஞ்சமும் எதிர்ப்புக் காட்டவில்லை. எனக்கு எது ஆச்சரியமளிக்கிறதென்றால் யூதா ததேயுவின் இந்த நூதன செயலுக்கு யாரும் எந்த எதிர்ப்பும் காட்டவில்லை. மாறாக அவர்கள் எல்லாரும் அதை ஆமோதிக்கிறார்கள்.

இராப் போஜன சாலை மீண்டும் அமைதியடைந்த போது சேசு உள்ளே வருகிறார். அவருடைய உயர்ந்த உருவம் வரக் கூடிய அளவிற்குச் சரியாக இருக்கிற சிறிய கதவின் வழியாக, படிக்கட்டின் மேல் தளத்தில் நின்றபடி, தம் சாந்தமான துயரப் புன்முறுவலோடு கரங்களை விரித்துக் கொண்டு ''உங்களுக்கு சமாதானம் வருவதாக!'' என்று சொல்கிறார். உடலிலும் உள்ளத்திலும் நோயுற்றவரைப் போல் அவருடைய குரல் களைப்புற்றுக் காணப்படுகிறது.



சேசு கீழே இறங்கி வருகிறார். அவரிடம் ஓடி வந்துள்ள அருளப்பரின் தலையைத் தொடுகிறார். தம் சகோதரன் யூதா ததேயுஸைப் பார்த்து தமக்கு எதுவும் தெரியாதது போல் புன்னகை செய்கிறார். பின் தமது மற்ற சகோதரனைப் பார்த்து: ''நீ உன் சகோதரன் ஜோசப்பிடம் அன்பாயிருக்க வேண்டுமென்று உன் தாய் கேட்டுக் கொள்கிறாள். அவன் ஸ்திரீகளிடம் உன்னைப் பற்றியும், என்னைப் பற்றியும் சற்று முன் விசாரித்திருக்கிறான். அவனுக்கு நான் உபசாரம் கூறவில்லையே என்று வருந்துகிறேன்'' என்கிறார்.

''நாளை அதைச் செய்யலாம்.''

''நாளை? ... அவனைக் காண எப்போதும் எனக்கு நேரம் இருக்கும்... ஓ! இராயப்பா! கடைசியாக சற்று நேரம் நாம் சேர்ந்திருக்கலாம். நேற்றிலிருந்து நீ நாடோடி போலிருக்கிறாயே. உன்னைக் கண்ட மாதிரி இருக்கும். அதற்குள் காணாமல் போய் விடுகிறாய். இன்றைக்கு உன்னை நான் இழந்து போனேன் என்றே சொல்ல வேண்டும். நீயும் சீமோன், அப்படித்தான்.''

''கருமையைவிட அதிக வெண்மையாக இருக்கிற எங்கள் உரோமம், நாங்கள் மாம்சம் விரும்பி இங்கு இல்லாமல் போகவில்லை என்று உமக்கு உறுதி கூறுமே'' என்று கனத்தோடு கூறுகிறார் சீமோன்.

''ஆயினும்... எந்த வயதிலும் அந்தப் பசி ஏற்படக் கூடும். இளைஞர்களை விட வயோதிகர்களுக்கு...'' என்று யூதாஸ் குத்தலாகச் சொல்கிறான்.

சீமோன் அவனைப் பார்த்து அவனுக்குப் பதில் சொல்லப் போகையில் சேசுவும் அவனைப் பார்த்து: ''உன் வலது கன்னம் வீங்கி சிவந்திருக்கிறதே, உனக்குப் பல்வலி இருக்கிறதா?'' என்று கேட்கிறார்.

''ஆம். வலிக்கிறது. ஆனால் கவலைப்படத் தேவையில்லை.''

மற்றவர்கள் ஒன்றும் கூறவில்லை. வி[illegible]யம் அப்படியே ஓய்ந்து விடுகிறது.

''செய்ய வேண்டியதையெல்லாம் நீங்கள் செய்துவிட்டீர்களா? மத்தேயு? பிலவேந்திரா? யூதாஸ், தேவாலய காணிக்கைக்கு ஏற்பாடு செய்து விட்டாயா?''

அவர்கள் மூவரும்: "இன்று செய்து முடிக்கப்பட வேண்டுமென்று நீர் சொன்னவற்றையெல்லாம் செய்து முடித்து விட்டோம். கவலை வேண்டாம்" என்கிறார்கள்.

"சூசாவின் ஜோஹான்னுவுக்கு லாசரின் முந்திய பலன்களைக் கொண்டு சென்றேன். குழந்தைகளுக்குத்தான். அவர்கள் "இந்த ஆப்பிள் கனிகள் அதிக நன்றாக உள்ளன" என்றார்கள். அவர்களுக்குப் பசியின் ருசி இருந்தது. அவை உம்முடைய கனிகளே" என்று சொல்கிறார் அருளப்பர் சிரித்தபடி கனவு கண்டது போல்.

அந்த ஞாபகத்தில் சேசுவும் சிரித்துக் கொள்கிறார்...

"நான் நிக்கோதேமுசையும் சூசையையும் கண்டேன்" என்று தோமையார் சொல்கிறார்.

"அவர்களைப் பார்த்தீரா? அவர்களிடம் பேசினீரா?" என்று அதிகப்படியான ஆர்வத்துடன் கேட்கிறான் யூதாஸ்.

"ஆம். பேசினேன். அதிலென்ன விசே□ம் இருக்கிறது? என் தகப்பனாரின் ஒரு நல்ல வாடிக்கைக்காரர் அரிமத்தியா சூசை."

"இதைப் பற்றி நீர் முன்பு ஒருபோதும் சொல்லவில்லையே, அதுதான் நான் ஆச்சரியப்பட்டேன்."

தோமையார் நிக்கோதேமுவையும் சூசையையும் சந்தித்ததைப் பற்றி யூதாஸ் கவலைப்பட்டதாக ஏற்படுத்திய அபிப்பிராயத்தை சமாளிப்பதற்கு முயற்சி செய்கிறேன்.

அப்போது பர்தலோமேயு: "அவர்கள் உமக்கு மரியாதை செயய வரவில்லையெனபது நூதனமாயிருக்கிறது. அவர்கள் வரவில்லை. சூசா வரவில்லை. மனேயனும் யாரும்..." என்று சொல்லும் போதே யூதாஸ் இடைமறித்து கேலியாய்ச் சிரிக்கிறான்: "முதலை சரியான நேரத்தில் மறைந்து கொள்கிறது" என்கிறான்.

அப்போது சீமோன் முன்பில்லாத கோபத்துடன்: "நீர் சொல்வதின் பொருளென்ன? எதைக் குத்திக் காட்டுகிறீர்?" என்று நெருக்கிக் கேட்கிறார்.

அதற்கு சேசு: "அமைதி! அமைதி! உங்கள் வி□யம் என்ன? இது பாஸ்காவின் மாலை. பாஸ்கா ஆட்டுக் குட்டியை உண்பதற்கு இந்த அளவு அலங்காரங்கள் இதுவரை நாம் செய்ததில்லை. ஆகவே



நாம் சமாதான உள்ளத்தோடு இராப் போஜனத்தை உட்கொள்வோம். கடந்த நாட்களின் மாலைப் போதனைகளால் உங்களை சுமாரான அளவு நான் குழம்பச் செய்து விட்டேனென்று நினைக்கிறேன். ஆனால் அவை முடிந்து விட்டன. இதற்கு மேல் உங்களைக் குழம்பச் செய்ய மாட்டேன். என்னைச் சம்பந்தப்பட்ட எல்லாம் சொல்லப்படவில்லை. முக்கியமானவைகள் மட்டுமே சொல்லப்பட்டன. மீதியை நீங்கள் பின்னால் கண்டுணர்வீர்கள். உங்களுக்குச் சொல்லப்படும். ஆம். உங்களுக்குச் சொல்கிறவர் வருவார். அருளப்பா, யூதாசுடனும். இன்னும் ஒருவருடனும் சென்று சுத்திகரத்திற்கு அகன்ற பாத்திரங்களைக் கொண்டு வாருங்கள். அதன்பின் நாம் பந்தியமர்வோம்." இருதயத்தைத் தொடக் கூடிய கருணையோடு காணப்படுகிறார் சேசு.

அருளப்பர், பிலவேந்திரர், யூதா ததேயுஸ், யாகப்பர் ஆகியோர் பெரிய அகன்ற பாத்திரத்தைக் கொண்டு வருகிறார்கள். அதனுள் தண்ணீர் விடுகிறார்கள். சேசுவுக்கும் தங்கள் உடன் சீடர்களுக்கும் துண்டுகளைக் கொடுக்கிறார்கள். (அந்தப் பாத்திரம் சுத்திகரம் செய்வதற்கான உலோக பாத்திரம்). அதை ஒரு மூலையில் வைக்கிறார்கள்.

"இப்பொழுது உங்கள் இருகைகளுக்குப் போங்கள். நான் இங்கிருக்கிறேன். இங்கே (அவருடைய வலது புறம் அருளப்பன், அதற்கடுத்த பக்கம் என் பிரமாணிக்கமுள்ள யாகப்பன் - இவர்கள் முதல் இரு சீடர்கள். அருளப்பனுக்கு அடுத்து என் பலமுள்ள பாறை. அதற்கடுத்து காற்றைப் போலிருக்கிற யாகப்பன். அடுத்து, அவன் இருப்பது தெரியாது. ஆனால் எப்பொழுதும் ஆறுதலளித்துக் கொண்டிருப்பவன் - பிலவேந்திரன். அவனுக்குப் பக்கத்தில் என் சகோதரன் யாகப்பன், அன்புள்ள சகோதரா, முதலில் வந்தவர்களுக்கு முதலிடத்தைக் கொடுக்கிறேன் என்பதைப் பற்றி உனக்கு வருத்தம் இல்லையே! நீதிமானின் அண்ணன் மகன் நீ. அவருடைய ஆவி என்றுமில்லாதபடி இந்த மாலை வேளையில் என்மேல் அசைந்து துடித்துக் கொண்டிருக்கிறது. என் குழந்தைப் பருவத்தின் தந்தையாயிருந்தவரே! உமது நிழலில் தாயும் குமாரனும் ஆறுதல் பெற்றிருந்த ஓக் விருட்சமே! சமாதானங் கொண்டிருப்பீராக!... இராயப்பனுக்குப் பக்கத்தில் சீமோன்... சீமோனே, சற்று இங்கே வா. உன்னுடைய பிரமாணிக்கமுள்ள முகத்தில் என் பார்வையைப்

பதிக்க விரும்புகிறேன். பின்னுல் உன்னை நான் நன்கு பார்க்க மாட்டேன். ஏனென்ருல் மற்றவர்கள் உன்னுடைய நேர்மையான வதனத்தை மூடி விடுவார்கள். சீமோனே, நீ செய்துள்ள அனைத்திற்கும் நன்றி.'' இவ்வாறு கூறி சேசு சீமோனை முத்தமிடுகிருர்.

சீமோன் கலக்கத்தின் அடையாளமாக சற்று தன் முகத்தை மூடியபடி தன் இருக்கைக்குப் போகிருர்.

சேசு தொடர்ந்து: ''சீமோனுக்கெதிரே என் பர்தலோமே. ஒருவரையொருவர் பிரதிபலிக்கும் இரு நேர்மையாளரான ஞானிகள். அவர்கள் நல்ல பொருத்தமாயிருக்கிருர்கள். பர்தலோமேயுவுக்குப் பக்கத்தில் யூதா ததேயுஸ். என் சகோதரா, நீ, உன்னை நான் பார்க்கும்படியாக இரு... நான் நாசரேத்தில் இருப்பது போலுள்ளது... திருநாள்களிலே நம்மெல்லாரையும் ஒரே மேசையைச் சுற்றிக் கூடி வர வைத்ததுபோல்... கானுவூரிலும் அவ்வாறே... ஞாபகமிருக்கிறதா? நாம் சேர்ந்திருந்தோமே. விருந்து... திருமண விருந்தில்... முதல் புதுமை... தண்ணீர் இரசமாக மாற்றப்பட்டது. இன்றும் ஒரு திருநாள்தான்... இன்றும் ஒரு புதுமை நிகழும்... திராட்சை இரசம் தன் இயல்பை மாற்றி அது...''

சேசு தம் சிந்தனைகளிலே மூழ்கிப் போகிருர். அவர் தலை கவிழ்ந்து தம் இரகசிய உலகில் தனிப்படுகிருர். மற்றவர்கள் அவரை மவுனமாக நோக்குகின்றனர்.

பின் சேசு தம் சிரசை நிமிர்த்தி யூதாஸை உற்று நோக்கி: ''நீ எனக்கு முன்பாக இருப்பாய்'' என்கிருர்.

''என்மேல் இவ்வளவு அன்பா? சீமோனை விடவா? எப்போதும் என்னை உமக்கு முன்பாக வைக்கிறீரே?''

''அவ்வளவு அன்புதான்: நீ கூறியபடிதான்.''

''போதகரே, எதற்காக?''

''ஏனென்ருல் இந்நேரத்திற்கென மற்றெல்லாரையும் விட நீ அதிகம் செய்திருக்கிருய் என்பதற்காக.''

யூதாஸ் மாறிக் கொண்டேயிருக்கும் தன் பார்வையால் சேசுவையும் தன் உடன் சீடர்களையும் பார்க்கிருன். சேசுவை வஞ்சக பரிவிரக்கத்தோடு மற்றவர்களை ஒரு வெற்றிக் களிப்போடு பார்க்கிருன்.



சேசு தொடர்ந்து: ''யூதாஸின் பக்கத்தில் ஒரு புறம் மத்தேயு. மறுபுறம் தோமை.''

''அப்படியென்ருல் மத்தேயு என் இடப்புறமும் தோமையார் என் வலப்புறமுமா?'' என்கிருன் யூதாஸ்.

''உம் விருப்பப்படி. நீர் விரும்புகிறபடி - என் இரட்சகரை என் முன்பாகக் கொண்டிருப்பதே எனக்குப் போதும்'' என்கிருர் மத்தேயு.

சேசு மேலும் தொடர்ந்து: ''கடைசியாக பிலிப்பு. இப்பொழுது பாருங்கள். என் பக்கத்தில் மகிமையான இடத்தில் இல்லாதவன், எனக்கு முன்பாக இருக்கும் மகிமையைப் பெறுகிருன்.''

(எல்லார் முன்பாகவும் உயர்ந்த பான பாத்திரம் வைக்கப்பட்டிருக்கிறது. சேசு முன்னுல் அவற்றை விட பெரிய பாத்திரம் உள்ளது. அதுதான் சடங்காசார பாத்திரமாயிருக்க வேண்டும். சேசு முன்பாக மற்றவர்களுடைய பாத்திரம்போல் ஒன்றும் உள்ளது.)

இப்பொழுது சேசு தம் இடத்தில் நின்றபடி தமக்கு முன்பாக வைக்கப்பட்டிருக்கிற பெரிய பாத்திரத்தில் திராட்சை இரசத்தை ஊற்றுகிருர். அதை உயர்த்தி ஒப்புக் கொடுக்கிருர். பின் மேசை மேல் வைக்கிருர்.

பின் அவர்கள் எல்லாரும் சேர்ந்து சங்கீதம் சொல்லுகிற குரலில்: ''எதற்காக இந்தச் சடங்கு?'' என்று கேட்கிருர்கள். இது ஒரு ஆசாரக் கேள்வியே. சடங்கினைச் சார்ந்தது.

இக்கேள்விக்கு குடும்பத் தலைவன் என்ற முறையில் சேசு: ''எஜிப்திலிருந்து நாம் பெற்ற விடுதலையை இந்த நாள் நினைப்பூட்டுகிறது. திராட்சைத் தோட்டத்தின் கனியைச் சிருஷ்டித்த ஜெகோவா வாழ்த்தப்படுவாராக!'' என்று பதிலளிக்கிருர். அவர் தாம் ஒப்புக் கொடுத்த இரசத்தில் ஒரு மிடறு பருகிவிட்டு பாத்திரத்தை மற்றவர்களுக்கு அனுப்புகிருர். அதன்பின் அப்பத்தை ஒப்புக்கொடுத்து அதை வாயுணவாகப் பிட்டு அதையும், சிவந்த குழம்பில் தோய்க்கப்பட்ட கீரைகளையும் அப்படியே பரிமாற அனுப்புகிருர். செங்குழம்பு நான்கு பாத்திரங்களில் வைக்கப்பட்டிருக்கிறது.

இராப் போஜனத்தின் இந்தப் பகுதி முடிந்தது. எல்லாரும் சேர்ந்து சில சங்கீதங்களைப் பாடுகிருர்கள்.

பின் ஒரு பக்கத்துப் பலகையிலிருந்து பொரித்த ஆட்டுக் குட்டி வைக்கப்பட்ட பெரிய தட்டை சேசுவின் முன்பாகக் கொண்டு வைக்கிறார்கள்.

குழு பாடகரில் முதல் பாடகர் என்று நீங்கள் (ஆன்ம குரு) விரும்பினால் நினைத்துக் கொள்ளக் கூடிய இராயப்பர் கேட்கிறார்: "இந்த ஆட்டுக் குட்டி ஏன் இப்படி வைக்கப்பட்டிருக்கிறது?" என்று.

"பலியிடப்பட்ட ஆட்டுக் குட்டியால் இஸ்ராயேல் காப்பாற்றப்பட்ட சந்தர்ப்பத்தை நினைவுகூரும்படியாக எந்தக் கதவு நிலைகளிலும் மேல் படிகளிலும் அந்த இரத்தம் விளங்கியதோ, அங்கே தலைப்பேறுகள் சாகவில்லை. பின்னால், அரச மாளிகை முதல் குடிசை வீடு வரையிலும் தங்கள் இறந்து முதல் பேறுகளுக்காக எஜிப்து முழுவதும் துக்கங் கொண்டாடியபோது எபிரேய மக்கள் மோயீசனால் வழிநடத்தப்பட்டு வாக்குத்தத்த நாட்டை நோக்கிப் போனார்கள். இடுப்பை வரிந்து கட்டியவர்களாய், காலில் பாதரட்சை அணிந்தவர்களாய், கைகளில் யாத்திரைக்காரரின் கோல் ஏந்தியவர்களாய் ஆபிரகாமின் மக்கள் உடனே மகிழ்ச்சிக் கீதங்களைப் பாடிக் கொண்டு புறப்பட்டுப் போனார்கள்" என்று சடங்காசாரப் பதிலை ஆண்டவர் கூறுகிறார்.

பின் எல்லாரும் எழுந்து நின்று: "எஜிப்தினின்று இஸ்ராயேலர் வெளிவந்த அந்நாளிலே, யாக்கோபின் வீட்டார் துஷ்ட சனத்திலிருந்து புறப்படுகையில்..." என்ற சங்கீதத்தைப் பாடுகின்றனர். அது சங்கீதம் 113 - நான் சரியாகக் கண்டுபிடித்தால்.

இப்பொழுது சேசு பொரித்த ஆட்டுக் குட்டியை வெட்டி மறுபடியும் பாத்திரத்தில் இரசம் வார்த்து அதில் பருகியபின் அதை மற்றவர்களுக்கு அனுப்புகிறார். அவர்கள் "பிள்ளைகளே கர்த்தரைத் துதியுங்கள். ஆண்டவருடைய நாமத்தைப் புகழுங்கள். ஆண்டவருடைய நாமம் இப்பொழுதும் என்றென்றைக்கும் தோத்தரிக்கப்படக் கடவது. சூரியன் உதிக்கிற திசை துவக்கி அஸ்தமிக்கிற திசை மட்டும் ஆண்டவருடைய நாமம் துதிக்குரியதாமே..." என்ற சங்கீதம் என்று என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை.★

சேசு உணவைப் பரிமாறுகிறார். ஒரு குடும்பத்தின்



பிள்ளைகளையெல்லாம் அதிகம் நேசிக்கிற தகப்பனைப் போல் ஒவ்வொருவருக்கும் நல்ல அளவு கிடைக்கும்படி கவலையாயிருக்கிறார். அவர் கம்பீரமாகவும் சற்றுத் துயரமாகவும் இவ்வாறு கூறுகிறார்: "நான் இந்தப் பாஸ்காவை உங்களோடு உண்ண ஆசை மேல் ஆசையாயிருந்தேன். நித்தியம் முதலே, நான் "இரட்சகரா"யிருந்ததிலிருந்தே இது என் ஆசையாக இருந்தது. இந்தத் தருணம் அந்த நேரத்திற்கு முன்பாக வரும் என்பதை அறிந்திருந்தேன். என்னை முழுவதும் கையளிப்பதன் மகிழ்ச்சி என் வேதனைகளுக்கு ஒரு ஆறுதலை முன்கூட்டியே கொண்டு வந்தது... இந்தப் பாஸ்காவை உங்களுடன் புசிக்க மிகவும் ஆவலாயிருந்தேன். ஏனென்றால் சர்வேசுரனுடைய இராச்சியம் வரும் வரையிலும் திராட்சைக் கனியின் இரசத்தை இனியொருபோதும் நான் சுவைபார்க்க மாட்டேன். அதன்பின் நான் மறுபடியும் தெரிந்தெடுக்கப் பட்டவர்களுடன் செம்மறியானவரின் விருந்தில், ஜீவிக்கிறவர்களுடன் ஜீவியர்களின் விவாக விருந்தில் அமர்வேன். ஆனால் என்னைப் போல் தாழ்மையுள்ளவர்களும் இருதயத் தூய்மையுடையவர்களும் மட்டுமே அதற்கு வருவார்கள்."

அப்போது பர்தலோமேயு கேட்கிறார்: "ஆண்டவரே! இருக்கையின் மகிமையைப் பெறுதவன் உமக்கு முன்பாக அமரும் மகிமையைப் பெறுகிறான் என்று சற்று முன் சொன்னீரே. அப்படியென்றால் எங்களுக்குள் முதன்மையானது யார் என்று நாங்கள் எப்படி அறிவது?" என்று.

அதற்கு சேசு: "ஒவ்வொருவரும் முதன்மைதான் - ஒருவரும் முதன்மை இல்லைதான். ஒரு தடவை... நாம் திரும்பி வந்து கொண்டிருந்தோம். நாம் களைப்பாயிருந்தோம்... பரிசேயர்களின் கடுமையான பகையைப் பற்றி எரிச்சலுடன் இருந்தோம். ஆயினும் உங்களில் யார் பெரியவன் என்று உங்களுக்குள் தர்க்கிக்க தடை செய்யக் கூடிய அளவு நீங்கள் களைப்பு கொண்டிருக்கவில்லை... ஒரு சிறு பையன் என்னிடம் ஓடி வந்தான்... என் சிறிய நண்பன்... அவனுடைய மாசின்மை எத்தனையோ காரியங்களைப் பற்றிய என் அருவெறுப்பைக் குறைத்தது. அவற்றுள் பிடிவாதமுள்ள உங்கள் மனிதத் தன்மை குறைந்ததல்ல. சின்ன பெஞ்சமினே! இப்போது நீ எங்கே இருக்கிறாய்? ஒரு ஞானமான பதிலை நீ வரமாகப் பெற்றுக் கூறினாய். நீ ஒரு சம்மனசாயிருந்ததால் அந்தப் பதில் மோட்சத்திலிருந்து உனக்கு வந்தது ஆவியானவர் உன்னிடம்

பேசினுர். அப்போது நான் உங்களிடம் கூறினேன்: ''உங்களுக்குள் முதலாவதாக இருக்க விரும்புகிறவன் கடைசியானவனுக, எல்லாருடையவும் ஊழியனுக இருக்க வேண்டும்'' என்று. அந்த விவேகமுடைய சிறுவனே உங்களுக்கு முன்மாதிரிகையாகக் கொடுத்தேன். இப்பொழுது உங்களுக்குச் சொல்கிறேன்: ஜனங்களின் இராஜாக்கள் அவர்களை ஆதிக்கம் செய்கிறுர்கள். நசுக்கப்பட்ட ஜனங்கள் அவர்களைப் பகைத்தாலும், அரசர்களைப் பாராட்டி ஆர்ப்பரிக்கிறுர்கள். அரசர்களும் ''உபகாரிகள்'' என்றும் ''தேச பிதாக்கள்'' என்றும் அழைக்கப்படுகிறுர்கள். இந்தப் போலி ஆசாரத்தினடியில் பகை புகைந்து கொண்டிருக்கிறது. ஆனுல் இதுபோல் உங்களிடம் இருக்க வேண்டாம். மிகப் பெரியவனுயிருப்பவன் மிகச் சிறியவனுயிருக்கட்டும். தலைமையாயிருப்பவன் ஊழியஞ் செய்கிறவனுயிருக்கட்டும். உண்மையில் பார்த்தால் யார் பெரியவன்? பந்தியில் அமர்ந்திருக்கிறவனு? பந்தி பரிமாறுகிறவனு? பந்தியில் அமர்ந்திருக்கிறவனே. அப்படியிருந்தும் நான் உங்களுக்குப் பரிமாறுகிறேன். வெகு சீக்கிரமே இதை விட அதிகமாக நான் ஊழியம் புரிவேன். என் துன்ப சோதனைகளில் என்னுடன் இருந்தவர்கள் நீங்களே. என் இராச்சியத்தில் உங்களுக்கு ஓர் இடம் தயார் செய்வேன். பிதாவின் சித்தப்படி அங்கே நான் அரசனுயிருப்பது போலவே உங்களுக்கும் அப்படிச் செய்வேன். அங்கே நீங்கள் என் நித்திய பந்தியில் உண்டு பானம் செய்வீர்கள். இஸ்ராயேலின் பன்னிரு கோத்திரங்களையும் நீதி விசாரிக்க அரியாசனங்களில் அமர்வீர்கள். என் துன்ப சோதனைகளில் என்னுடன் நீங்கள் இருந்தீர்கள். இந்த ஒன்றும்தான் பிதாவின் பார்வையில் உங்களைப் பெரியவர்களாக்குகிறது.''

''இனிமேல் வருகிறவர்களைப் பற்றி என்ன? அவர்களுக்கு இராச்சியத்தில் இடம் இல்லையா? எங்களுக்கு மட்டும்தானு?''

''ஓ! என் இல்லத்தில் எத்தனை இளவரசர்கள்! வாழ்க்கையின் துன்ப சோதனைகளில் கிறீஸ்துவுக்குப் பிரமாணிக்கமாயிருந்தவர்கள் என் இராச்சியத்தின் இளவரசர்களாயிருப்பார்கள். ஏனென்றுல் கடைசி மட்டும் உலக வாழ்க்கையின் வேத சாட்சியத்தில் நிலைத்திருப்பவர்கள் என்னுடன் என் துன்ப சோதனைகளில் பிரமாணிக்கமாயிருந்த உங்களைப்போல் இருப்பார்கள். என்னை விசுவசிக்கிறவர்களுடன்



நான் என்னை ஒரே அடையாளமாக்கிக் கொள்கிறேன். உங்களுக்காகவும், எல்லா மனிதர்களுக்காகவும் நான் ஏற்றுக் கொள்ளும் துயரத்தை, விசே□மாய்த் தெரிந்தெடுக்கப்படுகிறவர்களுக்கு விருதுச் சின்னமாக வழங்குகிறேன். துயரத்தில் எனக்குப் பிரமாணிக்கமாயிருக்கிறவன் பேரானந்தத்தில் என் ஆன்மாக்களுள் ஒருவனுக, என் பிரியமுள்ளவனுக இருப்பான்.''

''நாங்கள் முடிவு வரையிலும் நிலைத்துள்ளோமே.''

''இராயப்பா, அப்படி நீ நினைக்கிறாயா? உனக்குச் சொல்கிறேன். சோதனையின் நேரம் இனிமேல்தான் வரவிருக்கிறது. சீமோனே, யோனுவின் சீமோனே, உங்களனைவரையும் கோதுமையைப் போல் புடைக்க சாத்தான் கேட்டுள்ளான். நான் உங்களுக்காக, உங்கள் விசுவாசம் தத்தளிக்காதபடி வேண்டிக் கொண்டேன். நீங்கள் நலமடைந்தபின் உங்கள் சகோதரர்களைத் திடப்படுத்துங்கள்.''

''நான் பாவி என்று அறிவேன். ஆனுல் மரணம் வரையிலும் உனக்குப் பிரமாணிக்கமாயிருப்பேன். அந்தப் பாவம் என்னிடமில்லை. அது என்னிடம் ஒருபோதும் இராது.''

''என் இராயப்பா, பெருமைப்படாதே. இந்த நேரம் எண்ணற்ற வி□யங்களை மாற்றும். முன்பு ஒரு வகையில் இருந்த அவை இப்பொழுது வேறுக இருக்கும். எத்தனை வி□யங்கள்!... அவை புதிய தேவைகளைக் கொண்டு வந்து புகுத்திவிடும். உனக்கு இது தெரிந்ததுதான். எப்போதும் உனக்கு இதைச் சொல்லியிருக்கிறேன். வழிப்பறித் திருடர்கள் நிறைந்த ஒதுக்கமான இடங்கள் வழியே போகும் போதும்கூட சொன்னேன்: ''பயப்படாதீர்கள். நமக்கு எந்தக் கேடும் நேரிடாது. ஏனென்றுல் ஆண்டவருடைய சம்மனசுக்கள் நம்மோடிருக்கிறுர்கள். எதைப் பற்றியும் கவலைப்படாதீர்கள்'' என்று''

''நீங்கள் எதை உண்போம் என்பது பற்றியும், உங்கள் உடையைப் பற்றியும் கவலைப்படாதீர்கள். நமக்கு என்ன தேவை என்பது பிதாவுக்குத் தெரியும் என்று நான் சொல்லி வந்தேனே. நினைவிருக்கிறதா? இதையும் உங்களுக்குச் சொல்லி வந்திருக்கிறேன். ''ஒரு குருவியை விடவும், இன்று புல்லாயிருந்து நாளை வைக்கோலாக இருக்கிற பூவை விடவும் மனிதன் எவ்வளவோ மேலானவன். அப்படியிருந்தும் பிதாவானவர்

இரண்டையும், அந்தப் பூவையும் அந்த சின்னப் பறவையையும் பராமரிக்கிறார். அப்படியானால் அவர் உங்களைக் கவனிக்க மாட்டாரென்று நீங்கள் சந்தேகிக்கலாமா? இன்னும் "கேட்கிற எவனுக்கும் கொடு, உன்னை ஒருவன் அறைந்தால் மறு கன்னத்தையும் அவனுக்குக் காட்டு" என்றும், "பையையோ கோலையோ கொண்டு போக வேண்டாம்" என்றும் உங்களுக்குக் கூறி வந்தேன். ஏனென்றால் உங்களுக்கு அன்பையும் நம்பிக்கையுறுதியையும் போதித்தேன். ஆனால் இப்பொழுது... இப்பொழுது நேரங்கள் மாறிவிட்டன. இப்பொழுது உங்களுக்குச் சொல்கிறேன்:

"இதுவரையிலும் உங்களுக்கு ஏதும் குறைவுபட்டதா? எப்பொழுதாவது உங்களை யாரும் நோகச் செய்தார்களா?"

"இல்லை ஆண்டவரே, உம்மைத்தான் நோகச் செய்தார்கள்."

"இதிலிருந்து என் வார்த்தைகள் உண்மையென்று நீங்கள் கண்டு கொள்ளலாம். ஆனால் இப்பொழுது சம்மனசுக்களெல்லாம் தங்கள் ஆண்டவரால் திருப்பியழைக்கப்பட்டுள்ளார்கள். இது பசாசுக்களின் நேரம்... ஆண்டவரின் சம்மனசுக்கள் தங்கள் தங்க இறக்கைகளால் தங்கள் கண்களை மூடி தங்களையே மறைத்துக் கொண்டு, துக்கங் கொண்டாடும் வேளை, குரூர, தேவ தூ□ணமான துயர நேரமாதலால் தங்கள் இறக்கை துயர நிறமாயில்லையே என்று வருத்தப்படுகிறார்கள்...இந்த மாலையில் பூமியில் எந்த சம்மனசும் இல்லை. அவர்கள் சர்வேசுரனுடைய அரியாசனத்தின் அருகே கடவுள் கொலையில் ஈடுபட்டுள்ள உலகத்தின தேவ தூ□ணங்களும் மாசற்றவரின் அழுகையும் அங்கே கேட்காமல் அமிழ்த்தும்படியாக அங்கே இருக்கிறார்கள். நாமும் தனியாக இருக்கிறோம். நீங்களும் நானும் - தனியாக, பசாசுக்களே இந்த நேரத்தின் எஜமான்களாயிருக்கிறார்கள். ஆகவே நாம் இப்பொழுது நம்பிக்கையில்லாதவர்களும் நேசியாதவர்களுமான வறிய மனிதரைப் போலாகி அவர்களின் உபாயங்களைச் செய்வோம். பணப்பையை உடையவன் ஜாமான் பையையும் எடுத்துக் கொள்ளட்டும். வாள் இல்லாதவன் தன் வஸ்திரத்தை விற்று ஒரு வாளை வாங்கிக் கொள்ளட்டும். ஏனென்றால், "அவர் துஷ்டர்களோடு ஒருவராய் எண்ணப்பட்டார்" என்றும் என்னைப் பற்றி வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிறது. அதுவும் நிறைவேற வேண்டும். உண்மையாகவே என்னைப் பற்றிய அனைத்தும்



பொருளுடையதாயிருக்கின்றது."

அப்போது சீமோன் எழுந்து தம்முடைய விலையுயர்ந்த மேல் வஸ்திரத்தை வைத்துள்ள பெட்டியை நோக்கிச் செல்கிறார் - இன்று மாலையில் அனைவரும் தங்கள் மிகச் சிறந்த ஆடைகளை அணிந்திருக்கிறார்கள். அதனால் அவர்கள் மிக அருமையான இடைவார்களைக் கட்டியிருக்கிறார்கள். அதிலே தமாஸ்கஸ் எஃகினால் செய்யப்பட்ட குட்டையான வாள்களை வைத்திருக்கிறார்கள். அவை வாள்களை எடுக்கிறார். அவை நீளமாய் சற்று வளைந்திருக்கிற நிஜ வாள்கள். அவற்றை அவர் சேசுவிடம் கொண்டுவந்து: "இன்று மாலை இராயப்பனும், நீரும் ஆயுத பாணிகளாயிருக்கிறோம். இந்த வாள்கள் நமக்கிருக்கின்றன. ஆனால் மற்றவர்களிடம் குட்டை வாள்களே உள்ளன" என்று சொல்கிறார்.

சேசு அந்த வாள்களை வாங்குகிறார். பரிசீலிக்கிறார். ஒன்றை உறையிலிருந்து உருவி அதன் கூர்வாயை தம் நகத்தில் சோதிக்கிறார். இது ஒரு அசாதாரணக் காட்சியாக இருக்கிறது. அதைவிட அந்தக் கொடிய ஆயுதத்தை சேசுவின் கைகளில் காண்பது மனதில் பதியக் கூடிய நூதனக் காட்சியாயிருக்கிறது.

சேசு மவுனமாய் அவற்றைப் பரிசோதிக்கும்போது யூதாஸ் சீமோனைப் பார்த்து: "யார் இவற்றை உங்களுக்குக் கொடுத்தது?" என்று கேட்கிறான். யூதாஸ் ஏதோ கலவரமடைந்தவன் போலிருக்கிறான்...

"யாரா? என் தகப்பனார் ஓர் உயர்ந்த வலிமையுள்ள மனிதர் என்பதை உமக்கு நினைப்பூட்டுகிறேன்."

"சரி... ஆனால் இராயப்பர்?..."

"என் நண்பர்களுக்கு நான் அளிக்கும் பரிசுகளைப் பற்றி பிறருக்கு எப்பொழுதிலிருந்து நான் கணக்குக் கொடுக்க வேண்டுமாம்?"

அப்போது சேசு வாளை உறையில் வைத்துவிட்டு தம் தலையை நிமிர்த்தி வாளை சீமோனிடம் கொடுத்துச் சொல்கிறார்:

"சரி. இவை போதும். இவற்றைக் கொண்டு வந்தது நல்லது. இனி மூன்றும் பாத்திரம் பருகுமுன் சற்றுப் பொறுங்கள். நான் உங்களுக்குக் கூறினேன்: மிகப் பெரியவனும், மிகச் சிறியவனும்

ஒன்றுதான் என்றும், இப்பந்தியில் உங்களுக்கு நான் ஊழியன் போல் நடந்து கொள்கிறேன். இன்னும் கூடுதல் ஊழியம் செய்வேன் என்றும் கூறினேன். இவ்வளவு நேரமும் உங்களுக்கு நான் உணவளித்தேன். அது உங்கள் சரீரத்திற்கு ஒரு ஊழியம். இப்பொழுது உங்கள் உள்ளங்களுக்கு உணவு தர விரும்புகிறேன். இது பழைய சடங்கின் உணவல்ல. இது புதிய வழிபாட்டிற்குரியது. நான் "போதகர்" ஆவதற்கு முன் ஞானஸ்நானம் பெற ஆசித்தேன். அந்த ஞானஸ்நானம் வார்த்தையைப் பரவச் செய்யப் போதுமானதாயிருந்தது. இப்பொழுது போதகருடைய இரத்தம் சிந்தப்படும். நீங்கள் ஸ்நாபகருடைய நாட்களில் அவரால் சுத்திகரிக்கப்பட்டீர்கள். இன்று தேவாலயத்தில் சுத்திகரம் பெற்றீர்கள். ஆயினும் இவை பற்ருது. இன்னுமொரு சுத்திகரிப்பு உங்களுக்குத் தேவைப்படுகிறது. வாருங்கள், உங்களை நான் சுத்திகரிக்கிறேன். உங்கள் உணவை நிறுத்துங்கள். வயிற்றை நிரப்புவதற்காகக் கொடுக்கப்படும் உணவைவிட அதிக மேலானதும் அவசியமுமான ஒன்று உள்ளது. இந்த சரீர உணவு பாஸ்கா திருச்சடங்கின் உணவாதலால் புனித உணவுதான் என்ருலும் கூட, உங்களிடம் தன் ஆசனத்தை அமைத்துக் கொள்ளும்படி இறங்கி வந்து கொண்டிருக்கிற மோட்சத்தின் கொடையைப் பெற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிற பரிசுத்தமான ஆவி அது. பரிசுத்தமாயிருக்கிறவர்களுக்கு சீவியத்தைத் தர அது வருகிறது."

சேசு எழுகிருர். தாம் எளிதாக வெளியே வரும்பொருட்டு அருளப்பரை எழுந்து நிற்கச் சொல்கிருர். பின் அவர் பெட்டியின் அருகே சென்று தம் சிவப்பு அங்கியைக் கழற்றி மடித்து வைக்கப்பட்டிருக்கிற தம்மேல் வஸ்திரத்தின் மேல் வைக்கிருர். ஒரு பெரிய துண்டை எடுத்து இடுப்பில் கட்டுகிருர். சுத்தமாகவும், காலியாகவுமிருக்கிற ஒரு பெரிய வட்டப் பாத்திரத்தருகில் வந்து அதனுள் கொஞ்சம் தண்ணீர் ஊற்றி அறையின் நடுவில் ஒரு மேசைக்கருகே கொண்டுவந்து அதை ஒரு இருக்கையின் மேல் வைக்கிருர். அப்போஸ்தலர்கள் வாயடைத்தவர்களாய் அவரையே பார்த்துக் கொண்டிருக்கிருர்கள்.

"நான் என்ன செய்கிறேன் என்று நீங்கள் யாரும் என்னைக் கேட்கவில்லையா?" என்று கேட்கிருர் சேசு.

"அது எங்களுக்குத் தெரியவில்லை. நாங்கள் எல்லாரும்



ஏற்கெனவே சுத்திகரம் செய்துவிட்டோம்" என்று இராயப்பர் பதிலளிக்கிருர்.

"நான் மீண்டும் சொல்கிறேன். அது பரவாயில்லை. என்னுடைய சுத்திகரிப்பு ஏற்கெனவே சுத்தமாயிருக்கிறவனை மேலும் சுத்தமாக்கும்."

சேசு முழங்காலிட்டு யூதாஸின் காலணிகளை அவிழ்த்து அவனுடைய பாதங்களைக் கழுவுகிருர். ஒவ்வொரு பாதமாகக் கழுவுகிருர். அதைச் செய்ய வசதியாக இருக்கிறது. ஏனென்ருல் அவர்கள் சாய்ந்திருக்கிற சாய்மனைகள் கால்கள் வெளியே இருக்கும்படியாக அமைந்துள்ளன. யூதாஸ் ஆச்சரியமடைகிருன். அவன் எதுவும் பேசவில்லை. சேசு அவன் இடது காலின் பாதரட்சையை அணிவித்து எழுந்திருக்குமுன் அவனுடைய காலணி கட்டிய வலது பாதத்தை முத்தமிடும் போது யூதாஸ், அப்படிச் செய்ய வேண்டுமென்று நினைக்காமல் காலை வேகமாக இழுத்துக் கொண்டதால் சேசுவின் தெய்வீகமான வாயைத் தன் குதிங்காலால் இடித்து விடுகிருன். அடி பலமாகப் படவில்லை. ஆயினும் எனக்கு அதனுல் அதிக வருத்தம் ஏற்படுகிறது. சேசு புன்னகை செய்கிருர். "நான் இடித்து விட்டேனு? நான் நினைக்கவில்லை... மன்னித்துக் கொள்ளும்" என்கிருன் யூதாஸ். "இல்லை நண்பா, நீ வேண்டுமென்று செய்யவில்லை. அது பாதிக்கவில்லை" என்று சேசு சொல்கிருர். யூதாஸ் அவரைப் பார்க்கிருன்... ஒரு குழம்பிய தட்டிக் கழிக்கும் பார்வை...

சேசு அடுத்ததாக தோமையாரிடமும் பின் பிலிப்புவிடமும் வருகிருர். மேசையின் ஒடுங்கிய பக்கம் வழியாகச் சுற்றி வந்து தம் சகோதரர் யாகப்பரை அடைகிருர். அவருடைய பாதங்களைக் கழுவியபின் எழும்பும் போது அவருடைய நெற்றியில் முத்தமிடுகிருர். அதன்பின் பிலவேந்திரரிடம் வருகிருர். பிலவேந்திரர் கூச்சத்தால் சிவந்து தம் அழுகையை அடக்க முயல்கிருர் சேசு அவர் பாதங்களைக் கழுவி அவரை ஒரு குழந்தையைப் போல் முத்தஞ் செய்கிருர். அடுத்து செபெதேயுவின் யாகப்பர். அவர் சேசுவைப் பார்த்து: "ஆண்டவரே, ஆண்டவரே, ஓ ஆண்டவரே! நீர் உம்மையே கீழாக்குகிறீரே என் உந்நத ஆண்டவரே!" என்று முணுமுணுக்கிருர். அருளப்பர் ஏற்கெனவே தன் காலணிகளை அவிழ்த்து விட்டிருக்கிருர். சேசு அவருடைய பாதங்களைக் குனிந்து துடைத்தபோது, அவர் சேசுவின் சிரசில்

முத்தமிடுகிறார்.

ஆனால் இராயப்பரை இந்த சடங்கிற்குப் பணியும்படி செய்வது எளிதாயில்லை. "என் பாதங்களைக் கழுவ நீர் விரும்புகிறீரா? அதை நினைக்கக் கூட வேண்டாம். நான் உயிரோடிருக்கும் வரையிலும் நீர் அப்படிச் செய்ய நான் விட மாட்டேன். நான் ஒரு புழு. நீரோ கடவுள். அவரவர் ஸ்தானத்தில் அவரவர்."

"நான் செய்வதை இப்பொழுது உன்னால் கண்டுபிடிக்க முடியாது. பின்னால் கண்டுபிடிப்பாய். என்னைச் செய்யவிடு."

"ஆண்டவரே! நீர் விரும்புகிற எதையும் செய்து கொள்ளும். என் கழுத்தை வெட்ட வேண்டுமா, வெட்டும். ஆனால் என் பாதங்களை நீர் ஒருபோதும் கழுவக்கூடாது."

"ஓ என் சீமோனே! நான் உன் பாதங்களைக் கழுவாவிட்டால் என் இராச்சியத்தில் உனக்குப் பங்கு இராது என்பதை நீ அறியமாட்டாயா? சீமோனே! உன் ஆத்துமத்திற்கு இந்தத் தண்ணீர் தேவைப்படுகிறது. அதற்கும் நீ செய்ய வேண்டிய நெடும் பயணத்திற்கும் அது தேவைப்படுகிறது. என்னுடன் வர நீ விரும்பவில்லையா? நான் உன் பாதங்களைக் கழுவாவிட்டால் நீ என் இராச்சியத்திற்கு வர மாட்டாய்."

"ஓ! ஆசீர்வதிக்கப்பட்ட என் ஆண்டவரே, அப்படியென்றால் என் சரீரம் முழுவதையும் கழுவும்; கால்களையும், கைகளையும், தலையையும் கழுவும்."

"உன்னைப் போல் குளித்துள்ளவனுக்கு தன் பாதங்களைக் கழுவுவதே போதுமானது - அவன் முழுவதும் சுத்தமாயிருப்பான். பாதங்கள்... பாதங்களைக் கொண்டு மனிதன் அசுத்தத்தில் நடக்கிறான். அதுவும் அவ்வளவு பெரிதல்ல. ஏனென்றால் நான் சொல்லியுள்ளது போல் உணவுடன் உட்சென்று வெளியேறுவது அல்ல அசுத்தப்படுத்துவது. தெருக்களில் அவன் பாதங்களில் படிவது அவனுக்கு அசுத்தமானதல்ல. ஆனால் மனிதனுடைய இருதயத்திற்குள் புதைந்து விளைந்து அங்கிருந்து வெளிவருவதுதான் அவன் செயல்களையும் அங்கங்களையும் அசுத்தப்படுத்துகின்றது. கெட்ட உள்ளமுடைய மனிதனின் பாதங்கள் அக்கிரமங்களுக்கும் ஆசாபாசங்களுக்கும் விலக்கப்பட்ட தொழில்களுக்கும் குற்றங்களுக்கும் நடந்து போகின்றன. ஆதலால் உடலின் பல அங்கங்களிலும் பாதங்களே கூடுதல் சுத்திகரம் பெற



வேண்டியவை. மனிதனுடைய கண்களைக் கொண்டும், வாயைக் கொண்டும் - ஓ மனிதனே! மனிதனே! உத்தமமான ஒரு நாட் ஜீவன்: ஆதி மனிதன்! அதன்பின் வஞ்சிப்பவனால் இவ்வளவுக்குக் கெடுக்கப்பட்டவன்! அப்போது உன்னிடம் வஞ்சமில்லை. உன்னிடம் பாவமில்லை... ஆனால் இப்பொழுது? நீ முழுவதும் வஞ்சமும் பாவமுமாயிருக்கிறாய் - பாவஞ் செய்யாத பாகம் உன்னிடம் எதுவுமில்லை!"

சேசு இராயப்பரின் பாதங்களைக் கழுவி அவற்றை முத்தமிடுகிறார். இராயப்பர் அழுகிறார். சேசுவின் இரு கரங்களையும் தன் பெரிய கரங்களில் எடுத்து தன் கண்களில் வைத்து ஒற்றி பின் அவைகளை முத்தமிடுகிறார்.

சீமோனும் தன் பாதரட்சைகளைக் கழற்றி, எந்த ஒரு வார்த்தையும் பேசாமல் தன் பாதங்களை சேசு கழுவ விடுகிறார். பின் சேசு பர்தலோமேயுவிடம் போகப் புறப்படுகையில் சீமோன் முழங்காலிட்டு சேசுவின் பாதங்களை முத்தஞ்செய்து: "என் இரட்சகரே! நன் தீர்வையின் நேரத்தில் குழப்பமடையாதபடி, என் சரீர குஷ்டத்திலிருந்து என்னைச் சுத்தமாக்கியது போல என் பாவக் குஷ்டத்திலிருந்தும் என்னைச் சுத்திகரித்தருளும்" என்று சொல்கிறார்.*

"பயப்படாதே சீமோன். நீ மலையின் உறைபனி போல் வெண்மையாக மோட்ச பட்டணத்திற்கு வருவாய்" என்கிறார் சேசு.

"ஆண்டவரே! என்னைப் பற்றி? உம்முடைய முதிய பர்தலோமேயுவுக்கு என்ன சொல்லப் போகிறீர்? அத்திமரத்தின் நிழலில் என்னைக் கண்டீர்; என் இருதயத்தை வாசித்தீர். இப்பொழுது என்ன காண்கிறீர்? எங்கே என்னைக் காண்கிறீர்? இந்த எளிய வயோதிபனுக்கு உறுதி கூறும். நீர் என்னை எப்படியிருக்க விரும்புகிறீரோ அப்படி நான் ஆவதற்கு வேண்டிய பலமும் காலமும் பற்றாதென்று பயப்படுகிறேன்" என்கிறார். மிகவும் உணர்வுடன் காணப்படுகிறார்.

"பர்தலோமே, நீயும் பயப்படக் கூடாது. "இதோ கபடமில்லாத, உண்மையான இஸ்ராயேலன்" என்று அன்று நான் கூறினேன். இப்பொழுது கூறுகிறேன்: "இதோ கிறீஸ்துவுக்குத் தகுதியான உண்மையான கிறீஸ்தவன்." எங்கே உன்னைக்

---

* அப்போஸ்தலரான தீவிர சீமோன் குஷ்டரோகத்திலிருந்து சேசுவால் குணமாக்கப்பட்டவர்.

காண்கிறேன்? ஊதா உடையணிந்து நித்திய அரியாசனத்தில். எப்பொழுதும் உன்னுடன் நான் இருப்பேன்.''

அடுத்து யூதா ததேயுஸ். அவர் சேசுவைத் தம் பாதத்தருகில் கண்டதும் தன்னை அடக்க முடியாமல் மேசை மேல் வைத்திருந்த தம் கரங்களில் தலையை சாய்த்தபடி அழுகிறார்.

''அழாதே, என் இனிய சகோதரா. இப்பொழுது ஒரு நரம்பு வெட்டியெடுக்கப்படுவதைத் தாங்க வேண்டியவனைப் போல் இருக்கிறாய். அதை உன்னால் பொறுக்க முடியாதென்று நினைக்கிறாய். ஆனால் இது கொஞ்ச நேர வேதனைதான். அதன்பின்... நீ சந்தோஷிப்பாய். ஏனென்றால் நீ என்னை நேசிக்கிறாய். உன் பெயர் யூதா. நீ நம் பெரிய யூதாவைப் போல்: ஒரு பேராற்றல் படைத்தவனாக இருக்கிறாய். பாதுகாப்போன் என்கிறவன் நீதான். உன்னுடைய செயல்கள் ஒரு சிங்கத்தைப் போலிருக்கும். அவபக்தியுடையவர்களை நீ எழுப்புவாய். நீ அவர்களை எதிர்கொள்ளும்போது அவர்கள் பின்வாங்குவார்கள். தீயவர்கள் பயங்கரமடைவார்கள். எனக்குத் தெரிகிறது, வீரமுடனிரு. நம்முடைய உறவை மோட்சத்தில் ஒரு நித்திய ஒன்றிப்பு பலப்படுத்தி உத்தமமாக்கும்.'' இவ்வாறு கூறி சேசு தன் மற்ற சகோதரனுக்குச் செய்தது போல இவர் நெற்றியிலும் முத்தமிடுகிறார்.

''ஆண்டவரே, நான் பாவி, எனக்கு வேண்டாம்'' என்கிறார் மத்தேயு.

''மத்தேயு, நீ பாவியாக இருந்தாய். இப்பொழுது நீ அப்போஸ்தலன். என் 'குரல்களுள்' நீயும் ஒருவன். உன்னை ஆசீர்வதிக்கிறேன். கடவுளை நோக்கி மேலும் மேலும் முன்னால் வர எவ்வளவு தூரம் நடந்துள்ளன இப்பாதங்கள்!... உன் ஆன்மா அவற்றை ஏவித் தூண்டியது. அவை என் வழி அல்லாத எல்லா வழிகளையும் விட்டுவிட்டன. முன்னே செல். இப்பாதை எங்கே முடிவடைகிறதென அறிவாயா? உன்னுடையவும், என்னுடையவும் பிதாவின் நெஞ்சில்.''

சேசு முடித்து விட்டார். அவர் துண்டை எடுத்து விட்டு சுத்தமான நீரில் தம் கரங்களைக் கழுவி, தம் ஆடைகளை அணிந்து, தமதிடத்திற்குச் செல்கிறார். அவர் உட்காரும்போது: 'நீங்கள் இப்பொழுது சுத்தமாயிருக்கிறீர்கள். ஆனால் எல்லாருமல்ல. அப்படி இருக்க விரும்பியவர்கள்தான்' என்று சொல்கிறார்.



சேசு யூதாஸை உற்று நோக்குகிறார். யூதாஸ் இதைக் கேளாதவன் போல் நடிக்கிறான். மத்தேயுவிடம் எப்படி தன்னுடைய தகப்பன் தன்னை ஜெருசலேமுக்கு அனுப்புவதில் கருத்தாயிருந்தாரென்று விளக்கிச் சொல்வதில் முனைப்பாக இருக்கிறான். பிரயோஜனமற்ற பேச்சு. அவன் எவ்வளவு தைரியசாலியாக இருந்தாலும் நிச்சயம் அவன் கலங்காமலிருக்க முடியாது. தனக்கு ஒரு தோற்றம் கொடுக்கவே அந்தப் பேச்சு.

சேசு மூன்றும் முறையாக பொதுப் பாத்திரத்தில் இரசம் ஊற்றுகிறார். தாமும் பருகி மற்றவர்களுக்கும் வழங்குகிறார். பின் 114-ம் சங்கீதம் என்று நினைக்கிறேன். அதை சேசு தொடங்க மற்றவர்கள் சேர்ந்து பாடுகிறார்கள். ''ஆண்டவரை நேசிக்கிறேன். ஏனெனில் அவர் என் மன்றாட்டின் குரலைக் கேட்டார். அவர் எனக்குத் தமது செவியைச் சாய்த்தபடியால் என் வாழ்நாளளவும் நான் அவரை மன்றாடுவேன். மரணத்தின் சஞ்சலங்கள் என்னைச் சூழ்ந்து கொண்டன.''

சற்று அமைதிக்குப் பின் அவர் மறுபடியும் பாடுகிறார்: (சங். 115) ''நான் விசுவசித்தபடியால் பேசினேன். ஆனால் நான் மிகவும் சிறுமையடைந்து விட்டேன். என்னுடைய கலக்கத்தில் எல்லா மனிதனும் பொய்யன் என்று சொன்னேன்...''

சேசு யூதாஸை உற்று நோக்கிப் பார்க்கிறார். இன்று மாலை என் சேசுவின் குரல் களைத்துப் போயிருக்கிறது. ஆனால் அது பின்வரும் வசனங்களைப் பாடும்போது அதன் வலிமையை மீண்டும் பெறுகிறது: ''பரிசுத்தருடைய மரணம் ஆண்டவருடைய சமூகத்தில் விலைமதிப்பானது - என் கட்டுக்களை உடைத்தீர். உமக்குத் தோத்திரப் பலி செலுத்துவேன்; ஆண்டவருடைய திருநாமத்தைக் கூவியழைப்பேன்...''

மேலும் சற்று அமைதி. சேசு மறுபடியும் சங்கீதத்தைத் தொடங்கிப் பாடுகிறார்: ''சகல ஜனங்களே, கர்த்தரைப் புகழுங்கள். சர்வ ஜனங்களே! அவரைத் துதியுங்கள். ஏனெனில் அவருடைய தயாளம் நமது மேல் ஸ்திரப்பட்டது. கர்த்தரின் உண்மை என்றும் நிலைத்திருக்கும் (சங். 116).

யூதாஸின் குரல் எவ்வளவு அபசுரமாக கேட்கிறதென்றால், தோமையார் தம் வலிமையான கீழ் ஸ்தாயிக் குரலால் அவன் குரலை நேராகக் கொண்டுவர வேண்டியிருந்தது. அவனை அவர் உற்றுப்

பார்க்கிறார். மற்றவர்களும் அவனைப் பார்க்கிறார்கள். காரணம், பொதுவாக அவன் குரல் மற்றவர்களுடன் இசைந்தே இருக்கும். அவன் எல்லாக் காரியங்களிலும் செய்வது போல் இதிலும் தன் குரலைப் பற்றிப் பெருமை கொண்டிருப்பதாக நான் உணர்ந்திருக்கிறேன். ஆனால் இந்த மாலையில் சில பாடல் கருத்துகள் அவனை நிலையிழக்கச் செய்வதால் அவன் அபசுரங்களில் பாடுகிறான். அந்த வாக்கியங்களை அழுத்துவதாக அமைந்த சேசுவின் பார்வையும் அவனை அப்படி நிலைகுலையச் செய்கின்றது. அப்படிப்பட்ட வாக்கியங்களில் ஒன்று: "மனிதன் மீது நம்பிக்கை கொள்வதை விட ஆண்டவர் மேல் நம்பிக்கை கொள்வது நலமாமே." இன்னொன்று: 'நான் தள்ளிவிடப்பட்ட போது தள்ளாடினேன். கீழே விழப் போனேன். ஆனால் ஆண்டவர் என்னைத் தாங்கிக் கொண்டார்.' இன்னொன்று: 'நான் சாக மாட்டேன். நான் வாழ்ந்து ஆண்டவரின் செயல்களை எடுத்துரைப்பேன்.' நான் சொல்லப் போகும் மேலும் இரு வாக்கியங்கள் அந்தத் துரோகியின் குரலை அவன் தொண்டையிலேயே வைத்து நசுக்குகின்றன: "கட்டுகிறவர்களால் ஒதுக்கப்பட்ட கல்லே கட்டிடத்தின் மூலைக் கல்லாயிற்று - ஆண்டவர் பெயரால் வருபவர் ஆசீர்வதிக்கப் பெற்றவர்."

சங்கீதப் பாடல் முடிவடைய சேசு பாஸ்கா ஆட்டுக்குட்டியை மறுபடியும் வெட்டிப் பரிமாறுகிறார்.

அப்போது மத்தேயு யூதாஸிடம்: "உமக்கு உடம்புக்கு நன்றாயில்லையா?" என்று கேட்கிறார்.

அதற்கு யூதாஸ்: "இல்லை. என்னைச் சும்மா விடும். என்னைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்" என்று சொல்கிறான்.

மத்தேயு தோள்களை அசைக்கிறார்.

அதைச் செவியுற்ற அருளப்பர்: "ஆண்டவருக்கும் உடம்பு நன்றாயில்லை. என் சேசு, உமக்கு என்ன செய்கிறது? உம்முடைய குரல் உடல் நலமில்லாத, அல்லது அதிகமாக அழுதுள்ளவனின் குரலைப் போல் பலவீனமாய் இருக்கிறதே" என்று சேசுவைப் பிடித்துக் கொண்டு அவர் மார்பில் தலையைச் சாய்த்தபடி கேட்கிறார்.

"நான் அதிகமாக நடந்து எனக்கு ஜலதோஷம் கண்டுள்ளது. அவர் அதிகமாகப் பேசியுள்ளார். அவ்வளவுதான்" என்று அமைதியிழந்து கூறுகிறான் யூதாஸ்.



சேசு யூதாஸுக்குப் பதில் கூறாமல் அருளப்பரிடம்: "இதற்குள் நீ என்னை அறிந்திருக்கிறாய்... எது என்னைக் களைப்படையச் செய்கிறது எனபதும் உனக்குத் தெரியும்" என்று கூறுகிறார்.

பாஸ்கா ஆட்டுக் குட்டி ஏறக்குறைய உட்கொள்ளப்பட்டு விட்டது. சேசு மிகக் கொஞ்சமே உட்கொண்டார். ஒவ்வொரு தடவை இரசம் பருகிய போதும் ஒரு சிறுவாயளவுதான் பருகினார். அதற்கீடாக நிறைய தண்ணீர் குடித்தார் - காய்ச்சலில் இருப்பது போல. அவர் மறுபடியும் பேசத் தொடங்குகிறார்.

"சற்று முன் நான் செய்ததை நீங்கள் கண்டுபிடிகக வேண்டுமென விரும்புகிறேன். முதன்மையானவன் கடைசியானவனைப் போலிருக்கிறான் என்றும் சரீரப் பிரகாரமாயில்லாத ஓர் உணவை உங்களுக்குக் கொடுக்கப் போகிறேன் என்றும் கூறினேன். உங்கள் உள்ளங்களுக்கு தாழ்ச்சியென்னும் ஊட்ட உணவைக் கொடுத்திருக்கிறேன். நீங்கள் என்னை போதகரென்றும் ஆண்டவரென்றும் அழைக்கிறீர்கள். அது சரியே. நான் அவர்தான். அப்படிப்பட்ட நான் உங்கள் பாதங்களைக் கழுவினேனாகில், நீங்கள் ஒருவர் ஒருவரின் பாதங்களைக் கழுவ வேண்டும். நான் செய்ததை நீங்களும் செய்யும்படி உங்களுக்கு முன்மாதிரிகை காண்பித்தேன். இதோ நான் உங்களுக்குச் சொல்கிறேன்: எந்த ஊழியனும் தன் எஜமானுக்கு மேற்பட்டவனல்ல. எந்த அப்போஸ்தலனும் தன்னை ஏற்படுத்தியவருக்கு மேலானவனல்ல. இந்த விஷயங்களைக் கண்டுபிடிக்க முயலுங்கள். இவற்றைக் கண்டுபிடித்து நடைமுறையில் அனுசரிப்பீர்களாகில் நீங்கள் ஆசீர்வதிக்கப்படுவீர்கள். ஆனால் உங்களில் எல்லாரும் ஆசீர்வதிக்கப்பட மாட்டீர்கள். உங்களை நான் அறிவேன். நான் யாரைத் தெரிந்து கொள்கிறேன் என்றும் அறிவேன். நான் எல்லாரைப் பற்றியும் ஒரே விதமாகப் பேசவில்லை. ஆனால் உண்மை எதுவோ, அதைச் சொல்லுகிறேன். ஆனால் என்னைப் பற்றி எழுதப்பட்டவை நிறைவேற வேண்டும். "என்னுடன் அப்பம் உண்பவனே எனக்கெதிராக எழும்புகிறான்." என்னைப் பற்றி நீங்கள் எந்த சந்தேகமும் கொள்ளாதபடி நான் எல்லாவற்றையும் அவை நடைபெறுவதற்கு முன்பே உங்களுக்குச் சொல்லுகிறேன். எல்லாம் நிறைவேற்றம் அடைந்தபின் நான் நான்தான் என்று இன்னுமதிகமாக விசுவசிப்பீர்கள். என்னை ஏற்றுக் கொள்கிறவன்

என்னை அனுப்பிய பரலோகத்திலிருக்கிற பிதாவை ஏற்றுக் கொள்கிறான். நான் அனுப்புகிறவர்களை ஏற்றுக் கொள்கிறவன் என்னை ஏற்றுக் கொள்கிறான். ஏனென்றால் நான் பிதாவுடன் இருக்கிறேன். நீங்கள் என்னுடன் இருக்கிறீர்கள்... இப்பொழுது நாம் சடங்கை முடிப்போம்."

சேசு பொதுப் பான பாத்திரத்தில் மேலும் இரசத்தை ஊற்றுகிறார். ஆனால் தாமும் பருகி மற்றவர்களுக்கும் கொடுப்பதற்கு முன் அவர் எழுகிறார். எல்லாரும் அவருடன் எழுந்து நிற்கிறார்கள். முந்திப் பாடிய ஒரு சங்கீதத்தையே அவர் திரும்பவும் பாடுகிறார்: "நான் விசுவசித்தபடியே பேசினேன்..." (சங். 115). இதன் பிறகு அவர்முடிவுக்கு வராத ஒரு சங்கீதத்தைப் பாடுகிறார். அது அழகானது. ஆனால் நித்தியமானது. அதன் தொடக்க வார்த்தைகளிலிருநதும் அதன் நீளத்திலிருந்தும் அதைக் கண்டுபிடித்து விட்டேன் என நினைக்கிறேன்... சங். 118. அதை அவர்கள் இப்படிப் பாடுகிறார்கள்: ஒரு பாகத்தைப் பல்லவி போல் சேர்ந்து பாடியபின், தனிக்குரலில் சில வரிகளையும், அடுத்த சில வரிகளைச் சேர்ந்தும் இபபடியே முடிவு வரையிலும் பாடுகிறார்கள். பாடி முடியவும் அவர்களுக்குத் தாகம் ஏற்பட்டது ஆச்சரியமல்ல.

சேசு அமர்கிறார். அவர் சாய்மணையில் சாயவில்லை. நாம் உட்காருவது போல அமர்ந்திருக்கிறார். அவர் கூறுகிறார்: "பழைய சடங்கு நடந்து முடிந்து விட்டதால் இனி நான் புதிய திருச்சடங்கை நிறைவேற்றுகிறேன். அதைச் செய்யும் தருணம் இதுவே. அதன் காரணமாகவே இந்தப் பாஸ்காவை நான் ஆவலாய்த் தேடினேன். இது முதல் நிரந்தரமான அன்பின் திருச்சடங்கில் உட்கொள்ளப்படும் பலிப்பொருள் இதுவாக இருக்கும். என் பிரியமுள்ள நண்பர்களே, பூமியின் வாழ்நாளெல்லாம் நான் உங்களை நேசித்திருக்கிறேன். என் பிள்ளைகளே, நித்தியம் முழுவதும் நான் உங்களை நேசித்தேன். முடிவு பரியந்தம் உங்களை நேசிக்க விரும்புகிறேன். இதைவிடப் பெரிய காரியம் வேறெதுவுமில்லை. இதை மனதில் வைத்திருங்கள். நான் போகிறேன். ஆனால் நான் இப்பொழுது ஆற்றப் போகிற புதுமையின் வழியாக நாம் எக்காலத்திற்கும் ஐக்கியப்பட்டிருப்போம்."

சேசு ஒரு முழு அப்பத்தை எடுத்து இரசம் நிரம்பிய பாத்திரத்தின் மேல் வைக்கிறார். அவற்றை ஆசீர்வதித்து ஒப்புக்



கொடுக்கிறார். பின் அந்த அப்பத்தைப் பிட்டு பதின்மூன்று வாயளவு துண்டுகளை எடுத்து ஒவ்வொரு அப்போஸ்தலருக்கும் கொடுக்கும் போதும் சொல்கிறார்: "இதை வாங்க உண்ணுங்கள. இது என் சரீரமாயிருக்கிறது. செல்லவிருக்கிற என் ஞாபகமாக இதைச் செய்யுங்கள." பின்னும், பான பாத்திரத்தைக் கொடுத்துச் சொல்கிறார்: "இதை வாங்கிப் பருகுங்கள். இது என் இரத்தமாயிருக்கிறது. என் இரத்தத்திலும், என் இரத்தத்தின் வழியாகவும் செய்யப்படும் புதிய உடன்படிக்கையின் பாத்திரம் இதுவே. இது உங்களுக்காக உங்கள் பாவங்களை மன்னிக்கவும், உங்களுக்கு ஜீவியம் கொடுப்பதற்காகவும். இதை என் ஞாபகமாகச் செய்யுங்கள்."

சேசு மிகவும் துயரமாயிருக்கிறார். அவர் முகத்தில் புன்னகையோ, ஒளியின் ஓர் அடையாளமோ, நிறமோ காணபபடவில்லை. ஏற்கெனவே மரண அவஸ்தைப்படும் முகமாயிருக்கிறது. முழுக் கவலையோடு அபபோஸ்தலர்கள் அவரை நோக்கிப் பார்க்கிறார்கள்.

சேசு எழுந்து சொல்கிறார்: "நீங்கள் எழ வேண்டாம். நான் உடனே திரும்பி வருவேன்." அப்போது அவர் பதின்மூன்றாம் அப்பத்துண்டையும் பாத்திரத்தையும் எடுத்துக்கொண்டு இராப் போஜன சாலையை விட்டு வெளியே வருகிறார்.

"அவர் தம் தாயிடம் போகிறார்" என்று அருளப்பர் மெல்லச் சொல்கிறார்.

யூதா ததேயுஸ் ஒரு பெருமூச்சுடன்: "அவர்கள் பாவம்!" என்கிறார்.

"அவர்களுக்கு எல்லாம் தெரியும். எப்போதும் அவர்கள் எல்லாவற்றையும் அறிநதேயிருக்கிறார்கள்."

எல்லாரும் மிகத் தாழ்ந்த குரலில் பேசுகிறார்கள் - ஒரு சடலம் இருக்கிற இடத்தில் பேசுவதுபோல.

தோமையார் கேட்கிறார்: "உண்மையாகவே நீங்கள் அப்படி நினைக்கிறீர்களா?..." என்று. அவருக்கு இன்னும் நம்புவதற்கு மனம் வரவில்லை.

அதற்கு செபதேயுவின் யாகப்பர்: "உமக்கு அதில் சந்தேகமா? இது அவருடைய நேரம்" என்கிறார்.

"நாம் பிரமாணிக்கமாக இருப்பதற்கு கடவுள் நமக்குத்

திடமளிப்பாராக!'' என்கிறுர் தீவிர சீமோன்.

''ஓ! நான்...'' இராயப்பர் பேசத் தொடங்கவும் கவனத்தோடிருக்கிற அருளப்பர்: ''அமைதி! அவர் வருகிறுர்'' என்கிறுர்.

சேசு திரும்ப உள்ளே வருகிறுர். அவருடைய கரத்தில் வெறும் பாத்திரம் உள்ளது. அதன் அடியில் மாத்திரம் இரசத்தின் அடையாளம் இருக்கிறது. சர விளக்கின் வெளிச்சத்தில் அது இரத்தம் போலவே காணப்படுகிறது. யூதாஸ் இஸ்காரியோத் தன் முன்னுல் இருக்கிற அந்தப் பாத்திரத்தால் கவரப்பட்டவனைப் போல் பார்க்கிறுன். பின் கண்களைத் திருப்பிக் கொள்கிறுன். சேசு அவனைக் கவனிக்கிறுர். நடுக்கம் கொள்கிறுர். அப்போது அவர் மார்பில் சாய்ந்துள்ள அருளப்பர் அதை உணருகிறுர். ''நீர் நடுங்குகிறீரே! சொல்லக் கூடாதா?'' என்கிறுர்.

''இல்லை. நான் காய்ச்சலால் நடுங்கவில்லை... நான் எல்லாவற்றையும் உங்களுக்குச் சொல்லி விட்டேன். எல்லாவற்றையும் உங்களுக்குத் தந்து விட்டேன். இதற்குமேல் வேறு எதையும் என்னுல் கொடுக்க முடியாது. என்னையே உங்களுக்குக் கொடுத்து விட்டேன்.''

அவர் வழக்கமாகச் செய்யும் கையசைவைச் செய்கிறுர். குவிந்திருந்த தம் கரங்களை இப்பொழுது அவர் விரித்து, அன்போடு நீட்டி, தலையைத் தாழ்த்தியிருக்கிறுர். அது அவர் இப்படிச் சொல்வது போலிருக்கிறது: ''இதற்கு மேல் என்னுல் கொடுக்க முடியாமைக்கு மன்னித்துக் கொள்ளுங்கள். அது அப்படித்தான்.''

சேசு தொடர்ந்து சொல்கிறுர்: ''எல்லாவற்றையும் நான் உங்களுக்குச் சொல்லிவிட்டேன். எல்லாவற்றையும் தந்து விட்டேன். புதிய திருமுறை நிறைவேற்றப்பட்டு விட்டது. இதை என் ஞாபகமாகச் செய்யுங்கள். உங்கள் குருவைப் போல நீங்கள் தாழ்ச்சியுடனும், பரிசுத்தத்துடனும் இருக்கும்படி உங்களுக்குக் கறபிக்க உங்கள் பாதங்களைக் கழுவினேன். ஏனென்ருல் உங்களுக்கு இதோ சொல்கிறேன், சீடர்கள் தங்கள் குருவைப போலிருக்க வேண்டும். அதை நினைவில் கொள்ளுங்கள். மனத்தில் பதியுங்கள். உங்கள் உயர்பதவிகளில் இருக்கும் போதும் இதை நினைத்துக் கொள்ளுங்கள். எந்த சீடனும் குருவுக்கு மேலானவனல்ல. உங்களை நான் கழுவியதுபோல் நீங்கள்



ஒருவருக்கொருவர் செய்யுங்கள். அதாவது,சகோதரரைப் போல் ஒருவரையொருவர் நேசியுங்கள். மரியாதை செய்து உதவி புரியுங்கள். ஒருவருக்கொருவர் முன்மாதிரிகை காட்டுங்கள். பரிசுத்தமாயிருங்கள். மோட்சத்திலிருந்து இறங்கின உயிருள்ள அப்பத்தை உட்கொள்வதற்குத் தகுதியாயிருக்கும்படியாகவும் என் நாமத்திற்காக உங்களைப் பகைக்கும் விரோதமுள்ள உலகத்தில் என் சீடர்களாயிருக்க வேண்டிய தைரியத்தை உங்களிலும் இந்த அப்பத்தின் மூலமாகவும் பெற்றிருக்கும்படியாகவும் பரிசுத்தமாயிருங்கள். ஆயினும் உங்களில் ஒருவன சுத்தமாயில்லை. உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக் கொடுப்பான். அதனுல் என் உள்ளம் ஆழமாய்க் கலங்கியிருக்கிறது... என்னைக் காட்டிக் கொடுக்கிறவனுடைய கரம் இதோ என்னுடன் இம்மேசையில் இருக்கிறது. என் அன்பும், என் சரீரமும் இரத்தமும் என் வார்த்தையும் அவன் தன் வழியைத் திருத்திக் கொள்ளவும், மனஸ்தாபப்படவும் செய்யவில்லை. அவனுக்காகவும் மரணத்திற்குச் செல்லும் நான் அவனை மன்னிக்க ஆசிக்கிறேன்.''

சீடர்கள் ஒருவரையொருவர் பயந்த பார்வை பார்க்கிறுர்கள். அவர்கள் ஒருவரையொருவர் சந்தேகத்துடன் ஆராய்கின்றனர். இராயப்பர் தம்முடைய சந்தேகங்கள் எல்லாம் புதுப்பிக்கப்பட்டு இஸ்காரியோத்தைக் கூர்ந்து நோக்குகிறுர். யூதா ததேயுஸ் சடாரென எழுந்து மத்தேயுவைத் தாண்டி இஸ்காரியோத்தைப் பார்க்கிறுர்.

ஆனுல் யூதாஸ் எப்படி தன்னைப் பற்றி உறுதியாயிருக்கிறுன்! அவனும் மத்தேயுவைச் சந்தேகிப்பது போல் பார்க்கிறுன். பின் சேசுவை உற்றுப் பார்த்துக் கொண்டே: ''ஒருவேளை அது நானுயிருக்குமோ?'' என்கிறுன். தன் நேர்மையைப் பற்றி மிக நிச்சயமாயிருப்பவன் அவனே என்பது போல் காணப்படுகிறுன். பேச்சு விடுபட்டுப் போகாதபடி அவனே அதைச் சொல்லிக் கேட்கிறுன்.

சேசு முன்போலவே கரங்களை நீட்டி: ''சீமோனின் யூதாஸ்! நீதான் அப்படிச் சொல்கிறுய். நான் சொல்லவில்லை. நீ அப்படிச் சொல்கிறுய். உன் பெயரை நான் உச்சரிக்கவில்லை. நீ ஏன் உன்னையே குற்றஞ்சாட்டுகிறுய்? உன் அந்தரங்க எச்சரிப்பாளரைக் கேள் - உன் மனித மனசாட்சியை. நீ ஒரு மனிதனுக நடக்கும்படி பிதாவாகிய கடவுள் உனக்குக் கொடுத்த மனசாட்சி அது. அது உன்னைக் குற்றஞ் சாட்டுகிறதா என்று கவனி.

நீதான் அதை முதலில் அறிந்து கொள்வாய். ஆனால் அது அப்படியல்ல என்று உறுதி கூறுமானல், ஒரு வேடிக்கையாகக் கூட சொல்வதற்கும், அல்லது நினைப்பதற்கும் தகாத ஒரு செயலைப் பறறி ஏன் ஒரு வார்த்தை கூட நீ சொல்லவேணடும்? ஏன் அதைப் பற்றிப் பேச வேண்டும்?''

சேசு அமைதியாகப் பேசுகிறார். ஒரு கற்றறிந்த மனிதன் தன் மாணவர்களுடன் ஒரு கொள்கையை ஆதரித்துப் பேசுவது போல் இருக்கிறது. குழப்ப நிலை கூடுதலாயிருந்தாலும் சேசுவின் அமைதி அதைச் சாந்தப்படுத்துகிறது.

இராயப்பர்தான் யூதாஸை அதிகம் சந்தேகிக்கிறார். யூதா ததேயுஸுக்கு அப்படியே சந்தேகம் இருந்தாலும் அவர் அப்படிக் காணப்படவில்லை. காரணம் யூதாஸினுடைய சர்வ சாதாரணமான நடத்தை அந்த சந்தேகத்தை அடித்து விடுகிறது. இராயப்பர் அருளப்பருடைய சட்டையைப் பிடித்திழுக்கிறார். சேசு காட்டிக் கொடுப்பதைப் பற்றிப் பேசியதால் அவருடன் அதிகம் நெருங்கிப் போயிருந்த அருளப்பர் திரும்பிப் பார்க்கிறார். இராயப்பர் அவரிடம்: ''அது யார் என்று கேளும்'' என்கிறார்.

அருளப்பர் ஆண்டவரின் மார்பில் சாய்ந்தபடியே சேசுவை முத்தமிடுகிற மாதிரி தலையைத் தூக்கி, அவருடைய காதிற்குள்: ''ஆண்டவரே, அது யார்?'' என்று கேட்கிறார்.

சேசு மிக மெல்லிய குரலில்: ''அப்பத் துண்டை குழம்பில் தோய்த்து யாருக்குக் கொடுக்கிறேனே அவன்தான்'' என்கிறார். பின்னும் அவர் ஒரு முழு அப்பத்தை - நற்கருணைக்கு பிட்கப்பட்ட அப்பத்தை அல்ல - எடுத்து அதில் ஒரு பெரிய துண்டைப் பிட்டு தட்டில் இருந்த ஆட்டுக் குட்டிக் குழம்பில் தோய்த்து யூதாஸிடம் கொடுத்து: ''இந்தா யூதாஸ், இது உனக்குப் பிடிக்குமல்லவா?'' என்கிறார்.*

''நன்றி குருவே, எனக்கு இது நிச்சயம் பிடிக்கும்'' என்று கூறி, அது என்னவென்று புரியாமல் பயங்கரப் புன்னகையுடன் குற்றத்தைக் காட்டுகிற அப்பத்தைத் தன் வலிமையான பற்களால் கடித்துச் சாப்பிடுகிறான். அருளப்பர் அதிர்ச்சியடைந்தவராய் அந்தக் கொடிய புன்னகையைப் பார்க்கச் சகிக்காமல் கண்களை மூடுகிறார்.

''நல்லது, உன்னை நான் மகிழ்ச்சிப்படுத்தியுள்ளதால் இனி நீ போ. எல்லாம் இங்கே நிறைவேறி விட்டது. (இங்கே





என்கிற வார்த்தையை சேசு மிக அழுத்தமாய்ச் சொல்கிறார்.) மற்ற இடங்களில் இன்னும் செய்யப்பட வேண்டியதை, சீமோனின் யூதாஸ், துரிதமாய்ச் செய்'' என்கிறார் ஆண்டவர்.

''உடனே உமக்குக் கீழ்ப்படிவேன் குருவே. இனி ஜெத்சமெனியில் உம்மோடு வந்த சேர்ந்து கொள்வேன். நீர் வழக்கம்போல் அங்கு போவீர்தானே?''

''ஆம்... வழக்கம் போல் அங்கு போகிறேன்.''

''இவருக்கு என்ன செய்ய வேண்டியிருக்கிறது? இவர் தனியாகவா போகிறார்?'' என்று கேட்கிறார் இராயப்பர்.

அதற்கு யூதாஸ் பரிகாசத்துடன்: ''நான் ஒன்றும் குழந்தையல்ல'' என்று சொல்லிக் கொண்டே மேல் வஸ்திரத்தைப் போட்டுக் கொள்கிறான்.

''அவன் போகட்டும். என்ன செய்யப்பட வேண்டுமென்று அவனுக்கும் எனக்கும் தெரியும்'' என்கிறார் சேசு.

''சரி ஆண்டவரே'' என்று கூறி இராயப்பர் மவுனமாகிறார். தன் உடன் கூட்டாளியைச் சந்தேகித்தது பாவம் என்று நினைக்கிறாரோ என்னவோ. அவர் தம் உள்ளங்கையில் தலையைச் சார்த்தி சிந்தித்தபடியிருக்கிறார்.

சேசு அருளப்பரைத் தம் பக்கம் சாய்த்து: ''இராயப்பனிடம் தற்சமயம் ஒன்றும் சொல்லாதே. அது பயனற்ற துர்மாதிரிகையாக இருக்கும்'' என்கிறார்.

யூதாஸ்: ''குருவே, நான் போய் வருகிறேன். நண்பர்களே, போய் வருகிறேன்'' என்கிறான்.

''போய் வா பையா'' என்கிறார் இராயப்பர்.

அருளப்பர் சேசுவின் நெஞ்சின் கீழாக சாய்ந்தபடி: ''சாத்தான்!'' என்கிறார். சேசு மட்டுமே அதைக் கேட்டுப் பெருமூச்செறிகிறார்.

இக்காட்சி முடிவடைகிறது. சேசு சொல்கிறார்: ''உன மேல் இரக்கப்பட்டு நான் இக்காட்சியை நிறுத்துகிறேன். இராப் போஜன காட்சியின் முடிவை பின்னல் உனக்குக் காண்பிப்பேன்'' என்கிறார்.

---

* பாஸ்கா சடங்கில் இப்படிக் கொடுப்பது வீட்டுத் தலைவர் செய்யக் கூடிய வழக்கமாக அந்நாளில் இருந்தது.

## இராப் போஜனம் – தொடர்ச்சி

சில விநாடிகள் மிக ஆழ்ந்த மவுனம் நிலவுகிறது. சேசுவின் தலை கவிழ்ந்திருக்கிறது.

பின் சேசு நிமிர்கிறார். தலையை உயர்த்தி சுற்றிலும் பார்க்கிறார். அவருடைய புன்சிரிப்பு சீடர்களுக்கு ஊக்கமளிக்கிறது. "நாம் இந்த மேசையை விட்டுவிட்டு ஒரு தகப்பனைச் சுற்றி பல பிள்ளைகள் இருப்பதுபோல் எல்லோரும் நெருங்கி உட்காருவோம்" என்கிறார்.

மேசைக்குப் பின்னாலிருந்த சாய்மான இருக்கைகளை (அதாவது சேசுவுடையதும், அருளப்பர், யாகப்பர், இராயப்பர், சீமோன், பிலவேந்திரர், சேசுவின் சகோதரர் யாகப்பர் ஆகியோரின் இருக்கைகளை) எடுத்து மறுபக்கத்திற்குக் கொண்டு வருகிறார்கள்.

சேசு தம் இருக்கையில் அமர்கிறார் - முன்போல் யாகப்பருக்கும் அருளப்பருக்கும் நடுவில், அப்போது பிலவேந்திரர் யூதாஸின் இருக்கையில் உட்காரப் போகையில் சேசு சத்தமாய்: "அதில் உட்காராதே" என்று சொல்லி விடுகிறார். இந்த உணர்வுபூர்வமான வார்த்தையைத் தடுக்க அவருடைய பெரும் விவேகம் வெற்றி பெறவில்லை. பின் அவர் தம் குரலை மாற்றிக் கொண்டு: "நமக்கு இவ்வளவு இடம் தேவையில்லை. நாம் கீழே உட்கார்ந்தால் இவைகளே நமக்குப் போதும். இவை போதுமானவை. நீங்கள் எனக்குப் பக்கத்தில் அமர நான் விரும்புகிறேன்" என்கிறார்.

அவர்கள் U வடிவமாகச் சுற்றி அமர்ந்துள்ளார்கள். சேசு நடுவில் இருக்கிறார். இப்பொழுது எந்தப் பொருளும் இல்லாத மேசையும் யூதாஸின் இருக்கையும் அவருக்கு எதிரே கிடக்கின்றன.

செபதேயுவின் யாகப்பர் இராயப்பரிடம்: "நீர் இங்கே அமரும். நான் இந்த சிறிய முக்காலியில் சேசுவின் பாதங்களின் பக்கத்தில் இருந்து கொள்கிறேன்" என்கிறார்.

அதற்கு இராயப்பர்: "யாகப்பரே, கடவுள் உம்மை ஆசீர்வதிப்பாராக! இதை நான் அதிகம் விரும்பினேன்" என்று கூறி இராயப்பர் தம் ஆண்டவருடன் நெருங்கி உட்கார்ந்து கொள்கிறார். இப்பொழுது சேசுவை அருளப்பரும் இராயப்பரும் நெருக்கிக்



கொள்ள, யாகப்பர் ஆண்டவரின் பாதத்தில் இருக்கிறார்.

சேசு புன்முறுவல் பூத்துக் கூறுகிறார்: "நான் முன்பு கூறிய வார்த்தைகள் வேலை செய்ய ஆரம்பித்துள்ளதைக் காண்கிறேன். நல்ல சகோதரர்கள் ஒருவரையொருவர் நேசிக்கிறார்கள். நானும் உன்னைப் பார்த்து: "கடவுள் உன்னை ஆசீர்வதிப்பாராக!" என்று சொல்லுகிறேன். உன்னுடைய இந்தச் செயலும் நித்தியரால் மறக்கப்பட மாட்டாது. அதை நீ அங்கே மேலே கண்டு கொள்வாய்" என்கிறாய்.

மேலும் தொடர்ந்து சேசு சொல்கிறார்:

"நான் கேட்கிற எல்லாவற்றையும் என்னால் பெற்றுக் கொள்ள முடியும். நீங்களே அதைப் பார்த்திருக்கிறீர்கள். சுதன் தம்மையே போஜனமாக மனிதர்களுக்கு வழங்க பிதா அனுமதிப்பதற்கு என்னுடைய ஒரு விருப்பமே போதுமானதாயிருந்தது. இப்பொழுது நடைபெற்றவற்றால் மனித குமாரன் மகிமைப்படுத்தப்பட்டிருக்கிறார். ஏனென்றால், கடவுளின் சிநேகிதர்களுக்கு மட்டுமே சாத்தியமாகக் கூடிய புதுமையானது வல்லமைக்கு ஒரு சாட்சியாக இருக்கிறது. புதுமை எவ்வளவுக்குப் பெரிதாயிருக்கிறதோ, அவ்வளவிற்கு தெய்வீக நட்பு அதிக நிச்சயமாகவும், ஆழமாகவும் இருக்கிறது. இந்தப் புதுமையின் வடிவம், கால அளவு, தன்மை ஆகியவற்றாலும், அது எய்துகிற உச்ச அளவையும், எல்லைகளைப் பற்றியும் அது எவ்வளவு பெரிதானதென்றால் அதைவிடப் பெரிய புதுமை இருப்பது சாத்தியமில்லை. நான் உங்களுக்குச் சொல்கிறேன். இது எவ்வளவு வல்லமை வாய்ந்தது, சுபாவத்திற்கு மேலானது, அகங்கார மனிதரால் சிந்திக்கக் கூடாததாயிருக்கிறதென்றால், வெகு கொஞ்சப் பேரே இதைக் கண்டுபிடிப்பார்கள். பலர் இதை மறுப்பார்கள். ஆதலால் நான் என்ன சொல்வேன்? அவர்களைக் கண்டனம் செய்யவா? இல்லை. நான் கூறுவேன்: அவர்கள் மேல் இரக்கங் கொள்ளுங்கள்.

"ஆனால் புதுமை எவ்வளவு பெரிதோ, அவ்வளவிற்கு அதை ஆற்றியவருடைய மகிமை அதிக பெரிதாயிருக்கின்றது. கடவுளே இப்படிக் கூறுகிறார்: "பாருங்கள், என் நேசர் அதை விரும்பினார். பெற்றுக் கொண்டார். அதை நான் அவருக்கருளினேன். ஏனென்றால் என் பார்வையில் அவர் மாண்பு பெரிதாயிருக்கின்றது. மேலும் இங்கே அவர் உரைக்கின்றார்: அவரால் ஆற்றப்பட்ட

இப்புதுமை அளவற்றதாயிருப்பது போல அவருடைய மாண்பிற்கும் ஒரு அளவில்லை.'' சர்வேசுரனிடமிருந்து இப்புதுமையை இயற்றியவருக்கு வருகிற மகிமையும், அவரிடமிருந்து பிதாவுக்குத் திரும்பும் மகிமையும் ஒன்றே. ஏனென்றால் சுபாவத்திற்கு மேலான எந்த மகிமையும் சர்வேசுரனிடமிருந்து வருவது போலவே அது தான் புறப்பட்ட இடத்தைச் சென்றடைகிறது. சர்வேசுரனின் மகிமையும், அது அளவற்றதாயிருந்தாலும் கூட, அர்ச்சிஷ்டவர்களுடைய மகிமையின் வழியாக அதிகரித்து மென்மேலும் பிரகாசிக்கிறது. ஆதலால் நான் சொல்லுகிறேன்: மனித குமாரன் சர்வேசுரனால் மகிமைப்படுத்தப்பட்டது போல, சர்வேசுரனும் மனித குமாரனால் மகிமை பெற்றிருக்கிறார். சர்வேசுரனை நான் என்னில் மகிமைப்படுத்தியிருக்கிறேன். சர்வேசுரனும் தம் சுதனை தம்மிடத்தில் மகிமைப்படுத்துவார். சீக்கிரமே அவர் அவரை மகிமைப்படுத்துவார்.

இரண்டாம் ஆளாகிய சர்வேசுரனின் ஞானப் பொருண்மையே! களிகூர்ந்து அக்களிப்பாயாக! இதோ நீ உன்னுடைய ஆதீனத்திற்குத் திரும்பிச் செல்லவிருக்கிறாய்! இத்தனை நீண்ட காலமாய் சுய நாட்டை விட்டு கீழ்மைப்படுத்தப்பட்டபின் மீண்டும் மேலெழுந்து செல்லப போகிற அவருடைய சரீரமே, மகிழ்ந்து ஆர்ப்பரிப்பாயாக! உன்னுடைய உறைவிடமாக ஆதாமின் மோட்சமல்ல, பிதாவின் உந்நத மோட்சமே உனக்கு இதோ கொடுக்கப்படவிருக்கிறது. சொல்லப்பட்டுள்ளபடியே, கடவுளின் ஆச்சரியத்துக்குரிய கட்டளை ஒரு மனிதனின் உதடுகளின் வழியாகக் கொடுக்கப்பட்டு, சூரியனை நிறுத்துமானால், மனிதரின் சரீரம் மேலே எழுந்து சென்று, அவருடைய மகிமைப்படுத்தப்பட்ட நிறை வடிவில், பிதாவின் வலது பாரிசத்தில் அமரும் ஆச்சரியத்தை நட்சத்திரங்கள் காணும்போது அவற்றின் மத்தியில் என்ன நடக்கும்!

என் சிறு பிள்ளைகளே! சிறிது காலம் நான் உங்களோடிருப்பேன். அதன்பின் அநாதைக் குழந்தைகள் இறந்து போன தங்கள் பெற்றோரைத் தேடுவது போல நீங்கள் என்னைத் தேடுவீர்கள். அழுது கொண்டே அவரைப் பற்றிப் பேசிக் கொண்டு அலைவீர்கள். மவுனமாகி விட்ட அவருடைய கல்லறையை வீணில் போய்த் தட்டுவீர்கள். மோட்சத்தின் நீலக் கதவுகளையும் தட்டுவீர்கள். "எங்கள் சேசு எங்கே? அவர்



எங்களுக்கு வேண்டும். அவர் இல்லாமல் உலகத்தில் ஒளியுமில்லை. மகிழ்ச்சியுமில்லை, அன்புமில்லை. அவரை எங்களுக்குத் தாருங்கள். அல்லது எங்களை உள்ளே வர அனுமதியுங்கள். அவர் எங்கே இருக்கிறாரோ, அங்கே நாங்கள் இருக்க வேண்டும்'' என்று உங்கள் ஆன்மாக்களை அன்பைத் தேடி மன்றாடும் தேடுதலில் மேலே எழுப்புவீர்கள். ஆனால் இப்போதைக்கு நான் போகும் இடத்திற்கு நீங்கள் வர முடியாது. யூதேயர்களுக்கும் நான் இப்படிக் கூறினேன்: "பின்னால் நீங்கள் என்னைத் தேடுவீர்கள். ஆனால் நான் போகுமிடத்திற்கு உங்களால் வர முடியாது'' என்று. அதையே நான் உங்களுக்கும் கூறுகிறேன்.

என் தாயை நினைத்துப் பாருங்கள். அவர்களும் நான் போகிற இடத்திற்கு வர முடியாது. ஆயினும் நான் அவர்களிடம் வருவதற்கும் அவர்களின் மாசற்ற உதரத்தில் சேசு ஆவதற்கும் பிதாவை விட்டு வந்தேன். அவர்களுடைய அன்பு அமுதாகி, அதனால் நான் போஷிக்கப்பட்டேன். நான் பரிசுத்தத்தினாலும், அன்பினாலும் ஆக்கப்பட்டிருக்கிறேன். ஏனென்றால் மோட்சத்தில் வாசம் செய்கிறவருடைய உத்தம அன்பினால் வளம் பெற்ற மரியாயின் கன்னிமையால் அவர்கள் என்னைப் போஷித்தார்கள். ஆயினும் நான் அவர்களால் வளர்ந்தேன்; அதிலே அவர்களுக்குக் களைப்பையும், கண்ணீர்களையும் கொடுத்தேன்... ஆயினும் யாருமே அடைந்திராத வீர வைராக்கியத்தை நான் அவர்களிடம் கேட்கிறேன்... அவர்களின் வீர வைராக்கியத்துடன் யூதித்துடையவும், ஜாயேலுடையவும் வீர வைராக்கியங்களை ஒப்பிட்டால், அவை ஊர்ச்சுனையில் ஸ்திரீகள் தங்களுடன் போட்டியிடுகிற பெண்களுடன் தர்க்கிக்கிற வீரம் போலவே இருக்கும். ஆயினும் அத்தாய் என்னை நேசிப்பது போல யாருமே என்னை நேசிப்பதில்லை. இவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல் அவர்களை விட்டு விட்டு நான் போகிறேன். அங்கே அவர்கள் நெடுங்காலத்திற்குப் பிறகே வருவார்கள். நான் உங்களுக்குக் கொடுக்கிற கட்டளையாகிய: "நீங்கள், என்னிடம் வருவதற்கு உங்கள் நேரம் வரும்போது என்னிடம் வருவதற்குக் கூடுமாயிருக்கும் பொருட்டு, வருடம் வருடமாய், மாதம் மாதமாய், நாள் நாளாய், மணி மணி தோறும் உங்களைப் பரிசுத்தப்படுத்துங்கள்'' என்ற கட்டளை அவர்களுக்குப் பொருந்தாது. அவர்கள் வரப்பிரசாதத்தாலும், புனிதத்தாலும்

நிரம்பியிருக்கிறார்கள். யாவற்றையும் பெற்றுக் கொண்டு யாவற்றையும் கொடுத்து விட்ட சிருஷ்டி அவர்களே. அவர்களிடம் கூட்டவோ, அவர்களிடமிருந்து எடுத்து விடவோ எதுவுமில்லை. சர்வேசுரனால் என்ன சாதிக்கக் கூடும் என்பதற்கு மிகப் புனிதமான சாட்சியாக அவர்கள் இருக்கிறார்கள்.

ஆனால் நீங்கள் என்னோடு வந்து சேர்ந்து கொள்வதை உறுதிப்படுத்தவும், உங்கள் சேசுவிடமிருந்து பிரியும் துயரத்தால் வரும் வேதனையை மறக்கவும் உங்களுக்கு நான் ஒரு புதிய கட்டளையைக் கொடுக்கிறேன். அது இதுதான்: ஒருவரையொருவர் நேசியுங்கள்; நான் உங்களை சிநேகித்தது போல் நீங்களும் ஒருவரையொருவர் சிநேகிக்க வேண்டும். இந்த அன்பினால் நீங்கள் என்னுடைய சீடர்கள் என்பது அறியப்படும். ஒரு தகப்பனுக்குப் பல பிள்ளைகள் உள்ள போது அவர்கள் அவனுடைய பிள்ளைகள் என்பதை ஒருவன் எப்படி அறிவான்? அவர்களுடைய சரீரத் தோற்றத்தைக் கொண்டு அதிகம் அறிய முடியாது. ஏனென்றால் தங்களுக்குள் இரத்த உறவு இல்லாதவர்களிலும், ஏன், ஒரே நாட்டைச் சேராதவர்களிலும் கூட சகலத்திலும் ஒரே மாதிரி இருக்கிறவர்கள் உண்டு. ஆனால் பிள்ளைகளுடைய பொதுவான குடும்பப் பாசத்தைக் கொண்டும், தங்கள் தகப்பன் மீது அவர்களுக்குள்ள அன்பைக் கொண்டும், ஒருவர்க்கொருவர் கொள்ளும் சிநேகத்தைக் கொண்டும் அவர்களை ஒருவன் அறிந்து கொள்ள முடியும். தகப்பன் இறந்தாலும்கூட, ஒரு நல்ல குடும்பம் உடைந்து போகாது. ஏனென்றால் அவர்களின் இரத்தம் ஒன்றே. அதையே அவர்கள் தங்கள் தந்தையின் வித்திலிருந்து பெற்றுக் கொண்டார்கள். மரணம் முதலாய் அவிழ்க்க முடியாத முடிச்சுகளை அது கட்டுகிறது. ஏனெனில் மரணத்தை விட அன்பு வலிமையுள்ளது. நான் உங்களை விட்டுப் போனபின் நீங்கள் ஒருவரையொருவர் நேசிப்பீர்களானால், எல்லாரும் உங்களை என் பிள்ளைகளாகவும், அதனாலே என் சீடர்களாகவும் ஒருவர்க்கொருவர் சகோதரர் என்றும் ஏற்றுக் கொள்வார்கள். ஏனென்றால் உங்களுக்குத் தகப்பன் ஒருவரே.''

அப்போது இராயப்பர்: ''ஆண்டவரே, நீர் எங்குதான் போகிறீர்?'' என்று கேட்கிறார்.

''நீ இப்பொழுது என்னைப் பின்செல்ல முடியாத இடத்திற்குப் போகிறேன். ஆனால் பிந்தி நீ என்னைப்



பின்செல்வாய்.''

''ஏன் இப்பொழுது முடியாது? ''என்னைப் பின்செல்'' என்று நீர் சொன்னதிலிருந்து எப்பொழுதும் உம்மை நான் பின்சென்று வந்திருக்கிறேன். ஒரு துக்கமில்லாமல் எல்லாவற்றையும் விட்டு விட்டேன்... இப்பொழுது உம்முடைய எளிய சீமோனை விட்டு நீர் போவது - எனக்கு எல்லாமாக இருக்கிற நீர், உமக்காக முன்பு என்னிடமிருந்த கொஞ்ச சொத்தையும் நான் விட்ட பிறகு - இப்படிப் போவது நியாயமல்ல, நன்றாகவுமில்லை. நீர் உம் மரணத்திற்குப் போகிறீரா? சரி, நானும் உம்முடன் வருகிறேன். மறுவுலகத்திற்கு நாம் இருவரும் சேர்ந்து போவோம். ஆனால் அதற்கு முன் உம்மை நான் பாதுகாக்க வேண்டும். உமக்காக என் உயிரைக் கொடுக்க நான் தயாராயிருக்கிறேன்.''

''எனக்காக உன் உயிரைக் கொடுப்பாயா? இப்பொழுது? இப்பொழுது கொடுக்க மாட்டாய். இதோ நான் உனக்குச் சொல்கிறேன். சேவல் கூவுமுன் என்னை நீ மூன்று தடவை மறுதலித்திருப்பாய். இப்போது முதலாம் சாமம். இதன்பின் இரண்டாம் சாமம் வரும். அதன்பிறகு மூன்றாம் சாமம். சேவல் உரக்கக் கூவுமுன் நீ உன் ஆண்டவரை மும்முறை மறுதலித்திருப்பாய்.''

''நடக்க முடியாதது ஆண்டவரே! நீர் சொல்கிற எல்லாவற்றையும் நான் ஏற்கிறேன். ஆனால் இதை அல்ல. நான் என்னைப் பற்றி நிச்சயமாயிருக்கிறேன்.''

''இப்பொழுது, இந்நேரம் நீ நிச்சயமாயிருக்கிறாய். ஏனென்றால் என்னை இன்னும் கொண்டிருக்கிறாய். கடவுளை உன்னோடு கொண்டிருக்கிறாய். சீக்கிரத்திலே மாம்சமான கடவுள் பிடிபட்டு விடுவார். அப்பொழுது அவரை நீ கொண்டிருக்க மாட்டாய். சாத்தான் உன்னைப் பளுவாக்கியபின் உன்னைப் பயங்காட்டுவான். உன்னுடைய நிச்சயிப்பே சாத்தானுடைய தந்திரம்தான் - உன்னைக் கீழே வீழ்த்தும் அடிப்பாரம் அது. அவன், உன்னிடம் சுட்டிக்காட்டிப் பேசி: ''கடவுள் இல்லை. நான் இருக்கிறேன்'' என்று சொல்வான். நீயும் அச்சத்தினால் மங்கியிருந்தாலும் இன்னும் உன்னால் வாதிட முடியுமாதலால் நீ இதைக் கண்டுபிடிப்பாய். சாத்தான் இந்த நேரத்தில் எஜமானாயிருக்கையில், நல்லது இறக்கும்; தீமை செயலாற்றும்; உள்ளம் சலிப்படையும்; மனிதமே வெற்றிபெறும். அப்போது

நீங்கள் தளபதி இல்லாத போர் வீரரைப் போலிருப்பீர்கள். எதிரியால் துரத்தப்படுவீர்கள். தோற்கடிக்கப்படும் அங்கலாய்ப்பில் நீங்கள் வெற்றி கொள்பவனுக்கு உங்கள் கழுத்தைத் தாழ்த்துவீர்கள். நீங்கள் கொல்லப்படாதபடிக்கு விழுந்து விட்ட வீரனை மறுதலிப்பீர்கள். ஆனுல் தயவு செய்து உங்கள் இருதயங்களைக் கலங்க விடாதீர்கள். சர்வேசுரனை விசுவசியுங்கள். என்னையும் விசுவசியுங்கள். வெளித் தோற்றங்களுக்கெல்லாம் மாறாக என்னை விசுவசியுங்கள். நிலைத்திருக்கிறவர்களும் விட்டு ஓடிப் போகிறவர்களும் என்னுடைய இரக்கத்தையும் பிதாவின் இரக்கத்தையும் நம்பக் கடவார்கள். மவுனமாயிருக்கிறவனும், ''அவனை அறியேன்'' என்று சொல்ல தன் உதடுகளை அசைப்பவனும் அப்படியே நம்பக்கடவான். மேலும் அதே போல என் மன்னிப்பிலும் நம்பிக்கை கொள்ளுங்கள். வருங்காலத்தில் உங்கள் செயல்கள் எப்படியிருந்தாலும் - நன்மையிலும், என் போதனையிலும். ஆகவே என் திருச்சபையிலும் - அவை உங்களுக்கு மோட்சத்தில் சம இருக்கைகளைத் தரும் என்றும் நம்புங்கள். என்னுடைய பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உள்ளன. அப்படியில்லாவிட்டால் உங்களிடம் சொல்லியிருப்பேன். ஏனென்ருல் உங்களுக்கு ஒரு இடம் ஆயத்தம் செய்வதற்காக நான் முந்திப் போகிறேன். நல்ல தகப்பன்மார்கள் தங்கள் சிறுபிள்ளைகளை வேறிடத்திற்குக் கொண்டு செல்லும்போது அப்படிச் செய்வதில்லையா? அவர்கள் முந்திப் போய் வீட்டையும், ஜாமான்களையும், உணவு காரியங்களையும் ஆயத்தம் செய்கிருர்கள். அதன்பின் அவர்கள் தங்கள் அருமைக் குழந்தைகளைக் கூட்டி வரப் போகிருர்கள். சிறு பிள்ளைகளுக்கு எதுவும் குறையிருக்கக் கூடாதென்பதற்காகவும், புது இடத்தில் அவர்களுக்கு அசௌகரியம் ஏற்படாதிருக்கவும் அன்பினுல் அப்படிச் செய்கிருர்கள். நானும் அதையே செய்கிறேன். அந்தக் காரணத்திற்காகவே செய்கிறேன். இப்பொழுது நான் போகிறேன். பரலோக ஜெருசலேமில் உங்கள் ஒவ்வொருவருக்கும் ஓர் இடம் தயார் செய்தபின், நான் இருக்குமிடத்தில் நீங்களும் இருக்கும்படியாக நான் திரும்ப வந்து உங்களைக் கூட்டிக் கொண்டு போவேன். அங்கே மரணமும் துக்கங் கொண்டாடுதலும் இல்லை. கண்ணீர்களும், கூச்சல்களும் இல்லை. பசியும் நோவும் இருட்டும், வறட்சித் தாகமும் இல்லை. அங்கே எல்லாம் ஒளியும், அமைதியும்,



மகிழ்ச்சியும், பாடலும்தான். தெரிந்து கொள்ளப்பட்ட பன்னிருவரும் இஸ்ராயேல் கோத்திரங்களின் பன்னிரு பிதாப்பிதாக்களுடன் ஞான அன்பின் நெருப்பின் ஆர்வத்தில் உந்நதமாய் உயர்ந்த மோட்ச பாக்கியமாகிய சமுத்திரத்தில் நேராய் நின்று அந்த நித்தியப் பாடலை சம்மனசுக் கூட்டங்களின் துரித இயக்கமாய் மீட்டப்படும் இசை நரம்புகளுடன் முடிவில்லா அல்லேலூயாவைப் பாடுவார்கள்.. நான் எங்கே இருப்பேனே, அங்கே நீங்களும் இருக்க வேண்டும் என்பதே என் விருப்பம். நான் எங்கே போகிறேன் என்று நீங்கள் அறிவீர்கள். அங்கு போகும் வழியையும் அறிவீர்கள்.''

அப்போது தோமையார்: ''ஆண்டவரே, எங்களுக்கு எதுவும் தெரியாது. நீர் எங்கே போகிறீர் என்று எங்களிடம் சொல்லவில்லையே. அப்படியானுல் உம்மை நோக்கி வருவதற்கு பின்பற்ற வேண்டிய பாதையை நாங்கள் எப்படி அறிவது? காத்திருப்பதைத் தவிர்ப்பதெப்படி?'' என்று கேட்கிருர்.

''நானே வழியும், சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன். நான் இப்படிக் கூறியதையும், அதைப் பல தடவைகளிலும் விளக்கிச் சொல்லியதையும் நீங்கள் கேட்டிருக்கிறீர்கள். உண்மையாகவே கடவுள் இருக்கிருர் என்று கூட அறியாத சிலர் என் வழியில் முன்னுல் சென்றுள்ளார்கள். அவர்கள் ஏற்கெனவே உங்களை முந்திவிட்டார்கள். ஓ! இழக்கப்பட்டு என்னுல் மந்தைக்குக் கொண்டுவரப்பட்ட கடவுளின் ஆடுகளே, நீங்கள் எங்கேயிருக்கிறீர்கள்? உயர்த்தப்பட்ட ஆன்மாக்களை யுடையவர்களே, நீங்கள் எங்கேயிருக்கிறீர்கள்?''

''யார்? யாரைப் பற்றிப் பேசுகிறீர்? லாசருடைய மரியாளைப் பற்றியா? அவள் உமது தாயுடன் அடுத்த அறையில் இருக்கிருள். அவளைக் கூப்பிடவா? அல்லது ஜோஹான்னுவைத் தேடுகிறீரா? நிச்சயமாக அவள் தன் மாளிகையில் இருப்பாள். நீர் விரும்பினுல் நாங்கள் அவளைக் கூட்டி வருகிருேம்...''

''அல்ல, அவர்களை அல்ல. மோட்சத்திலே மட்டும் வெளிப்படுத்தப்படவிருக்கிற ஓர் ஆளைப் பற்றியே நான் நினைக்கிறேன்... அதோடு ஃபோற்றினாளைப் பற்றியும்.* அவர்கள் என்னைக் கண்டுகொண்டார்கள். அதன்பின் அவர்கள் என் வழியை ஒருபோதும் விட்டுவிடவில்லை. அவர்களில் ஒருவருக்கு பிதாவை

உண்மையான கடவுளென்றும், இஸ்பிரீத்துவை இத் தனி ஆராதனையில் ஒரு (தெய்வ) லேவியரென்றும் சுட்டிக் காட்டினேன். மற்றவள் தனககு ஒரு ஆன்மா உண்டென்பதைக் கூட அறியாதிருந்தாள். அவளிடம். என் பெயர் இரட்சகர். இரட்சிக்கப்பட வேண்டுமென்ற நல்லெண்ணம் உடையவர்களை நான் இரட்சிக்கிறேன். இழக்கப்பட்டவர்களைத் தேடி வருகிறவர் நான். நான் சீவனையும் சத்தியத்தையும் பரிசுத்தத்தையும் கொடுக்கிறேன். என்னைத் தேடுகிறவர்கள் கண்டடைவார்கள்... பலவீன ஏவாள்களாயிருந்த உங்களை நான் ஆசீர்வதிக்கிறேன். நீங்கள் யூதித்தை விட தைரியசாலிகளானீர்கள்'' என்றேன்... நான் வருகிறேன்... நீங்கள் இருக்குமிடத்திற்கு நான் வருகிறேன். நீங்கள் எனக்கு ஆறுதலாயிருக்கிறீர்கள்... நீங்கள் ஆசீர்வதிக்கப்படுவீர்களாக!...''

அப்போது பிலிப்பு: ''ஆண்டவரே! பிதாவை எங்களுக்குக் காட்டும். அப்போது நாங்களும் அவர்களைப் போலிருப்போம்'' என்று சொல்கிறார்.

''நான் உங்களெல்லாரோடும் இத்தனை நீண்ட காலம் இருந்திருக்கிறேன். இருந்தும், பிலிப்புவே, நீ இன்னும் என்னை அறியவில்லையா? என்னைக் காண்கிறவன் பிதாவைக் காண்கிறான். அப்படியிருக்க, ''பிதாவை எங்களுக்குக் காட்டும்'' என்று நீ சொல்வதெப்படி? நான் பிதாவில் இருக்கிறேனென்றும், பிதா என்னில் இருக்கிறாரென்றும் உன்னால் விசுவசிக்கக் கூடவில்லையா? நான் உங்களுக்குச் சொல்லும் வார்த்தைகளை நானாக உங்களுக்குச் சொல்லவில்லை. என்னில் ஜீவிக்கிற பிதாவே என் செயல்களையெல்லாம் நிறைவேற்றுகிறவர். நீயும் நீங்கள் எல்லாரும் நான் பிதாவிலும் பிதா என்னிலும் இருக்கிறோமென்று விசுவசிக்கவில்லையா? உங்களை விசுவசிக்க வைப்பதற்கு நான் என்ன பேச வேண்டும்? நீங்கள் என் வார்த்தைகளை விசுவசிக்காவிட்டால் என் கிரிகைகளையாவது விசுவசியுங்கள். நான் உங்களுக்குச் சொல்கிறேன்: உண்மையாகவே உங்களுக்குச் சொல்கிறேன்: என்னை விசுவசிப்பவன் நான் செய்யும் கிரிகைகளைத் தானும் செய்வான். அவற்றை விட பெரியவைகளையும் செய்வான். ஏனென்றால், நான் பிதாவிடம் போகிறேன். என் நாமத்தினிமித்தம் நீங்கள் பிதாவிடம் கேட்பதெல்லாவற்றையும்

* சேசுவால் மனந்திருப்பப்பட்டவள்.



பிதா சுதனிடத்தில் மகிமை பெறும் பொருட்டு நான் செய்தருளுவேன். என் நாமத்தினிமித்தம் நீங்கள் எதையும் கேட்டால், நான் அதைச் செய்தருளுவேன். என் நாமம் உண்மையாகவே எப்படிப்பட்டதென்பது எனக்கும் என்னை ஜெனிப்பிக்கிற பிதாவுக்கும் எங்கள் அன்பிலிருந்து புறப்படுகிற இஸ்பிரீத்து சாந்துவுக்கும் மட்டுமே தெரியும். அந்த நாமத்தால் அனைத்தும் செய்யக் கூடும். அன்போடு என் நாமத்தை நினைக்கிறவன் என்னை நேசிக்கிறான், அடைந்து கொள்கிறான். ஆனால் என்னை நேசிப்பது மட்டும் பற்றாது. உண்மையான அன்பைக் கொண்டிருப்பதற்கு என் கட்டளைகளை அனுசரிப்பது அவசியமாயிருக்கிறது. உணர்வுகள் கிரிகைகளினால் சாட்சியம் பெறுகின்றன. உங்கள் அன்பின் நிமித்தம் நான் பிதாவை மன்றாடுவேன். அவர் என்றென்றைக்கும் உங்களோடு தங்கும்படியாக தேற்றுகிறவராகிய இன்னொருவரை உங்களுக்குத் தருவார். அவரை எதிர்த்து சாத்தானும் உலகமும் கொடூரமாய் செயல்பட முடியாது. அவரே சத்திய இஸ்பிரீத்துவானவர். உலகம் அவரைப் பெற்றுக் கொள்ள மாட்டாது. அவரை அதனால் தாக்கவும் கூடாது. ஏனென்றால் உலகம் அவரைக் காணக் கூடாது. அவரை அறியவும் செய்யாது. உலகம் அவரைப் பரிகசிக்கும். ஆனால் அவர் எவ்வளவு உந்நதமானவரென்றால் பரிகாசம் அவரை நோகச் செய்ய இயலாது. அவரோ எல்லா வரையையும் தாண்டிய அவ்வளவு இரக்கமுள்ளவராயிருக்கிறார். தம்மை நேசிக்கிறவர்களுடன் அவர் எப்போதும் இருப்பார். நீங்கள் அவரை அறிவீர்கள். ஏனெனில் அவர் ஏற்கெனவே உங்களுடன் இருக்கிறார். இனி சீக்கிரம் உங்களில் இருப்பார். உங்களை நான் அனாதைகளாக விட மாட்டேன். உங்களிடம் திரும்பி வருவேன் என்று ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். உங்களை அழைத்துக் கொண்டு என் இராச்சியத்திற்குப் போவதற்கு நேரம் வருவதற்கு முன்பாக உங்களிடம் வருவேன். சீக்கிரத்தில் உலகம் என்னைக் காணமாட்டாது. ஆனால் நீங்கள் என்னைக் காண்கிறீர்கள். இன்னும் காண்பீர்கள். அந்த நாளில் நான் என் பிதாவிலும் நீங்கள் என்னிலும் நான் உங்களிலும் இருப்பதை நீங்கள் அறிவீர்கள். ஏனெனில் என் கட்டளைகளை ஏற்று அவற்றை அனுசரிக்கிறவன் என்னை நேசிக்கிறான். என்னை நேசிக்கிறவன் என் பிதாவினால் நேசிக்கப்படுவான். அவன் கடவுளைக் கொண்டிருப்பான்.

ஏனென்றால் கடவுள் அன்பாயிருக்கிறார். ஆதலால் நேசிக்கிறவன் கடவுளைத் தன்னில் கொண்டிருக்கிறான். அவனை நான் நேசிப்பேன். ஏனென்றால் அவனிடத்தில் நான் கடவுளைக் காண்பேன். என் அன்பினுடையவும், என் ஞானத்தினுடையவும் மனிதாவதாரமான என் தெய்வீகத்தினுடையவும் இரகசியங்களை அவனுக்கு வெளிப்படுத்துவேன். மானிடப் புத்திரருள் இவை என்னுடைய மறு வருகைகளாக இருக்கும். அவர்கள் பலவீனர்களாயும், ஏன் எதிர்ப்பாயிருந்தாலும் கூட நான் அவர்களை நேசிக்கிறேன். ஆனால் இவர்கள் பலவீனர்களாக மட்டும் இருப்பார்கள். நான் அவர்களைத் திடப்படுத்துவேன். அவர்களை நோக்கி: ''எழுந்திருங்கள்'' என்பேன். ''வெளியே வாருங்கள்!'' என்பேன். ''என்னைப் பின்செல்லுங்கள்'' என்பேன். ''கேளுங்கள்'' என்பேன். ''எழுதுங்கள்'' என்பேன். நீங்கள் இவர்களுள் ஒன்று.''

''ஆண்டவரே, உம்மை எங்களுக்கு வெளிப்படுத்தி உலகிற்கு ஏன் உம்மை வெளிப்படுத்தவில்லை?'' என்று யூதா ததேயுஸ் கேட்கிறார்.

''ஏனென்றால் நீங்கள் என்னை நேசிக்கிறீர்கள். என் வார்த்தைகளைக் கடைப்பிடிக்கிறீர்கள். அப்படிச் செய்கிறவன் என் பிதாவினால் சிநேகிக்கப்படுவான். நாங்கள் அவனிடம் வருவோம். அவனுடனும், அவனிலும் வாசம் பண்ணுவோம். ஆனால் என்னை நேசியாதவன் என் வார்த்தைகளை அனுசரியான். அவன் மாம்சப் பிரகாரமும் உலகப் பிரகாரமும் நடக்கிறான். இப்பொழுது இதை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். நான் உங்களுக்குச் சொன்னது நாசரேத் சேசுவின் வார்த்தையல்ல. அது பிதாவின் வார்த்தையாகும். ஏனென்றால் சத்தியத்தையும் ஞானத்தையும் நீங்கள் முழுவதும் கொண்டிருக்கும்படி நானே உங்களை ஆயத்தம் செய்ய ஆசிக்கிறேன். ஆயினும் இன்னும் நீங்கள் கண்டுபிடிக்கவோ ஞாபகத்தில் வைக்கவோ கூடாதவர்களாயிருக்கிறீர்கள். ஆனால் தேற்றுகிறவராகிய இஸ்பிரீத்து சாந்துவை என் நாமத்தினால் பிதா உங்களுக்கு அனுப்பி, அவர் உங்களிடம் வரும்போது, நீங்கள் கண்டுபிடிக்கக் கூடியவர்களாயிருப்பீர்கள். அவர் சகலத்தையும் உங்களுக்குப் படிப்பிப்பார். நான் உங்களுக்குக் கூறியவற்றை உங்களுக்கு நினைப்பூட்டுவார்.

''என் சமாதானத்தை உங்களுக்கு விட்டுச் செல்கிறேன். என் சமாதானத்தை உங்களுக்குத் தருகிறேன். உலகம் தருவதைப் போல்



நான் உங்களுக்கு அதைத் தருவதில்லை. இதுவரையிலும் அதை நான் உங்களுக்குத் தந்தது போலுமல்ல. ஆசீர்வதிக்கப் பட்டவரின் ஆசீர்வதிக்கப்பட்ட உபசார வாழ்த்துதலை ஆசீர்வதிக்கப்பட்டவர்களுக்குக் கொடுப்பதல்ல அது. இப்பொழுது நான் உங்களுக்குக் கொடுக்கும் சமாதானம் அதை விட ஆழ்ந்ததாயிருக்கிறது. இந்த விடைபெறுதலில் நான் என்னையே உங்களுக்கு எடுத்தளிக்கிறேன். என்னுடைய சமாதானத்தின் இஸ்பிரீத்துவை உங்களுக்கு அளிக்கிறேன். என் சரீரத்தையும் இரத்தத்தையும் உங்களுக்களித்தது போல் அளிக்கிறேன். அடுத்திருக்கிற போரில் உங்களுக்குப் பலம் ஏற்படும்படியாக அளிக்கிறேன். சாத்தானும் உலகமும் உங்கள் சேசுவுக்கெதிராய் ஒரு போரை மூட்டி விட்டுக் கொண்டிருக்கிறார்கள். இது அவர்களின் நேரம். உங்கள் அகத்துள் சமாதானத்தைக் கொண்டிருங்கள். அது என்னுடைய இஸ்பிரீத்துவாகிய சமாதானத்தின் ஆவியாகும். ஏனெனில் நான் சமாதானத்தின் அரசராயிருக்கிறேன். நீங்கள் அதிகம் கைவிடப்பட்டதாக உணராதபடி அதைக் கொண்டிருங்கள். தனக்குள்ளே சர்வேசுரனுடைய சமாதானத்தைக் கொண்டவனும் துன்பப்படுகிறவன், துன்பப்பட்டாலும் தேவதூஷணஞ் சொல்ல மாட்டான். நம்பிக்கையிழக்க மாட்டான்.

''அழாதீர்கள். ''நான் பிதாவிடம் போகிறேன். பின் திரும்பி வருவேன்'' என்று நான் சொன்னதையும் கேட்டீர்கள். நீங்கள் என்னை மாம்சத்தைத் தாண்டி நேசித்தீர்களானால், நான் என் தாயகத்திற்கு வெளியே இத்தனை நீண்ட காலம் இருந்தபின் பிதாவிடம் போகிறதைப் பற்றி மகிழ்ச்சியடைவீர்கள்... என்னை நேசிக்கிறவரும் எனனிலும் பெரியவருமாயிருக்கிறவரிடம் நான் போகிறேன். இது நடைபெறுமுன் உங்களுக்குச் சொல்கிறேன். இது நடைபெறுமுன் உங்களுக்குச் சொல்கிறேன். இரட்சகரின் எல்லாப் பாடுகளையும், அவற்றைச் சந்திக்குமுன் உங்களுக்கு அறிவித்தேன். காரணம், எல்லாம் நிறைவேறும்போது நீங்கள் மேலும் மேலும் என்னை விசுவசிக்கும்படியாகவே. கலக்கமடையாதீர்கள். பயப்படாதீர்கள். உங்கள் இருதயங்களுக்கு சமநிலை அவசியமாயிருக்கிறது.

''நான் உங்களுடன் பேச அதிக நேரமில்லை... ஆனால் சொல்ல வேண்டியவை எவ்வளவோ உள்ளன. என்னுடைய சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதின் முடிவுக்கு வந்திருக்கிற

நான் எதையுமே சொல்லவில்லை. இன்னும் எவ்வளவோ சொல்லப்பட வேண்டியிருக்கிறது என்றே உணருகிறேன். உங்களுடைய மனநிலை என்னை உணர்வுட்படுத்துகிறது. ஆனால் நான் என்ன சொல்வேன்? என் அலுவலில் தோற்று விட்டேனென்று? அல்லது நீங்கள் கடின இருதயமுடையவர்களானதால் என் வேலையால் ஒரு பயனும் இல்லையென்றா? உங்களைப் பற்றி நான் சந்தேகப்படவா? இல்லை. நான் கடவுள் மேல் நம்பிக்கை வைத்து, என் அருமையானவர்களே, உங்களை அவரிடம் ஒப்படைக்கிறேன். தம்முடைய வார்த்தையானவரின் வேலையை அவர் முற்றுப் பெறச் செய்வார். மனித ஒளியைத் தவிர வேறு எந்த ஒளியுமில்லாமல் இறக்கிற தகப்பனைப் போல் நான் இல்லை. நான் சர்வேசுரனை நம்பியிருக்கிறேன். உங்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய எல்லா ஆலோசனைகளின் அவசரத் தன்மையை நான் எனக்குள் உணர்ந்தாலும், அவை உங்களுக்குத் தேவை என நான் கண்டபோதிலும், காலம் விரைந்து செல்கிறதை நான் கண்டுபிடித்தாலும், நான் என் கதியை நோக்கி அமைதியான மனதுடனே செல்கிறேன். உங்களிடம் விதைக்கப்பட்ட விதைகளின் மேல் பனி பொழியப் போகிறது என்பதை அறிவேன். அது அவ்விதைகள் எல்லாவற்றையும் முளைக்கச் செய்யும். அதன்பின் தேற்றுகிறவராகிய சூரியன் வருவார். அவை பெரிய விருட்சங்களாக வளரும். இவ்வுலகத்தின் தலைவன் வரப் போகிறான். அவனிடம் எனக்கு எதுவுமில்லை. மீட்பின் காரியத்திற்கல்லாதிருந்தால் அவனுக்கு என்மேல் எந்த வல்லமையுமிராது. ஆனால் அது நடக்கிறது. ஏனென்றால் நான் என் பிதாவை நேசிக்கிறேனென்றும் அவரை நான் எவ்வளவு நேசிக்கிறேனென்றால், மரணமட்டும் அவருக்குக் கீழ்ப்படிவேனென்றும், ஆகவே அவர் எனக்கு என்ன கட்டளையிட்டாரோ அதை நிறைவேற்றுவேன் என்றும் இந்த உலகம் அறியும்படியாகவே.

''நாம் போக நேரமாயிற்று. எழுந்திருங்கள். என் இறுதி வார்த்தைகளுக்குச் செவிகொடுங்கள். நானே உண்மையான திராட்சைச்செடி. பிதா திராட்சையைக் கழிப்பவர். கனி கொடாத கிளையையெல்லாம் அவர் தறிக்கிறார். கனி கொடுக்கிற கிளையை, அது மேலும் அதிக கனிதரும் பொருட்டு அதைக் கழிக்கிறார். என் வார்த்தையினால் நீங்கள் சுத்தமாயிருக்கிறீர்கள். அதில் நீடித்திருக்கும்படியாக என்னில் நிலைத்திருங்கள். நானும் உங்களில் நிலைத்திருப்பேன். திராட்சைச் செடியிலிருநது வெட்டப்பட்ட கிளை கனி கொடுக்க முடியாது. நீங்கள் என்னில் நிலைத்திராவிட்டால் உங்கள் மட்டிலும் அது உண்மையாகும். நானே திராட்சைச் செடி. நீங்கள் அதன் கிளைகள். என்னுடன் ஐக்கியத்தில் நிலைத்திருப்பவன் மிகுதியான கனிகளைத் தருவான். ஆனால் வெட்டப்படுகிற ஒருவன் உலர்ந்த கிளையாகி நெருப்பில் போடப்பட்டு எரிவான். ஏனென்றால் நீங்கள் என்னிடம் ஐக்கியப்பட்டிராவிட்டால், உங்களால் ஒன்றும் செய்ய இயலாது. ஆதலால் என்னில் நிலைத்திருங்கள். என் வார்த்தையும் உங்களில் நிலைத்திருக்கக் கடவது. அதன்பின் நீங்கள் விரும்பும் எதையும் கேளுங்கள். அது உங்களுக்குச் செய்யப்படும். நீங்கள் எவ்வளவிற்கதிகமாய் கனி கொடுத்து என் சீடர்களாயிருப்பீர்களோ, அந்த அளவிற்கு என் பிதா எப்போதும் அதிக மகிமை பெறுவார்.

பிதா என்னை சிநேகித்திருப்பது போல் நானும் உங்களைச் சிநேகித்திருக்கிறேன். காப்பாற்றுகிற என் சிநேகத்தில் நிலைத்திருங்கள். என்னைச் சிநேகிப்பதினால் நீங்கள் கீழ்ப்படிதல் உள்ளவர்களாயிருப்பீர்கள். கீழ்ப்படிதல் பரஸ்பர அன்பை அதிகரிக்கும். நான் சொன்னதையே திருப்பிச் சொல்வதாகக் கருதாதீர்கள். உங்கள் பலவீனத்தை நான் அறிந்திருக்கிறேன். நீங்கள் இரட்சிக்கப்பட நான் விரும்புகிறேன். நான் உங்களுக்குக் கொடுக்க விரும்பிய மகிழ்ச்சி உங்களிடம் இருக்கும்படியாக, அது முழுமையாயிருக்கும்படியாக, இதை நான் உங்களுக்குக் கூறினேன். ஒருவர் ஒருவரை நேசியுங்கள்! இதுவே என் புதிய கட்டளை. நீங்கள் ஒவ்வொருவரும் தன்னைத்தானே நேசிப்பதைக் காட்டிலும் ஒருவர் மற்றவரை நேசியுங்கள். தன் சிநேகிதர்களுக்காகத் தன் உயிரை ஒருவன் கொடுக்கிறதை விட பெரிய சிநேகம் வேறில்லை. நீங்கள் என்னுடைய சிநேகிதர்கள். உங்களுக்காக நான் என் உயிரைக் கொடுக்கிறேன். நான் உங்களுக்குப் போதித்து கட்டளையிடுகிறவற்றைச் செய்யுங்கள். இனிமேல் நான் உங்களை ஊழியர் என்றழைக்க மாட்டேன். ஏனென்றால் தன் எஜமான் செய்கிறதை ஓர் ஊழியன் அறிய மாட்டான். ஆனால் நான் செய்கிறதை நீங்கள் அறிகிறீர்கள். என்னைப் பற்றியதெல்லாவற்றையும் நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். உங்களுக்கு நான் என்னை மட்டுமல்ல, பிதாவையும் தேற்றுகிறவரையும், நான் கடவுளிடம் கேள்வியுற்ற அனைத்தையும்

வெளிப்படுத்தியிருக்கிறேன். உங்களை நீங்களே தெரிந்தெடுக்கவில்லை. ஆனால் நான் உங்களைத் தெரிந்து கொண்டேன். நானே உங்களைத் தேர்ந்தெடுத்தேன். நீங்கள் ஜனங்கள் நடுவே போய், உங்களிடத்திலே நீங்கள் கனி தரும்படியாகவும், சுவிசே ம் போதிக்கப்படுகிறவர்களின் இருதயங்களிலும் பலன் தரும்படியாகவும், உங்கள் பலன் நிலைத்திருக்கும்படியாகவும், என் நாமத்தினால் நீங்கள் பிதாவை எதெது கேட்பீர்களோ அதையெல்லாம் நான் உங்களுக்குத் தந்தருளும்படியாக உங்களை ஏற்படுத்தினேன்.

"நீர் எங்களைத் தெரிந்து கொண்டீரானால், ஒரு துரோகியை ஏன் தெரிந்து கொண்டீர்? எல்லாம் உமக்குத் தெரியுமானால் ஏன் அப்படிச் செய்தீர்?" என்று சொல்லாதீர்கள். அவன் யார் என்று கூட கேளாதீர்கள். அவன் ஒரு மனிதனல்ல. அவன் சாத்தான். என் பிரமாணிக்கமுள்ள சிநேகிதனிடத்தில் நான் அப்படிக் கூறினேன். என் அருமை மகன் அப்படிக் கூறவும் அனுமதித்தேன். அவன் சாத்தானாயிருக்கிறான். சர்வேசுரனுடைய நித்திய நையாண்டிக்காரனை சாத்தான் மனித மாம்சத்தில் அவதாரமெடுக்காதிருந்தால், இப்பேய் பிடித்த மனிதன் சேசுவாகிய என் வல்லமைக்குத் தப்பியிருக்க மாட்டான். "பேய் பிடித்தவன்" என்று சொன்னேன். இல்லை. அவன் அதைவிடக் கூடுதல்: அவன் சாத்தானில் நிர்மூலமாகி விட்டான்."

"நீர் பசாசுக்களை விரட்டியிருக்கிறீரே. இவனை ஏன் விடுவிக்கவில்லை?" என்று அல்பேயுசின் யாகப்பர் கேட்கிறார்.

"அவன் நீதான் என்று பயந்து உன் சார்பாகவே இப்படிக் கேட்கிறாயா? நீ அது பற்றிக் கவலைப்படாதே."

"அது நானா?"

"நானா?"

"நானா?"

"அமைதியாயிருங்கள். அந்தப் பெயரை நான் சொல்லப் போவதில்லை. நான் இரக்கம் காட்டுகிறேன். நீங்களும் அப்படிச் செய்யுங்கள்."

"ஆயினும் அவனை நீர் ஏன் தோற்கடிக்கவில்லை? உம்மால் அதைச் செய்யக் கூடாதா?"

"கூடும். ஆனால் சாத்தான் என்னைக் கொல்வதற்கு சரீர



வடிவமெடுப்பதைத் தடை செய்வதற்காக நான் மனுக்குலத்தை இரட்சிக்குமுன்பே அதை அழிக்க வேண்டியிருக்குமே. அப்போது நான் யாரை இரட்சிப்பேன்?"

அப்போது இராயப்பர் முழங்கால்களில் விழுந்து மூளைக் கோளாறு பிடித்தவனைப் போல் சேசுவை வெறித்தனமாய் பிடித்து அசைத்துக் கொண்டு: "சொல்லும், ஆண்டவரே, சொல்லும். அது நானா? என் மனச்சாட்சியைச் சோதித்துப் பார்க்கட்டுமா? அப்படி நான் நினைக்கவில்லை. ஆனால் நீர்... நீர் சொன்னீர், நான் உம்மை மறுதலிப்பேன் என்று... எனக்கு நடுக்கமாயிருக்கிறது... அப்படியிருந்தால், ஓ! என்ன கொடிய பயங்கரம்!..." என்கிறார்.

"இல்லை. யோனாவின் சீமோனே. அது நீயல்ல."

"இராயப்பர் என்ற பெயரை எனக்கு ஏன் மறுக்கிறீர்? நான் மறுபடியும் சீமோன் ஆகி விட்டேனா? பாரும்! நீரே அப்படிச் சொல்கிறீர்... இந்த நாள்! நான் அதை எப்படிச் செய்வேன்? சொல்லுங்கள்... நீங்கள் எல்லாரும் சொல்லுங்கள்... எப்போது நான் துரோகியானேன்? சீமோனே!... அருளப்பா... சொல்லுங்கள்..."

"இராயப்பா, இராயப்பா, இராயப்பா! நம்முடைய முதல் சந்திப்பை நான் நினைத்ததால் உன்னை சீமோன் என்று சொன்னேன். அப்பொழுது நீ சீமோனாகத்தான் இருந்தாய். அந்த முதல் கணத்திலிருந்து நீ எப்போதும் எப்படிப் பிரமாணிக்கமாயிருந்தாய் என்று நினைத்தேன். அது நீயல்ல - சத்தியமாகிய நான் உனக்குச் சொல்கிறேன்."

"பின் வேறு யார்?"

அப்போது யூதா ததேயுஸ் தன்னையே கட்டுப்படுத்தக் கூடாமல் சத்தமிட்டு: "அது யூதாஸ் இஸ்காரியோத்! அது இன்னுமா உமக்குத் தெரியவில்லை?" என்கிறார்.

"இதை நீர் ஏன் முன்கூட்டிச் சொல்லவில்லை? ஏன்?" என்று இராயப்பரும் சத்தமிடுகிறார்.

"அமைதி! அது சாத்தான். அவனுக்கு வேறு பெயர் இல்லை. எங்கே புறப்படுகிறாய் இராயப்பா?"

"அவனைத் தேட."

"அந்த மேல் வஸ்திரத்தையும், அந்த ஆயுதத்தையும் உடனே

வைத்து விடு. இல்லாவிடில் இங்கிருந்து உன்னைத் துரத்தவா? உன்னைச் சபிக்கவா?''

''வேண்டாம் என் ஆண்டவரே, வேண்டாம்! எனக்கு என்ன?... எனக்கு என்ன? எனக்கு ஜன்னி கண்டுவிட்டதா? ஓ!... '' இராயப்பர் தரையில் விழுந்து சேசுவின் பாதத்தடியில் கிடந்து அழுகிறார்.

சேசு தொடர்ந்து சொல்கிறார்: ''நான் என் கட்டளையைக் கொடுக்கிறேன்: ஒருவரையொருவர் நேசியுங்கள். மன்னியுங்கள். கண்டுபிடித்தீர்களா? உலகத்திலே பகை இருக்கிறது. ஆனால் உங்களிடத்திலே அன்பு மட்டுமே இருக்கக்கடவது. எல்லார் மீதும் எத்தனை துரோகிகளை உங்கள் பாதையிலே நீங்கள் சந்திப்பீர்கள்! ஆனால் நீங்கள் அவர்களைப் பகைக்கக் கூடாது. தீமைக்குத் தீமை செய்யக் கூடாது. அல்லாவிட்டால் பிதா உங்களைப் பகைப்பார். உங்களுக்கு வெகு முன்பே நான் பகைக்கப்பட்டு காட்டிக் கொடுக்கப் பட்டேன். ஆயினும் நீங்களே பார்ப்பதுபோல நான் பகைக்கிறதில்லை. உலகமானது தன்னிலிருந்து வேறுபாடாயிருப்பதை நேசிக்க முடியாது. ஆகவே அது உங்களை நேசிக்காது. நீங்கள் அதற்குச் சொந்தமாயிருந்தால் அது உங்களை நேசிக்கும். ஆனால், உங்களை நான் உலகத்திலிருந்து அகற்றி விட்டதால் நீங்கள் உலகத்தினுடையவர்களாயில்லை. அதுதான் நீங்கள் பகைக்கப்படுவதின் காரணம்.

''உங்களுக்கு நான் சொல்லியிருக்கிறேன்: ஊழியன் தன் எஜமானனிலும் பெரியவன் அல்ல. அவர்கள் என்னை இம்சைப் படுத்தினார்களென்றால் உங்களையும் இம்சைப்படுத்துவார்கள். அவர்கள் எனக்குக் காது கொடுத்தால் உங்களுக்கும் காது கொடுப்பார்கள். ஆனால் அவர்கள் என் நாமத்தினிமித்தம் எல்லாவற்றையும் செய்வார்கள். காரணம் அவர்கள் அறியவில்லை. என்னை அனுப்பினவரை அறிந்து கொள்ள அவர்கள் விரும்பவில்லை. நான் வராமலும், போதியாமலுமிருந்தால் அவர்களுக்குப் பாவமிராது. ஆனால் இப்பொழுது அவர்கள் தங்கள் பாவங்களைப் பற்றிப் போக்குச் சொல்ல இடமில்லை. அவர்கள் என் கிரிகைகளைப் பார்த்திருக்கிறார்கள். என் வார்த்தைகளைக் கேட்டிருக்கிறார்கள். அப்படியிருந்தும் என்னைப் பகைத்தார்கள். என்னுடன் பிதாவையும் பகைத்தார்கள். இது ஏனென்றால் பிதாவும் நானும் அன்பினால் ஒரே ஒன்றாயிருக்கிறோம். ஆயினும் இப்படி எழுதப்பட்டிருக்கிறது:



''இலவசமாய் என்னைப் பகைத்தார்கள்'' என்று. ஆனால் பிதாவினின்று புறப்படுகிறவரான சத்தியத்தின் இஸ்பிரீத்துவாயிருக்கிற தேற்றுகிறவர் வரும்போது அவர் எனக்குச் சாட்சியாயிருப்பார். நீங்களும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள். ஏனெனில் துவக்க முதலே நீங்கள் என்னோடு இருந்தீர்கள்.

''இதை நான் உங்களுககுச் சொல்லுகிறதேனென்றால் நேரம் வரும்போது நீங்கள் மனஞ் சோர்ந்து இடறல் படாதிருக்கும்படியாகவே. இதோ நேரம் வரப் போகிறது. அப்போது உங்களை ஜெப ஆலயங்களுக்குப் புறம்பாக்குவார்கள். உங்களைக் கொலை செய்கிறவர்கள் கடவுளுக்கு ஒரு புனித கடமையைச் செய்வதாக நினைப்பார்கள். அவர்கள் பிதாவையோ, என்னையே அறியார்கள். அதுவே அவர்கள் அப்படிச் செய்வதன் காரணம். இந்நேரத்திற்கு முன் இவ்வி யங்களை இவ்வளவு விரிவாக நான் உங்களுக்குச் சொல்லவில்லை. ஏனென்றால் நீங்கள் புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப் போலிருந்தீர்கள். ஆனால் இப்பொழுது தாய் உங்களை விட்டுப் பிரிகிறாள். நான் போகிறேன். வேறு உணவுகளுக்கு நீங்கள் பழகிக் கொள்ள வேண்டும். நீங்கள் அறிந்திருக்க வேண்டுமென நான் விரும்புகிறேன்.

''நீர் எங்கே போகிறீர்?'' என்று மறுபடி நீங்கள் ஒருவர் கூட கேட்கவில்லை. துயரம் உங்கள் வாயை மூடுகிறது. ஆயினும் நான் போவது உங்களுக்கும் நல்லதாயிருக்கிறது. நான் போகாவிட்டால் தேற்றுகிறவர் வர மாட்டார். அவரை நான் உங்களிடம் அனுப்புவேன். அவர் உங்களிடம் வந்தபின் உங்களுக்குள் அவர் புகட்டுகிற ஞானத்தாலும், வார்த்தைகளாலும் செயல்களாலும், வீர வைராக்கியத்தாலும், உலகத்திற்கு அதன் தெய்வக் கொலை என்ற பாவத்தையும், என் புனிதத் தன்மையைப் பற்றிய நீதியையும் அறிவுறுத்துவார். உலகமானது தீர்ப்பிடப்பட்டவர்கள் கடவுளின் பகைவர்கள் என்றும், விசுவசிக்கிறவர்கள் என்றும் இரு தெளிவான பிரிவாகப் பிரிக்கப்படும். விசுவாசிகள் தாங்கள் விரும்புகிறபடி கூடுதல் அல்லது குறைவான புனிதமுடையவர்களாயிருப்பார்கள். ஆனால் இவ்வுலகத்தின் தலைவன் மீதும் அவனுடைய ஊழியர்கள் மீதும் தீர்ப்புக் கூறப்படும். இதற்குமேல் நான் உங்களுக்குச் சொல்ல முடியாது. ஏனென்றால் நீங்கள் இன்னும் கண்டுபிடிக்கக் கூடாதவர்களாயிருக்கிறீர்கள். ஆனால் அவர்

தேற்றுகிறவர். முழு உண்மையையும் உங்களுக்குப் போதிப்பார். ஏனெனில் அவர் தாமாகப் பேசாமல், கடவுளின் மனத்திலிருந்து தாம் கேட்ட அனைத்தையும் உங்களுக்குச் சொல்லி வரப் போகிறவைகளையும் உங்களுக்கு அறிவிப்பார். அவர் என்னுடையதினின்று - அதுவும் பிதாவினுடையதே - எடுத்து உங்களுக்குக் கூறுவார்.

"நாம் ஒருவர் ஒருவரைப் பார்த்துக் கொள்ள இன்னும் கொஞ்ச நேரம் உள்ளது. அதன்பின் நீங்கள் என்னைக் காண மாட்டீர்கள். மேலும் கொஞ்சத்திற்குப் பின் என்னைக் காண்பீர்கள்.

"நீங்கள் உங்களுக்குள்ளும் உங்கள் இருதயங்களிலும் முனகிக் கொள்கிறீர்கள். ஓர் உவமையைக் கேளுங்கள்: உங்கள் போதகரின் கடைசி உவமை:

"ஒரு ஸ்திரீ கர்ப்பிணியாகி அவளுடைய பிரவச காலம் வரும்போது அவள் பெரும் சஞ்சலமடைகிறாள். ஏனென்றால் அவள் வேதனைப்படுகிறாள். புலம்புகிறாள். ஆனால் அவளுடைய சிறு குழந்தை பிறந்து, அதை அவள் தன் மார்போடணைக்கும்போது அவளுடைய வேதனையெல்லாம் நின்று விடுகிறது. அவள் துயரம் மகிழ்ச்சியாக மாறிவிடுகிறது - ஒரு மனிதன் உலகத்தில் தோன்றியிருக்கிறான் என்பதற்காக.

"இது உங்களுக்கும் பொருந்தும். நீங்கள் அழுவீர்கள். உலகமோ உங்களைப் பார்த்துச் சிரிக்கும். ஆனால் பிறகு உங்கள் துயரம் மகிழ்ச்சியாக மாறி விடும். அந்த மகிழ்ச்சியை உலகம் ஒருபோதும் அறியாது. இப்பொழுது நீங்கள் துயரமாயிருக்கிறீர்கள். ஆனால் என்னை மறுபடியும் காணும்போது உங்கள் இருதயங்கள் மகிழ்ச்சியால் நிரம்பும். அதை உங்களிடமிருந்து ஒருவனும் பறித்துக் கொள்ள மாட்டான். அந்த மகிழ்ச்சி எவ்வளவு நிறைவாயிருக்குமென்றால், உங்கள் மனதிற்கோ, இருதயங்களுக்கோ, சரீரங்களுக்கோ எதையும் கேட்க வேண்டியதின் அவசியம் இல்லாமல் ஆகிவிடும். என்னைக் காண்பதிலேயே நீங்கள் போஷிக்கப்படுவீர்கள். மற்ற அனைத்தையும் மறந்து விடுவீர்கள். அந்த நேரத்திலிருந்து நீங்கள் எதையும் என் பெயரால் கேட்கக் கூடியவர்களாயிருப்பீர்கள். உங்கள் மகிழ்ச்சி மேலும் மேலும் பெரிதாகும்படி அது பிதாவினால்



உங்களுக்கு அருளப்படும். கேளுங்கள், கட்டாயம் கேளுங்கள். நீங்கள் பெற்றுக் கொள்வீர்கள்.

"பிதாவைப் பற்றி உங்களிடம் நான் திறந்து பேசக் கூடிய நேரம் வருகிறது. அது நடைபெறும். ஏனென்றால் சோதனை துன்பத்தில் நீங்கள் பிரமாணிக்கமாயிருந்திருப்பீர்கள். அனைத்தும் வெல்லப்பட்டுமிருக்கும். உங்களுடைய சிநேகம் துன்ப சோதனையில் உங்களுக்குத் திடம் தந்திருக்குமாதலால் அது உத்தம சிநேகமாயிருக்கும். அதிலே உங்களுக்கு குறைவுபட்ட எதையும் நான் உங்களுக்குக் கொடுப்பேன். என் அளவற்ற பொக்கி த்திலிருந்து எடுத்துக் கொடுத்து பிதாவைப் பார்த்து: "பிதாவே, நீரே காண்பது போல் நான் உம்மிடமிருந்து வந்தேன் என்று இவர்கள் விசுவசித்து, என்னை நேசித்திருக்கிறார்கள்." என்று சொல்வேன். பூமியில் இறங்கி வந்தபின் இப்போது அதை விட்டு நான் பிதாவிடம் போகிறேன். உங்களுக்காக மன்றாடுவேன்."

"ஆ! இப்பொழுது நீர் வி யங்களை தெளிவாக விளக்குகிறீர். உம்முடைய கருத்து என்னவென்று எங்களுக்குத் தெரிகிறது. உமக்கு எல்லாம் தெரியும். யாரும் கேள்வி கேட்காமலே நீர் பதில்களைச் சொல்லுகிறீர். மெய்யாகவே நீர் சர்வேசுரனிடமிருந்து வருகிறீர்."

"இப்பொழுது நீங்கள் விசுவசிக்கிறீர்களா? இக்கடைசி நேரத்தில்? மூன்று ஆண்டுகளாக உங்களிடம் பேசியிருக்கிறேன்! அதற்கு, மனிதனிடமிருந்து வராத, கடவுளாக இருக்கிற அப்பமும், இரத்தமுமாயிருக்கிற திராட்சை இரசமும் உங்களிடம் கிரியை செய்து கொண்டிருக்கின்றன. தெய்வமாக்கப்படுவதின் முதல் உள்ளக் கிளர்ச்சியை உங்களுக்குத் தருகின்றன. என் அன்பிலும், என்னைக் கொண்டிருப்பதிலும் நீங்கள் நிலைத்திருந்தால், நீங்கள் தெய்வங்களாவீர்கள். அது ஆதாம், ஏவாளிடம் சாத்தான் சொன்னது போலல்ல. ஆனால் நான் சொல்லுவது போல். நன்மையினுடையவும், ஜீவனுடையவும் மரத்தின் உண்மையான கனி இது. இதில் போஜனம் செய்கிறவனிடம் தீமை தோற்றுப் போகிறது. மரணம் மாண்டு போகிறது. இதை உண்கிறவன் நித்தியத்திற்கும் வாழ்வான். சர்வேசுரனுடைய இராச்சியத்தில் "தெய்வம்" ஆவான். என்னில் நீங்கள் நிலைத்திருந்தால் நீங்கள் தெய்வங்கள் ஆவீர்கள். எனினும்

இப்பொழுது... உங்களிடத்தில் இந்த அப்பத்தையும், இந்த இரத்தத்தையும் நீங்கள் கொண்டிருந்தாலும், நீங்கள் சிதறடிக்கப்படும் நேரம் வருவதால், நீங்கள் உங்கள் போக்கில் போய் விடுவீர்கள். என்னைத் தன்னந்தனியே விட்டு விடுவீர்கள். ஆனால் நான் தனியாக இல்லை. என்னோடு பிதா இருக்கிறார். பிதாவே! பிதாவே! என்னைக் கைவிடாதேயும்! உங்களுக்கு நான் எல்லாவற்றையும் சொல்லிவிட்டேன்... உங்களுக்கு சமாதானமளிப்பதற்காக. என்னுடைய சமாதானம் அது. உங்களுக்கு இன்னும் உபத்திரவம் இரக்கிறது. ஆனால் விசுவாசம் கொண்டிருங்கள். நான் உலகத்தை ஜெயித்தேன்.''

சேசு எழுந்து நிற்கிறார். தம் கைகளை சிலுவை வடிவமாக விரிக்கிறார். அவருடைய முகம் பிரகாசமாய் ஜொலிக்கிறது. அவ்வாறு நின்றபடி பிதாவுக்கு அவ்வுன்னதமான ஜெபத்தைச் சொல்கிறார். அருளப்பர் அந்த ஜெபம் முழுவதையும் எழுதியிருக்கிறார்.

அப்போஸ்தலர்கள் கூடக் குறைய வெளிப்படையாகவும், சத்தமாகவும் கண்ணீர் வடிக்கிறார்கள். கடைசிக் காரியமாக அவர்கள் ஒரு பாடல் பாடுகிறார்கள்.

சேசு அவர்களை ஆசீர்வதிக்கிறார். பின் அவர்களைப் பார்த்து, "இப்பொழுது நாம் நம் மேல் வஸ்திரங்களைப் போட்டுக் கொள்வோம். புறப்படுவோம். பிலவேந்திரா, வீட்டெஜமானிடம் எல்லாவற்றையும் இருக்கிறபடியே விட்டுவிட நான் விரும்புவதாகச் சொல். நாளைக்கு... இந்த இடத்தைக் காண்பது உங்களுக்கு நன்றாயிருக்கும்'' என்கிறார். சேசு அவ்விடத்தைப் பார்க்கிறார். அதன் சுவர்கள், தட்டுமுட்டு ஜாமான்கள் எல்லாவற்றையும் ஆசீர்வதிப்பது போல் காணப்படுகிறார். பின் தம் மேல் வஸ்திரத்தை அணிந்து கொண்டு வெளியேறுகிறார். சீடர்கள் அவரைப் பின்தொடர்கிறார்கள். அவர் பக்கத்தில் அருளப்பர் - அவர் மேல் சாய்ந்தபடி நடக்கிறார்.

"உம் தாயிடம் வழியனுப்பவில்லையா?'' என்று செபதேயுவின் குமாரர் கேட்கிறார்.

"வேண்டாம். எல்லாம் செய்து முடிந்தன. மேலும் ஓசையெழுப்ப வேண்டாம்.''

சீமோன் கிளை விளக்கில் ஒரு பந்தத்தை ஏற்றியிருக்கிறார். அது வாசலுக்கு வருகிற அகன்ற நடைக் கூடத்தை



பிரகாசப்படுத்துகிறது. இராயப்பர் முன் கதவை எச்சரிக்கையாகத் திறக்கிறார். எல்லாரும் தெருவில் இறங்குகிறார்கள். ஒரு விசைக் கொண்டியால் வெளியிலிருந்தே கதவைப் பூட்டி விட்டு நடந்து செல்கிறார்கள்.

*17 பெப்ருவரி 1944.*

**சேசு கூறுகிறார் :**

கடைசி இராப் போஜன நிகழ்ச்சியில் மனிதருடைய உணவாக ஆகின்ற ஒரு கடவுளின் அன்பைப் பற்றிய சிந்தனையோடு மேலும் நான்கு முக்கியமான போதனைகள் துலங்கிக் காணப்படுகின்றன.

**முதலாவது:**

**வேதப் பிரமாணத்திற்குக் கீழ்ப்படிவது**

**கடவுளுடைய எல்லாப் பிள்ளைகளுக்கும் அவசியமானது.**

உந்நதரான சர்வேசுரன் மோயீசனுக்குக் கற்பித்த முறைமையின்படி, ஒரு ஆட்டுக்குட்டி பாஸ்காப் பண்டிகையின்போது உண்ணப்பட வேண்டும் என்று வேதப்பிரமாணம் விதித்திருக்கிறது. மெய்யங்கடவுளின் மெய்யான குமாரனாகிய நான், என்னுடைய தெய்வீகத்தினிமித்தம், வேதப் பிரமாணத்திலிருந்து விடுப்புப் பெற்றதாகக் கருதவில்லை. நான் பூமியில் இருந்தேன். மனிதர்களுக்குள்ளே மனிதனாக, மனிதர்களின் போதகராக இருந்தேன். அதன்படியும் மற்ற அனைவரை விட அதிகமாகவும், கடவுளுக்கடுத்த என் கடமையை செய்ய வேண்டியிருந்தது. கீழ்ப்படிதலுடன் இருப்பதிலிருந்தும் மேலான, இன்னும் மேலான புனிதத் தன்மைக்கு முயற்சி செய்வதிலிருந்தும், தெய்வீக சலுகைகள் ஒருவனை விடுவிப்பதில்லை. உங்கள் மிக உயர்ந்த புனிதத்தை தெய்வீக உத்தமதனத்துடன் ஒப்பிட்டால், அது நிரம்பக் குறைபாடுகளுடன் இருப்பதைக் காண்பீர்கள். ஆகவே அவைகளைக் களைய, கடவுளுடைய உத்தமதனத்திற்கு முடிந்த அளவுக்கு ஒத்திருக்கக் கூடிய நிலையை அடைய முயல்வது கடமையாகிறது.

**இரண்டாவது:**

**மரியாயின் மன்றுட்டின் வல்லமை**

மாமிசம் ஆன கடவுளாக நான் இருந்தேன். இந்த மாமிசம் கறைபடாதிருந்ததால், மாமிசத்தை ஆளுவதற்கு அதனிடம் ஞான வலிமை இருந்தது. வரப்பிரசாதத்தால் நிறைந்தவளின் உதவியை நான் மறுக்காதது மட்டுமல்ல, அந்த உதவியைக் கேட்கிறேன். வரப்பிரசாதத்தினுல் நிறைந்திருந்த அவர்களும், அந்தப் பரிகரிக்கும் வேளையிலே தனக்கும் மோட்சம் அடைபட்டிருக்கக் கண்டிருப்பார்கள். ஆயினும் தன் குமாரனுக்கு ஆறுதலளிக்க அங்கிருந்து ஒரு சம்மனசானவரைக் கொண்டு வரக்கூடாத அளவிற்கல்ல. காரணம் அவர்களே சம்மனசுக்களின் இராக்கினியாயிருக்கிருர்கள். அதுவும் தன்னுடைய ஆறுதலுக்காக அல்ல. பாவம் அந்தத் தாய்! பிதாவினுல் கைவிடப்பட்ட கசப்பை அவர்களும் அனுபவித்தார்கள். ஆனுல் மானிட மீட்புக்காக ஒப்புக் கொடுக்கப்பட்ட அந்த வேதனையினுல் ஒலிவ தோட்டத்தின் அவஸ்தையை நான் மேற்கொள்ளுவதை சாத்தியமாக்கினுர்கள். என் பாடுகளை அவற்றின் பலவகையான கசப்புகளோடு நிறைவுக்குக் கொண்டு வரச் செய்தார்கள். அவை ஒவ்வொன்றும், ஒவ்வொரு வகையான பாவத்தையும், ஒவ்வொரு வகையான பாவ உபகரணத்தையும் சுத்திகரிப்புச் செய்யும் நோக்கமுடையதாயிருந்தது.

**மூன்ருவது:**

**சுய அடக்கம் நோவுகளைத் தாங்கிக் கொள்ளுதல்**

**எல்லா நோவுப்படுத்தலையும் உந்நதமான**

**பிறர் சிநேகத்துடன் நோக்குதல் ஆகியவை.**

பிறர் சிநேகச் சட்டத்தைத் தங்கள் ஜீவியத்தின் சீவனுக ஆக்கிக் கொண்டவர்களாலேயே இவை கூடும். நான் இதை அறிவித்திருந்தேன். அறிவித்தது மாத்திரமல்ல. அதை நான் உண்மையிலேயே கடைப்பிடித்தேன்.

காட்டிக் கொடுத்தவனை என்னுடன் பந்தியில் வைத்திருந்ததும், என்னையே அவனுக்குக் கொடுத்ததும், அவன் முன்பாக என்னைத் தாழ்த்தியதும், சடங்காசாரப் பாத்திரத்தை



அவனுடன் பகிர்ந்து கொண்டதும், அவன் வாய் வைத்த இடத்தில் என் வாயை வைத்ததும், என் தாயும் அப்படிச் செய்யும்படிச் செய்ததும் எனக்கு என்னமாயிருந்தன என்பதை நீங்கள் ரூபிகரம் செய்து கொள்ள முடியாது. என்னுடைய முடிவு எப்படி இவ்வளவு சீக்கிரமாய் வந்தது என்று உங்கள் வைத்திய நிபுணர்கள் வாதம் செய்தார்கள். இன்னும் செய்கிருர்கள். என் கசையடிகளால் ஏற்பட்ட இருதய நைவுப்புண் அதன் காரணம் என்று கூறுகிருர்கள். உண்மைதான். அந்த அடிகளினுல் என் இருதயமும் காயமடைந்தது. ஆனுல் அது ஏற்கெனவே கடைசி இராப் போஜனத்தில் சேதமடைந்து விட்டது. துரோகியை என் பக்கத்தில் வைத்துக் கொண்டிருப்பதற்கு நான் எடுத்த சிரமத்தினுல் நான் இருதயம் உடைந்து போனேன். நான் சரீரத்தில் சாகத் தொடங்கியது இராப் போஜனத்தில்தான். அதன்பின் நடந்ததெல்லாம் ஏற்கெனவே இருந்த அவஸ்தையின் அதிகரிப்புத்தான். என்னுல் செய்யக் கூடுமாயிருந்ததைச் செய்தேன். நான் முழுவதும் அன்போடு ஒரே ஒன்ருகியிருந்ததால் அதைச் செய்தேன். கடவுளான அன்பு என்னை விட்டு நீங்கிய போதும் நான் அன்பாகவே இருக்க முடிந்தது. அது ஏனென்ருல் நான் என்னுடைய முப்பத்து மூன்று ஆண்டுகளிலும் அன்பினுலே வாழ்ந்திருந்தேன். ஒருவன் அன்பால் வாழும் தன்மையை அடைந்திராவிட்டால், நம்மை நோகச் செய்கிறவனை மன்னிக்கவும், அவனுடன் தங்கவும் தேவையாகிய உத்தம நிலையை அடைவதும் சாத்தியமானதல்ல. அதை நான் அடைந்திருந்தேன். அதனுல் யூதாஸ் என்கிற, அந்த நோகச் செய்வதில் உச்ச நிலையைக் கண்டவனை மன்னிக்கவும் தாங்கவும் என்னுல் கூடுமாயிருந்தது.

**நான்காவது:**

**ஒரு தேவ திரவிய அனுமானத்தைப் பெறுவதற்கு**

**ஒருவன் எவ்வளவு அதிகத் தகுதி ெற்றிருக்கிறானே**

**அவ்வளவிற்கு அதன் பலன் கூடுதலாக இருக்கும்.**

அதாவது: மாமிசத்தைக் கீழ்ப்படுத்தி, ஆன்மாவை ஆளுமிடத்தில் வைத்து, ஆசாபாசத்தை மேற்கொண்டு, தன்னையே புண்ணியங்களை நோக்கும்படி வைத்து, புண்ணியங்களின்

உத்தமதனத்தை நோக்கி தன்னையே வில்போல் வளைத்து, எதற்கும் மேலாக அன்பை நோக்கும்படி செய்கிற நிலைத்த நல்ல மனதினால் ஒருவன் தன்னை ஒரு தேவ திரவிய அனுமானத்தைப் பெற தகுதியுள்ளவனாக்கிக் கொண்டால், அதன் பலன் அவ்வளவிற்கு அதிகரிக்கும்.

இதன் காரணம், நீ நேசிக்கும்போது, நீ நேசிக்கிறவனை மகிழ்ச்சிப்படுத்த உனக்கு விருப்பம் ஏற்படும். வேறு யாரும் நேசியாத விதம் என்னை நேசித்து பரிசுத்தமாயும் இருந்த சீடன் அருளப்பர். இத் தேவ திரவிய அனுமானத்திலிருந்து மிகக் கூடுதலான மறு உருவை அடைந்தார். அந்நேர முதல், கடவுளின் உயர் வானத்தில் எளிதாய்ப் பறந்து நித்திய சூரியனை உற்றுப் பார்க்கும் பழக்கமுடைய கழுகாக ஆனார். ஆனால் தகுதியில்லாதவனும், அது மட்டுமில்லாமல் தன் மனிதத் தன்மையிலுள்ள தகுதியின்மையை சாவான பாவங்களால் அதிகரித்துக் கொள்கிறவனும் இத்தேவ திரவிய அனுமானத்தைப் பெற்றால் அவனுக்கு ஐயோ கேடாம். அப்போது அது உயிரைக் காப்பாற்றும் முளையாயிராமல் அழிவும் மரணமும் விளையும் முளையாகிவிடும். அது ஆன்ம மரணமும் மாம்சத்தின் அழுகுதலுமாகி, யூதாசைப்பற்றி இராயப்பர் கூறுவது போல் அந்த மாம்சம் "வெடிக்கும்." அது இரத்தம் சிந்தாது. அந்த ஜீவத் திரவம் தன் ஊதா வண்ண நிழலுடன் எப்போதும் அழகாகவேயிருக்கிறது. ஆனால் அந்த சரீரத்தின் குடல்கள் வெடித்துச் சிதறின. சிற்றின்ப நடத்தையால் கறுத்துப் போயின. அழுகிய அச்சரீரத்திலிருந்து அழுகல் நீர் செத்த மிருகத்தின் ஊழ்த்த சதையிலிருந்து வடிவது போல் பாய்ந்தது. வழியே போகிறவர்களுக்கு அருவெறுப்பான காட்சியாக இருந்தது.

இத்தேவ திரவிய அனுமானத்தை அவசங்கைப் படுத்துகிறவனுடைய மரணம் எப்போதுமே நம்பிக்கையெல்லாம் இழந்துவிட்ட ஒருவனின் மரணமாகவே இருக்கிறது. வரப்பிரசாதத்தில் இருக்கிறவர்களுடைய இனிதான மரணமாகவோ அல்லது மிகக் கூர்மையாக வேதனைப்படும்போதே மோட்சத்தை நோக்கி ஊன்றிப் பார்த்தபடி தன் ஆத்துமத்தில் உறுதியான சமாதானத்தை உணருகிற பலிப் பொருளினுடைய வீர வைராக்கிய மரணமாகவோ அது இராது. நம்பிக்கையற்று விட்டவனுடைய மரணம், அச்சமூட்டும் வலிப்புகளோடும், பயங்கரத்தோடுமிருக்கும். சாத்தானின் கரத்தால் ஏற்கெனவே



இறுக்கிப் பிடிக்கப்பட்ட ஆத்துமத்தின் கோரமான வலிப்புகள் அவை. அவனுடைய சரீரத்திலிருந்து ஆத்துமத்தைப் பிரித்தெடுக்க சாத்தான் அதைத் திணறச் செய்து தன் குமட்டும் மூச்சினால் மூச்சடைக்க வைக்கிறான். அன்பினாலும் விசுவாசத்தாலும், நம்பிக்கையாலும் மற்ற எல்லாப் புண்ணியங்களாலும், மோட்சத்தின் போதனைகளாலும், சம்மனசுக்களின் அப்பத்தாலும் போஷிக்கப்பட்டு, அந்த அப்பம் தனது பலன்களுடன் பின்தொடர - அதன் உண்மைப் பிரசன்னத்துடன் அப்படிப் பின்தொடருமானால் அது இன்னும் அதிக சிறப்பாகும் - அவர்களுடைய கடைசிப் பயணத்தை இவ்வாறு முடிக்கப் போகிறவர்களுக்கும், ஒரு மிருக வாழ்க்கைக்குப் பின் வரப்பிரசாதமும் தேவ திரவிய அனுமானமும் ஆறுதலளிக்க முடியாத மிருகத்துக்குரிய மரணத்தை அடைகிறவர்களுக்கும் உள்ள வித்தியாசம் இதுதான். முதலில் கூறப்பட்டது ஒரு அர்ச்சிஷ்டவனின் தெளிந்த முடிவாகும். அவனுக்கு மரணமானது நித்திய இராச்சியத்தைத் திறந்து கொடுக்கிறது. பிந்தியது, தான் நித்திய மரணத்திற்குள் விழுகிறதை உணருகிற தீர்ப்பிடப்பட்ட ஆத்துமத்தின் பயங்கர விழுதல் ஆகும். அந்த ஆத்துமம் தான் எதை இழக்க விரும்பியது என்பதை ஒரு விநாடியில் அறிந்து கொள்ளுகிறது. இனி அதற்கு எவ்விதமான மாற்றும் கிடையாது. முந்திய ஆன்மாவிற்கு பெற்றுக் கொள்ளுதலும், ஆனந்தமும். பிந்தியதற்கு: பறித்துக் கொள்ளப்படுதலும், பயங்கரமும்.

என் கொடையை நீங்கள் விசுவசித்து நேசிப்பதால், அல்லது அதை விசுவசியாமல் பரிகசிப்பதால் உங்களுக்கே நீங்கள் வழங்கிக் கொள்வது இதுவே. இந்தக் காட்சி தியானத்தின் பாடம் இதுவாகும்.

# திருப்பாடுகள்

அத்தியாயம் 3 (599)

## ஜெத்சமெனியில் ஆண்டவருடைய அவஸ்தையும் அவர் கைது செய்யப்படுதலும்

*10 பெப்ருவரி 1944*

**சேசு கூறுகிறார்:**

*இப்போது வா. இந்த மாலை வேளையில் தன் உயிர் பிரியப் போகிற ஒருவனைப் போல் நீ இருக்கிறாய். ஆயினும் நான் உன்னை உன் வேதனைகளை நோக்கி நடத்திக் கொண்டு செல்லும்படி நீ வருவாயாக. நாமிருவரும் செல்ல வேண்டிய தூரம் அதிகமிருக்கிறது. ஏனென்றால் எனக்கு இல்லாமலிருந்த துயரம் ஒன்றுகூட இல்லை: சரீர வேதனையோ, மனத் துயரமோ, இருதயக் கவலையோ, உள்ளத்தின் சஞ்சலமோ, எல்லாமே எனக்கிருந்தன. அவைகள் அனைத்தையும் நான் அனுபவித்தேன். அவற்றை நான் உணவாக உண்டேன். அவையெல்லாவற்றையும் கொண்டு நான் தாகசாந்தி செய்தேன். எந்த அளவிற்கு அப்படிச் செய்தேனென்றால் அவற்றால் நான் உயிர் விட்டேன்.*

*இவ்வளவு துயரங்களின் கசப்பான சுவையை என் உதட்டில் உன் உதடு வைத்துப் பார்த்தால் நீயும் அதை உணருவாய். அந்தக் கசப்பு இன்னமும் இருக்கிறது. என் மனித சுபாவத்தை அதன் தோற்றத்தில் நீ கண்டால் - அது இப்பொழுது பிரகாசத்துடன் உள்ளது - அந்தப் பிரகாசம், உங்களுக்காகக் கிழிக்கப்பட்டு இரத்தம் வெளியேற்றப்பட்டு அடிக்கப்பட்டு, துளைக்கப்பட்ட என் அங்கங்களை உயிருள்ள ஊதா பூத்த ஆடை போல் மூடியுள்ள எண்ணிக்கையில்லாத என் காயங்களிலிருந்து வருவதை நீ கண்டு கொள்வாய். என்னுடைய மனித சுபாவம் இப்பொழுது பிரகாசமாயிருக்கிறது. ஆனால் அது ஒரு நாள் ஒரு குஷ்டரோகியினுடையதைப் போல் இருந்தது. அத்தனை கொடூரமாய் அது அடிக்கப்பட்டு சிறுமைப்படுத்தப்பட்டது. கடவுள்-மனிதன், கடவுளுடையவும் அமலோற்பவ மாதினுடையவும் குமாரனாயிருந்தபடியால் சரீர வடிவழகின் நிறைவைத் தன்னிடத்தில் பெற்றிருந்தார். ஆனால் அவர் மீது அன்புள்ள அல்லது வினோதப் பிரியமான அல்லது நிந்தைப் பரிகாசமான அல்லது தீய பார்வையைச் செலுத்தியவர்களுக்கு தாவீது கூறுவது போல் ஒரு "புழு"வாக, மனுக்குலத்தின் நிந்தையாகவும், ஜனங்களின் பரிகாசமாகவும் அவர் காணப்பட்டார்.*

*என் பிதாவின் மீதும் என் பிதாவின் பிள்ளைகள் மீதும் எனக்கிருந்த நேசமானது என்னை அடித்தவர்களுக்கு என் சரீரத்தைக் கையளிக்க வைத்தது. என்னைக் கன்னத்தில் அறைந்தவர்களுக்கும், காறி உமிழ்ந்தவர்களுக்கும் என் முகத்தைக் கையளிக்க வைத்தது. என் தலைமுடியையும் தாடியையும் பிய்த்தெடுத்து, அது ஒரு பலனுள்ள செயல் என்று எண்ணியவர்களுக்கும், என் தலையை முட்களால் ஊடுருவக் குத்தச் செய்தவர்களுக்கும், பூமியையும் அதன் கனிகளையும் தங்கள் இரட்சகரை வதைப்பதற்கு உடந்தையாக்கியவர்களுக்கும், என் அங்கங்களை இடம் பெயரச் செய்து, என் எலும்புகளை வெளியே தெரியச் செய்து, என் ஆடைகளைக் கிழித்தெடுத்து, அதனால் என் தூய்மையை மிகக் குரூரமான முறையில் நோவுறச் செய்து, ஒரு மரத்தோடு என்னை ஆணியால் அறைந்து, இறைச்சி விற்பவனின் கொக்கியில் வெட்டப்பட்ட ஆட்டுக்குட்டியைப் போல மேலே தூக்கி மாட்டி, நான் மரண வேதனைப்படும்போது பட்சிக்கிற ஓநாய்க் கூட்டம் இரத்த வாடைபட்டு இன்னும் கொடியவனாக ஆனது போல் என்னைச் சுற்றிலும் நின்று குரைத்தவர்களுக்கு, என்னை அந்த அன்பு கையளித்துவிட வைத்தது.*

*நான் குற்றஞ்சுமத்தப்பட்டேன், தீர்ப்பிடப்பட்டேன், கொலை செய்யப்பட்டேன், காட்டிக் கொடுக்கப்பட்டேன், தொடர்ந்து நான் என் வறுமையிலும், நாடு நீங்கிய நிலையிலும், ஓடிப் போகுதலிலும், உழைப்பிலும், கண்டுபிடிக்கப்படாமையிலும், சோர்விலும், காட்டிக் கொடுக்கப்படுதலிலும், கிழிபட்ட பாகங்களிலும், கொடுமைகளிலும், பொய்களிலும், தேவ தூ□ணங்களிலும் தொடர்ந்து நான் இறந்து வந்தேன். மனிதனைக் கடவுளுடன் மறு உறவாக்க நான் வந்தேன்; மனிதன் எனக்குக் கொடுத்தவை*

இவைதான்.

மேரி, உன் இரட்சகரைப் பார்! அவர் வெள்ளை உடுத்தவில்லை. அவருடைய முடியும் அழகாயில்லை. அவருடைய கண்கள் நீ அறிந்துள்ளது போல் நீலமணி நிறமாயில்லை. அவருடைய ஆடை இரத்தம் தோய்ந்திருக்கிறது. அது பழசாகி அசுத்தத்தாலும் எச்சிலாலும் நிறைந்திருக்கிறது. அவருடைய முகம் வீங்கித் திருகியிருக்கிறது. அவருடைய கண்கள் இரத்தத்தாலும் கண்ணீராலும் திரையிடப்பட்டிருக்கின்றன. அவற்றாலும் அவருடைய கண் இமைகளைப் பாரமாக்கும் புழுதியாலும் ஏற்பட்ட பொருக்குகளின் வழியாக அவர் உன்னைப் பார்க்கிறார். என் கைகள் - அவற்றை உன்னால் பார்க்க முடிகிறதா? - அவை ஒரு பெரிய காயமாகியுள்ளன; கடைசிக் காயங்களை எதிர்பார்த்திருக்கின்றன.

சின்ன அருள்,* என்னைப் பார். உன் சகோதரன் அருளப்பன் என்னைப் பார்த்ததுபோல! என் கால் தடங்கள் இரத்தம் தோய்ந்திருக்கின்றன. சாட்டையடிகளால் ஏற்பட்ட காயங்களிலிருந்து வடிகிற இரத்தத்தை வியர்வை கழுவி விடுகிறது. பூங்காவனத்தின் அவஸ்தைக்குப் பின் அது இன்னும் இருக்கிறது. வேதனையான என் இருதயத்தின் இளைப்பில் வறண்டு போய்க் காயமுற்றிருக்கிற என் உதடுகளிலிருந்து வார்த்தைகள் வெளிவருகின்றன. எல்லா வகையான கொடூரங்களினாலும் என் இருதயம் இறந்து கொண்டிருக்கிறது.

இப்பொழுதிலிருந்து என்னை அடிக்கடி இப்படிக் காண்பாய். துயரங்களின் அரசன் நான். என் அரச ஆடையில் என் துயரத்தை உன்னிடம் கூற நான் வருவேன். நீ அவஸ்தைப்பட்டாலும் என்னைப் பின்செல். இரக்கமுடையவர் நானென்பதால் என் துயரத்தினால் வி[illegible]மாகியுள்ள உன் உதடுகளின் முன்பாக அதிக தெளிந்த காட்சித் தியானங்களின் நறுமணமுள்ள தேனையும் எடுத்து வைக்க என்னால் கூடும். ஆனால் இவைகள் இரத்தம் பூசப்பட்டவையாயிருப்பதையே இன்னும் நீ விரும்ப வேண்டும். ஏனென்றால் அவற்றின் வழியாகவே நீ ஜீவனைக் கொண்டிருப்பாய்; ஜீவனை மற்றவர்களுக்கும் கொண்டு கொடுக்கக் கூடியவளாயிருப்பாய். இரத்தம் ஒழுகும் என் கரத்தை முத்தமிட்டு, மீட்பராகிய என்னைப் பற்றித் தியானிப்பதில் விழிப்பாயிரு.



சேசு தம்மை விவரித்தபடியே நான் அவரைக் காண்கிறேன். இன்று மாலையில் நான் மெய்யான அவஸ்தையிலிருந்தேன்; இரவு 7 மணி தொடங்கி. (இப்பொழுது 11-ம் தேதி, அதிகாலை 1-15 மணியாகிறது.)

★ ★

*11 பெப்ருவரி, கலை 7-30.* சேசுவைக் காண்கிறேன். அவர் என்னிடம் கூறுகிறார்:

"நேற்று மாலை, துயரங்களுக்கு இரையான என்னைப் பற்றியே உன்னிடம் பேச விரும்பினேன்: காரணம், என் துயரங்களின் விவரிப்பையும் காட்சிகளையும் தொடங்கியுள்ளேன். நேற்று மாலையில் கொடுக்கப்பட்டது அதற்கு நுழைவாயில். நீ என் நண்பா, எப்படி சோர்வடைந்து விட்டாய்! ஆயினும் அவஸ்தை மீண்டும் வருமுன் உன்னை நான் சாந்தமாக கடிந்து கொள்ள வேண்டியுள்ளது.

நேற்று காலையில் நீ சுயநலங் கொண்டிருந்தாய். நீ உன் ஆன்ம குருவிடம்: "என் களைப்பு கூடுதலாயிருக்கிறது, நான் தாக்குப்பிடிப்பேன் என்று நம்புவோம்" எனக் கூறினாய். அது அப்படியல்ல. அவருடையது அதிலும் கூடுதலாயிருக்கிறது. ஏனென்றால் அது கடினமானது. காட்சிகளாலும், உனக்குக் கிடைத்துள்ளது போல் சேசுவை அவருடைய மனித சுபாவத்திலும் கொண்டிருப்பதாலும் அந்தக் கஷ்டம் ஈடுசெய்யப் படவில்லை. ஒருபோதும், மிகச் சிறிய காரியங்களிலும்கூட சுயநலமாயிராதே. ஒரு பெண் சீடன், ஒரு சின்ன அருள், தன் சேசுவைப் போலவே மிகத் தாழ்ச்சியும் பிறர்சிநேகமும் கொண்டிருக்க வேண்டும்.

இப்பொழுது என்னுடன் வந்து தங்கு. "பூக்கள் தோன்றி விட்டன... கிளை கழிக்கும் காலம் வந்துள்ளது. நாட்டில் காட்டுப் புறாவின் ஓசை கேட்கப்பட்டது... உன் கிறீஸ்துவின் இரத்தக் குட்டைகளில் எழுந்துள்ள பூக்கள் அவை. கழிக்கப்படும் கிளையைப் போல் வெட்டப்படுவது இரட்சகர்தான். துயரமான புனித திருமண விருந்திற்கு மணவாளியை அழைக்கிற காட்டுப் புறாவின் குரல் என்னுடையதுதான். ஏனென்றால் நான் உன்னை நேசிக்கிறேன்.

எழுந்து வா. இன்றைய பலி பூசையில் கூறப்படுவது போல் தியானித்து வேதனைப்பட வா. என் பிரியமுள்ள ஒருவருக்கு நான் கொடுக்கும் பரிசு அது.

★ ★

*16 மார்ச் 1945.*

தெரு மிக அமைதியாயிருக்கிறது. அவ்வளவு அமைதியில் ஒரு சிறு நீர்ச் சுனை ஒரு கல் தொட்டியில் விழுகிற சத்தம் மட்டும் கேட்கிறது. கிழக்கில் வீடுகளின் சுவர் ஓரமாக இன்னும் இருட்டாக இருக்கிறது. அடுத்த பக்கத்தில் வீடுகளின் மேல் பாகங்கள் நிலவொளியில் வெண்மையாகி வருகின்றன. தெரு ஒரு சதுக்கமாக விரிவடைகிற இடத்தில் பால்போல் வெள்ளி நிலா வீசி தெருவின் கற்களையும் நிலத்தையும் அழகுபடுத்துகிறது. பல வில் வளைவுகள் இல்லங்களை இணைக்கின்றன. அவை பாலங்களைப் போல் அல்லது சுவர் தாங்கிகளைப் போல் பழைய வீடுகளைத் தாங்கி நிற்கின்றன. அவ்வீடுகளுக்கு தெருப்பக்கமாக மிகச் சில திறப்புக்களே உள்ளன. அவைகளும் மூடிக் கிடக்கின்றன. இருண்டு, ஆளில்லாதவை போல் உள்ளன. முழு இருட்டாயிருக்கிறது. சீமோன் பிடித்திருக்கிற பந்தத்தின் செந்நிற ஒளி அதிக பிரகாசமாகவும் பயனுள்ளதாகவும் இருக்கிறது.

அசைகிற அந்தச் செவ்வொளியில் முகங்கள் தெளிவாகத் தெரிகின்றன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு மனநிலையைக் காட்டுகிறது. சேசுவின் முகம்தான் மிகுந்த மகத்துவமாகவும் அமைதியாகவும் காணப் படுகிறது. அவருடைய களைப்பு அவரை மூப்பாகக் காட்டுகிறது. வழக்கமாக இராத சுருக்கங்கள் காணப்படுகின்றன. அவை அவருடைய மரணத்தில் அம்முகம் எப்படியிருக்கும் என்பதை முன்கூட்டியே காட்டுகின்றன. அவருக்குப் பக்கத்தில் வருகிற அருளப்பர் தான் காணக் கூடியதையெல்லாம் ஆச்சரியமுள்ள துயர முகத்தோடு பார்க்கிறார். தான் கேட்ட ஒரு கதையினால் கலவரமடைந்த குழந்தையைப் போல் அல்லது பயங்கரமான ஒரு உறுதிமொழியைப் பற்றி

---

* சேசு, மரியா வல்டோர்ட்டாவை இப்படி பல இடங்களில் அழைக்கிறார்.



பீதியடைந்து தன்னை விட அனுபவம் அதிகமுள்ள ஒருவரிடம் உதவி கேட்கும் சிறுவனைப் போல் காணப்படுகிறார். ஆனால் அவருக்கு யார் உதவி செய்யக்கூடும்? சேசுவின் மறுபக்கத்தில் வருகிற சீமோன் ஒதுங்கி நிற்பவர் போல், தன் மனதில் பயங்கரமான நினைவுகளை நினைக்கிற மனிதனைப் போலிருக்கிறார். சேசுவுக்கு அடுத்த கண்ணியமான தோற்றத்துடன் இருப்பது அவர் மட்டுமே.

மற்றவர்கள் இரு குழுக்களாய் வருகிறார்கள். அடிக்கடி குழு மாற்றிக் கொள்கிறார்கள். அவர்களெல்லாரும் ஆத்திரத்தோடிருக்கிறார்கள். இடைக்கிடையே இராயப்பரின் கரகரத்த குரலும் தோமையாரின் ஆழ்ந்த அடித் தொண்டைக் குரலும் ஒருவகையான எதிரொலியோடு கேட்கின்றன. பின் அக்குரல்கள், தாங்கள் பேசுவதைக் கேட்டு தாங்களே பயப்படுவது போல் தாழந்து விடுகின்றன. அவர்கள், என்ன செய்யப்பட வேண்டும் என்று உரையாடல் நடத்துகிறார்கள். ஒருவர் ஒன்றையும் மற்றொருவர் இன்னொன்றையும் கூறுகிறார்கள். ஆனால் "இருளின் நேரம்" சீக்கிரமே இறங்கப் போவதால் எல்லா ஆலோசனைகளும் விடப்படுகின்றன. மனிதர் அபிப்பிராயங்கள் தெளிவில்லாமல் உள்ளன.

"முன்கூட்டியே எனக்குச் சொல்லியிருக்க வேண்டும்" என்கிறார் இராயப்பர் கவலையுடன்.

"ஆனால் யாருமே பேசவில்லையே. ஆண்டவர் கூட ஒன்றுமே சொல்லவில்லை."

"ஆண்டவர் சொல்ல மாட்டார். ஒருபோதும் உம்மிடம் சொல்லியிருக்க மாட்டார். அவரைப் பற்றி உமக்குத் தெரியாது போலிருக்கிறதே சகோதரனே..."

அப்போது தோமையார்: "ஏதோ குழப்பம் இருக்கிறது என்று நான் உணர்ந்தேன். அப்போதுதான் சொன்னேன்: "நாமும் அவரோடு போய்ச் சாகலாம்" என்று. நினைவிருக்கிறதா? ஆனால், நம் மிகப் பரிசுத்தரான சர்வேசுரனை வைத்துச் சொல்கிறேன். அது சீமோனின் யூதாஸ் என்று மட்டும் எனக்குத் தெரிந்திருந்தால்..." என்கிறார் முழங்கும் பயங்கரக் குரலில்.

"நீர் என்ன செய்திருப்பீர்?" என்று பர்தலோமேயு கேட்கிறார்.

“நானா? நீர் எனக்கு உதவி செய்தால் அதை இப்போது கூடச் செய்வேன்.”

“என்ன செய்வீர்? அவனைப் போய்க் கொலை செய்வீரா? எங்கே?”

“அல்ல. நான் ஆண்டவரை வேறிடத்திற்குக் கொண்டு போய் விடுவேன். அது அதைவிட சுலபம்.”

“ஆண்டவர் வர மாட்டார்.”

“அவர் வர விரும்புவாரா என்று நான் கேட்க மாட்டேன். அவரை நான் கடத்திக் கொண்டு போய் விடுவேன்...”

“அது தவறான கருத்தல்ல” என்கிறார் இராயப்பர். பின் அவர் ஒரு தூண்டுதலால் பின்னால் வந்து அல்பேயுஸின் இரு மகன்களின் கூட்டத்துடன் சேர்ந்து கொள்கிறார். அவர்கள் மத்தேயுடனும், யாகப்பருடனும் சதியாலோசனை செய்கிறவர்களைப் போல் மெல்லப் பேசிக் கொள்கிறார்கள்.

“கேட்டீர்களா? தோமையார் சொல்கிறார், நாம் சேசுவைக் கடத்திக் கொண்டு போய்விட வேண்டுமாம். எல்லாரும் சேர்ந்து போய் விட வேண்டுமாம். எல்லாரும் சேர்ந்து நாம் செய்து விடலாம்... ஜெத்சமெனியிலிருந்து பெத்பாஜே வழியாக பெத்தானிக்கு. அங்கிருந்து... வேறு ஏதாவது ஒரு இடத்துக்கு. அப்படிச் செய்வோமா? அவரை ஒரு பத்திரமான இடத்தில் வைத்த பிறகு நாம் திரும்பி வந்து யூதாஸை அழித்து விடலாம்.”

“அது பிரயோஜனப்படாது. முழு இஸ்ராயேலும் ஒரு கண்ணியாக இருக்கிறது” என்கிறார் அல்பேயுஸின் யாகப்பர்.

“இப்போது கண்ணி இறுகப் போகிறது. அது கண்டுபிடிக்கக் கூடியதுதான் - மிதமிஞ்சிய பகை.” இது மத்தேயு.

“மத்தேயு, எனக்குக் கோபமூட்டுகிறீர்! நீர் பாவியாயிருந்த போது இதை விட கூடுதல் தைரியம் உம்மிடமிருந்தது. பிலிப்! நீர் என்ன நினைக்கிறீர் சொல்லும்!”

பிலிப்பு தனியே வந்து கொண்டிருக்கிறார். தம்முடனேயே பேசிக் கொள்வது போல் காணப்படுகிறார். அவர் நிமிர்ந்து பார்த்து நிற்கிறார். இராயப்பர் அவர் கிட்டப் போக, இருவரும் மெல்லப் பேசிக் கொள்கிறார்கள். பின் இருவரும் முந்திய கூட்டத்திடம் வருகிறார்கள். “தேவாலயம்தான் சிறந்த இடம்”



என்கிறார் பிலிப்பு.

உடனே சேசுவின் சகோதரர்களும், மத்தேயுவும் யாகப்பரும் சேர்ந்தாற்போல்: “பைத்தியமா உமக்கு? அங்குள்ளவர்கள்தானே அவர் சாக வேண்டுமென்கிறார்கள்?” என்று வேகமாய்ச் சொல்கிறார்கள்.

அதற்கு பிலிப்பு: “உஷ்ஷ்!! அதற்கு ஏன் இவ்வளவு சத்தம்? நான் என்ன சொல்கிறேன் என்று தெரிந்தே சொல்கிறேன். அவர்கள் அவரை எல்லா இடத்திலும் தேடுவார்கள். அங்கே மட்டும் தேட மாட்டார்கள். உமக்கும் அருளப்பருக்கும் அன்புசுடைய ஊழியர்களுள் நல்ல நண்பர்கள் இருக்கிறார்கள். ஒரு கணிசமான தொகை. எல்லாம் சரியாகிவிடும். என்னை நம்புங்கள். தேடப்படுகிற ஒருவனை ஒளித்து வைக்க சிறந்த இடம் சிறையதிகாரியின் வீடுதான்” என்கிறார்.

“நானென்றால் அப்படிச் செய்ய மாட்டேன். ஆனால் மற்றவர்களின் அபிப்பிராயத்தையும் கேட்டுக் கொள்ள வேண்டும். முதலில் அருளப்பர் சொல்வதை. அவர்கள் அவரைக் கைது செய்து விட்டால்? நான்தான் துரோகி என்று யாரும் என்னைச் சொல்ல நான் விரும்பவில்லை...” என்கிறார் செபதேயுவின் யாகப்பர்.

“அதை நான் நினைக்கவில்லை. அப்போ?” என்று இராயப்பர் சொல்ல, அதற்கு யூதா ததேயுஸ்:

“ஒரு இரக்கமுள்ள காரியம் செய்யலாம். நாம் செய்யக் கூடிய காரியம் அது ஒன்றுதான். அவருடைய தாயைக் கொண்டு போய் விடுவது...” என்கிறார்.

“இது சரிதான்... ஆனால் யார் அவர்களிடம் போவது? என்ன சொல்வது? நீர்தான் போக வேண்டும். ஏனென்றால் அவர்களுக்கு நீர் உறவினர்” என்கிறார் இராயப்பர்.

“நான் சேசுவுடன் இருப்பேன். அது என் உரிமை. நீர் போகலாமே.”

“நான் சௌவ்ரா எலியசாரைப் போல் இறக்கும்படி ஒரு வாளைக் கொண்டு என்னை ஆயுதபாணியாக்கிக் கொண்டேன். என் சேசுவைத் தற்காக்கும்படி நான் சேனைகள் நடுவே செல்வேன். எந்த வரையறையுமின்றித் தாக்குவேன். அதிக எண்ணிக்கையிலான படையால் நான் கொல்லப் பட்டால் அது பரவாயில்லை. அவரைத் தற்காத்திருப்பேன்” என்று

இராயப்பர் சொல்கிறுர்.

அப்போது ததேயுஸிடம் பிலிப்பு: "அது இஸ்காரியோத்தான் என்பது உமக்கு உறுதிதானு?" என்று கேட்கிறுர்.

"எனக்கு உறுதிதான். நம்மில் யாருக்கும் ஒரு பாம்பின் உள்ளம் கிடையாது. அவன் மட்டுமே... மத்தேயு, நீர் மரியாயிடம் போய்ச் சொல்லும்..."

"நானு? அவர்களை ஏமாற்றவா? அவர்களுக்குத் தெரியாமலிருக்கையில்... அதன் பிறகு?... ஓ வேண்டாம். அந்தப் புரு வை ஏமாற்றுவதை விட நான் சாகத் தயாராக இருக்கிறேன்..."

அவர்களின் குரல்கள் தணிந்து ஒன்ருேடொன்று முனகலாகக் கலக்கின்றன.

"ஆண்டவரே, உமக்குக் கேட்கிறதா? நாங்கள் உம்மை நேசிக்கிருேம்" என்கிறுர் சீமோன்.

"நான் அறிவேன். நான் அறிவதற்கு அந்த வார்த்தைகள் தேவையில்லை. அவை கிறீஸ்துவின் இருதயத்துக்கு அமைதியைக் கொடுத்து, அவருடைய ஆத்துமத்தைக் காயப்படுத்துகின்றன."

"ஏன் ஆண்டவரே? அவை அன்பின் வார்த்தைகளல்லவா?"

"முழுவதும் மனிதத் தன்மையான அன்பு. உண்மையாகவே இம்மூன்று ஆண்டுகளிலும் நான் செய்தது ஒன்றுமில்லை. ஏனென்ருல் நீங்கள் தொடக்கத்தில் இருந்ததை விட அதிக மனிதத் தன்மையாயிருக்கிறீர்கள். இன்று மாலை மிக அசுத்தமான புளிப்புகளெல்லாம் உங்களிடம் எழுகின்றன. ஆனுல் அது உங்கள் குற்றமல்ல..."

அப்போது அருளப்பர்: "சேசு, உங்களைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள்" என்று அழாக் குறையாகச் சொல்கிறுர்.

"நான் என்னைக் காப்பாற்றத்தான் செய்கிறேன்."

"அப்படியா? ஓ என் சர்வேசுரா! உமக்கு நன்றி!" அதிக உஷ்ணத்தால் வாடிப்போன மலர் மீண்டும் செழிப்பாகி தன் காம்பில் நேராக நிற்பது போல் காணப்படுகிறுர் அருளப்பர். "மற்றவர்களிடம் இதைச் சொல்கிறேன். நாம் எங்கே போகிருேம்?" என்று கேட்கிறுர்.

"நான் என் மரணத்திற்கு. நீங்கள் விசுவாசத்திற்கு."

"ஆனுல் இப்பொழுதுதானே சொன்னீர் உம்மைக் காப்பாற்றப் போவதாக?" சிநேக சீடர் மறுபடியும் தளர்ந்து போகிறார்.

"ஆம். உண்மையில் நான் என்னைக் காப்பாற்றவே செய்கிறேன். என் பிதாவுக்கு நான் கீழ்ப்படியாவிட்டால் நான் என்னையே இழப்பேன். நான் அவருக்குக் கீழ்ப்படிகிறேன். ஆதலால் என்னைக் காப்பாற்றுகிறேன். நீ இப்படி அழாதே. முன்னெரு நாள் நான் சொன்ன கிரேக்க தத்துவ ஞானியின் சீடர்களைப் போல் நீ தைரியமாயில்லை. நஞ்சுச் செடியின் சாற்றைப் பருகி இறந்து கொண்டிருந்த தங்கள் குருவுடன் அவர்கள் தங்கள் ஆண்மையுள்ள துயரத்தால் அவரைத் தேற்றினுர்கள். நீ... தகப்பனைப் பறிகொடுத்த சிறு பையனைப் போலிருக்கிருயே."

"அது உண்மைதானே? நான் பறிகொடுப்பது ஒரு தகப்பனின் இழப்பை விட அதிகமானது. நான் உம்மையல்லவா பறிகொடுக்கிறேன்?..."

"நீ என்னை இழக்கவில்லை. ஏனென்ருல் நீ என்னைத் தொடர்ந்து நேசிப்பாய். இழக்கப்படுவது யாரெனில், பூமியில் மறக்கப்பட்டு நம்மிடமிருந்து பிரிக்கப்படுகிறவனும் மறுமையில் கடவுளுடைய தீர்ப்பிலிருந்து நீக்கப்படுகிறவனுமே. ஆனுல் நாம் ஒருபோதும் பிரிந்திருக்க மாட்டோம். இம்மையிலும் இல்லை. மறுமையிலும் இல்லை."

ஆனுல் அருளப்பருக்கு நியாயம் எடுபடவில்லை.

அப்போது சீமோன் சேசுவிடம் நெருங்கி வந்து தாழ்ந்த குரலில்: "ஆண்டவரே... சீமோன் இராயப்பரும்... நானும் ஒரு நல்ல காரியம் செய்யலாமென நம்பியிருந்தோம்... ஆனுல் நீர் எல்லாவற்றையும் அறிவீராதலால், எத்தனை மணி நேரத்திற்குள் நீர் கைது செய்யப்படுவீர் என்பதைச் சொல்லும்" என்கிறுர்.

"நிலா தன் வட்டத்தின் உச்சியில் இருக்கும்போது."

சீமோன் வேதனைப்படுகிறுர். பொறுமையிழக்கிறுர். கோபங் கொள்ளுகிறுர். "அப்படியென்ருல் எல்லாமே வீணுகத்தான் இருந்திருக்கிறது... ஆண்டவரே, இப்பொழுது நான் சொல்லிவிடுகிறேன். இக்கடைசி நாட்களில் உம்மை நானும் சீமோன் இராயப்பரும் இப்படித் தனியே விட்டுப் போனதைப் பற்றி எங்களைக் கடிந்து கொண்டீர். ஆனுல்


3 அத்தியாயம் 44

உமக்காகவே நாங்கள் போனோம்... உம்முடைய நன்மைக்காக. உமது வார்த்தைகளால் கலவரமடைந்து இராயப்பர் திங்கட்கிழமை இரவு நான் தூங்கிக் கொண்டிருந்தபோது என்னிடம் வந்து: நீரும் நானும் - நான் உம்மை நம்பலாம் - சேசுவுக்காக ஏதாவது செய்ய வேண்டும். யூதாஸூம் சொன்னான். தானும் அப்படிச் செய்ய வேண்டும் என்று'' எனக் கூறினார். ஓ! அப்போது அதை நாங்கள் ஏன் கண்டுபிடிக்கவில்லை? நீரும் எங்களிடம் ஏன் ஒன்றுமே சொல்லவில்லை? நீர் யாரிடமும் ஒன்றும் சொல்லவில்லையா? உண்மையாக? ஒருவேளை உமக்கு அது சில மணி நேரத்திற்கு முன்புதான் தெரிய வந்ததோ?''

''அதை நான் எப்போதும் தெரிந்திருந்தேன். அவன் ஒரு சீடனாக வருமுன்பே கூட அவனுடைய குற்றம் தேவ நோக்கிலும், மனித நோக்கிலும் முழுமை ஆகாதிருக்கும்படி அவனை என்னிடமிருந்து அனுப்பி விட நான் எல்லா வகையிலும் முயன்றேன். என் மரணத்தை விரும்புகிறவர்கள் கடவுளின் கொலைகாரரர்கள். என் சீடனும் என் நண்பனுமாகிய இவன் என்னைக் காட்டிக் கொடுக்கிறவனாகவும் இருக்கிறான் - மனிதக்கொலைஞன். இவனே என் முதல் கொலைஞன். ஏனென்றால் இவனை உணவருந்தும்போது என் அருகில் வைத்துக் கொள்வதில் நான் அனுபவித்த சிரமத்தாலும், அவனை உங்களிடமிருந்து காப்பாற்ற நானாகவே செய்த முயற்சியாலும் இவன் அப்போதே என்னைக் கொன்று விட்டான்.''

''விஷயம் வேறு ஒருவருக்கும் தெரியாதா?''

''அருளப்பனுக்குத் தெரியும். உணவின் முடிவில் நான் அவனிடம் சொன்னேன். ஆனால் நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள்?''

''லாசர் எப்படி? லாசருக்கு உண்மையிலேயே ஏதாவது தெரியுமா? அவரிடம் இன்று நாங்கள் போனோம். ஏனென்றால் அவர் அதிகாலையில் வந்தார். தன் பலியைச் செலுத்தி விட்டு, தன் பெரிய இல்லத்திற்குக் கூட வராமலும் உரோமை அதிகாரி இல்லத்திற்குப் போகாமலும் திரும்பிப் போய் விட்டார். அவர் எப்போதும் அங்கு செல்வது வழக்கம். அவர் தந்தையின் வழக்கத்தையொட்டி அப்படிச் செல்வார். மேலும் பிலாத்து இந்நாட்களில் பட்டணத்தில் இருக்கிறார்.



உமக்கது தெரியும்...''

''ஆம். அவர்களெல்லோரும் இங்கு இருக்கிறார்கள். உரோமை புதிய சீயோன். பிலாத்துடன் இருக்கிறது. இஸ்ராயேல், கைப்பாஸுடனும், ஏரோதுடனும் இருக்கிறது. இஸ்ராயேல் முழுவதும் இங்கிருக்கிறது. ஏனென்றால் பாஸ்காப் பண்டிகை இம்மக்களின் பிள்ளைகளை தேவனுடைய பீடத்தடியில் ஒன்று சேர்த்துள்ளது... கமாலியேலை நீ கண்டாயா?''

''கண்டேன். ஏன் அதைக் கேட்கிறீர்? அவரை மறுபடியும் நாளை நான் பார்க்க வேண்டியுள்ளது.''

''இன்று மாலை கமாலியேல் பெத்பாஜேயில் இருக்கிறார். எனக்குத் தெரியும். நாம் ஜெத்சமெனிக்குப் போய்ச் சேர்ந்தவுடன் நீ கமாலியேலிடம் போய்: ''நீர் இருபத்தொரு வருடங்களாய் எதிர்பார்த்திருக்கிற அடையாளத்தை சீக்கிரமே பெற்றுக் கொள்வீர்'' என்று சொல்ல வேண்டும். வேறொன்றும் வேண்டாம். சொல்லிவிட்டு உன் தோழர்களிடம் வந்து விடு.''

''உமக்கு எப்படித் தெரியும்? ஓ என் ஆண்டவரே! என் ஆண்டவர் பாவம்! மற்றவர்களுடைய செயல்களைப் பற்றி அறியாதிருக்கும் ஆறுதல் கூட உமக்கு இல்லையே!''

''அது சரியே. அறியாதிருப்பதின் ஆறுதல்! பாவம் நான்! ஏனென்றால் நல்ல கிரியைகளை விட தீய கிரியைகளே கூடுதலாயிருக்கின்றன. ஆயினும் நான் நல்ல செயல்களையும் காண்கிறேன். கண்டு அவற்றில் மகிழ்கிறேன்.''

''அப்படியானால் அது உமக்குத் தெரியும்...''

''சீமோன்! இது என் பாடுகளின் நேரம். அதை அதிக முழுமையாக்க, அது அடுத்து வர வர பரம பிதா தமது ஒளியை என்னிடமிருந்து நிறுத்தி வருகிறார். சீக்கிரத்தில் இருளும் இருள் என்பதன் தியானக் காட்சியும்தான் என்னிடம் இருக்கும். அதாவது, மனிதர்களின் சகல பாவங்களும். உன்னால், உங்கள் ஒருவராலும் இதைக் கண்டுபிடிக்க முடியாது. இந்த விசேஷ அலுவலுக்கு கடவுளால் அழைக்கப்படுகிறவர்களே பெரிய பாடுகளில் இந்தப் பாகத்தைக் கண்டுபிடிப்பார்கள். மேலும் நேசிப்பது, தியானிப்பது இவற்றில் கூட மனிதன் சரீரப் பிரகாரமாயிருப்பதால், மீட்பருடைய கசையடிகளையும், வாதனைகளையும்

முன்னிட்டு அழுகிறவர்கள் இருப்பார்கள். ஆனுல், எனக்குச் செவி கொடுக்கிறவர்களே, என்னை நம்புங்கள்: இந்த ஆன்மீகப் பிரகாரமான வாதனைதான் மிகவும் கோர கொடூரமானது, அது அளக்கப்படாதது... ஆதலால் சீமோன், நீ பேசு. உன்னுடைய நட்பு எந்த வழிகளிலெல்லாம் எனக்காகச் சென்றதோ அந்த வழிகளில் என்னை வழிநடத்து. ஏனெனில் நான் ஒரு வறிய மனிதன். பார்வையற்றவனுகி வருகிறேன்: உண்மைப் பொருள்களையல்ல, பூதங்களைக் காண்கிறேன்...''

அருளப்பர் ஆண்டவரைக் கட்டிக் கொண்டு கேட்கிருர்: ''என்ன? உம்முடைய அருளப்பனை உம்மால் காண முடியவில்லையா?'' என்று.

''உன்னைக் காண முடிகிறது. ஆனுல் பூதங்கள் சாத்தானுடைய பனி மூட்டங்களிலிருந்து எழுகின்றன. இருளின் பயங்கரங்களும் துயரங்களும் காணப்படுகின்றன. இந்த மாலையில் நாம் யாவரும் இந்த நகரத்தின் விஷப் புகையால் மூடப்பட்டிருக்கிறோம். அது கோழைத்தனத்தையும், கீழ்ப்படியாமையையும் என்னிடம் ஏற்படுத்தப் பார்க்கிறது. உன்னிடத்திலே ஏமாற்றத்தையும், அச்சத்தையும் ஏற்படுத்தும். பயப்படாமலும், குற்றம் சுமராமலும் இருக்கிற மற்றவர்களிடம் அது பயத்தையும் தவறுதலையும் கொண்டு வரும். சாத்தானுக்கு ஏற்கெனவே சொந்தமாகி விட்ட மற்றவர்களிடம் அது சுபாவத்தைத் தாண்டிய நெறிபுரட்டலை எழுப்பி விடும். ஏன் நான் இப்படிச் சொல்கிறேனென்ருல், தீமையில் அவர்களுடைய உச்சம் மனிதனுல் சாத்தியமாகக் கூடியதையெல்லாம் தாண்டி சுபாவத்திற்கு மேற்பட்ட நிலையில் மட்டுமே எட்டக்கூடிய உச்சத்தை அடையும். சீமோன்! என்ன சொல்கிருய்? பேசு.''

''ஆம். செவ்வாய்க் கிழமையிலிருந்து, நாங்கள் கண்டுபிடிக்கவும், தடுக்கவும், உதவி தேடவும்தான் சுற்றி வந்தோம்.''

''அதனுல் உங்களால் என்ன செய்ய முடிந்தது?''

''ஒன்றுமில்லை - அல்லது மிகச் சொற்பமே.''

''அந்தச் சொற்பமும் அச்சம் உங்கள் இருதயத்தை செயலிழக்கச் செய்யும்போது ''ஒன்றுமில்லை'' என்ருகி விடும்.''

''எனக்கு லாசர் மேலும் எரிச்சல் வந்தது... அப்படி வந்தது அதுதான் முதல் தடவை... எரிச்சல் ஏன் வந்ததென்ருல் அவர் அசமந்தமாயிருப்பதாகத் தோன்றுகிறது... அவரால் செய்ய முடியும். அவர் தேசாதிபதியின் நண்பர். எப்போதுமே அவர் தியோபிலஸின் மகன்தானே. ஆனுல் கொடுத்த ஒவ்வொரு கோரிக்கையையும் அவர் மறுத்தார். ''ஆண்டவர் குறிப்பிட்டுப் பேசுகிருரே. அவனுடைய நண்பன் நீர் என்று நான் நினைக்கிறேன். பயங்கரமானவர் நீர்'' என்று அவரிடம் கத்திச் சொல்லிவிட்டு வந்து விட்டேன். அதன் பின் அவரிடம் போக எனக்கு விருப்பமேயில்லை... ஆனுல் இன்று காலையில் அவர் எனக்கு ஆளனுப்பி ''நான்தான் துரோகி என்று இன்னும் உம்மால் நம்ப முடிகிறதா?'' என்று கேட்டார். நான் ஏற்கெனவே கமாலியேலையும், சூசையையும், சூசாவையும், நிக்கோதேமுவையும், மனேயனேயும், கடைசியாக உது சகோதரன் யோசேப்பையும் கண்டு பேசியிருந்தேன்... ஆகவே லாசர் அப்படிப்பட்டவர் என்று என்னுல் நினைக்க முடியவில்லை. நான் அவரிடம்: ''லாசர், என்னை மன்னியும். முன்பு நானே தீர்ப்பிடப்பட்டிருந்தபோது இருந்ததை விட, என் மனம் இப்பொழுது அதிகம் குழம்பிப் போயிருக்கிறதாக உணருகிறேன்'' என்றேன். ஆண்டவரே, அப்படித்தான் இருக்கிறது... நான் நானுகவே இல்லை. ஆனுல் நீர் ஏன் புன்னகைக்கிறீர்?''

''ஏனென்ருல் அது நான் இப்பொழுது கூறியதை உறுதிப்படுத்துகிறது. சாத்தானின் பனி மூட்டம் உன்னை மூடிக் குழப்புகிறது. லாசர் என்ன பதில் கூறினுன்?''

''உம் கருத்தைக் கண்டுபிடிக்கிறேன். இன்று நிக்கோதேமுஸுடன் வாரும்'' என்று கூறினுர். நானும் போனேன். இராயப்பர் கலிலேயர்களிடம் போயிருந்தார். ஏனென்ருல் மிகத் தூரத்திலிருக்கிற உம்முடைய சகோதரருக்கு எங்களை விட கூடுதலாக விஷயங்கள் தெரிகிறது. அல்பேயுஸினுடையவும் சந்தைப் பக்கம் குடியிருக்கிற ஜோசேப்பினுடையவும் பழைய நண்பர் ஒருவரிடம் பேசும்போது, தற்செயலாக இந்த விவரங்கள் தமக்குக் கிடைத்ததாகச் சொல்லியிருக்கிருர்.''

''ஓ! சரி, சரி!... குடும்பத்தின் ஒரு பெரிய நண்பர்!...''

''அவர் சைமனுடனும் ஸ்திரீகளுடனும் இருக்கிருர். கானுவிலிருந்து வந்துள்ள குடும்பமும் அங்கு இருக்கிறது.''

''சைமனை நான் பார்த்தேன்.''

''ஜோசப் என்பவரின் இந்த நண்பர் தேவாலயத்திலுள்ள

ஒருவருக்கு நண்பரும், தம் மனைவியின் வழியில் உறவினருமாயிருக்கிறார். அவர், அவர்கள் உம்மைக் கைது செய்ய முடிவு செய்துள்ளதாகக் கூறியிருக்கிறார். மேலும் அவர் இராயப்பரிடம்: "அவரை நான் எப்போதும் எதிர்த்தே வந்திருக்கிறேன். ஆனால் நான் அன்பினாலேயே அப்படிச் செய்தேன். அவரும் வலிமையோடிருந்தார். ஆனால் இப்பொழுது அவர் ஒரு குழந்தை போலாகி விட்டார். தம் எதிரிகளின் இரையாக இருக்கிறார். அவரை எப்போதும் நேசித்த அவருடைய உறவினனாகிய நான் அவருடன்தான் இருக்கிறேன். அது என் இரத்தத்தாலும் சிநேகத்தாலும் எனக்கு ஏற்பட்ட கடமை" என்று கூறியிருக்கிறார்."

அப்போது சேசு தம் மகிழ்ச்சியான நேரங்களில் காணப்படும் தெளிவான முகத்துடன் ஒரு கணம் புன்னகை புரிகிறார்.

சீமோன் தொடர்ந்து: "ஜோசப் இராயப்பரிடம் வந்து: "எல்லாப் பரிசேயர்களைப் போலவும் கலிலேயப் பரிசேயர்களும் கெட்டவர்களே. ஆனால் கலிலேயா முழுவதும் பரிசேயர்கள் அல்ல. இங்கே அவரை நேசிக்கிற அநேக கலிலேயர்கள் இருக்கிறார்கள். நாம் அவர்களிடம் போய் அவரைத் தற்காக்க அவர்கள் ஒன்றுதிரளும்படி சொல்வோம். கத்திகளைத் தவிர நம்மிடம் வேறெதுவுமில்லை. ஆனால் கைத்தடிகளும், சரியானபடி உபயோகித்தால் ஆயுதங்கள்தான். உரோமைப் படை வராவிட்டால் அந்தப் பயங்கொள்ளி ஆலயக் குற்றேவல் காரன்களை விரைவிலேயே மேற்கொண்டு விடலாம்" என்று சொன்னார். இராயப்பரும் அவருடன் போனார். இதற்கிடையில் நான் நிக்கோதேமுஸுடன் லாசரிடம் சென்றேன். லாசரை எங்களுடன் வரும்படி கேட்க வேண்டும்; அவர் தம் வீட்டைத் திறந்து அங்கே உம்முடன் அவர் இருக்கும்படி அவரை ஒப்புக்கொள்ளச் செய்ய வேண்டும் என தீர்மானித்திருந்தோம். லாசர் சொன்னார்: "நான் சேசுவுக்குக் கீழ்ப்படிந்து இங்கே இருக்க வேண்டும், இரட்டிப்பாக வேதனைப்படுவதற்காக" என்று. அது உண்மையா?"

"உண்மைதான். நான் அவனுக்கு அந்தக் கட்டளையைக் கொடுத்தேன்."

"அவர் வாள்களை என்னிடம் கொடுத்தார். அவை அவருக்குச் சொந்தமானவை. ஒன்று எனக்கும் மற்றது இராயப்பருக்கும். சூசாவும் சில வாள்கள் தர விரும்பினார்.



ஆனால்... இரண்டு உருக்குத் துண்டுகள் உலக முழுவதற்கும் எதிராக என்ன பிரயோஜனம்? நீர் சொல்வது உண்மையென்று சூசாவால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அவர் சத்தியமாய்ச் சொல்கிறார், அவருக்கு எதுவும் தெரியாதென்றும், அரண்மனையில் திருநாளைக் கொண்டாடி மகிழ வேண்டுமென்பதைத் தவிர வேறெதையும் அவர்கள் நினைக்கவில்லையென்றும்... வழக்கம் போல் ஒரு களியாட்டம். எவ்வளவிற்கென்றால் அவர் ஜோஹான்னாவிடம் யூதேயாவிலுள்ள அவர்களுடைய வீடுகளில் ஒன்றில் போய்த் தங்கியிருக்கும்படி சொல்லியிருக்கிறார். ஆனால் ஜோஹான்னா இங்கேயே தன் அரண்மனையில் அடைபட்டு இங்கே அவள் இல்லாதது போல் இருந்து கொள்ள விரும்புகிறாள். ஆனால் அவள் இங்கிருந்து போக மாட்டாள். பிளாவ்டினா, அன்னா, நிக்ஹே, கிளாடியாவின் அரண்மனையிலுள்ள இரு மாதர்கள் ஆகியோரும் அவளுடன் தங்கி யிருக்கிறார்கள். அவர்கள் கண்ணீர் சிந்துகிறார்கள், ஜெபிக்கிறார்கள். குழந்தைகளை ஜெபிக்க வைக்கிறார்கள். ஆனால் இது ஜெபத்திற்கேற்ற நேரமல்ல. இது இரத்தத்திற்கான நேரம். என்னிடத்திலுள்ள "தீவிரம்" என்னில் உயிர்பெறுவதை உணருகிறேன். பழிவாங்கும்படி கொலை செய்ய ஆவல் எழுகிறது..." என்கிறார் தீவிர சீமோன்.

"சீமோன்! தீர்ப்பிடப்பட்ட ஆத்துமமாக நீ சாக வேண்டுமென்று நீ விரும்பியிருந்தால், உன்னுடைய அழிவிலிருந்து உன்னை நான் விடுவித்திருக்க மாட்டேன்..." சேசு இதை மிகக் கண்டிப்புடன் சொல்கிறார்.

"ஆ, ஆண்டவரே, என்னை மன்னியும்... நான் குடியால் மயங்கிப் புலம்புகிற ஒருவனைப் போலிருக்கிறேன்."

"மனேயன் என்ன சொல்கிறான்?"

"அது உண்மையாயிருக்க முடியாது. அப்படியே அது உண்மையாயிருந்தால் அவர் கழுமரத்திற்கே உம்மைப் பின்தொடர்வாராம்."

"நீங்கள் எல்லாரும் எப்படி உங்களிலேயே நம்பிக்கை வைத்திருக்கிறீர்கள்!... மனிதனிடம் எவ்வளவு அகங்காரம் உள்ளது! நிக்கோதேமுஸையும் சூசையையும் பற்றி என்ன? அவர்களுக்கு என்ன தெரிந்துள்ளது?"

"எனக்குத் தெரிந்துள்ளதற்கு மேல் எதுவுமில்லை. கொஞ்ச நாளைக்கு முன் ஓர் ஆலோசனைச் சங்கக் கூட்டத்தைப் பற்றி சூசை கோபப்பட்டார். காரணம் அவர்கள் குற்றமற்ற ஒருவனைக் கொல்ல எண்ணியதால் அவர்களைக் கொலைகாரர்கள் என்று கூறினர். "இங்கே எல்லாமே சட்ட விரோதமாக நடக்கிறது. ஆண்டவருடைய இல்லத்தில் அருவெறுப்பு இருப்பதாக அவர் கூறுவது சரிதான், பீடம் அவசங்கைப்படுத்தப்பட்டு விட்டதால் அது அழிக்கப்பட வேண்டும்" என்கிறார். அவரை அவர்கள் கல்லால் எறியவில்லை. ஏனென்றால் அவர் அரிமத்தியா சூசை என்பதால். ஆனால் அது முதல் அவர்கள் அவரிடமிருந்து அனைத்தையும் இருட்டடிப்பு செய்து விட்டார்கள். கமாலியேலும் நிக்கோதேமுஸும் மாத்திரம் அவருடன் நட்புடன் இருக்கிறார்கள். ஆனால் கமாலியேல் பேச மாட்டார். நிக்கோதேமுஸ்... அவரோ, சூசையோ, ஆலோசனைச் சங்கத்தின் உண்மையிலே முக்கியமான முடிவுகள் எதற்கும் அழைக்கப்பட்டதில்லை. அந்தச் சங்கம் இங்கே அங்கே, வேறு வேறு நேரங்களில் அவர்களுக்கும் உரோமைக்கும் பயந்து சட்ட விரோதமாகக் கூடுகிறது. ஆ, இடையர்கள்? ... அவர்களைப் பற்றி மறந்தே போனேன்! இடையர்களும் கலிலேயரோடிருக்கிறார்கள். ஆயினும் நாம் கொஞ்சப் பேர்தான். நாங்கள் சொன்னதைக் கேட்டு லாசர் மட்டும் அதிபதியிடம் வந்திருந்தால்! ஆனால் அவர் கேட்க மறுத்து விட்டார்... நாங்கள் செய்துள்ளது இதுதான்... நிறையத்தான்... எதுவுமில்லைதான்... நான் எவ்வளவு சோர்வாக உணருகிறேனென்றால், எல்லாமே வீணாகி விட்டதே என்கிற இந்த நினைவிலிருந்து விடுபடுவதற்காக நாட்டுப்புறங்களைச் சுற்றி நரியைப் போல் ஊளையிட்டுக் கொண்டு வன்முறையில் மிருகத்தனமாய் வழிப்பறித் திருடனைப் போல் கொலை செய்யலாம் போலிருக்கிறது. லாசர் அப்படிச் சொன்னாரே! சூசையும் சூசாவும், மனேயனும், கமாலியேலும் அப்படிச் சொன்னார்களே!..." சீமோன் தன்னறிவு கொண்டிருப்பதாகத் தெரியவில்லை...

"ராபி என்ன சொன்னார்?"

"அவர் சொன்னது: "கைப்பாஸின் கருத்து என்னவென்று எனக்குச் சரியாகத் தெரியவில்லை. ஆனால் உமக்குக் கூறுகிறேன், நீர் கூறுபவை கிறீஸ்துவைப் பற்றி மாத்திரமே தீர்க்க தரிசனமாகக் கூறப்பட்டுள்ளன. ஆனால் இந்தத் தீர்க்கதரிசியிடம் நான் கிறீஸ்துவைக் காணாததால், நான் பதட்டமடையக் காரணமில்லை. ஒரு நல்ல மனிதன், கடவுளின் நண்பன் கொல்லப்படுவான். இப்படி எத்தனையோ பேருடைய இரத்தத்தை சீயோன் குடித்துள்ளதே!" நாங்கள் உம்முடைய தேவ சுபாவத்தைப் பற்றி வலியுறுத்திச் சொன்ன போது, அவர் பிடிவாதமாக: "நான் அந்த அடையாளத்தைக் காணும்போது விசுவசிப்பேன்" என்று மீண்டும் மீண்டும் கூறினார். உம்முடைய மரணத்துக்குத் தம்முடைய வாக்கை அளிக்க மாட்டேன் என்றும், அதற்கு மாறாக, முடிந்தால் உம்மைத் தீர்ப்பிடக் கூடாதென மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்வதாகவும் கூறினார். அவ்வளவுதான். அவர் விசுவசிக்கவில்லை! அவர் விசுவசிக்க மாட்டார். நாளை வரையிலும் எதுவும் நடக்காதிருக்குமானால் ... ஆனால் அப்படி அல்ல என்று நீர் சொல்லுகிறீர். ஓ! நாம் என்ன செய்வோம்?!"

"நீ லாசர் வீட்டுக்குப் போ. எத்தனை பேரை உன்னுடன் கூட்டிச் செல்ல முடியுமோ, அதற்கு முயற்சி எடு. அப்போஸ்தலர்களை மட்டுமல்ல, நகர்ப்புறத்தில் சாலைகளில் அலைந்து திரியக் காணும் சீடர்களையும்தான். இடையர்களைக் காண முடிந்தால், அவர்களையும் அங்கு போகக் கட்டளை கொடு. பெத்தானியாவிலிருக்கிற வீடு முன்னையெல்லாம் விட இப்பொழுது ஒரு இல்லமாக, கருணையுள்ள உபசரிப்பின் இல்லமாக இருக்கிறது. ஒரு முழு ஜனத்திரளின் பகையைத் தாங்கிக் கொள்ள தைரியமில்லாதவர்கள் அங்குதான் பாதுகாப்புப் பெற வேண்டும். அங்கே காத்திருக்க வேண்டும்..."

"நாங்கள் உம்மை விட்டுப் பிரிந்து போக மாட்டோம்."

"பிரிந்து விடாதீர்கள்... பிரிந்தால் நீங்கள் ஒன்றுமில்லாமல் போவீர்கள். சேர்ந்திருந்தால் நீங்கள் இன்னமும் ஒரு சக்தியாயிருப்பீர்கள். சீமோன், இதை நீ எனக்கு வாக்குக் கொடு. நீ அமைதியானவன், பிரமாணிக்கமுள்ளவன், நீ இராயப்பனிடம் கூட பேசி சாதிக்கக் கூடியவன். மேலும் என் மட்டில் உனக்கு ஒரு பெரிய கடமையும் உள்ளது. இதை முதல் தடவையாக உனக்கு நான் நினைப்பூட்டுகிறேன் - உன்னைக் கீழ்ப்படிய வைப்பதற்காக. பார், நாம் கெதிரோனுக்கு வந்துள்ளோம். அதோ அங்கேயிருந்து குஷ்டரோகியாயிருந்த நீ என்னிடம் ஏறி வந்து சுத்தமாகி திரும்பிச் சென்றாய். நான் எதற்காக அதை உனக்குக் கொடுத்தேனோ, அதை எனக்குத் தா. மனிதனுக்கு நான் கொடுத்ததை மனிதனுக்கு நீ கொடு. இப்பொழுது நான்தான்

குஷ்டரோகி...''

''இல்லை! அப்படிச் சொல்லாதேயும்'' என்று இரண்டு சீடர்களும் அழுது கொண்டே சொல்கிறார்கள்.

''அது அப்படித்தான். இராயப்பனும் என் சகோதரர்களும்தான் மிக அதிகத் தளர்ச்சியடைவார்கள். என் நேர்மையுள்ள இராயப்பன் ஒரு குற்றவாளியைப் போல் உணர்ந்து சமாதானமற்றிருப்பான். என் சகோதரர்கள்... தங்கள் தாயையும் என் தாயையும் ஏறிட்டுப் பார்க்க தைரியமற்றிருப்பார்கள்... அவர்களை உன்னிடம் ஒப்படைக்கிறேன்...''

''ஆண்டவரே, என்னைப் பற்றி என்ன? நான் யாருக்குச் சொந்தமாயிருப்பேன்? என்னைப் பற்றி நீர் நினைக்கவில்லையா?'' என்கிறார் அருளப்பர்.

''ஓ என் குழந்தாய்! நீ உன் அன்பிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறாய். அது எவ்வளவு வலிமையுள்ளதென்றால், ஒரு தாயைப் போல் அது உன்னை வழிநடத்தும். நான் உனக்குக் கட்டளை கொடுப்பதுமில்லை, வழி நடத்துவதுமில்லை. நான் உன்னை அன்பெனும் நீர்களில் விடுகிறேன். அவை உன்னிடம் எவ்வளவு ஆழ்ந்த அமைதியான நதிகளாக உள்ளனவென்றால் உன் எதிர்காலம் பற்றி எந்த சந்தேகத்தையும் அவை என்னிடம் எழுப்பவில்லை. சீமோன், கண்டுபிடித்தாயா! எனக்கு வாக்குறுதி கொடு, உன் வாக்குறுதியைக் கொடு.'' சேசு சஞ்சலப்படுவதைப் பார்ப்பதற்கே கவலையாக உள்ளது... அவர் மீண்டும் சொல்கிறார்: ''மற்றவர் வருமுன்! ஓ உனக்கு நன்றி! நீ ஆசீர்வதிக்கப்படுவாயாக.''

அவர்கள் எல்லாரும் மீண்டும் ஒரு கூட்டமாகக் கூடுகிறார்கள்.

''இப்பொழுது நாம் பிரிந்து செல்வோம். நான் ஜெபிப்பதற்கு சற்று எட்டப் போகிறேன். என்னுடன் இராயப்பனும், அருளப்பனும், யாகப்பனும் இருக்கட்டும். நீங்கள் இங்கே இருங்கள். நீங்கள் மேற்கொள்ளப் பட்டால் எங்களைக் கூப்பிடுங்கள். பயப்படாதீர்கள். உங்கள் தலையின் ஒரு உரோமம் கூட சேதமாகாது. எனக்காக மன்றாடுங்கள். பகைமையையும் பயத்தையும் அகற்றுங்கள். அது ஒரு கண நேரம்தான்... அதன்பின் அது மகிழ்ச்சியால் நிரம்பும். புன்னகை காட்டுங்கள். உங்கள் புன்னகையை



நான் என் இருதயத்தில் கொண்டிருக்கும்படியாக. என் நண்பர்களே, அனைத்திற்காகவும் மறுபடியும் உங்களுக்கு நன்றி! விடை பெறுகிறேன். ஆண்டவர் உங்களைக் கைவிடா திருப்பாராக!...''

சேசு அவர்களைப் பிரிந்து முன்னால் நடக்கிறார். சீமோன் ஒரு கைப்பந்தத்தில் சில பிசினுள்ள காய்ந்த குச்சிகளைப் பொருத்துகிறார். அவை வெடிச் சத்தத்துடன் எரிகின்றன. அவை ஒலிவ தோட்டத்தின் ஓரமாக ஜூனிப்பர் செடியின் வாசனையை பரப்புகின்றன. இராயப்பர் சீமோனிடமிருந்து கைப்பந்தத்தை வாங்கிக் கொள்கிறார். யூதா ததேயுஸ் எப்படித் துயரமான பார்வையால் சேசுவைப் பார்க்கிறாரென்றால், சேசு, யார் தம்மைப் பார்ப்பது என்று திரும்புகிறார். ததேயுஸ் அப்படி நோக்குவது எனக்கு வேதனையளிக்கிறது. சேசு திரும்பிப் பார்க்கையில் ததேயுஸ் பர்தலோமேயுவுக்குப் பின்னால் ஒளிந்து கொள்கிறார். அவர் தம்மை அடக்கிக் கொள்வதற்காக தம் உதட்டைக் கடிக்கிறார்.

சேசு தம் கரத்தால் ஆசீர்வதித்து, வழியனுப்பும் சயிக்கினை செய்து, முன்னே போகிறார். நிலவு மிக உயரமாக உள்ளது. சேசுவின் உயர்ந்த தோற்றத்தைச் சுற்றி நிலவொளி படர்கிறது. அவர் உருவத்தை அது மேலும் உயரமாக்கிக் காட்டுகிறது. அதை ஞான உருவமாக்குகிறது. அவருடைய சிவந்த ஆடையை அதிகப் பிரகாசமாக்கி அவருடைய பொன் முடியை வெளிறிக் காட்டுகிறது. அவருக்குப் பின்னால் கைப்பந்தத்தைப் பிடித்துக் கொண்டு, இராயப்பரும் செபதேயுவின் இரு குமாரர்களும் துரிதமாய் நடக்கிறார்கள்.

அவர்கள் ஒலிவத் தோப்பின் மண்மேடு வளையங்களில் முதல் மேட்டின் ஓரத்தை அடைகிறார்கள். வளைந்த மண் மேடுகளுக்குப் போகுமுன் சமதளமான சிறிய ஒழுங்கற்ற நிலப்பகுதி உள்ளது. சேசு அவர்களைப் பார்த்து: ''நில்லுங்கள். இங்கே எனக்காகக் காத்திருங்கள் – நான் ஜெபிக்கும் வேளையில். ஆனால் உறங்கிவிடாதீர்கள். நீங்கள் எனக்குத் தேவைப் படக் கூடும். இதை நான் பிறர் சிநேகத்திற்காகக் கேட்கிறேன். ஜெபியுங்கள். உங்கள் குரு மிகவும் தளர்ந்திருக்கிறார்.''

ஏற்கெனவே சேசு மிக ஆழ்ந்த தளர்வான நிலையில் இருக்கிறார். தாங்குவதற்கு அதிகமான அளவுக்கு பாரம் சுமத்தப்பட்டிருக்கிறார். கூட்டங்களில் பேசிய, முகவடிவான,

வலிமையுள்ள, ஒரு அரசனின் கண்களைக் கொண்ட, அமைதியான புன்னகை பூக்கும், எதிரொலிக்கும் அழகிய குரலைக் கொண்ட வீரமுள்ள சேசு இப்பொழுது எங்கே? அவர் இப்போதே மூச்சற்றவர் போல் காணப்படுகிறார். ஓடி வந்த, அல்லது அழுதுள்ள ஒருவனைப் போலிருக்கிறார். அவர் குரல் களைத்துச் சோர்ந்திருக்கிறது. துயரம், துயரம், துயரம்...

இராயப்பர் எல்லாருக்காகவும் பதிலளிக்கிறார்: "ஆண்டவரே, கவலைப்பட வேண்டாம். நாங்கள் விழித்திருந்து ஜெபம் செய்வோம். நீர் செய்ய வேண்டியது எங்களைக் கூப்பிடுவதே. நாங்கள் வந்து விடுவோம்."

சேசு அவர்களை விட்டுச் செல்கிறார். மூவரும் குனிந்து இலைகளையும் குச்சிகளையும் சேகரித்து, அவர்களை விழிப்பாக வைத்திருக்கவும், ஏராளமாய விழத் தொடங்கியிருக்கிற பனியை மாற்றவும் ஒரு சிறு நெருப்பை மூட்டுகிறார்கள்.

சேசு அவர்களுக்கு எதிர்ப்புறமாய்த் திரும்பி கிழக்கு நோக்கி நடக்கிறார். சந்திர ஒளி அவர் முகத்தில் படுகிறது. ஓர் ஆழமான துயரம் அவருடைய கண்களை அகலச் செய்கிறதைக் காண்கிறேன். ஒரு வேளை களைப்பால் ஏற்படும் கோடுகள் அவர் கண்களைப் பெரிதாக்குகின்றனவோ, அல்லது அவருடைய புருவத்தின் நிழலால் அப்படிக் காணப்படுமோ எதுவென்று தெரியவில்லை. ஆனால் அவருடைய கண்கள் அகலமாய் விரிந்தும் ஆழமாகப் புதைந்தும் எனக்குத் தெரிகின்றன. தலை கவிழ்ந்தபடியே அவர் ஏறிச் செல்கிறார். இடைக்கிடையே மாத்திரம் ஒரு பெருமூச்சுடன் முகத்தை நிமிர்த்துகிறார். அப்படிச் செய்யக் கஷ்டப்படுகிறார் என்று தெரிகிறது. மூச்சு வாங்குகிறார். மிகவும் துயரமான தம் விழிகளால் அமைதியாயிருக்கிற ஒலிவ தோப்பை சுற்றிலும் பார்க்கிறார். சில மீட்டர் தூரம் ஏறியபின் ஒரு மண் மேட்டு வளைவைச் சுற்றி நடக்கிறார். அந்த மேடு அவருக்கும் கீழே விடப்பட்டுள்ள அப்போஸ்தலர்களுக்கும் இடையில் இருக்கிறது.

அந்த மண் வளைவு மேடு ஆரம்பத்தில் சில சென்டிமீட்டர் உயரமே உள்ளது. அது அப்படியே தொடர்ந்து உயர்ந்து விரைவிலேயே இரண்டு மீட்டர் அளவு வந்து விடுகிறது.. அது சேசுவை முழுவதும் மறைத்து விடுகிறது... சேசு ஒரு பெரிய பாறுங்கல் வரையிலும் நடந்து போகிறார். அந்தக் கல் அநேகமாக மண் சரியாமல் தடுப்பதற்காகப் போடப்பட்டிருக்க



வேண்டும். அங்கே ஒரு பக்கமாக மண் தரை அதிக செங்குத்தாக இறங்குகிறது. அந்த இறக்கம் அங்கே பாழ்நிலத்தில் கிடக்கிற இடிபாடுகள் வரை போகிறது. அதற்கப்பால் ஒரு சுவர் இருக்கிறது. சுவருக்கப்பால் ஜெருசலேம். மறுபக்கம் இன்னும் அதிகமான மண்மேடு வளையங்களும் ஒலிவ மரங்களும் உள்ளன. அந்தப் பெரிய பாறுங்கல்லின் நேர் மேலாக கணுக்கள் நிறைந்து திருகிய ஓர் ஒலிவ மரக்கிளைகள் ஆடிக் கொண்டிருக்கின்றன. அந்த மரம் ஒரு ராட்சத கேள்வி அடையாளம் போல் காணப்படுகிறது. சில கேள்விகளைக் கேட்பதற்காக இயற்கையால் அது அங்கே வைக்கப்பட்டது போலிருக்கிறது. அதன் உச்சியில் இலைகளுள்ள கிளைகள் அம்மரத்தின் கேள்விகளுக்குப் பதில் சொல்கின்றன. பூமியை நோக்கி வளைந்து கொடுத்து, "ஆம்" என்கின்றன. சில சமயம் மெல்லிய காற்றில் இடமிருந்து வலமாக அசைந்து இல்லை என்கின்றன. அக்கிளைகளினூடே வீசும் மென்காற்று ஒரு தடவை மண்ணின் வாசனையையும், மறு தடவை சற்றுக் கசப்பான ஒலிவ மணத்தையும், மற்றொரு முறை ரோஜாவும், பள்ளத்தாக்கின் லீலியும் கலந்த வாசனையையும் கொண்டு வருகின்றது. இதெல்லாம் எங்கிருந்து வருகின்றன என்பது ஆச்சரியமாகவே இருக்கிறது. அங்கே ஒரு சிறிய பாதை உள்ளது. அதற்கப்பாலும் அதற்குக் கீழும் அநேக ஒலிவ மரங்கள் நிற்கின்றன. அந்தப் பாறைக் கல்லுக்கு நேர் கீழே ஓர் ஒலிவ மரம் மின்னலால், அல்லது வேறு காரணத்தால் இரண்டாய்ப் பிளக்கப்பட்டாலும் இன்னும் உயிரோடிருக்கிறது. முதலில் ஒரு அடிமரமாயிருந்தது இரண்டாய்ப் பிளந்து இரண்டும் வளர்ந்து ஆங்கில எழுத்து V –யின் வடிவத்தில் காணப்படுகிறது. ஒரு மரத்தின் கிளைகள் பாறையின் ஒரு பக்கத்திலும், மற்ற மரத்தின் கிளைகள் பாறையின் மறுபக்கத்திலும் காணப்படுகின்றன. அந்தக் கிளைகளின் இலைகள் அந்தப் பாறையைப் பார்க்க அல்லது மறைக்க விரும்புவது போலும் அல்லது அந்தப் பாறைக்கு வெள்ளியும் பழுப்புமான அடித்தளமாக அமைந்துள்ளவை போலும் இருக்கின்றன.

சேசு அங்கே நிற்கிறார். கீழே நிலவொளியில் எல்லாம் வெண்மையாகக் காட்சியளிக்கும் பட்டணத்தை அவர் பார்க்கவில்லை. மாறாக, அவர் அதற்குத் தம் முதுகுப்புறம் காட்டும்படி திரும்பி நின்று, தம் கரங்களை சிலுவை வடிவமாய் விரித்து ஆகாயத்தை நோக்கி முகத்தை உயர்த்தி ஜெபிக்கிறார். அவருடைய முகம் நிழலில் இருப்பதாலும் சந்திரன்

அவருடைய தலே நேர்மேலே ஏறக்குறைய செங்குத்தாக இருப்பதாலும் அம்முகத்தை நான் பார்க்கக் கூடவில்லே. மேலும் நிலவொளிக்கும் அவருடைய முகத்துக்குமிடையே ஒலிவ இலேகள் அடர்த்தியாக உள்ளதால் வெளிச்சம் வளேவாகவும் ஊசிக் கோடு போலும் அசைந்தபடியே கஷ்டத்துடன்தான் ஊடுருவி வர முடிகிறது. சேசு ஒரு நீண்ட உருக்கமான ஜெபம் ஜெபிக்கிருர். இடையிடையே ஒரு நெடுமூச்சு – ஒரு தெளிவான வார்த்தை. அவர் சொல்வது ஒரு சங்கீதமல்ல, பரலோக மந்திரமல்ல. அவருடைய அன்பிலிருந்தும், அவருடைய தேவையிலிருந்தும் எழுகிற ஜெபம் அது. தம் பிதாவுடன் அவருடைய உண்மையான உரையாடலாக அது உள்ளது. எனக்குப் புரிகிற சில வார்த்தைகளிலிருந்து இதை நான் கண்டுபிடிக்கிறேன்: "நீர் அறிவீர்... உமது குமாரன் நான்... எல்லாம். ஆனுல் எனக்கு உதவி புரியும்... நேரம் வந்து விட்டது... நான் இனி உலகிற்குச் சொந்தமல்ல. உம்முடைய வார்த்தையானவருக்கு உதவிக்கு ஏற்படும் தேவைகளே யெல்லாம் நிறுத்தி விடும்... மீட்பராக இருந்து, மனிதன் உம்மை திருப்தி செய்யச் செய்தருளும். வார்த்தையானவர் உமக்குக் கீழ்ப்படிதலுள்ளவரானுர்... உம்முடைய விருப்பப்படி... அவர்கள் மேல் நீர் இரக்கமாயிருக்கும்படி கேட்கிறேன்... அவர்களே நான் இரட்சிப்பேனு? அதையே உம்மிடம் கேட்கிறேன். இதை நான் விரும்புகிறேன்: அவர்கள் உலகத்திடமிருந்தும் , சரீரத்திடமிருந்தும், பசாசிடமிருந்தும் காப்பாற்றப்பட வேண்டும்... மேலும் சில விண்ணப்பங்களே நான் செய்யட்டுமா? பிதாவே! இது ஒரு நியாயமான கேள்வி. எனக்காக அல்ல. உம்மால் சிருஷ்டிக்கப்பட்ட மனிதனுக்காக. அவன் தன் ஆத்துமத்தையும், அசுத்தப்படுத்த விரும்பினுன். அந்த அசுத்தத்தை என் துயரத்திற்குள்ளும், என் இரத்தத்திற்குள்ளும் போட்டு விடுகிறேன். அதனுல் உமக்குப் பிரியமாயிருக்கிற அழிவுற முடியாத ஆவியின் கருப்பொருள் மீண்டும் முந்திய நிலேக்குக் கொண்டுவரப்படும்படியாக... அது எங்கும் இருக்கிறது. அவனே இன்று மாலேயில் அரசனுயிருக்கிருன்... அரச மாளிகையிலும், வீடுகளிலும், போர்ச் சேவகர் நடுவிலும் தேவாலயத்திலும்... பட்டணம் அதனுல் நிரம்பியிருக்கிறது. அது நாளே நரகமாயிருக்கும்..."

சேசு திரும்பி, பாறையில் முதுகைச் சார்த்தி, சாய்ந்தபடி கைகளேக் கட்டிக் கொள்கிருர். ஜெருசலேமைப் பார்க்கிருர்.



அவருடைய முகத்தில் மேலும் மேலும் துயரம் அதிகரிக்கிறது. அவர் மெல்லக் கூறுகிருர்: "பட்டணம் பனிபோல் காணப்படுகிறது... முழுவதும் பாவத்தால் நிரம்பியிருக்கிறது. அங்கே நான் எத்தனே பேரைக் குணப்படுத்தினேன்! எவ்வளவு பேசியிருக்கிறேன்!... எனக்குப் பிரமாணிக்கமாயிருப்பதாகக் காணப்பட்டவர்களே எங்கே?"

சேசு தலேயைத் தாழ்த்தி நிலத்தைப் பார்க்கிருர்: தரையை மூடியிருக்கிற குட்டைப் புல் பனியால் பிரகாசிக்கிறது. அவர் தலே கவிழ்ந்திருந்தாலும், அவர் அழுகிருர் எனக் கண்டுபிடிக்கிறேன். ஏனென்றுல் சில கண்ணீர்த் துளிகள் அவர் முகத்திலிருந்து தரையில் விழும்போது பிரகாசிக்கின்றன. பின் அவர் நிமிர்ந்து கைகளே விடுவித்துக் கொண்டு தம் தலேக்கு மேலாக கரங்களேக் குவித்து, அவை சேர்ந்திருக்கிறபடியே அசைக்கிருர்.

சேசு இப்பொழுது புறப்பட்டு மூன்று அப்போஸ்தலர்களிடமும் வருகிருர். அவர்கள் மூவரும் குச்சிகளால் எரியும் நெருப்பைச் சுற்றி அமர்ந்திருக்கிருர்கள். அவர்கள் அரை உறக்கமாயிருக்கிறதை அவர் காண்கிருர். இராயப்பர் ஒரு மரத்தின் அடியில் சாய்ந்து, கரங்களே குறுக்குவசமாக மார்பில் சார்த்தியபடி, ஆழ்ந்த உறக்கத்தின் முதல் மயக்கத்தில் தலேயை ஆட்டுகிருர். யாகப்பர் தன் சகோதரனுடன் நிலத்திலிருந்து வெளியே நீட்டிக் கொண்டிருக்கும் மர வேரில் அதன் கரடுமுரடு அதிகம் தாக்காதபடி மேல் வஸ்திரத்தை விரித்து உட்கார்ந்திருக்கிருர். அவர்கள் இராயப்பரைப் போல் சௌகரியமாயில்லாவிட்டாலும், அவர்களும் தூங்கி வழிகிருர்கள். யாகப்பர் தம் தலேயை அருளப்பரின் தோளில் சார்த்தியிருக்கிருர். அருளப்பர் தன் தலேயை யாகப்பரின் தலேயை நோக்கிச் சாய்த்திருக்கிருர். உறக்க மயக்கம் அந்நிலேயில் அவர்களே அசைவறச் செய்துள்ளது.

"நீங்கள் உறங்குகிறீர்களா? ஒரு மணி நேரம் மட்டும் உங்களால் விழித்திருக்கக் கூடாமல் போயிற்று? எனக்கு உங்கள் ஆறுதலும், ஜெபமும் எவ்வளவு தேவையாயிருக்கின்றன!"

மூவரும் திடுக்கிட்டபடி விழித்துக் கொள்கிருர்கள். அவர்கள் முற்றிலும் குழம்பிப் போயிருக்கிருர்கள். கண்களேக் கசக்குகிருர்கள். தங்களுடைய அஜீரணத்தைக் குறைசொல்லி சாக்குப் போக்கை முணுமுணுக்கிருர்கள். "அந்த இரசம் செய்த வேலே... அந்த உணவு... ஆனுல் இது சீக்கிரம் நின்று விடும். சற்று

நேரம்தான். எங்களுக்குப் பேசத் தோன்றவில்லை. அதனுல் உறங்கிவிட்டோம். ஆனுல் இனி நாங்கள் சத்தமாக ஜெபிப்போம். இனி உறங்க மாட்டோம்.''

''சரி, ஜெபியுங்கள். விழித்து தயார் நிலையில் இருங்கள். உங்கள் நலனுக்காகவும்தான்.''

''ஆகட்டும் ஆண்டவரே, உமக்குக் கீழ்ப்படிவோம்.''

சேசு மறுபடியும் போகிருர்.

நிலவின் வெள்ளிக் கதிர்கள் சேசுவின் முகத்தில் தெளிவாகப் பிரகாசிக்கின்றன. அவருடைய சிவப்பு ஆடை வர வர வெளிறித் தோன்றுகிறது. ஒளிரும் வெள்ளைப் பொடியால் அது தூவப்படுவது போலிருக்கிறது. சேசுவின் தளர்வுற்ற, துயரமான, முதுமை எய்திய முகம் எனக்குக் காணப்படுகிறது. அவருடைய கண்கள் இன்னும் அகன்றே உள்ளன. ஆனுல் மங்கியவை போலிருக்கின்றன. அவருடைய வாய் களைப்பினுல் சரிந்து காணப்படுகிறது.

அவர் அதிக மெதுவாகவும், கூனியபடியும் தம் பாறைக்குப் போகிருர். தம் கரங்களைப் பாறையில் ஊன்றியபடி முழங்காலிடுகிருர். பாறை கரடுமுரடாயிருக்கிறது. பாறையின் பாதி உயரத்தில் அது வெளிப்புறமாக நீட்டி நிற்கிறது. அது வேணுமென்று அப்படி வைக்கப்பட்டது போலிருக்கிறது. அப்படி நீண்டு நிற்கிற பகுதியில் ஒரு செடி முளைத்துள்ளது. லீலிகளைப் போன்ற சிறிய பூக்களுடைய செடிவகையைச் சேர்ந்தது அது என நினைக்கிறேன். இத்தாலியில் அவ்வகையை நான் பார்த்திருக்கிறேன். சிறிய சதையுள்ள வட்டமான, ஆனுல் அரும்புள்ள இலைகள். மிக மெல்லிய காம்புகளில் சின்னப் பூக்கள். பழுப்பு நிறப் பாறையிலும், செடியின் கரும்பச்சையான இலைகளின் மேலும் சிறிய பனிப்பொட்டுகள் போல் அப்பூக்கள் உள்ளன. சேசு அவற்றின் பக்கத்தில் சேர்ந்து ஊன்றியுள்ள தம் கரங்களில் தலையைச் சாய்த்து ஜெபிக்கிருர். அந்தப் பூக்கள் அவர் முகத்தைத் தொடுகின்றன. சீக்கிரமே அப்பூவிதழ்களின் குளிர்ச்சியை உணரும் சேசு தலையை நிமிர்த்துகிருர். அவற்றை நோக்குகிருர். அன்புடன் அவற்றைத் தொட்டுப் பேசுகிருர்: ''நீங்களும் இங்கு இருக்கிறீர்களா!... நீங்கள் எனக்கு ஆறுதலளிக்கிறீர்கள். என் தாயின் கெபியிலும் இந்தச் சிறு பூக்கள் இருந்தன... அவற்றை அவர்கள் விரும்பினுர்கள். அவர்கள்: ''நான் சிறுமியாயிருந்த போது என் தந்தை என்னைப் பார்த்து, 'இந்தப் பூக்களைப் போல நீயும் ஒரு லீலிப் பூ. நீ மோட்ச



பனியால் முழுவதும் நிறைந்திருக்கிருய்' என்று சொல்லுவார்'' என்று கூறுவார்கள்... என் தாயே! ஓ என் அம்மா!'' என்று கூறிய சேசு கண்ணீர் விட்டு அழுது விடுகிருர். கைகளில் முகத்தை வைத்து, குதிங்கால்களில் பின்னுல் சாய்ந்து அமர்ந்து அவர் அழுவதை நான் பார்க்கிறேன். கேட்கிறேன். அவர் தம் சிறு விரல்களைப் பிசைந்து கசக்குகிருர். மேலும் அவர் சொல்வது கேட்கிறது: 'பெத்லகேமிலும்... அவற்றை நான் உங்களுக்குக் கொண்டு வந்து கொடுத்தேன். இவற்றை உங்களுக்கு இப்போது யார் கொண்டு வருவார்கள்?...'

அதன் பின் சேசு ஜெபிக்கவும் தியானிக்கவும் மீண்டும் தொடங்குகிருர். அவருடைய தியானம் உண்மையிலே துயரமாயும், துயரத்தை விட அவஸ்தை நிறைந்ததாயும் இருக்க வேண்டும். ஏனென்ருல் தம் கவனத்தை வேறிடம் திருப்பும்படி அவர் எழுகிருர். அங்குமிங்கும் நடக்கிருர். நான் கண்டுபிடிக்காத வார்த்தைகளைச் சொல்கிருர். முகத்தை மேல் நோக்கி உயர்த்தி பின் தாழ்த்துகிருர். கை சைக்கினை செய்கிருர். பெரிய சங்கடத்தில் ஆழ்ந்திருப்பவர்கள் செய்வது போல் முடிகளுக்கிடையில் விரல்களைச் செலுத்துகிருர். அதை என்ன என்று சொல்வது கூடாது. அதை விவரிக்க முடியாது. அதைக் காண்பது அவருடைய அவஸ்தையில் பங்கெடுப்பதாகிறது. அவர் ஜெருசலேமைக் காட்டி சயிக்கினை செய்கிருர். பின் மறுபடியும் கரங்களை வானத்தை நோக்கி தமக்கு உதவி கேட்பது போல் எழுப்புகிருர்.

தமக்கு வெப்பமாயிருப்பது போல் தம் மேல் வஸ்திரத்தை அகற்றுகிருர். அதைப் பார்க்கிருர்... ஆனுல் அதிலே என்ன காண்கிருர்? அவருடைய கண்கள் தம் வாதையைத் தவிர வேறெதையும் காணவில்லை. எல்லாமே அந்த வேதனையை அதிகரிப்பதாகவே உள்ளன... அவருடைய தாயால் நெய்யப்பட்ட அந்த மேல் வஸ்திரம் கூட. அதை அவர் முத்தமிட்டுச் சொல்கிருர்: 'மன்னியுங்கள் அம்மா, என்னை மன்னியுங்கள்' என்று தாயின் அன்பால் நெய்யப்பட்ட அந்தத் துகிலிடம் மன்னிப்புக் கேட்பது போலிருக்கிறது... அந்த மேல் வஸ்திரத்தை மீண்டும் அணிகிருர். கொடிய வேதனைக்கு உள்ளாகிருர். தாம் இருக்கிற நிலையை விட்டு வெளியேறும்படி ஜெபிக்க விரும்புகிருர். ஆனுல் ஞாபகங்களும் கவலையும், சந்தேகங்களும், துயரங்களும் அவர் ஜெபத்துடனேயே அவரிடம் திரும்பி வருகின்றன... அது

ஒரு நிலச் சரிவு போல்... பெயர்கள்...பட்டணங்கள்... மக்கள்... நிகழ்ச்சிகள். அவர் சொல்வதை என்னால் கவனித்து புரியக் கூடவில்லை. காரணம் அவர் வேகமாயும் தொடர்பற்றும் பேசுகிறார். அவருடைய சுவிசே போதனை வாழ்வு அவர் முன்பாக தோன்றிக் கடந்து செல்கிறது... துரோகியான யூதாஸைத் திரும்பவும் அவர் கண்முன் கொண்டு வருகிறது.

அவருடைய அவஸ்தை எவ்வளவென்றால், அதை மேற்கொள்வதற்காக இராயப்பருடையவும், அருளப்பருடையவும் பெயர்களை உரக்கச் சொல்கிறார். ‘அவர்கள் இப்போது வந்து விடுவார்கள். அவர்கள் உண்மையிலே பிரமாணிக்க முடையவர்கள்’ என்கிறார். ஆனால் அவர்கள் வரவில்லை. அவர் மறுபடி அவர்களைக் கூப்பிடுகிறார். அவர் எதையோ கண்டு பயங்கரப்படுவது போலிருக்கிறார். எதையென்று தெரியவில்லை.

பின் அவர் எழுந்து ஓடி வருகிறார், இராயப்பரும் இரு சகோதரர்களும் இருக்கிற இடத்திற்கு. அவர்கள் நிம்மதியாய் நீறு பூத்து விட்ட நெருப்பைச் சுற்றி உறங்குவதைக் காண்கிறார். “இராயப்பா, உன்னை நான் மூன்று தடவை கூப்பிட்டு விட்டேன். என்ன செய்கிறாய்? இன்னுமா உறங்குகிறாய்? நான் எவ்வளவு வேதனைப்படுகிறேன் என்று உனக்குத் தெரியவில்லையா? ஜெபி. சரீரம் வென்று விடாதிருக்க – சரீரம் உன்னை மேற்கொண்டு விடாதிருக்கும்படி – உங்களில் யாரையும் அது மேற்கொள்ளாதபடி ஜெபியுங்கள். உள்ளம் விரும்புகிறதுதான். மாம்சம் பலவீனமாயிருக்கிறது. எனக்கு உதவுங்கள்...”

மூவரும் மெதுவாகவே விழித்துக் கொள்கிறார்கள்... மங்கிய கண்களுடன் மன்னிப்புக் கேட்கிறார்கள். முதலில் உட்கார்ந்து பின் எழுந்து நிற்கிறார்கள்.

இராயப்பர் முனகுகிறார்: “பாருங்கள்! இப்படி ஒருபோதும் நமக்கு நடந்ததில்லை. அந்த திராட்சை ரசம் செய்த வேலைதான். அது காட்டமாயிருந்தது. இந்தக் காற்றும் குளிராயிருக்கிறது. அதற்காக நாங்கள் மூடிக் கொண்டோம். (அவர்கள் தலையையும் மேல் வஸ்திரத்தால் மூடியிருந்தார்கள்.) நெருப்பை நாங்கள் காணவில்லை. குளிர் படாதபடியால் உறங்கி விட்டோம். எங்களைக் கூப்பிட்டீரா? அப்படியும் நான் முழு உறக்கமாயிருந்தது போலில்லை... அருளப்பரே, வாரும், கொஞ்சம் குச்சிகள் கொண்டுவரலாம். நாம் சற்று அசைந்தால் நன்றாக விழித்து விடலாம். ஆண்டவரே, இனி கவலை வேண்டாம்... நாங்கள்



எழுந்து விடுவோம்...” இராயப்பர் ஒரு கை சருகுகளை நெருப்பில் போட்டு ஊதுகிறார். நெருப்பு பற்றிக் கொள்கிறது: அருளப்பர் கொண்டு வந்த புதர்ச் செடிகளால் நெருப்பை மூட்டுகிறார். யாகப்பர் கிட்டத்திலிருந்த ஒரு செடியின் பெரிய கிளையைக் கொண்டு வந்து நெருப்பில் போடுகிறார்.

நெருப்பு சுவாலை விட்டெரிகிறது. சேசுவின் பரிதாபத்திற்குரிய முகத்தில் அதன் வெளிச்சம் படுகிறது. அவர் முகம் எவ்வளவு துயரமுடையதாயிருக்கிறதென்றால், அதைப் பார்க்கிறவர்கள் அழாமலிருக்க முடியாது. அத்திரு முகத்தின் எல்லா ஒளியும் சாவுக்குரிய சோர்வினால் அழிக்கப்பட்டு விட்டது. அவர் சொல்கிறார்: “நான் உணருகிற அவஸ்தை என்னைக் கொல்கிறது. ஆம். உண்மையாகவே என் ஆத்துமம் மரணமட்டும் துயரமாயிருக்கிறது. என் சிநேகிதர்களே!... என் சிநேகிதர்களே...” அவர் அப்படிக் கூறிவிட்டாலும் அவருடைய தோற்றமே அவர் உண்மையிலே சாகப் போகிற மனிதனைப் போலிருக்கிறார். மிகச் சஞ்சலமாக மிகுதியான தனிமையிலே கைவிடப்பட்ட நிலையில் இருக்கிறார் என்பதை எடுத்துக் காட்டி விடும். அவருடைய ஒவ்வொரு வார்த்தையும் ஒரு தேம்பியழுகை போலிருக்கிறது...

ஆனால் மூன்று சீடர்களும் தூக்க மயக்கமாயிருக்கிறார்கள். அவர்கள் கிட்டத்தட்ட குடித்தவர்களைப் போல அந்த அளவுக்கு அரைக் கண் மூடிய நிலையில் தள்ளாடுகிறார்கள்... சேசு அவர்களை உற்றுப் பார்க்கிறார்... அவர்களைக் குறை சொல்லி சிறுமைப்படுத்தவில்லை. அவர் தம் தலையை அசைத்து விட்டு பெருமூச்செறிந்து தாம் முன்பு இருந்த இடத்திற்கே திரும்பிப் போகிறார்.

மறுபடியும் அவர் தம் கரங்களை சிலுவை வடிவமாய் விரித்து நின்றபடி ஜெபிக்கிறார். அதன்பின் முன்போல் முழங்காலிட்டு அவர் முகம் அந்தப் பூக்கள் மேல் கவிழ ஜெபிக்கிறார். அவர் சிந்தனை வசப்பட்டு மவுனமாகிறார்... பின் சத்தமாய் முனகவும் அழவும் தொடங்குகிறார். தம் குதிங்கால்களில் அமர்ந்து சாஷ்டாங்கமாக விழுந்து கிடக்கிறார். வர வர கூடுதல் வேகமுள்ள கவலையுடன் தம் பிதாவைக் கூப்பிடுகிறார்...

அவர் சொல்கிறார்: “ஓ! இந்தப் பாத்திரம் மிகக் கூடுதலான கசப்பாயிருக்கிறது. என்னால் கூடாது! என்னால் கூடாது! அது

என் சக்திக்கு மேற்பட்டது. நான் எல்லாவற்றையும் தாங்கிக் கொள்ள முடிந்தது. ஆனால் இதைத் தாங்க இயலாது... பிதாவே! உம் குமாரனிடமிருந்து அதை அகற்றும்! என் மேல் இரங்கும்!... இதற்கு நான் தகுதியாவதற்கு நான் செய்ததென்ன?" இதன்பின் அவர் தம்மையே சுதாரித்துக் கொண்டு சொல்கிறார்: "பிதாவே நான் கேட்பது உம் சித்தத்திற்கு எதிராயிருந்தால் என் குரலைக் கேட்க வேண்டாம். நான் உம்முடைய குமாரன் என்பதை நினைக்க வேண்டாம். உம் ஊழியன் என்று நினையும். என் மனதின்படியல்ல, உம் சித்தப்படியே ஆகட்டும்."

அப்படியே சற்று நேரம் இருக்கிறார். பின் அவரிடமிருந்து அமுக்கப்பட்ட ஒரு அழுகுரல் எழுகிறது. அவர் தலையை நிமிர்த்துகிறார். மிகவும் கலவரமடைந்து காணப்படுகிறார். ஒரு கணம்தான். அதற்குள் தடாரென்று தரையில் விழுகிறார். அவர் முகம் மண்ணில் கிடக்கிறது. அந்நிலையிலே இருக்கிறார். உடைந்து சிதறிப் போன மனிதன் – உலகின் எல்லாப் பாவங்களாலும் மிகையான பாரஞ் சுமக்கிறவர் – பிதாவின் முழு நீதியாலும் தாக்கப்பட்டுக் கிடக்கிறார். இருளால் நசுக்கப்பட்டிருக்கிறார். சாம்பலால், கொடும் கசப்பால் அமுக்கப்பட்டிருக்கிறார். சாத்தான் நம்மை வாதிக்கும் போது, கொடிய, மிகவும் அஞ்சத்தக்கதான, கடவுளால் கைவிடப்படுதல் எனும் பயங்கரத்தால் நசுங்கிப் போயிருக்கிறார்... அதுதான் ஆன்மாவின் மூச்சு தடைப்பட்டுத் திணறுதல். சிறைச்சாலையாகிய இந்த உலகத்தில் உயிரோடு புதைக்கப்படுதல். நமக்கும் கடவுளுக்கும் எந்தத் தொடர்பும் இருப்பதாக உணர முடியாத நேரம் அது. அது சங்கிலியால் கட்டப்படுவது. வாயடைத்து இறுக்கப்படுவது, நம்முடைய ஜெபங்களாலேயே திருப்பி எறியப்படுவது, அவை கூரிய முனைகளோடும், நெருப்புடனும் நம் மேலேயே வந்து விழுகின்றன. அது மூடப்பட்டுள்ள மோட்சத்தை முட்டுவதாகும். அதை நம் குரலோ அல்லது நம்முடைய அவஸ்தையின் உருவமோ ஊடுருவித் திறப்பதில்லை. அது "கடவுளின் அனுதையாக" இருப்பது. அது பைத்தியமாதல், அவஸ்தைப்படுதல், இத்தனை காலமும் ஏமாற்றப்பட்டு விட்டோம் என்ற சந்தேகம், கடவுளால் வெறுத்து ஒதுக்கப்பட்டோம் என்ற பலமான எண்ணம். தீர்ப்படைந்து விட்டோம் என்ற நினைவு. அது நரகம்!...

ஓ! எனக்குத் தெரிகிறது! என் கிறீஸ்துவின் குரூர வேதனைகளின் காட்சியை என்னால் தாங்க முடியவில்லை.



உண்மையாகவே தாங்கிக் கொள்ள இயலவில்லை. கடந்த ஆண்டில் என்னைப் பட்சித்த வேதனை – இப்பொழுதும் அதன் நினைவு என்னை நிலைகலங்க வைக்கிற அவவேதனையைக் காட்டிலும் அவருடைய வேதனை கோடி மடங்கு கொடியது...

சேசு முனகுகிறார். அவருடைய தொண்டையில் மரண கரகரப்புக் கேட்கிறது. மரண அவஸ்தையிலிருப்பவரின் அழுகுரலில்: "இல்லை!... இல்லை!...தூரப் போ... என் பிதாவின் சித்தம்! அவர் சித்தமே! அவருடைய சித்தமே வேண்டும்... பிதாவே உமது சித்தம். உம் சித்தமே, என் சித்தமல்ல... வீண்... என் ஆண்டவர் ஒருவரே. மகா பரிசுத்த சர்வேசுரன். ஒரே சட்டம்: கீழ்ப்படிதல். ஒரே அன்பு: இரட்சணியம்... இல்லை. எனக்கு இப்போது தாய் இல்லை. என்னிடம் இனி உயிர் இல்லை. எனக்கு எந்த அலுவலும் கிடையாது..."

பசாசே! நீ என் தாய் மூலமாகவும், என் உயிர் மூலமாகவும் என் தெய்வீகம் மூலமாகவும் என் அலுவலின் மூலமாகவும் என்னை வீணாக சோதிக்கிறாய். மனுக்குலமே என் தாய். அதற்காக நான் சாகும் அளவிற்கு அதை நான் நேசிக்கிறேன். என் உயிரை எனக்குக் கொடுத்தவர் அதைத் திருப்பிக் கேட்கிறார். எல்லா உயிரினங்களுக்கும் அவரே உந்நத எஜமான். அவரிடமே என் உயிரைத் திரும்பக் கொடுக்கிறேன். இந்தப் பரிகாரத்தை என் தெய்வீகம் செய்யக் கூடுமாதலால் என் தெய்வீகத்தை நான் வலியுறுத்துகிறேன். என் அலுவலை என் மரணத்தினால் நான் நிறைவேற்றுகிறேன். என் கடவுளாகிய ஆண்டவரின் சித்தத்தைச் செய்ய வேண்டுமென்பதைத் தவிர எனக்கு வேறெதுவும் இல்லை. சாத்தானே, ஓடிப்போ! முதல் இரு தடவைகள் இப்படிச் சொன்னேன். அதை மூன்றும் முறை திருப்பிச் சொல்கிறேன்: "பிதாவே, கூடுமானால் இப்பாத்திரம் என்னை விட்டு நீங்கட்டும். ஆனால் உம்முடைய சித்தப்படியே ஆகட்டும். என் சித்தப்படியல்ல." சாத்தானே ஓடிப் போ. நான் சர்வேசுரனுக்குச் சொந்தமானவன்."

இதற்குப் பின்: "தேவனே! தேவனே! தேவனே!" என்று மூச்சு வாங்கியபடி சொல்வதைத் தவிர வேறொன்றும் பேசவில்லை. ஒவ்வொரு தடவை அவருடைய இருதயம் துடிக்கும்போதும் அப்படிக் கூப்பிடுகிறார். ஒவ்வொரு இருதயத் துடிப்பிலும் இரத்தம் வெளியே கொட்டுகிறது. அவர் தோள் மீதிருக்கிற துணி இரத்தத்தால் நனைகிறது. அந்த இடம் நிறம் கருமையாகிறது.

தெளிவான நிலா வெளிச்சம் அந்த இடத்தில் பட்டாலும், அது அப்படித் தெரிகிறது.

அப்போது அவருடைய சிரசுக்கு மேலாக ஒரு மீட்டர் உயரத்தில் ஓர் அதிக ஒளியுள்ள வெளிச்சம் காணப்படுகிறது. அது எவ்வளவு ஒளியாக உள்ளதென்றால் இரத்தத்தினால் பாரமாகியுள்ள அவருடைய அலை போன்ற தலைமுடியின் ஊடாகவும் அவருடைய கண்களில் படரும் இரத்தத் திரையினூடாகவும் அவ்வொளியை சாஷ்டாங்கமாகக் கிடக்கும் சேசு பார்க்க முடிகிறது. அவர் தலையை உயர்த்துகிறார்... சந்திரன் அவருடைய பரிதாபமான முகத்தில் பிரகாசிக்கிறது. சம்மனசின் ஒளி அதிகம் பிரகாசமாக அதில் படுகிறது. அவ்வொளி வெள்ளிக் கோளின் வெண்–நீல வைர வெளிச்சம்போலிருக்கிறது. சேசுவின் மயிர்க் கால்களிலிருந்து கசியும் இரத்தத்தில் அவருடைய பயங்கர அவஸ்தை புலப்படுகிறது. அவருடைய கண்புருவம், முடி, மீசை, தாடி எல்லாம் இரத்தம் தெளிக்கப்பட்டு இரத்தம் மூடியிருக்கிறது. அவருடைய சென்னியிலிருந்து இரத்தம் துளிர்க்கிறது. கழுத்தின் நரம்புகளிலிருந்து ஒழுகுகின்றது. கரங்கள் இரத்தம் வியர்க்கின்றன. அந்த சம்மனசின் வெளிச்சத்தை நோக்கி அவர் கைகளை நீட்டும்போது, அவருடைய அகன்ற சட்டைக் கைகள் முழங்கை நோக்கி பின்னுக்கு இழுக்கப்பட்டு அவருடைய முன்னங்கைகளில் இரத்தம் வியர்த்திருப்பதைக் காண முடிகிறது. இரத்தத்தால் சிவந்திருக்கிற அவர் முகத்தில் வடிகிற கண்ணீர் இரண்டு கோடுகளாகத் தெரிகின்றது.

சேசு தம் மேல் வஸ்திரத்தை எடுத்து தம் கரங்களையும் முகம், கழுத்து, முன்னங்கைகளையும் துடைக்கிறார். ஆனால் இரத்த வியர்வை தொடருகிறது. அந்தத் துணியால் பல தடவை அவர் தம் முகத்தில் அழுத்தி ஒற்றுகிறார். ஒவ்வொரு தடவை அவர் இடம் மாற்றி ஒற்றும்போது, இரத்த அடையாளம் அந்த இருண்ட சிவப்புத் துணியில் தெளிவாகத் தெரிகிறது. துணி ஈரமாயிருப்பதால் கறுப்பு போல் காணப்படுகிறது. தரையிலுள்ள புல் இரத்தத்தால் சிவந்திருக்கிறது.

சேசு மயக்கமுறும் தருணத்தில் இருப்பதாகக் காணப்படுகிறார். மூச்சு முட்டுவது போல் அவர் தம் அங்கியை கழுத்துப் பக்கத்தில் அவிழ்த்து விடுகிறார். தம் கரத்தை இருதயத்திலும் பின் சிரசிலும் வைத்து, காற்று வீசுவது போல் அதை முகத்துக்கு முன்பாக அசைக்கிறார். அவருடைய வாய் பாதி



திறந்திருக்கிறது. மண்மேட்டு வளையத்தின் ஓரமாக பாறையின் பக்கம் தம்மையே இழுத்துக் கொண்டு போய், முதுகை பாறையில் சாய்க்கிறார். கைகள் உடல் வாக்கில் தொங்குகின்றன. தலை மார்பில் சாய்ந்திருக்க, அவர் செத்தவர் போலாகிறார். எந்த அசைவும் இல்லை.

சம்மனசின் ஒளி மெல்லக் குறைந்து, பின் தெளிந்த நிலா வெளிச்சத்தில் கரைந்து மறைகிறது. சேசு தம் கண்களைத் திறக்கிறார். தம் சிரசை சிரமத்துடன் தூக்கி சுற்றிலும் பார்க்கிறார். அவர் தனியே இருக்கிறார். அவருடைய அவஸ்தை குறைந்துள்ளது. ஒரு கையை நீட்டி தரையில் புல்லில் போட்ட மேல் வஸ்திரத்தை இழுத்தெடுத்து, முகத்தையும், கரங்களையும், தாடி தலை முடியையும் துடைக்கிறார். மண் மேட்டு வளைவின் ஓரத்தில் வளர்ந்து பனி நீரால் நனைந்திருந்த பெரிய இலை ஒன்றை எடுத்து தம்மைச் சுத்தம் செய்கிறார். முகத்தையும் கரங்களையும் அதைக் கொண்டு ஈரப்படுத்தி, மீண்டும் தம்மைத் துடைக்கிறார். இப்படியே வேறு இலைகளையும் பறித்து பல தடவைகள் துடைத்து, அந்த பயங்கர இரத்த வியர்வையின் அடையாளங்கள் இல்லாதபடி செய்கிறார். அவருடைய அங்கியின் தோள்பாகம், முழங்கை மடிப்புகள், கழுத்து, இடுப்பு, முழங்கால்கள் ஆகிய இடங்களில் இரத்தக் கறை உள்ளது. அதை அவர் பார்த்து தலையை அசைக்கிறார். தம் மேல் வஸ்திரத்தையும் பார்க்கிறார். அது மிக அதிகமாய் நனைந்துள்ளது. அவர் அதை மடித்து, அந்தச் சிறு பூக்களின் அருகில், ஒரு தொட்டில் போல் பாறை குழிந்துள்ள இடத்தில் வைக்கிறார்.

பலவீனத்தினால் மிக கஷ்டத்துடனே சுற்றித் திரும்பி முழங்காலிடுகிறார். கைகளையும், தலையையும் அந்த மேல் வஸ்திரத்தின்மேல் வைத்தபடி ஜெபிக்கிறார். பின் பாறையில் ஊன்றிக் கொண்டு எழுந்து நிற்கிறார். இன்னும் சற்றுத் தள்ளாடிக் கொண்டே சீடர்களிடம் போகிறார். அவர் முகம் மிகவும் வெளிறியிருக்கிறது. ஆனால் அதில் கலக்கமில்லை. அது மரண வெளிறுதலுடனும், வழக்கத்திற்கு அதிகமான துயரத்துடன் இருந்தாலும், தெய்வீக அழகு நிரம்பியிருக்கிறது.

மூன்று சீடர்களும் தங்கள் மேல் வஸ்திரத்தால் நன்றாக மூடிக் கொண்டு அணைந்து கிடக்கிற நெருப்பின் பக்கத்தில் நன்றாக உறங்குகிறார்கள். அவர்களின் ஆழ்ந்த மூச்சு கேட்கிறது. அது பலத்த குறட்டையாக ஆகிக் கொண்டிருக்கிறது.

சேசு அவர்களைக் கூப்பிடுகிறார். பயனில்லை. அவர் குனிந்து இராயப்பரைப் பலமாக அசைக்க வேண்டியிருக்கிறது.

“என்ன இது? யார் என்னைப் பிடிக்கிறார்கள்?” என்று கேட்கிற இராயப்பர் அவருடைய கட்டிப் பச்சையான மேல் வஸ்திரத்திற்குள்ளிருந்து திகைத்து பயந்தபடி வெளியே வருகிறார்.

“யாருமில்லை. நான்தான் உன்னைக் கூப்பிட்டேன்.”

“விடிந்து விட்டதா?”

“இல்லை. சுமார் இரண்டாம் சாமம் முடியும் வேளை.”

இராயப்பர் முழுவதும் ஸ்தம்பித்து நிற்கிறார்.

சேசு அருளப்பரை அசைக்கிறார். சலவைக்கல் போல் வெளிறிப் போயிருக்கிற சேசுவின் முகம் தம்மேல் கவிழ்ந்து நிற்பதைக் கண்டு, ஒரு பூதத்தைக் காண்பது போல் அருளப்பர் அலறி: “ஓ!... இறந்து விட்டவர் போல் காணப்படுகிறீரே!” என்கிறார். சேசு யாகப்பரை அசைத்து எழுப்புகிறார். அவர் தம் சகோதரன் தம்மை அழைப்பதாக எண்ணிக் கொண்டு: “ஆண்டவரைப் பிடித்து விட்டார்களோ?” என்கிறார்.

சேசு அவருக்குப் பதில் மொழியாக: “யாகப்பா, இன்னும் இல்லை. இப்போது எழுந்திரு. நாம் போவோம். என்னைக் காட்டிக் கொடுக்கிறவன் சமீபத்திலிருக்கிறான்” என்கிறார்.

இன்னும் தூக்க மயக்கத்திலிருக்கிற மூவரும் எழுகின்றனர். சுற்றிலும் பார்க்கின்றனர்... ஒலிவ மரங்கள், நிலா, இராப்பாடிகள், மெல்லிய காற்று, அமைதி... வேறு எதுவும் இல்லை. அவர்கள் மவுனமாக சேசுவைப் பின்தொடர்ந்து போகிறார்கள்.

மற்ற எட்டுப்பேரும் அங்கே அணைந்து போன நெருப்பைச் சுற்றி உறங்கியும் உறங்காமலும் படுத்திருக்கிறார்கள். சேசு சத்தமாக: “எழுந்திருங்கள்!” என்கிறார். பின்னும்: “தானும் தன் பிள்ளைகளும் உறங்காத சாத்தான் இதோ வருகிறான். கடவுளின் பிள்ளைகள் உறங்கவில்லை என்று அவனுக்குக் காட்டுங்கள்” என்று சொல்கிறார்.

“ஆகட்டும் ஆண்டவரே!”

“ஆண்டவரை எங்கே?”

“நான்தான். சேசு...”

“என்ன நடந்தது?”



கேள்விகளும் பதில்களுமான குழப்பத்தின் நடுவில் அவர்கள் தங்கள் மேல் வஸ்திரங்களை அணிந்து கொள்கிறார்கள்...

யூதாஸ் முன் நடக்க, சேவகர்கள் பல நெருப்புப் பந்தங்களைப் பிடித்துக் கொண்டு அங்கு வரவும், இவர்கள் புறப்படவும் சரியாக இருக்கிறது. அது சேவகர் போல் வேடமிட்ட கொள்ளையர் கூட்டம் □ சிறைக் கைதிகளைப் போல் காணப்படுகிறார்கள் □ பசாசுக்களைப் போல் பல்லைக் காட்டுகிறார்கள் □ அங்கே தேவாலய முக்கியஸ்தர் ஒருவரும் நிற்கிறார்.

அப்போஸ்தலர்கள் அனைவரும் ஒரு ஒதுக்கமாய்க் குவிகிறார்கள். இராயப்பர் முன்னால் நிற்கிறார். மற்றவர்கள் அவருக்குப் பின் நிற்கிறார்கள். சேசு தாம் நின்ற இடத்திலேயே நிற்கிறார்.

யூதாஸ் சேசுவை நெருங்குகிறான். சேசு அவனை உற்று நோக்குகிறார். அவருடை சிறந்த நாட்களில் ஜொலிப்பது போல் அவருடைய கண்கள் ஒளி வீசுகின்றன. அந்தப் பார்வையையும் தாங்கிக் கொண்டு அவன் முன்னேறுகிறான். தலையைத் தாழ்த்தக் கூட இல்லை. மாறாக ஒரு கழுதைப் புலியின் புன்சிரிப்போடு சேசுவை நெருங்கி அவருடைய வலது கன்னத்தில் முத்தமிடுகிறான்.

“என் நண்பா, எதற்காக வந்தாய்? முத்தமிட்டா என்னைக் காட்டிக் கொடுக்கிறாய்?”

யூதாஸ் ஒரு கணம் தலையைத் தாழ்த்துகிறான். பின் நிமிர்ந்து விடுகிறான்... அவன் குற்றம் சுட்டிக் காட்டப்பட்டதற்கும், மனஸ்தாபப்பட கொடுக்கப்பட்ட அழைப்பிற்கும் உணர்வற்றுப் போனான்.

போதகருக்குரிய கம்பீரத்துடன் முதல் சில வார்த்தைகளைப் பேசியபின் சேசு ஒரு துர்ப்பாக்கியத்திற்குத் தம்மைக் கையளித்து விடுகிற ஒருவனைப் போல துயரக் குரலில் பேசுகிறார்.

காவலர்கள் சத்தமிட்டபடி முன்வருகிறார்கள். கயிறுகளையும் தடிகளையும் வைத்திருக்கிறார்கள். கிறீஸ்துவை மட்டுமல்ல, யூதாசைத் தவிர்த்து மற்ற எல்லா அப்போஸ்தலர்களையும் பிடிக்க எத்தனிக்கிறார்கள்.

“நீங்கள் யாரைத் தேடுகிறீர்கள்?” என்று சேசு அமைதியோடும், கம்பீரத்தோடும் கேட்கிறார்.

“நசரேயனாகிய சேசுவைத் தேடுகிறோம்.”

“அது நான்தான்.” சேசுவின் குரல் முழங்குகிறது.

கொலைகார உலகத்தின் முன்பாகவும், மாசற்ற உலகின் முன்பாகவும், இயற்கைக்கும், நட்சத்திரங்களுக்கும் முன்பாகவும் சேசு தம்மைப் பற்றிய இந்தத் தெளிவான, பிரமாணிக்கமான, நிச்சயமான சாட்சியத்தைக் கொடுக்கிறார். அந்த சாட்சியத்தை மகிழ்ச்சியோடு கொடுக்கிறார் என்று சொல்வேன்.

அவர் ஒரு இடியிடிக்கச் செய்திருந்தால் கூட இதைவிடக் கூடுதலாகச் செய்திருக்க முடியாது. காரணம் அவர்கள் எல்லாரும் தரையில் அறுத்துப் போட்ட கதிர் தாளைப் போல் கீழே விழுந்து கிடக்கிறார்கள். யூதாஸ், சேசு, அப்போஸ்தலர்களைத் தவிர வேறு யாரும் நிலையில் இல்லை. அப்போஸ்தலர்களுக்கு, விழத்தாட்டப்பட்ட போர்ச் சேவகரைப் பார்த்து புதுத் தைரியம் பிறக்கிறது. அவர்கள் சேசு பக்கத்தில் வருகிறார்கள். யூதாஸை பகிரங்கமாக பயமுறுத்துகிறார்கள். அவன் துள்ளிப் பாய்ந்து இராயப்பர் குறிபார்த்து ஓங்கி வீசிய வாளுக்குத் தப்பி ஓடுகிறான். வாள் இல்லாத அப்போஸ்தலர்களின் கல், கம்பு தாக்குதல்களைக் கடந்து கெதிரோனுக்கு அப்பால் இருட்டான சந்துக்குள் மறைகிறான்.

சேசு கீழே விழுந்து கிடக்கிறவர்களைப் பார்த்து: “எழுந்திருங்கள். யாரைத் தேடுகிறீர்கள்? திரும்பவும் கேட்கிறேன்.”

“நசரேயனாகிய சேசுவை.”

“அது நான்தான் என்று சொன்னேனே” என்று கருணை ததும்ப கூறுகிறார். ஆம், கருணையோடு. பின்னும்: “ஆதலால் இவர்களைப் போக விடுங்கள். நான் வருகிறேன். வாள்களையும், தடிகளையும் தூர வையுங்கள். நான் கொள்ளைக்காரனல்ல. நான் எப்பொழுதும் உங்கள் நடுவிலிருந்தேனே, அப்போது ஏன் என்னைப் பிடிக்கவில்லை? ஆனால் இது சாத்தானுடையவும் உங்களுடையவும் நேரம்...”

சேசு பேசுகையில், அவரைக் கட்டுவதற்குக் கயிறுகளை எடுத்து நீட்டுகிறவனை நெருங்கி வருகிற இராயப்பர் தன் வாளை கோணல்மாணலாக வீசி அவன் காதில் பாதியை வெட்டி விடுகிறார். அது தொங்கிக் கொண்டிருக்கிறது. ஏராளமான இரத்தம் கொட்டுகிறது. வெட்டப்பட்டவன், “செத்தேன்” என்று



கத்துகிறான். ஒரே குழப்பம். சிலர் முன்னுக்கு வரப் பார்க்கிறார்கள். சிலர் வாள்களும் பட்டாக் கத்திகளும் மின்னுவதைக் கண்டு பயப்படுகிறார்கள்.

“அந்த ஆயுதங்களைத் தூரப் போடுங்கள். நான் கட்டளையிடுகிறேன். நான் விரும்பினால் என்னைத் தற்காக்க என் பிதாவின் தூதர்களை நான் பெற்றுக் கொள்ளக் கூடும். நீ குணமடைவாயாக. முடிந்தால் உன் ஆன்மாவில் முதலில் குணம் பெறு” என்று கூறிய சேசு, தம் கைகளைக் கட்டும்படி நீட்டிக் கொடுக்குமுன் வெட்டுப்பட்ட காதைத் தொட்டு, அதைக் குணப்படுத்துகிறார்.

அப்போது அப்போஸ்தலர்கள் வேண்டாத முறையில் சத்தமிட்டுப் பேசுகிறார்கள். இதைச் சொல்வது எனக்குக் கஷ்டமாயிருக்கிறது. ஆனால் அது உண்மை. சிலர் ஒன்றையும் சிலர் வேறொன்றையும் சொல்கிறார்கள். சிலர்: “நீர் எங்களுக்குத் துரோகம் செய்து விட்டீர்” என்கிறார்கள். சிலர், “இவருக்குப் பைத்தியம்” என்கிறார்கள். இன்னும் சிலர், “உம்மை யார் நம்ப முடியும்?” என்கிறார்கள். எதுவும் இப்படிச் சொல்லாதவர்கள் அங்கிருந்து ஓடிப் போகிறார்கள்.

சேசு தன்னந்தனியே விடப்படுகிறார்... அவரும் காவலர்களும்... அவருடைய பயணம் தொடங்குகிறது.

*15 பெப்ருவரி 1944*

**சேசு கூறுகிறார் :**

வியாழக்கிழமை மாலையில் என் உள்ளத்தின் அவஸ்தையின் வேதனைகளை நீ தியானக் காட்சியில் கண்டாய். மரண அடிபட்டவனைப் போலும், தன் இரத்தத்தை வெளியேற்றும் காயங்களின வழியாக தன் உயிர்போவதை உணருகிற ஒருவனைப் போலும் அல்லது தன் சக்திக்கு மீறிய மன அதிர்ச்சிக் காயத்தால் மேற்கொள்ளப்பட்டவனைப் போலும் உன் சேசு துவண்டு விழுவதை நீ பார்த்தாய். அந்த அதிர்ச்சிக் காயம் கட்டம் கட்டமாய்க் கூடிக் கொண்டே வந்து இரத்தம் கொட்டுவதில் முற்றுப் பெற்றதையும் கண்டாய். என்னையே அடக்கிக் கொள்வதற்கு நான் செய்த முயற்சியாலும் என் மேல் விழுந்த பாரத்தைத் தாங்க நான் முயன்றதாலும் தூண்டி விடப்பட்ட இரத்த ஓட்ட சம நிலையிழப்பால், என் இரத்தம்

கொட்டியது.

மிக உந்நதரான சர்வேசுரனின் குமாரனுக நான் இருந்தேன், இருக்கிறேன். ஆயினும் நான் மனித குமாரனுகவும் இருந்தேன். என்னுடைய இந்த இரண்டு சுபாவங்கள் ஒவ்வொன்றும் முற்றுப் பெற்றதும், முழுமையானதுமாக இருக்கின்றன. என்னுடைய இவ்விரண்டு சுபாவங்களும் இந்நூலிலிருந்து மிகத் தெளிவாகத் துலங்கிக் காணப்பட வேண்டுமென்று விரும்புகிறேன்.

கடவுள் ஒருவரிடமே இருக்கக்கூடிய, பொருள் நுட்பத்தையுடைய என் வார்த்தை என் தெய்வீகத்திற்குச் சாட்சி சொல்கிறது. ஒரு உண்மையான மனிதனுக என்னுடைய சரீரத்தில் நான் அனுபவித்ததும், உங்களுடைய மனிதத் தன்மைக்கு ஒரு முன்மாதிரிகையாக எடுத்துக் காட்டுகிறதுமான என் தேவைகளும் என் தாகங்களும் என்னுடைய மனுஷீகத்திற்குச் சாட்சியாக உள்ளன. அவற்றை நான் உண்மைக் கடவுளின் என் போதனைகளாக உங்களுக்குக் கற்பிக்கிறேன்.

உங்கள் குறைபாடுள்ள மனுஷீகத்தின் செயல்பாடுகள் பிரிக்கப்பட்டிருப்பதால் காலங்களின் போக்கில் என் மிகப் புனித தெய்வீகமும் என் உத்தம மனுஷீகமும் அவற்றின் விளக்கத்தில் மதிப்பிழந்து திரிக்கப்பட்டுள்ளன. நீங்கள் என் மனுஷீகம் உண்மையற்றும் மனிதத் தன்மையற்றும் காணப்படவும், என் தெய்வீகம் சிறுத்துக் காணப்படவும் செய்கிறீர்கள். அதன் பல பாகங்களை மறுத்திருக்கிறீர்கள். ஏனென்ருல் அவற்றைக் கண்டுகொள்வது உங்களுக்கு சௌகரியமாயில்லை. அல்லது பாவம், நாஸ்திகம், மனிதம், அறிவுவாதம் ஆகிய பலவீனங்களால் பழுதுபட்ட உங்கள் உள்ளங்கள் அவற்றைக் கண்டுகொள்ள இயலவில்லை.

உலகளாவிய துர்ப்பாக்கியத்திற்கு முன்னேடியாயிருக்கிற இந்த ஆபத்தான வேளையில், உங்கள் மனங்களுக்கு என்னுடைய கடவுள்–மனிதன் என்னும் இரட்டை வடிவத்தைப் புலப்படுத்தும்படியாக இதோ நான் வருகிறேன். அதனுல் அது எப்படிப்பட்டது என நீங்கள் அறிவீர்கள். உங்கள் உள்ளங்களுக்கே அறிதலை மறுப்பதினுல் அதை மறைத்தீர்களே, இனி அதை நீங்கள் நேசிப்பீர்கள். மறுபடியும் அதனிடம் சென்று அதைக் கொண்டே உங்களை இரட்சித்துக் கொள்வீர்கள். அது உங்கள் இரட்சகரின் உருவமாயிருக்கிறது. அதை அறிகிறவனும் நேசிக்கிறவனும்



காப்பாற்றப்படுவான்.

கடந்த நாள்களில் என்னுடைய சரீர வேதனைகளை உங்களுக்குச் சொன்னேன். அவர்கள் என் மனுஷீகத்தை வதைத்தார்கள். என் மன வேதனைகளையும் உங்களுக்குச் சொன்னேன். அவை என் தாயின் வேதனைகளுடன் இணைத்துப் பின்னப்பட்டுள்ளன. பூமியின் வெப்பப் பகுதிக் காடுகளில் காட்டுக் கொடிகளின் வழியாகச் செல்ல ஒரு கொடியை வெட்டினுல் போதாது. எல்லாவற்றையும் கோடரியால் ஒரே வெட்டில் கொன்றுதான் அவற்றின் ஊடே செல்ல முடிவது போல, ஒரு உடலின் ஒரு நரம்பில் மாத்திரம் இரத்தம் இல்லாமல் செய்ய முடியாது. ஏனென்ருல் ஒரே இரத்தம் அந்நரம்புகள் எல்லாவற்றையும் நிரப்புவது போல, இதைவிட, தாய் செத்தால் அவள் உதரத்தில் உருவாகிற சிசுவைக் காப்பாற்ற முடியாதது போல. ஏனென்ருல் தாயின் உயிரும், உடல் வெப்பமும், போ□னையும், இரத்தமுமே அவளுடைய இருதயத்தின் துடிப்பின் கணக்குப்படி, உன் தோலின் வழியாக குழந்தையாக வரப் போகிற சிசுவை அடைந்து அதை ஒரு முழு ஜீவியாக ஆக்குகின்றன.

ஓ அவர்கள்! பரிசுத்தமான என் தாய்! ஒரு ஸ்திரீ மனிதனின் கனியை ஒன்பது மாதம் சுமப்பது போல் மாத்திரமல்ல, தன் வாழ்நாள் முழுவதும் என்னைச் சுமந்தார்கள். எங்கள் இருதயங்கள் ஞான வஸ்துவான நார்களால் ஐக்கியப்பட்டிருந்தன. அவை எப்போதும் ஒன்றாய்த் துடித்தன. என் தாயின் கண்ணீர் எதுவும் அதன் உப்பு சிறிதளவு என் இருதயத்தில் படியாமல் சிந்தப்பட்டதில்லை. என்னுடைய உள்ளரங்க துயர முனகல் எதுவும் அவர்களுடைய இருதயத்தில் பிரதிபலித்து அவர்களின் துயரத்தை எழுப்பாமல் இருந்ததில்லை.

தீராத நோயினுல் சாவுக்குக் குறிக்கப்பட்ட ஒரு மகனின் தாய்க்காக நீங்கள் வருந்துகிறீர்கள். மனித நீதியின் கடுமையால் மரணத்திற்குத் தீர்ப்பிடப்பட்ட ஒரு மகனுடைய தாய்க்காகவும் நீங்கள் துயரப்படுகிறீர்கள். ஆனுல் என்னைக் கர்ப்பமுற்ற நாளிலிருந்து மரணத்திற்குத் தீர்ப்பிடப்பட்டவன் நான் என்பதை நினைத்து நடுங்கிக் கொண்டிருந்த என் தாயை நினைத்துப் பாருங்கள். புதிதாய்ப் பிறந்த தன் சிசுவாகிய என் நுண்மையான ரோஜா மேனியில் முதல் முறையாக முத்தமிட்டபோது, வரப்போகிற தன் குழந்தையின் காயங்களை உணர்ந்த என் தாயை

எண்ணிப் பாருங்கள். நான் வளர்ந்து மனிதனுகி பலியின் வேளைக்கு வராதபடி தடுப்பதற்காக பத்து விசை நூறு விசை ஆயிரம் விசை தன் உயிரைக் கொடுத்திருக்கக் கூடிய இந்தத் தாயை சிந்தித்துப் பாருங்கள். மனுக்குலத்தின் மட்டில் கருணையால் கடவுளின் மகிமைக்காக அவரின் சித்தத்தை ஏற்கும்படி, அந்தப் பயங்கர நேரத்தை அறிந்திருந்து ஆசிக்க வேண்டியிருந்த இந்தத் தாயை எண்ணிப் பாருங்கள். இத்தனை நீளமாக நீண்டிருந்த அவஸ்தையும், என் தாயுடையதைத் தவிர பெரிய துயரத்தில் முடிந்த துன்பம் வேறெதுவும் இருந்ததில்லை.

அதோடு, என்னுடைய துயரத்தைவிட அதிக பெரிதானதும், அதிக முழுமையானதுமான துயரம் வேறு எதுவுமில்லை. நான் பிதாவுடன் ஒன்ருக இருந்தேன். சர்வேசுரன் ஒருவரே நேசிக்கக் கூடிய வகையில் பிதா என்னை நித்தியத்திலிருந்தே நேசித்தார். அவர் என்னிடத்தில் தம் மகிழ்வைக் கண்டு தன் தெய்வீக ஆனந்தத்தை என்னிலே கண்டடைந்தார். நானும் அவரை ஒரு கடவுளே நேசிக்கக் கூடிய வகையில் நேசித்தேன். அவருடனுள்ள என் ஐக்கியத்தில் என்னுடைய தெய்வீக மகிழ்வை நான் கண்டடைந்தேன். நித்தியமாகவே சுதனை பிதாவுடன் கட்டுகிற உரைக்க இயலாத உறவு என் வார்த்தையாலும்கூட உங்களுக்கு விளக்கிச் சொல்லக் கூடாததாயிருக்கிறது. ஏனென்ருல் அது முழு உத்தம நிறைவாயிருக்கிறது. உங்கள் புத்தியோ அப்படி இல்லை. சர்வேசுரன் யார் என்று, அவருடன் மோட்சத்திற்கு வந்து அவருடன் தங்கும் வரையிலும் நீங்கள் கண்டுபிடிக்க உங்களால் கூடாது. சரி. ஒரு அணைக்கட்டில் எழும்புகிற தண்ணீர் அதை நெருக்குவது போல் பிதாவின் கண்டிப்பு என் மட்டில் ஒவ்வொரு மணிப் பொழுதிலும் அதிகரிப்பதை நான் உணர்ந்தேன்.

நான் யாரென்று கண்டுபிடிக்க விரும்பாத மிருக மனிதருக்கு எதிர்ச் சாட்சியாக பிதாவானவர் என் பகிரங்க வாழ்வில் மும்முறை மோட்சத்தைத் திறந்தார். யோர்தானில், தபோரில், ஜெருசலேமில் என் பாடுகளுக்கு முன், அதை அவர் மனிதர்களுக்காகச் செய்தார். என் உபசாந்திக்காக அல்ல. அப்பொழுதே நான் பரிகாரம் செய்கிறவனுயிருந்தேன்.

மேரி, அநேக தடவைகளில் சர்வேசுரன் தம் ஊழியன் ஒருவன் வழியாக மனிதர்களைத் துயிலெழுப்பி தம்மிடம் இழுக்கும்படி அந்த ஊழியனுடன் அவர்களுக்குத் தொடர்பை



ஏற்படுத்துகிருர். ஆனுல் அது அந்த ஊழியனுடைய துன்பங்களின் வழியாகவும் நடைபெறுகிறது. அவனே, கடவுளின் கண்டிப்பாகிய கசப்பான அப்பத்தை உண்பதால் தன் சகோதரர்களின் ஆறுதலுக்காகவும் இரட்சிப்பிற்காகவும், தானே கிரயம் செலுத்துகிருன். அது அப்படித்தானல்லவா? பரிகாரப் பலியாகிறவர்களுக்குத் தெரியும் கடவுளின் கண்டிப்பு. அதன்பின் வருகிறது மகிமை. நீதி அமர்த்தப்பட்டபின், அது, பலியாகிறவர்களை முத்தமிடும் என் அன்பைப் போலிருக்காது. நான் சேசு – நான் இரட்சகர். நான் வேதனைப்பட்டிருக்கிறேன். சர்வேசுரனுல் கண்டிப்புடன் நோக்கப்படுவதும், அவரால் கைவிடப்படுவதும் எவ்வளவு வேதனையானது என்பதை சொந்த அனுபவத்தால் அறிந்திருக்கிறேன். நான் ஒருபோதும் கடுமையாயிருப்பதில்லை. யாரையும் கைவிடுவதில்லை. நானும் சுட்டெரிக்கத்தான் செய்கிறேன். ஆனுல் அதை அன்பின் நெருப்பால் செய்கிறேன்.

எவ்வளவிற்கு பரிகரிப்பின் நேரம் அடுத்து வந்ததோ அவ்வளவிற்கு பிதா என்னிடமிருந்து அகன்று போவதை நான் உணர்ந்தேன். எந்த அளவிற்கு நான் பிதாவிடமிருந்து அகற்றப்பட்டேனே, அந்த அளவிற்கு கடவுளின் தெய்வீகத்தால் தாங்கப்படுவது குறைவதை என் மனுஷீகம் உணர்ந்தது. அதன் காரணமாக நான் வேதனைப்படக் கூடிய வகையிலெல்லாம் வேதனைப்பட்டேன். கடவுளிடமிருந்து விலகியிருப்பது பயத்தைக் கொண்டு வருகிறது. வாழ்வின் மேல் பற்றுதலையும் தளர்ச்சியையும், களைப்பையும், சலிப்பையும் கொண்டு வருகிறது. அது எவ்வளவிற்கு அதிகமாயிருக்குமோ, அவ்வளவிற்கு அதன் விளைவுகள் வலிமையாகின்றன. அது முழுமையாகும்போது நம்பிக்கையிழப்புக்குக் கொண்டு வருகிறது. கடவுளின் கட்டளைப்படி, தன் பிழையில்லாமல் ஒருவன் எந்த அளவிற்கதிகமாய் அதை அனுபவிக்கிருனே, அந்த அளவிற்கதிகமாய் அவன் வேதனைப்படுகிருன். ஏனென்ருல் உயிருள்ள உடல் ஓர் உறுப்பு வெட்டப்படுவதை எப்படி உணருமோ அப்படி உயிருள்ள ஜீவன் கடவுளிடமிருந்து வெட்டப் படுவதை உணருகிறது. அது ஒருவனைத் துயரமாகத் தரையோடு வீழ்த்தும் மதிமயக்கமாகும். அதை அனுபவியாதவன் அதைக் கண்டுபிடிக்க முடியாது.

நான் அதை அனுபவித்தேன். உங்கள் சார்பாக பிதாவிடம்

நான் அனைத்திற்காகவும் பரிந்து பேசக் கூடுமாயிருக்கும்படி நான் அனைத்தையும் அறிய வேண்டியிருந்தது – உங்கள் நம்பிக்கையிழப்பு உட்பட. ஓ! எவற்றையெல்லாம் நான் அனுபவித்தேன்! "நான் தனிப்பட்டுப் போனேன். சகலரும் என்னைக் காட்டிக் கொடுத்து கைவிட்டு விட்டார்கள். பரம பிதாவும் முதலாய் எனக்கு உதவுவதில்லை" என்பது என்னவென்று நான் அனுபவத்தில் கண்டேன். அதனாலேயே நம்பிக்கையிழப்பால் மேற்கொள்ளப்படுகிற பரிதாபமான இருதயங்களில் பரம இரகசியமான ஆச்சரியங்களை நான் செய்கிறேன். நம்பிக்கையிழப்பு என்னும் சமுத்திரத்தில் கப்பல் உடைந்தவர்கள், நான் நங்கூரமாகவும், இரட்சணியமாகவும் அளிக்கின்ற சிலுவையை ஏற்க மறுக்காமல் அதைப் பற்றிக் கொள்ளவும், சமாதானம் மாத்திரமே நிரம்பிய ஆசீர்வதிக்கப்பட்ட கரைக்கு அவர்களை நான் கொண்டு சேர்க்கவும் ஏதுவாக, இத்தனை கசப்பான அனுபவத்தின் பாத்திரத்தைப் பருகும்படி என் அன்பர்களிடம் கேட்கிறேன்.

வியாழக்கிழமை மாலையில் பிதா எனக்குத் தேவைப்பட்ட அந்தத் தேவையை நான் மட்டுமே அறிந்தேன். ஒரு மனிதனின் மிகப் பெரிய துயரங்களாகிய ஒரு அருமையுள்ள அன்னைக்குப் பிரியாவிடை கொடுப்பதையும், துரோகியான ஒரு நண்பனைப் பக்கத்தில் கொண்டிருப்பதையும் மேற்கொள்ள நான் செய்ய வேண்டியிருந்த முயற்சியால் நான் ஏற்கெனவே அவஸ்தைப்படும் ஜீவனாகி விட்டேன். அவையிரண்டும் என் இருதயத்தைச் சுட்டெரித்த இரு வெம்புண்களாக இருந்தன. ஒன்று என் தாயின் கண்ணீர்கள். மற்றது யூதாஸின் பகை.

எனக்கு காயீனாயிருந்தவனுடன் நான் என் அப்பத்தைப் பகிர வேண்டியிருந்தது. மற்றவர்களிடம் அவனைக் காட்டிக் கொடாதபடி அவனுடன் நான் நட்பான முறையில் பேச வேண்டியிருந்தது. மற்றவர்கள் வன்முறையாய்ப் பதிலளித்து விடக் கூடும் என நான் அஞ்சினேன். அப்படியொரு குற்றத்தைத் தடுப்பதற்காக இப்படிச் செய்தேன். எப்படியும் அது பயனற்றதே. ஏனெனில் ஜீவப் புத்தகத்தில் எல்லாமே ஏற்கெனவே எழுதப்பட்டு விட்டன. என் புனித மரணமும், யூதாஸின் தற்கொலையும், என் மரணத்தைத் தவிர வேறு எந்த மரணமும் பயனற்றதும், கடவுளால் நிராகரிக்கப்பட்டதுமாயிருந்தது. என் இரத்தம் மட்டுமே சிந்தப்பட வேண்டியிருந்தது. மற்றது



சிந்தப்படவில்லை. தூக்குக் கயிறு அந்த உயிரை நெரித்துக் கொன்று சாத்தானுக்கு விற்கப்பட்ட துரோகியின் அசுத்தப் பையாகிய உடலில் அந்த அசுத்த இரத்தத்தை அடைத்து வைத்தது. அந்த இரத்தம் பூமியில் விழுந்து மாசற்றவரின் இரத்தத்துடன் கலரக் கூடாதது.

அந்த இரண்டு வெம்புண்களும், என்னுடைய "நானில்" என்னை அவஸ்தைப்பட வைப்பதற்குப் போதுமானவை. ஆனால் நானே பரிகரிப்பவன், பலிப்பொருள், செம்மறி. ஒரு செம்மறி பலியிடப்படுமுன் பழுக்கச் சிவந்த சூட்டுக் கோலைத் தாங்குகிறது. அடிபடுகிறது. முடி வெட்டப்படுவதைப் பொறுத்துக் கொள்கிறது. ஒரு ஆட்டுக் கொலைஞனுக்கு விற்கப்படுகிறது. கடைசியாக அது தன் கழுத்தை அறுத்து இரத்தத்தை வடித்துக் கொல்லுகிற கத்தியின் குளிரை உணருகிறது. முதலில் அது சகலத்தையும் துறக்க வேண்டும். அது வளர்ந்த மேய்ச்சல் நிலத்தை விட வேண்டும். தான் உணவருந்தி அனலூட்டப்பட்ட தன் தாயின் மடியையும், தன்னுடன் வாழ்ந்த இதர ஆடுகளையும் விட வேண்டும். சர்வேசுரனின் செம்மறியாகிய நான் ஒவ்வொன்றையும் சகலத்தையும் அனுபவித்தேன்.

அதனாலேயே பரம பிதா என்னை விட்டு மோட்சத்திற்கு விலகிச் சென்றபோது, சாத்தான் வந்தான். என்னுடைய அலுவலின் தொடக்கத்தில் என்னைச் சோதித்து அதிலிருந்து என்னைத் திருப்பிவிட ஏற்கெனவே அவன் வந்திருந்தான். இப்பொழுது அவன் திரும்பவும் வந்தான். இது அவனுடைய நேரம். சாத்தானுக்குரிய சாபத் நேரம்.

அன்றிரவில், இருதயங்களை ஏமாற்றிக் கவிழ்ப்பதற்காக, அடுத்த நாளில் கிறீஸ்துவைக் கொல்ல வேண்டுமென்று கேட்பதற்கு அவர்களைச் சம்மதிக்கச் செய்வதற்காக கூட்டங் கூட்டமாக பசாசுக்கள் பூமியில் வந்திருந்தன. ஆலோசனைச் சங்கத்தின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒரு பசாசு, ஏரோதுக்கு ஒரு பசாசு, பிலாத்துவுக்கு ஒரு பசாசு, என் இரத்தத்தைத் தன் மேல் கூப்பிட்டழைத்த ஒவ்வொரு யூதேயனுக்கும் ஒரு பசாசு இருந்தது. அப்போஸ்தலர்களின் அருகிலும் அவர்களைச் சோதிக்கிற பசாசுக்கள் இருந்தன. அவை, நான் தளர்ந்து துவண்ட போது, அவர்களுக்கு உறக்க மயக்கத்தைக் கொடுத்தன. அவர்கள் கோழைகளாகும்படி தயாரித்தன. பரிசுத்தத்தின் சக்தியைக் கவனி. பரிசுத்த சீடனாயிருந்த அருளப்பன்தான் அவர்களுள் முதலாவதாக

பசாசுக்களின் நகங்களிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டவன். அருளப்பன் உடனே தன் சேசுவிடம் வந்தான். என்னுடைய வெளியிடப்படாத விருப்பத்தைக் கண்டுபிடித்து மாதாவை என்னிடம் கூட்டி வந்தான்.

ஆனால் யூதாஸுக்கு லூஸிபர் இருந்தான். எனக்கும் லூஸிபர் இருந்தான். யூதாஸின் இருதயத்திலும், என் பக்கத்திலும் அவன் இருந்தான். நாங்களிருவரும்தான் அந்த சோக நிகழ்ச்சியின் இரு முக்கிய கதாபாத்திரங்கள். சாத்தான் எங்கள் இருவரையும் தானே நேரடியாகக் கவனித்துக் கொண்டான். இனி திரும்பி வர முடியாத கட்டத்திற்கு யூதாஸைக் கொண்டுபோனபின் அவன் என் பக்கமாய்த் திரும்பினான்.

மிகவும் சாதுரியமாக சரீரக் கொடுமைகளை அதற்கு மேல் காட்டக் கூடாத அளவு தத்ரூபமாக எனக்குக் காட்டினான். வனாந்தரத்திலும் அவன் மாம்சத்தை வைத்தே தொடங்கினான். அவனை ஜெபத்தால் நான் தோற்கடித்தேன். மாம்சத்தின் அச்சத்தை உள்ளம் மேற்கொண்டது.

அதன்பிறகு சாத்தான் நான் சாவதின் பிரயோஜனமற்ற தன்மையை எனக்குக் காட்டினான். அதோடு நான் நன்றியற்ற மனிதரைப் பற்றிக் கவலைப்படாமல் எனக்காகவே வாழ்வதன் பிரயோஜனத்தையும், அது அன்பால் நிரம்பிய செல்வமுள்ள மகிழ்ச்சியான வாழ்க்கையைக் கொடுக்குமென்றும் எடுத்துக் கூறினான். என் தாய் கஷ்டப்படாதபடி அவர்களுக்காக வாழும்படி கூறினான். உயிர் வாழ்வதினால் ஒரு நீண்ட அப்போஸ்தலத்தின் வழியாக நான் அநேக மனிதர்களைக் கடவுளிடம் திரும்பக் கொண்டு வரலாம் என்றான். நான் இறந்து விட்டால் அவர்கள் என்னை மறந்து விடுவார்களென்றும், நான் அவர்களுக்கு மூன்று ஆண்டுகள் அல்ல, அநேக ஆண்டுகளாக போதகராயிருந்தால் அவர்கள் என் போதனையுடன் ஒன்றாக ஐக்கியப்பட்டு விடுவார்கள் என்றும் கூறினான். தன்னுடைய தூதர்கள் மனிதர்களை வளைத்துப் பிடிக்க எனக்கு உதவி செய்வார்கள் என்றான். கடவுளின் தூதர்கள் எனக்கு உதவி செய்ய வராமலிருப்பதை நான் காணவில்லையா என்று கேட்டான். பின்னால், நான் கடவுளிடம் திருப்பிக் கொண்டு சேர்க்கப் போகிற விசுவாசிகளின் கும்பல்களைக் கண்டு சர்வேசுரன் என்னை மன்னித்து விடுவாரென்றான். வனாந்தரத்திலும் அவன் அவிவேகத்தால் கடவுளைச் சோதிப்பதற்கு என்னை இணக்க முயன்றான். ஜெபத்தால் அவனை நான் தோற்கடித்தேன். நெறிமுறை தவறும் இச்சோதனையை உள்ளம் வென்றது.



சர்வேசுரனால் நான் கைவிடப்பட்டதை சாத்தான் சுட்டிக் காட்டினான். அவர், பரம பிதா, என்னை நேசிக்கவில்லை; உலகத்தின் பாவங்களால் நான் சுமத்தப்பட்டிருந்தேன்; அவருக்கு நான் அருவருப்பாகி விட்டேன். அவர் வரவில்லை. என்னை அவர் என் பாட்டிற்கே விட்டு விட்டார்; ஒரு குரூர கும்பலின் பரிகசிப்பிற்கு அவர் என்னை விட்டுக் கொடுத்து விட்டார்; அவர் தம் தெய்வீக ஆறுதலைக் கூட எனக்குத் தரவில்லை. நான் தனியே இருந்தேன். அந்நேரத்தில் கிறீஸ்துவின் பக்கத்தில் சாத்தானைத் தவிர வேறு யாருமில்லை. கடவுளுமில்லை, மனிதருமில்லை. ஏனென்றால் அவர்கள் என்னை நேசிக்கவில்லை. அவர்கள் என்னைப் பகைத்தார்கள். அல்லது அவர்களுக்கு என்மேல் அக்கறையில்லை. சாத்தானுடைய வார்த்தைகளை என் ஜெபங்களால் மூடி வைக்க நான் ஜெபித்தேன். ஆனா ல் என் ஜெபங்கள் கடவுளை நோக்கி மேலே செல்லவில்லை. கல்லெறியப்படுவது போல் அவை என்மேல் திரும்பி வந்து விழுந்து அதன் குவியலால் என்னை நசுக்கின. நான் பிதாவுக்குக் காட்டும் அன்பின் அடையாளமாக எப்போதும் இருந்து வந்த என் ஜெபம், மேல் நோக்கி எழும்பிய குரலாக இருந்து பிதாவுக்குரிய ஒரு அன்பு பாராட்டுதலாலும், வார்த்தையாலும் எப்போதும் பதிலளிக்கப்பட்ட என் ஜெபம், இப்பொழுது இறந்துபோயிற்று. அது பாரமாகி விட்டது. மூடப்பட்டு விட்ட மோட்சத்தை நோக்கி வீணாக உச்சரிக்கப்படுகிறதாயிற்று.

அப்போது நான் பாத்திரத்தின் அடியிலிருந்த கசப்பை சுவைத்தேன். நம்பிக்கையிழப்பின் வாசனை அது. அதுவே சாத்தான் விரும்பியது: என்னை நம்பிக்கையிழப்பிற்குக் கொண்டு சென்று என்னை அவனுக்கு அடிமையாக்குவது. நான் நம்பிக்கை யிழப்பை வென்றே – என் வலிமையாலேயே அதை மேற்கொண்டேன். ஏனென்றால் அதைத் தோற்கடிக்கத் தேடினேன். நானே மனிதன் என்ற முறையில் என் வலிமையால் வென்றேன். நான் மனிதனன்றி வேறு யாருமல்ல. மேலும் கடவுளால் உதவி செய்யப்படாத வெறும் மனிதனாயிருந்தேன். கடவுள் உனக்கு உதவும்போது உலகத்தையே தூக்கி ஒரு குழந்தையின் விளையாட்டுப் பொருளைப் போல் உயர்த்திப் பிடிப்பது எளிது. ஆனால் கடவுள் நமக்கு உதவி செய்யாதபோது

ஒரு பூவின் பாரம் கூட நமக்கொரு சுமையாகி விடுகிறது.

உங்களுக்கு ஜீவியத்தை அளிப்பதால், சர்வேசுரனுக்கும் உங்களுக்கும் ஊழியம் செய்யும்படியாக, நான் நம்பிக்கையிழப்பையும், அதன் கர்த்தாவாயிருக்கிற சாத்தானையும் தோற்கடித்தேன். ஆயினும் அதிலே நான் மரண அனுபவப்பட்டேன். சிலுவையில் அறையப்பட்டு அடைந்த சரீர மரணத்தையல்ல – அது இவ்வளவு பயங்கரமானதல்ல. ஆனால் வெற்றியடைந்த பிறகு உடைந்த உள்ளத்தோடும், எல்லா தாங்கும் சக்தியையும் மீறிய அதிர்ச்சியால் தன்னிடமிருந்து கொட்டுகிற இரத்தத்தோடும் போராடுகிறவன், தான் சாகிறதாக அறிந்து அடைகிற மரணம். அதனால்தான் இரத்த வேர்வை வியர்த்தேன் – சர்வேசுரனின் சித்தத்திற்குப் பிரமாணிக்கமாயிருப்பதற்காக.

அதனாலேதான் என் துயரத்தின் தூதன், நான் மரணமடைவதற்கு ஒரு மருந்தாக, என் பலியினால் இரட்சிக்கப்பட்ட எல்லாருடைய நம்பிக்கையையும் எனக்குக் காண்பித்தார்.

உங்களுடைய பெயர்கள்! ஒவ்வொரு பெயரும் என் நரம்புகளைத் திடப்படுத்தி, அவற்றைச் செயல்படச் செய்வதற்காக அவற்றிற்குள் ஊற்றப்பட்ட ஒரு துளி மருந்தாயிருந்தது. ஒவ்வொருவரின் பெயரும் எனக்குத் திரும்புகிற உயிராக, திரும்பி வருகிற ஒளியாக, மீண்டும் கிடைக்கிற வலிமையாக இருந்தது. என்னுடைய குரூர வாதைகளின் நேரத்தில் மனிதனுயிருக்கிற என் துயரத்தைச் சொல்லிக் கதறுவதைத் தடுக்கவும், கடவுள் மட்டில் நம்பிக்கையிழந்து விடாதிருக்கவும், அவர் தம்முடைய பலிப்பொருளின் மீது மிஞ்சிய கடுமையும், அநீதியும் காட்டினாரென்று சொல்லாதிருக்கவும் நான் உங்கள் பெயர்களை எனக்குள் சொல்லிக் கொண்டிருந்தேன். உங்களை நான் கண்டேன். அது முதல் உங்களை ஆசீர்வதித்தேன். அது முதல் உங்களை என் இருதயத்தில் வைத்துச் சுமந்தேன். பின், பூமியில் நீங்கள் வரும் காலம் வந்த போது, உங்களுடன் நானும் இங்கு வருவதற்காக, மோட்சத்தை விட்டு வெளியே சாய்ந்தேன். ஒரு புதிய அன்பு மலர் உலகத்தில் பிறந்துள்ளது. அது எனக்காக வாழும் என்ற நினைவில் நான் அகமகிழ்ந்தேன்.

ஓ! என் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே! மரிக்கிற கிறீஸ்துவின்



ஆறுதலானவர்களே! என் அன்னையும், சீடனும், பக்தியுள்ள ஸ்திரீகளும் என் மரணத்தில் பிரசன்னமாயிருந்தார்கள்; நீங்களும் அங்கிருந்தீர்கள். சாகிற என் கண்கள் வதைக்கப்பட்ட என் தாயின் வதனத்தைக் கண்டன; உங்கள் அன்பான முகங்களையும் கண்டன; அப்படியே அவை மூடின. அப்படி மூட அவை மகிழ்ச்சியடைந்தன. ஏனென்றால், கடவுளின பலிக்குப் பாத்திரமான உங்களை அவை இரட்சித்தன.

*23 – 25 மார்ச் 1945.*

அவருடைய வேதனைப் பயணம் தொடங்குகிறது. சேசு கைது செய்யப்பட்ட திறந்த வெளியிலிருந்து கெதிரோன் ஓடைக்குப் போகிற கல் பதித்த முடுக்குப் பாதை வழியாகப் புறப்படுகிறது. அதன் பின் இன்னொரு தெரு வழியாக ஜெருசலேம் பட்டணம் நோக்கிப் போகிறது. இகழ்ச்சிப் பரிகாசங்களும், சித்திரவதைகளும் உடனே ஆரம்பமாகின்றன.

ஒரு ஆபத்தான பைத்தியக்காரனைப் போல் சேசு கட்டப்பட்டிருக்கிறார். அவருடைய மணிக்கட்டுகளும் அவருடைய இடுப்பும்கூட கயிறுகளால் கட்டப்பட்டிருக்கின்றன. பகை முற்றி வெறி கொண்டவர்களிடம் கயிற்றின் நுனிகள் கொடுக்கப்பட்டுள்ளன. நாய்க்குட்டிகளின் கோபத்திற்கு விடப்பட்டு விட்ட கந்தல் துணியைப் போல சேசு இங்குமங்கும் சுண்டியிழுக்கப்படுகிறார். இப்படி நடந்து கொள்கிறவர்கள் நாய்களாயிருந்தால் அவர்களை மன்னித்து விடலாம். ஆனால் அவர்கள் மனிதர்கள். அவர்களிடம் மனித தோற்றம்தான் இருக்கின்றது. அவருக்குக் கூடுதலான வேதனையைக் கொடுக்க வேண்டுமென்றே இப்படி ஒன்றுக்கொன்று எதிராக கயிறுகளால் அவரைக் கட்டத் தீர்மானித்தார்கள். ஒரு கயிறு அவருடைய மணிக்கட்டுகளை மேலும் இறுக்க மட்டுமே பயன்படுகிறது. அது மணிக்கட்டுகளை முரடாக உராய்ந்து அறுத்து உட்செல்கிறது. அவருடைய இடுப்பைச் சுற்றிய கயிறு அவருடைய முழங்கைகளை நெஞ்சுக் கூட்டோடு அழுத்தி, மேல் அடிவயிற்றை நசுக்கி அவருடைய ஈரல், சிறு நீரகங்களை வேதனைப்படுத்துகிறது. அந்த இடத்தில் ஒரு பெரிய கயிற்று முடிச்சு உள்ளது. கயிறுகளைப் பிடித்திருக்கிறவர்கள், அதே இடத்தில், கயிற்றாலேயே அடிக்கிறார்கள். "ஏய்! நட! தொலையடா! எவ்வி நட கழுதை!"

என்று சொல்லியபடியே உதைக்கிறார்கள். முழங்கால்களின் பின்புறமாக அடிக்கிறார்கள். சேசு நிலை தடுமாறுகிறார். அவர் கீழே விழாதிருப்பது, இரண்டு கயிறுகளும் அவரை இழுத்துப் பிடித்திருப்பதனால்தான். ஆனால் சித்திரவதைப்படுகிற சேசு தாழ்ந்த சுவர்கள் மேலும், அடிமரங்கள் மீதும் மோதுகிறார். மணிக்கட்டின் கயிற்றைப் பிடித்திருக்கிறவன் வலது புறமாய் இழுக்க, இடுப்புக் கயிற்றை மற்றவன் இடப்புறமாய் இழுக்கிறான். அவர்கள் செதிரோன் பாலத்தைக் கடந்து வரும்போது ஒரு கயிற்றை அதிக வலுவாக வெட்டியிழுத்ததால் சேசு பாலத்தின் கைப்பிடிச் சுவரில் கனமாக மோதி விழுகிறார். அதிலே காயப்பட்ட அவருடைய வாயிலிருந்து இரத்தம் வடிகிறது. சேசு தம் தாடியை நனைக்கும் இரத்தத்தைத் துடைக்க கட்டுண்டிருக்கும் தம் கைகளைத் தூக்குகிறார். அவர் எதுவும் பேசவில்லை. தன்னை வதைப்பவனைக் கடியாத மெய்யான செம்மறி அவரே.

இதற்கிடையில் சிலர் ஓடையின் படுகையிலிறங்கி கூழாங்கற்களையும் வேறு கற்களையும் எடுத்து கீழே நின்றபடியே சேசு மேல் எறிகிறார்கள். அந்த ஒடுக்கமான பாதுகாப்பில்லாத சிறிய பாலத்தில் ஜனக்கூட்டம் ஒருவரையொருவர் தடுப்பதால் மெதுவாகவே நகருகிறது. எறியப்பட்ட கற்கள் சேசுவின் சிரசையும், தோள்களையும் தாக்குகின்றன. சேசுவை மட்டுமல்ல, அவரை வதைக்கிறவர்களையும் அவை தாக்குகின்றன. அவர்கள் கம்புகளையும் அதே கற்களையும் திருப்பி வீசுகிறார்கள். அதனால் சேசுவின் தலையிலும் கழுத்திலும் இடிபடுகிறது. அதற்குள் பாலத்தின் மறுகரைக்கு வந்து சேருகிறார்கள். அந்த ஒடுங்கிய சந்தில் வரவும் அதன் நிழல் அந்த சச்சரவுக் கும்பலின் மேல் படிகிறது. ஏனென்றால் அஸ்தமிக்கப் போகிற நிலாவின் வெளிச்சம் வளைவான இச்சந்தில் புகமுடியவில்லை. மேலும் பல கைப்பந்தங்களும் அந்தக் குழப்பத்தில் அணைந்து விட்டது. அதனால் பகையானது பரிதாபத்திற்குரிய வேதசாட்சியைப் பார்க்கும் வெளிச்சமாக ஆகிறது. அவருடைய உயரமான உருவத்தின் காரணமாகவும் அவர் வேதனைக்கு உட்படுத்தப்படுகிறார்கள். அவர்கள் அனைவரிலும் அவரே உயரமாயிருக்கிறார். அதனால் அவரை அடிக்கவும் அவருடைய தலைமுடியைப் பிடித்து வலுவந்தமாய் அவர் சிரசை பின்னோக்கி இழுக்கவும், அந்தச் சிரசிலே கை



நிறைய அசுத்தங்களை அள்ளிப் போடவும் அவர்களுக்கு எளிதாயிருக்கிறது. அந்த அசுத்தங்கள் அவருடைய வாய்க்குள்ளும் கண்களுக்குள்ளும் போய் விழுகின்றன. அவருக்குக் குமட்டலையும் வேதனையையும் வருவிக்கின்றன.

இப்பொழுது அவர்கள் ஒபெல் என்னும் புறநகர்ப் பகுதி வழியாகப் போகிறார்கள். அங்கே சேசு எவ்வளவோ நன்மைகள் செய்து எவ்வளவோ அன்பு காட்டியிருந்தார். இவர்களின் பெரிய சத்தமும் கூச்சலும் ஜனங்களுக்கு விழிப்பை உண்டாக்கி, அவர்கள் கதவுகளுக்கு ஓடி வருகிறார்கள். பெண்கள் துயர ஓலம் எழுப்பியபடி என்ன நடக்கிறதென்று கண்டதும் பயந்து ஓடிப் போகிறார்கள். சேசுவால் குணப்படுத்தப்பட்டு உதவி பெற்று அன்பான வார்த்தைகளை அவரிடமிருந்து கேட்டிருந்த ஆண்கள், நிர்க்கவலையாய்த் தலைகளைக் கவிழ்ந்து கொள்கிறார்கள். அவரோடு தங்களுக்குச் சம்பந்தம் இல்லாதது போல் பாவனை காட்டுகிறார்கள். அல்லது, வினோதப் பிரியத்திலிருந்து அவர் மீது பகையணர்வுக்கு வந்து ஏளனமாக இகழ்ச்சிப் பார்வை பார்க்கிறார்கள். பயமுறுத்தும் சயிக்கினைகளைச் செய்கிறார்கள். அல்லது, அவரை வதைப்பதற்காக அந்தக் கூட்டத்துடன் சேர்ந்து போகிறார்கள். ஏற்கெனவே சாத்தான் அலுவலாயிருக்கிறான்...

ஒரு கணவன் சேசுவை நிந்திப்பதற்காக அவரைப் பின்தொடர்ந்து போக வேண்டுமென்கிறான். அவன் மனைவி ஓலமிட்டபடி அவனைப் பிடித்து நிறுத்தி: “கோழை மனிதா, உம்முடைய உயிரே அவர் தந்த பிச்சையல்லவா? அழுகல் நிறையும் அசுத்தனே, அதை நினைத்துப் பாரும்” என்கிறாள். ஆனால் அம்மனிதன் அவளை மேற்கொண்டு, மிருகத்தனமாய் அவளை அடித்துத் தரையில் தள்ளிவிட்டு ஓடிப் போய் வேதசாட்சியின் தலையை ஒரு கல்லால் அடிக்கிறான்.

ஒரு வயதான ஸ்திரீ, தன் மகன் கழுதைப் புலி போல் விழித்து சேசுவை அடிக்க கையில் கழியுடன் ஓடுவதைத் தடுக்க முயல்கிறாள். அவள் அவனைப் பார்த்து: “என் உயிர் இருக்கும் வரை இரட்சகரின் கொலைகாரனாக நீ இருக்க நான் விட மாட்டேன்” என்று கத்துகிறாள். ஆனால் அவன் அவளை அடிவயிற்றில் மூர்க்கத்தோடு உதைத்துவிட, அவள்: “கடவுள் கொலை! தாய்க் கொலை! என் உதரத்தை இரண்டாம் தடவையாகக் கிழித்து மெசையாவைக் காயப்படுத்துவதற்காக நீ சபிக்கப்படுவாய்” என்று

கூறி தரையில் சுருண்டு விழுகிருள்.

கூட்டம் பட்டணத்தை நெருங்க நெருங்க அதன் வன்முறைகள் அதிகமாகின்றன.

அவர்கள் இன்னும் மதில்களுக்கு வந்து சேருமுன்பே வாசல்கள் திறக்கப்பட்டுள்ளன. உரோமை போர்ச் சேவகர்கள் முழு ஆயுத பாணிகளாய் இக்குழப்பம் எங்கே எப்படி உருவாகி வருகிறதென்று கவனிக்கிருர்கள். உரோமையின் கௌரவம் பாதிக்கப்பட்டால் உடனே தலையிடத் தயாராக இருக்கிருர்கள். அங்கே இராயப்பருடன் அருளப்பர் காணப்படுகிருர். அவர்கள் ஒரு குறுக்குப் பாதை வழியாக கெதிரோனை அதன் பாலத்திற்கு வராமல் முன்கூட்டியே நடந்து ஜன நெருக்கடியால் மெல்ல வரும் கூட்டத்திற்கு முந்திக் கொண்டு ஓடி வந்திருக்க வேண்டும். பட்டணத்தின் மதில்களுக்கு முன்பாக இருக்கிற ஒரு சிறிய சதுக்கத்தின் பக்கத்திலிருக்கிற அரை வெளிச்சமுள்ள ஒரு முற்றத்தில் நிற்கிருர்கள். அவர்கள் தங்கள் முகங்களை மறைக்கும்படி மேல் வஸ்திரங்களால் தலையை மூடியிருக்கிருர்கள். சேசு அந்த இடத்திற்கு வந்தபோது அருளப்பர் தன் மேல் வஸ்திரத்தை நீக்கி மெலிந்து கலங்கிய தம் முகத்தை தெளிவான நிலா ஒளியில் காட்டுகிருர். நிலா வெளிச்சம் அந்த இடத்தில் இன்னும் உள்ளது. பட்டணம் மதிலுக்கப்பாலுள்ள குன்றில் அது மறையும். அந்தக் குன்றின் பெயரை தோபெட் என்று சேசுவைக் கைது செய்த முரடர்கள் சொல்லக் கேட்டேன். இராயப்பர் தன் முகத்தைக் காட்டத் துணியவில்லை. ஆனுல் தான் காணப்படும்படி முன்வருகிருர்.

சேசு அவர்களைப் பார்க்கிருர்... அளவில்லா கருணையோடு சிறுநகை புரிகிருர். இராயப்பர் திரும்பி முந்திய இருண்ட மூலைக்குப் போகிருர். அவர் தம் கைகளால் தம் கண்களை மூடி கூனிப் போய் வயது சென்றவர் போல் சோர்வுற்ற உள்ளத்தோடிருக்கிருர். அருளப்பர் திடமாக தாம் இருந்த இடத்திலேயே இருக்கிருர். கூச்சலிடும் கும்பல் கடந்து போன பிறகே இராயப்பரிடம் வருகிருர். இராயப்பரை முழங்கையில் பிடித்தபடி ஒரு சிறுவன் தன் பார்வையற்ற தகப்பனை வழிநடத்துவது போல் நடத்திக் கொண்டு போகிருர். அவர்கள் அந்தக் கூட்டத்தின் பின்னுல் பட்டணத்திற்குள் செல்கிருர்கள்.



உரோமைப் போர்ச் சேவகர்களின் அர்த்தமற்ற இகழ்ச்சியான துயரச் சொற்றொடர்களை என்னுல் கேட்க முடிகிறது. சிலர், தாங்கள் அந்த "முட்டாள் மரமண்டையால்" படுக்கையை விட்டெழ வேண்டியதைப் பற்றி சபித்துக் கொள்கிருர்கள். சிலர் இந்த யூதர்கள் "ஒரு எளிய சிறு ஸ்திரீயை" கைது செய்து விட்டார்கள் என்று பரிகசிக்கிருர்கள். வேறு சிலர் "எப்பொழுதும் கருணையுள்ளவராகவே கண்ட" பலிப் பொருளுக்கு இரங்குகிருர்கள். மேலும் சிலர்: "அவரை அந்த மனிதரின் கரங்களில் காண்பதை விட நான் கொடிய மரணமடைய விரும்புகிறேன். அவர் ஒரு மகான். இந்த உலகத்தில் எனக்கு வணக்கத்துக்குரியவை இரண்டு – ஒன்று அவர்; மற்றது உரோமாபுரி" என்று சொல்கிருர்கள்.

அவர்களுள் மிக உயர் பதவியிலிருக்கும் ஒருவன் சொல்கிருன்: "ஜுபிட்டர் ஆணை! எனக்கு உபத்திரவமே வேண்டாம். சின்னந் தாங்கும் சேவகனிடம் போகிறேன். யார் யாருக்கு அறிவிக்க வேண்டுமோ அவன் அறிவிக்கட்டும். ஜெர்மன்காரருக்கெதிராக சண்டையிட அனுப்பப்படுவது எனக்குப் பிடிக்கவில்லை. இநத யூதர்களோ நாற்றம் பிடித்தவர்கள். அவர்கள் பாம்புகள் – உபத்திரவம்! ஆனுல் இங்கே உயிர் பத்திரமாயிருக்கிறது. இராணுவ சேவையும் முடியப் போகிறது. பொம்பேயிக்குப் பக்கத்தில் ஒருத்தி எனக்கிருக்கிருள்..."

அவன் மேற்கொண்டு என்ன சொன்னுன் என்று எனக்குக் கேட்கவில்லை. காரணம், நான் சேசுவைப் பின்தொடர்ந்து போகிறேன். அவர் தேவாலயத்தை நோக்கி வளைந்து மேலேறிச் செல்கிற ஒரு தெரு வழியே போகிருர். அவரை அவர்கள் கொண்டு போக நினைக்கிற அன்னுஸின் வீடு எங்கே இருக்கிறதென நான் பார்க்கிறேன். கண்டுபிடிக்கிறேன். அது கட்டிடக் குவியல்களாக சீயோன் குன்று முழுவதும் இருக்கிற தேவாலய அமைப்பில் இல்லை. அது அக்கட்டிடங்களின் ஒரு ஓரத்தில், அடுக்கடுக்காய் காணப்படுகிற, பட்டணத்தின் எல்லையின் அற்றம் போலிருக்கிற தடித்த சுவர்களின் பக்கத்தில் இருக்கிறது. அங்கிருந்து அச்சுவர்கள் குன்றை அனுசரித்து நீண்டு போகின்றன. முற்றங்களும் மண்டபங்களுமாக தேவாலயத்தின் அடைப்பு வரையிலும் செல்கின்றன. அங்குதான் இஸ்ராயேலர்கள் தங்கள் பல வழிபாட்டுக்

கொண்டாட்டங்களுக்காக வந்து கூடுவார்கள்.

அங்கே ஒரு பெரிய சுவரில் ஒரு உயர்ந்த இரும்புக் கதவு காணப்படுகிறது. தன் மூப்பாக சில மூர்க்கர்கள் ஓடிப் போய் அக்கதவை பலமாகத் தட்டுகிறார்கள். கதவு சற்றுத் திறக்கவும் அவர்கள் உள்ளே புகுந்து அதைத் திறக்க வந்த ஊழியக்காரியைத் தட்டிக் கீழே விழத்தாட்டி மிதித்து வாசலை அகலத் திறக்கிறார்கள். இரைந்து கூச்சலிடும் கூட்டம் அதன் நடுவில் வரும் கடவுள் கைதியுடன் உள்ளே நுழைகிறது. உள்ளே வந்ததும் கதவு தாட்பாளிடப்பட்டு பூட்டப்படுகிறது. இது ஏனென்றால் பெரும்பாலும் அவர்கள் உரோமைக்கு அல்லது நசரேயனைப் பின்செல்கிறவர்களுக்குப் பயந்ததினால் இருக்கக் கூடும். அவரைப் பின்சென்றவர்கள்! அவர்களை எங்கே?...

கூட்டம் நுழைவு மண்டபம் வழியாகப் போய் ஒரு அகன்ற முற்றத்தைக் கடந்து, ஒரு நடைக்கூடம், மற்றொரு மண்டபம், இன்னொரு முற்றம் இவற்றைத் தாண்டி சேசுவை இழுத்துக் கொண்டே மூன்று படிகளில் ஏற வைத்து, துரிதமாய்ப் போய்ச் சேரும்படி அவரைக் கிட்டத்தட்ட ஓட வைத்து, ஒரு முற்றத்துடன் இணைக்கப்பட்ட மண்டபத்தின் வழியே வந்து அங்கே நன்கு வசதிகள் செய்யப்பட்ட ஒரு நெடும் அறைக்கு வருகிறார்கள். அங்கே ஒரு மூப்பான மனிதன் குரு உடை அணிந்து அமர்ந்திருக்கிறான்.

கும்பலை நடத்தி வந்த உத்யோகஸ்தனைத் தெரிகிற ஒருவன்: "அன்னாஸ்! கடவுள் உம்மைத் தேற்றுவாராக!" என்கிறான். இத்திருடர்களை வழிநடத்தி வந்த இத்துஷ்டனை உத்யோகஸ்தன் என்றழைப்பது சரியாகாது. அவன் மேலும் தொடர்ந்து: "இதோ குற்றவாளி! இஸ்ராயேலின் பாவத்திலிருந்து அது கழுவப்படும்படியாக இவனை பரிசுத்தர் உம்மிடம் ஒப்படைக்கிறேன்" என்கிறான்.

"உன்னுடைய மதியூகத்திற்கும் விசுவாசத்திற்கும் கடவுள் உன்னை ஆசீர்வதிப்பாராக!" என்கிறான் அன்னாஸ்.

அரிய மதியூகம்! ஜெத்சமெனியில் சேசுவின் குரலே அவர்களைக் கீழே விழத்தாட்டப் போதுமாயிருந்தது!

"யார் நீ?" அன்னாஸ் கேட்கிறான்.

"நசரேயனாகிய சேசு. ராபி. கிறீஸ்து. என்னை நீர் அறிவீர். இருளிலே நான் எதுவும் செய்யவில்லை."



"இருளிலே செய்யவில்லைதான். ஆனால் நீ தெளிவில்லாத போதனைகளால் மக்கள் கூட்டங்களை வழி தவற நடத்தியிருக்கிறாய். ஆபிரகாமின் பிள்ளைகளுடைய ஆன்மாக்களைக் காப்பாற்றுவது தேவாலயத்தின் உரிமையும் கடமையுமாகும்."

"ஆன்மாக்கள்! இஸ்ராயேலின் குருவே, இந்த மக்களுள் மிகச் சிறிய, அல்லது மிகப் பெரிய ஆன்மாவிற்காக நீர் நோவுற்றதாகக் கூற முடியுமா?"

"நீ? நோவு என்று சொல்லப்படக் கூடியதாக நீ என்ன செய்திருக்கிறாய்?"

"நான் என்ன செய்தேன்? என்னைக் கேட்பானேன்? இஸ்ராயேல் முழுவதும் என்னைப் பற்றிக் கூறுமே. பரிசுத்த பட்டணத்திலிருந்து மிக வறிய கிராமம் வரை. கற்களும் கூட நான் என்ன செய்தேன் என்று கூறுகின்றன. நான் குருடர்களுக்குப் பார்வையளித்தேன். கண் பார்வையும், இருதயப் பார்வையும். செவிடர்களின் காதுகளைத் திறந்தேன். பூமியின் குரல்களுக்கும் மோட்சக் குரல்களுக்கும். முடவர்களையும், வாதரோகிகளையும் நடக்க வைத்தேன். அவர்கள் மாம்சத்தை விட்டுப் புறப்பட்டு கடவுளை நோக்கி நடக்கவும், அதன்பின் தங்கள் உள்ளங்களால் முன்னேறிச் செல்லும்படியாகவும். குஷ்டரோகிகளைச் சுத்தமாக்கினேன் – மோயீசனின் சட்டத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள குஷ்டரோகத்திலிருந்தும், மனிதனைக் கடவுளின் பார்வையில் அசுத்தனாக்கும் குஷ்டமாகிய பாவத்திலிருந்தும். இறந்தவர்களை உயிர்ப்பித்தேன். ஆனால் ஒரு சரீரத்தை மறுபடியும் உயிருக்குக் கொண்டு வருவதை நான் ஒரு பெரிய காரியமாகச் சொல்லவில்லை. ஆனால் ஒரு பாவியை இரட்சிப்பது பெரிய காரியம். அதை நான் செய்தேன். ஏழைகளுக்கு உதவினேன். பேராசை படைத்த செல்வந்தரான எபிரேயருக்கு நம் அயலானை நேசிக்க வேண்டிய புனித கட்டளையைப் படிப்பித்தேன். என் கரங்கள் வழியாக ஒரு பொன் ஓடையே பாய்ந்த போதிலும் நான் ஏழையாகவே இருந்து செல்வங்கள் வைத்திருக்கிற உங்களனைவரையும் விட கூடுதலான கண்ணீர்களைத் துடைத்தேன். இறுதியாக பெயரிடப்படாத ஒரு செல்வத்தை நான் கொடுத்தேன்: வேதப் பிரமாணத்தைப் பற்றிய அறிவு – கடவுளைப் பற்றிய அறிவு – நாம் அனைவரும் சமமாயிருக்கிறோம் என்ற நிச்சயிப்பு: அதாவது, குற்றங்களும்

கண்ணீர்களும். அவை சதுர்பாக ஆளுநரால் அல்லது பெரிய குருவால் செய்யப்பட்டாலோ சிந்தப்பட்டாலோ, அல்லது பிச்சைக்காரனுல் அல்லது வண்டிப் பாதையில் சாகிற ஒரு குஷ்டரோகியால் அவை நடைபெற்ருலோ, அவை பரம பிதாவின் புனித பார்வையில் சமமாகவே உள்ளன. நான் செய்தவை இவை தவிர வேறெதுவுமில்லை.''

''நீ உன்னையே குற்றஞ் சாட்டுகிருய் என்பதை உணருகிருயா? நீ சொல்கிருய்: கடவுளின் பார்வையில் ஒருவனை அசுத்தனுக்குகிற குஷ்டரோகம் மோயீசனுல் சுட்டிக் காட்டப்படவில்லை என்று. நீ மோயீசனை நிந்திக்கிருய். அவருடைய பிரமாணத்தில் சில குறைபாடுகள் இருப்பதாக குறிப்பால் உணர்த்துகிருய்...''

''அது அவருடைய பிரமாணமல்ல. அது கடவுளுடையது. அது அப்படித்தான். சரீரத்தின் நிர்ப்பாக்கியமாயிருந்து ஒரு முடிவிற்கு வருகிற குஷ்டரோகத்தை விட பெரிய நிர்ப்பாக்கியமாக இருக்கிறது பாவம் என்று நான் சொல்கிறேன். அது ஆன்மாவின் நித்திய நிர்ப்பாக்கியமாகும்.''

''நீ பாவங்களை மன்னிக்க முடியும் என்று சொல்லத் துணிகிருயா? எப்படி உன்னுல் கூடும்?''

''கொஞ்சம் சுத்திகரிக்கும் தண்ணீரைக் கொண்டும் செம்மறிக் கடாவின் பலியைக் கொண்டும் பாவத்தை ரத்துச் செய்வது சட்டபூர்வமானதும் நம்பக் கூடியதுமாகில், அவற்ருல் பாவம் பரிகரிக்கப்பட்டு துப்புரவாக்கப்படுமாகில், என் இரத்தமும் என் சித்தமும் அப்படி ஏன் செய்ய முடியாது?''

''ஆனுல் நீ இன்னும் செத்து விடவில்லையே! இரத்தம் எங்கேயிருக்கிறது?...''

''நான் இன்னும் சாகவில்லை. ஆனுல் நான் சாவேன். ஏனென்ருல் அது எழுதப்பட்டிருக்கிறது. மோட்சத்தில் சீயோன் தோன்றுமுன்னே – மோயீசன் வருமுன்னே – யாக்கோபுக்கு முன்னே – ஆபிரகாமுக்கு முன்னே – தீமையின் அரசன் மனிதனுடைய இருதயத்தில் கடித்து அதை அவனிடத்திலும், அவன் சந்ததியிடத்திலும் வி மேறச் செய்ததிலிருந்தே அது எழுதப்பட்டுவிட்டது. அது பூமியில் தீர்க்கதரிசிகளின் குரல்களைக் கொண்டிருக்கிற புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது. அது இருதயங்களில் எழுதப்பட்டிருக்கிறது. உம்முடைய



இருதயத்திலும், கைப்பாஸின் இருதயத்திலும் ஆலோசனைச் சங்கத்தாரின் இருதயங்களிலும் எழுதப்பட்டிருக்கிறது. அவர்கள் – இல்லை, அந்த இருதயங்கள் நான் நல்லவனுயிருப்பதை மன்னிக்கவில்லை. நான் என் இரத்தத்தின் மூலமாக அவர்களை முன்கூட்டியே மன்னித்து விட்டேன். இப்பொழுது நான் என் இரத்தத்தின் சுத்திகரிக்கும் குளிப்பால் அந்த மன்னிப்பை நிறைவேற்றுவேன்.''

''நாங்கள் பேராசை பிடித்தவர்கள், சிநேகக் கட்டளையை ஒதுக்குகிறவர்கள் என்று சொல்கிருய்...''

''அது ஒருவேளை உண்மையில்லையோ? எதற்காக என்னைக் கொலை செய்கிறீர்கள்? உங்களை நான் பதவியிறக்கி விடுவேன் என்று பயப்படுகிறீர்கள். ஓ! அப்படிப் பயப்படாதீர்கள்! என் இராச்சியம் இவ்வுலகத்தைச் சார்ந்ததல்ல. எல்லா அதிகாரங்களுக்கும் உரிமையாளர்களாக உங்களை விட்டு விடுகிறேன். உங்களை இடி தாக்கி விழச் செய்கிற ''நிறுத்துங்கள்'' என்ற சொல்லை எப்பொழுது சொல்வதென்று நித்தியர் அறிவார்.''

''டோராஸைப் போல, என்ன?''

''டோராஸ் மோட்ச மின்னல் தாக்குதலால் அல்ல. அவனுடைய கோபம் மூண்ட தாக்குதலால் இறந்தான். அவனை அடிக்க கடவுள் மறுபுறத்தில் காத்து நின்ருர்.''

''அவருடைய உறவினனை என்னிடம் இதை நீ திருப்பிச் சொல்கிருயா? உனக்கு என்ன துணிச்சல்?''

''நானே சத்தியம். சத்தியம் ஒரு போதும் கோழையாயிராது.''

''ஆங்காரி! முட்டாள்!''

''அல்ல. நேர்மையுள்ளவன். உம்மை நான் நோகச் செய்ததாகக் குற்றஞ் சாட்டுகிறீர். ஆனுல் நீங்கள் எல்லோரும் பகைக்கவில்லையா? நீங்கள் ஒருவரையொருவர் பகைக்கிறீர்கள். இப்பொழுது என் மேலுள்ள பகை உங்களை ஒற்றுமைப்படுத்துகிறது. ஆனுல் நாளை என்னை நீங்கள் கொன்ற பிறகு, மறுபடியும் ஒருவரையொருவர் அதிகக் கொடூரமாய்ப் பகைப்பீர்கள். அந்தக் கழுதைப் புலியை உங்கள் முதுகிலும், அந்தப் பாம்பை உங்கள் இருதயத்திலும் கொண்டு வாழ்வீர்கள். நான் அன்பைப் போதித்தேன். உலகத்திற்காக ஜனங்கள் பேராசைப்படாமலும்

இரக்கத்துடனும் இருக்க கற்பித்தேன். எதைப் பற்றி என்னைக் குற்றஞ் சாட்டுகிறீர்?''

''நீ ஒரு புதுப் போதனையைப் போதிப்பதாக.''

''ஓ குருவே! இஸ்ராயேலில் புதுப் போதகங்கள் மலிந்திருக்கின்றன. எஸ்ஸீன்கள் தங்கள் போதனைகளையும், சாதோக்கேயர்கள் தங்கள் போதனையையும், பரிசேயர்கள் தங்கள் போதனைகளையும் போதிக்கிறார்கள். ஒவ்வொருவருக்கும் ஒரு இரகசிய போதனை உள்ளது. ஒருவருக்கு அது சுகபோகம்; இன்னொருவருக்கு பொன்; மற்றொருவருக்கு அதிகாரம். எல்லாருக்கும் தங்கள் விக்கிரங்களும் உள்ளன. எனக்கோ எதுவுமில்லை. நான் நித்திய கடவுளான என் பிதாவின், கீழே போட்டு மிதிக்கப்படுகிற திருச்சட்டத்தை மீண்டும் கொண்டு வருகிறேன். பத்துக் கற்பனைகளின் பத்துக் கட்டளையும் மீண்டும் ஒரு எளிய முறையில் எடுத்துக் கூறி வருகிறேன். அவற்றை இப்போது அறியாமற் போன இருதயங்களில் அவை புகும்படியாக என் குரல் கிழியப் பேசி வருகிறேன்.''

''கொடூரம்! தேவதூ□ணம்! குருவாகிய என்னிடம் இதை எப்படி சொல்லத் துணியலாம்? இஸ்ராயேலுக்குத் தேவ ஆலயம் இல்லையா? பபிலோனிய அடிமைத்தனத்தில் இருந்தவர்களைப் போலவா நாம் இருக்கிறோம்? எனக்குப் பதில் சொல்!''

''அப்படித்தான் நீங்கள் இருக்கிறீர்கள். ஏன், அதை விட அதிகமாகவே. ஒரு தேவாலயம் இருக்கிறது. ஆம். ஒரு கட்டிடம். ஆனால் தேவன் அங்கில்லை. தம் வீட்டிலிருக்கிற அருவருப்பைப் பற்றி அவர் வெளியேறி விட்டார். சரி, என் மரணம்தான் தீர்மானிக்கப்பட்டு விட்டதே. ஏன் இத்தனை கேள்விகள்?''

''நாங்கள் கொலைகாரர்கள் அல்ல. எங்களுக்கு அதிகாரம் இருந்தால், ஒரு அப்பட்டமான குறறத்திற்காக நாங்கள் கொல்வோம். ஆனால் உன்னை நான் காப்பாற்ற விரும்புகிறேன். நீ எனனிடம் சொல். உன்னைக் காப்பாற்றுகிறேன். உன் சீடர்களை எங்கே? அவர்களை என்னிடம் ஒப்படைத்தால் உன்னை விட்டுவிடுவேன். அவர்களின் பெயர்களைச் சொல். நிககோதேமுஸ் உன்னுடையவர்களுள் ஒருவரா? சூசை? கமாலியேல்? எலயசார்?... எலயசாரைப் பற்றி எனக்கு ஏற்கெனவே தெரியும்... அதனால் அவசியமில்லை. பேசு! பேசிச் சொல்! உன்னைக் கொல்லவும் உன்னைக் காப்பாற்றவும்



என்னால் கூடுமென்பது உனக்குத் தெரியும். என்னிடம் அதிகாரம் உள்ளது.''

''நீர் சதுப்பு நிலம். ஐந்தாம் படை வேலையை அதனிடமே நான் விட்டு விடுகிறேன். நான் ஒளியாக இருக்கிறேன்.''

அப்போது ஒரு சேவகன் ஆண்டவருடைய முகத்தில் அறைகிறான்.

''நான் ஒளியாயிருக்கிறேன். ஒளியும், உண்மையும். நான் உலகத்திற்கு பகிரங்கமாகப் பேசினேன். யூதேயர்கள் கூடிவரும் ஜெபக் கூடங்களிலும் தேவாலயத்திலும் நான் போதித்தேன். நான் எதையும் மறைவாய்ப் பேசவில்லை. மீண்டும் சொல்கிறேன். நீர் என்னிடம் கேட்பானேன்? நான் என்ன சொன்னேன் என்பதைக் கேட்டவர்களிடம் நீர் கேளும். அவர்கள் அறிவார்கள்.''

இன்னொரு சேவகன் அவர் முகத்தில் அறைந்து: ''இப்படியா நீ பெரிய குருவுக்குப் பதிலளிக்கிறாய்?'' என்கிறான்.

''நான் அன்னாஸிடம் பேசுகிறேன். கைப்பாஸ்தான் பெரிய குரு. இந்த மூப்பருக்குரிய மரியாதையோடுதான் நான் பேசுகிறேன். நான் ஏதும் தவறாகப் பேசியதாக நீ நினைத்தால் அதை எண்பி. அல்லாவிடில் ஏன் என்னை அடிக்கிறாய்?''

''அவனைச் சும்மா விடுங்கள். நான் கைப்பாஸிடம் போகிறேன். நான் சொல்லுகிற வரையிலும் அவனை இங்கே வைத்திருங்கள். அவன் யாரிடமும் பேசாதபடி பார்த்துக் கொள்ளுங்கள்'' என்று கூறிய அன்னாஸ் வெளியே போகிறான்.

சேசு பேசவில்லை. கூலிப்பட்டாளமான முரடர்களின் கூட்டத்தையும் சட்டை பண்ணாமல் துணிந்து கதவண்டை நிற்கிற அருளப்பரிடம் கூட பேசவில்லை. ஆயினும் வார்த்தை பேசாமலே சேசு, அருளப்பருக்குக் கட்டளை ஏதோ கொடுத்திருக்க வேண்டும். ஏனென்றால் அருளப்பர் அவரைத் துயரமாகப் பார்த்து விட்டு அங்கிருந்து போய்விடுகிறார். என் கண்ணில் அவர் படவில்லை.

சேசு தம்மை வதைப்பவர்களுடன் இருக்கிறார். கயிறுகளால் அடியும், எச்சிலும், நிந்தைகளும், உதைகளும், முடியைப பிய்த்தலும்தான் அவருக்குக் கிடைத்தன. அப்போது ஒரு ஊழியன் வந்து சேசுவைக் கைப்பாஸின் வீட்டுக்குக் கொண்டுபோகும்படி

சொல்கிறன்.

சேசு கட்டுண்டவராய், துன்புறுத்தப்பட்டவராய் மீண்டும் மண்டபத்திற்கு வருகிறர். அதன் வாசலைக் கடந்து ஒரு கூடத்திற்கு வருகிறர். அதைக கடந்து ஒரு முற்றத்திற்கு வருகிறர். அங்கே அநேகர் ஒரு நெருப்புப் பக்கத்தில் குளிர் காய்ந்து கொண்டிருக்கிறர்கள். ஏனென்றல் சாமம் கடந்து வெள்ளிக்கிழமையின் முதல் மணிகளில் குளிர் அதிகமாயும், காற்றடித்தபடியும் உள்ளது. இராயப்பரும் அருளப்பரும் அங்கே இருக்கிறர்கள். எதிரிகளின் கும்பலுள் கலந்திருக்கிறர்கள். அவர்கள் அங்கே இருப்பதற்கு உண்மையான தைரியம் இருந்திருக்க வேண்டும்... சேசு அவர்களைப் பார்க்கிறர். ஒரு மிக மெல்லிய புன்னகை. அடிபட்டதால் ஏற்கெனவே வீங்கியுள்ள உதடுகளில் காணப்படுகின்றது.

மண்டபங்கள், அறைகள், முற்றங்கள், கூடங்கள் வழியாக நீண்டு போகிறது நடை. ஆலயத்திலுள்ளவர்களின் வீடுகள் எப்படியோ உள்ளன.

கூட்டம் பெரிய குருவின் அடைப்பிற்குள் நுழையவில்லை. அன்னஸ் வீட்டின் நுழைவு அறைக்குள் கூட்டம் தள்ளப்படுகிறது. சேசு சேவகர்களுடனும், குருக்களுடனும் தனியே போகிறர். அவர் ஒரு பெரிய சாலைக்குள் நுழைகிறர். அந்தச் சாலையின் மூன்று பக்கங்களிலும் குதிரை லாட வடிவில் போடப்பட்டுள்ள பல இருக்கைகளின் காரணமாக, அது தன் நீண்ட சதுர வடிவை இழந்து காணப்படுகிறது. நடுவில் இடம் காலியாக உள்ளது. அங்கே இரண்டு மூன்று ஆசனங்கள் மேடைகளில் போடப்பட்டுள்ளன.

சேசு அந்த அறைக்குள் நுழையப் போகிற அதே நேரத்தில் கமாலியேல் வந்து சேர, இஸ்ராயேல் ராபியான அவருக்கு வழிவிடும்படி சேவகர்கள் சேசுவை பலமாகப் பின்னல் இழுக்கிறர்கள். ஆனல் கமாலியேல் நிமிர்ந்த மேரையாய் தன் நடையைத் தளர்த்தி சிலைபோல் நிற்கிறர். நின்றவர் உதடு அசைவது தெரியாமல் யாரையும் பாராமல், "நீர் யார்? எனக்குச் சொல்லும்" என்க, சேசு அன்புடன்: "தீர்க்கதரிசனங்களை வாசியும். உமக்குப் பதில் கிடைக்கும். அவற்றில் முதல் அடையாளம் கொடுக்கப்பட்டுள்ளது. மற்ற அடையாளம் இனி வரும்" என்று சொல்கிறர்.



கமாலியேல் தன் மேல் வஸ்திரத்தை சேர்த்துப் பிடித்தபடி உள்ளே போகிறர். சேசு அவருக்குப் பின்னல் செல்கிறர். கமாலியேல் ஒரு இருக்கை நோக்கிச் செல்ல, சேசுவை அறையின் நடுவில் பெரிய குருவின் முன்பாக இழுத்துக் கொண்டு போய் நிறுத்துகிறர்கள். பெரிய குரு கைப்பாஸ் ஒரு கயவனின் உருவமாகக் காட்சியளிக்கிறன்.

ஆலோசனைச் சங்க உறுப்பினர்களின் வருகைக்காகக் காத்திருக்கிறர்கள்.

அதன்பின் விசாரணை ஆரம்பமாகிறது. அப்போது இரண்டு மூன்று இருக்கைகள் காலியாயிருப்பதைக் கைப்பாஸ் கவனிக்கிறன். "எலயசாரை எங்கே? ஜோவானை எங்கே?" என்று கேட்கிறன்.

ஒரு இளைஞன், அவன் ஒரு வேதபாரகனயிருக்கும் என நினைக்கிறேன், எழுந்து பணிந்து கூறுகிறன்: "அவர்கள் வர மறுத்து விட்டார்கள். இதோ அவர்களின் கடிதம்."

"வைத்துக் கொள். அதைக் குறித்துக் கொள். அவர்கள் இதற்குப் பதில் சொல்வார்கள். இந்த மனிதனைப் பற்றி இந்த ஆலோசனைச் சங்கத்தின் புனித அங்கத்தினர்கள் என்ன சொல்லுகிறீர்கள்?"

"நான் சொல்கிறேன். என் வீட்டிலிருக்கையில் இவன் சாபத் ஓய்வை மீறினன். நான் பொய் சொல்லவில்லை என்பதற்கு கடவுள் சாட்சியாயிருக்கிறர். இஷ்மாயேல் பென்ஃபாபி ஒருபோதும் பொய் கூறுவதில்லை."

"பிரதிவாதி! இது உண்மையா!"

சேசு மவுனமாயிருக்கிறர்.

"நன்றய் அறியப்பட்ட விபசாரிகளோடு இவன் வாழ நான் கண்டிருக்கிறேன். தான் ஒரு தீர்க்கதரிசி என்று நடித்து தான் பதுங்கும் இடத்தை விலைமாதரின் இடமாக்கினன். பற்றாததற்கு, அஞ்ஞான ஸ்திரீகளுடன் அவ்வாறு நடந்தான். சாதோக், காலேபோனு, அன்னஸின் நம்பிக்கையாளர் நாஹூம் ஆகியோர் என்னுடன் இருந்தனர். நான் சொல்வது உண்மை. சாதோக்! காலேபோனு! நான் கூறுவது பொய்யென்றல் நீங்கள் சொல்லுங்கள்!"

"அது உண்மை. மிக உண்மை."

அப்போது கைப்பாஸ் சேசுவைப் பார்த்து:

"நீ என்ன சொல்லுகிறுய்?"

சேசு மவுனமாயிருக்கிறுர்.

"இவன் நம்மை இழிவுபடுத்திப் பேசவும் நாம் பரிகசிக்கப்படவும் ஒரு சந்தர்ப்பத்தையும் தவற விடவில்லே. இவனுல் பொது ஜனங்கள் நம்மை விரும்புவதில்லே."

"அவர்கள் சொல்வதைக் கேட்கிறுயா? சங்கத்தின் புனித உறுப்பினர்களே நீ அவமரியாதை செய்துவிட்டாய்."

சேசு மவுனமாயிருக்கிறுர்.

"இவன் பேய்பிடித்த மனிதன். இவன் எஜிப்திலிருந்து தீரும்பிய பின் பில்லி சூனியம் செய்திருக்கிறுன்."

"அதை எப்படி எண்பிப்பாய்?"

"என் விசுவாசத்தின் மீது ஆணேயாக, பத்துக் கற்பனேப் பலகைகளின் மேல் ஆணேயாகச் சொல்கிறேன்."

"இது கனமான குற்றச்சாட்டு. நீ உன் குற்றமற்ற தன்மையை நிரூபி."

சேசு மவுனமாயிருக்கிறுர்.

"நீ தேவ ஊழியம் செய்வது சட்ட விரோதமானது. உனக்கது தெரியும். அதற்கு மரண தண்டனே. பேசு."

"நம்முடைய சங்கத்தின் இந்த அமர்வு சட்ட விரோதமானது. சிமியோன், எழுந்திரு, நாம் போவோம்" என்கிறார் கமாலியேல்.

"ராபி, உமக்குப் பைத்தியம் பிடித்து விட்டதா?"

"நான் ஒழுங்குகளே மதிப்பவன். நாம் செய்கிறது போல் நடவடிக்கை செய்வது அனுமதிக்கப்படாதது. இதற்கெதிராய் நான் பகிரங்க குற்றச்சாட்டு செய்வேன்" என்று கூறி கமாலியேல் சிலேயைப் போல் விறைப்பாக வெளியேறுகிறுர். அவரைப் போன்ற முகச் சாயலுள்ள சுமார் முப்பத்தைந்து வயதுடைய மனிதனும் அவரைப் பின்தொடர்ந்து போகிறுன்.

ஒரு சிறு சலசலப்பு ஏற்படுகிறது. நிக்கோதேமுஸும் அரிமத்தியா சூசையும் அதைப் பயன்படுத்தி வேதசாட்சியின் சார்பாகப் பேசுகிறுர்கள்.

"கமாலியேல் சரியாகச் சொன்னுர். நாம் கூடும் நேரமும்



இடமும் சட்ட விரோதமானவை. சொல்லப்படுகிற குற்றச்சாட்டுகள் பொருந்தவில்லே. இவர் வேதப் பிரமாணத்தைத் தகாத முறையில் புறக்கணிப்புச் செய்ததாக யாராவது இவர் மேல் குற்றஞ் சொல்ல முடியுமா? நான் இவரின் நண்பன். இவர் திருச்சட்டத்தை எப்போதும் மதித்தே வந்திருக்கிறுர் என்று நான் சத்தியம் செய்து கூறுகிறேன்" என்கிறுர் நிக்கோதேமுஸ்.

"நானும் அப்படியே செய்கிறேன். மேலும் இப்பழிக் குற்றத்திற்கு சம்மதிக்கவில்லேயென்பதற்காக நான் என் தலேயை மூடிக் கொள்கிறேன். அது இவருக்காக அல்ல. நமக்காக. இதோ நான் வெளியேறுகிறேன்" என்று சூசை எழுந்து புறப்படுகிறுர்.

அப்போது கைப்பாஸ் அலறுகிறுன்: "அப்படியா நீர் சொல்கிறீர்? சத்தியம் செய்துள்ள சாட்சிகள் வரட்டும்."

அங்கே சிறைக் கைதிகள் போல் தோற்றமளிக்கிற இரண்டு பேர் வருகிறுர்கள். மிரண்ட பார்வை. கொடிய சிரிப்பு, கபட நடத்தை.

"சொல்லுங்கள்!"

அப்போது சூசை குறுக்கிட்டு: "இருவர் கூறுவதையும் ஒரே சமயத்தில் கேட்பது சட்டத்திற்கு எதிரானது" என்று உரத்த குரலில் சொல்கிறுர்.

"பேசாதிரும்! நான் பெரிய குரு. நானே கட்டளே கொடுப்பவன்."

சூசை தம் கையால் மேசையை அடித்துச் சொல்கிறுர்: "பரலோக நெருப்பு உம்மேல் விழட்டும். இந்நேர முதல் மூப்பனுன சூசை ஆலோசனேச் சங்கத்தின் எதிரி. கிறீஸ்துவின் நண்பன். இதோ நான் உடனே சென்று நியாயாதிபதியிடம், உரோமையின் சம்மதம் இல்லாமல் இங்கே ஒரு மனிதன் மரணத் தீர்ப்பிடப்படுகிறுன் என்று அறிவிக்கிறேன்" என்று கூறி தம்மை நிறுத்த முயற்சிக்கிற ஒரு இளம் ஒல்லி வேதபாரகனேத் தள்ளி விட்டு வெளியே செல்கிறுர். வெளியே வரும்போது சேசுவின் முன் கடந்து செல்லும் அவர் சேசுவை உற்றுப் பார்க்கிறுர்...

இன்னுெரு சலசலப்பு. அவர்கள் உரோமைக்குப் பயப்படுகிறுர்கள். சேசுதான் எப்போதும் பரிகரிக்கும் பலிப்பொருள்.

''பார்! இதெல்லாம் உன் குற்றத்தாலேயே நடக்கிறது. மிகச் சிறந்த யூதேயர்களையும் கெடுக்கிறவனே! நீ அவர்களைக் கெடுத்து விட்டாய்.''

சேசு வாய் திறக்கவில்லை.

''சாட்சிகள் பேசட்டும்'' என்று கர்ஜிக்கிறான் கைப்பாஸ்.

''அதாவது, இவன்... எங்களுக்குத் தெரியும். அதை இவன் உபயோகித்தான்... அது... அது எது? அதற்கென்ன பெயர்?''

''நாலு கட்ட உருவமோ?''

''அதேதான்! நீர் சொன்னதுதான்! இவன் இறந்தவர்களை வரவழைத்தான். ஜனங்களை சாபத் நாளுக்கெதிராய் எழுப்பும்படி சொல்லிக் கொடுத்தான். பீடத்தை அவசங்கைப்படுத்த தூண்டி விட்டான். இதை சத்தியம் பண்ணிச் சொல்கிறோம். இவன் இந்தத் தேவாலயத்தை இடிக்க விரும்புவதாகவும், பின் அதைப் பசாசுக்களின் உதவியால் மூன்று நாளில் கட்டி விடுவதாகவும் கூறினான்.''

''இல்லை! அது மனிதனால் கட்டப்படாது என்று சொன்னான்.''

அப்போது கைப்பாஸ் தன் ஆசனத்திலிருந்து இறங்கி சேசுவிடம் வருகிறான். குட்டையான, மிதமிஞ்சிப் பருத்து அசிங்கமாக ஒரு மலரின் பககத்தில் ஒரு பெரிய தேரையைப் போல் காணப்படுகிறான். சேசு காயப்பட்டும், கிழிபட்டும் அசுத்தமாயும் கலைந்த தலையோடுமிருந்தாலும், எவ்வளவோ வடிவாயும், கம்பீரமாயுமிருக்கிறார்.

''நீ பதில் சொல்கிறதில்லையா? எவ்வளவு கொடிய குற்றச்சாட்டுகளை அவர்கள் உனக்கெதிராகக் கொண்டு வருகிறார்கள்! பேசி, இப்படிப்பட்ட வெட்கத்திலிருந்து உன்னையே விடுவித்துக் கொள்.''

சேசு பேசவேயில்லை. அவனை ஏறிட்டுப் பார்க்கிறார். ஆனால் வாய் திறக்கவில்லை.

''அப்படியென்றால் எனக்குப் பதில் சொல். நான் உன் னுடைய பெரிய குரு ஜீவியரான கடவுள்மேல் ஆணையிட்டுக் கேட்கிறேன். எனக்குப் பதில் சொல்: தேவ சுதனான கிறீஸ்து நீயா?''

''நீரே கூறிவிட்டீர். அவரே நான். மனித குமாரன்



பிதாவின் வல்லபத்தின் வலது புறம் வீற்றிருப்பதையும், வான மேகங்களில் வருவதையும் காண்பீர்கள். மேலும் நீர் என்னிடம் கேட்பானேன்? நான் வெளியரங்கமாக மூன்று வருடங்கள் பேசியிருக்கிறேன். நான் எதையும் இரகசியத்தில் கூறவில்லை. நான் சொன்னவற்றைக் கேட்டவர்களிடம் விசாரியும். நான் என்ன பேசினேன் என்பதையும், என்ன செய்தேன் என்பதையும் அவர்கள் சொல்லுவார்கள்.''

அப்போது அவரைப் பிடித்திருக்கிற சேவகன் ஒருவன் அவருடைய வாயில் அறைகிறான். அதிலிருந்து மறுபடியும் இரத்தம் வழிகிறது. ''சாத்தானே, இப்படித்தான் பெரிய குருவுக்குப் பதில் சொல்வதோ?'' என்று கத்துகிறான்.

சேசு முன்பு கூறியதுபோலவே இவனுக்கும் சாந்தமாய்ப் பதில் கூறுகிறார்: ''நான் உண்மையைப் பேசும்போது எதற்காக என்னை அடிக்கிறாய்? நான் ஏதாவது தவறாகப் பேசியிருந்தால் எதிலே நான் தவறினேன் என்று ஏன் சொல்லவில்லை? நான் மீண்டும் கூறுகிறேன்: நானே சர்வேசுரனின் குமாரனாகிய கிறீஸ்து. என்னால் பொய் சொல்லக் கூடாது. நானே பெரிய குரு. நித்திய குருவாயிருக்கிறேன். நான் மாத்திரமே மெய்யான குருவின் பட்டையை அணிந்திருக்கிறேன். அதில்: கொள்கையும் சத்தியமும் என்று எழுதப்பட்டிருக்கிறது. நான் இரண்டிற்கும் பிரமாணிக்கமாயிருக்கிறேன். மரணம் மட்டும் அப்படி இருக்கிறேன். என் மரணம் உலகின் பார்வையில் அவமானமாயிருக்கிறது. கடவுளின் பார்வையில் புனிதமாயிருக்கிறது. ஆனந்தமான உயிர்ப்பு வரையிலும் நானே அபி□கம் செய்யப்பட்டுள்ளேன். நான் தலைமைக் குருவும், அரசனுமாயிருக்கிறேன். நான் என் செங்கோலைக் கைக்கொள்ளப் போகிறேன். அதைக் கொண்டு, அந்தச் சுளகைக் கொண்டு, நான் கதிரடிக்கும் தரையைத் துப்புரவு செய்வேன். இந்த ஆலயம் அழிக்கப்பட்டு விடும். அது புதிதாகவும், புனிதமாகவும் மீண்டும் எழும்பும். ஏனென்றால் இந்த ஆலயம் கெட்டு விட்டது. கடவுள் அதை அதன் கதிக்கு கைவிட்டு விட்டார்.''

''தேவ தூ□ணன்!'' என்று அவர்கள் எல்லாரும் சேர்ந்து கத்துகிறார்கள்.

''நீ அதை மூன்று நாளில் செய்து விடுவாயோ? சில்லரைத்தனமான பேய்பிடித்தவனே.''

"இந்த ஆலயம் அல்ல. என்னுடைய – உணமைக்கடவுளின் – ஜீவியரான, புனிதரான, மும்முறையும் பரிசுத்தரான சர்வேசுரனுடைய ஆலயம் மீண்டும் எழும்பும்."

"சபிக்கபபட்டவன்!" என்று கூறி அவர்கள் மறுபடியும் கத்துகிறார்கள்.

அப்போது கைப்பாஸ் கொக்கரிக்கும் தன் குரலை உயர்த்தி, தன் சணலாடைகளை போலி கொடூரத்துடன் கிழித்துக் கொண்டு: "இனியும் சாட்சிகளிடமிருந்து நாம் கேட்க வேண்டியதென்ன? இவன் தேவ தூ□ணம் சொன்னானே! நாம் இப்போது என்ன செய்யலாம்?" என்கிறான்.

மற்ற எல்லாரும் ஒரே குரலாய்: "இவன் சாவுக்குத் தகுதியாயிருக்கிறான்" என்கிறார்கள். ஏராளமான, துர்மாதிரிகை அடைந்தவர்களைப் போன்ற அங்க அசைவுகளுடன் அவர்கள் அந்த அறையை விட்டு வெளியே போகிறார்கள். சேசுவோ காவல் சேவகருக்கும், பொய்ச் சாட்சிகளின் கும்பலுக்கும் கையளிக்கப்படுகிறார். அவர்கள் அவரை அடித்து, முகத்தில் அறைந்து, அவர் மேல் துப்பி, ஒரு கந்தையால் அவர் கண்களைக் கட்டி, அவர் முடிகளை வேகமாய் பற்றியிழுத்து, கை கட்டுண்ட அவரை இங்குமங்கும் தள்ளி விடுவதால், அவர் மேசைகள், நாற்காலிகள், சுவர்கள் மீது மோதுகிறார். அப்போது அவர்கள்: "உன்னை அடித்தது யார்? சொல் பார்க்கலாம்" என்கிறார்கள். அநேக தடவை அவரை இடறச் செய்து, முகம் தரைப்பட விழத்தாட்டி, மறுபடியும் கட்டிய கரங்களோடு எப்படி அவர் எழுந்திருக்க மாட்டாமலிருக்கிறார் என்பதைப் பார்த்து விலாப் புடைக்க சிரிக்கிறார்கள்.

சில மணி நேரம் இவ்வாறு கடருகின்றது. களைத்துப் போன அவர்கள் கொஞ்சம் ஓய்வெடுக்க எண்ணுகிறார்கள். கைப்பாஸின் அரண்மனை அடைப்பின் பல முற்றங்களில் ஏற்கெனவே கூடி நிற்கும் கூட்டத்தின் நிந்தைகளுக்கு நடுவே சேசுவை நடத்திச் சென்று ஒரு குகை போன்ற அறையில் அடைக்க கொண்டு போகிறார்கள்.

சேசு அரண்மனை முற்றத்திற்கு வருகிறார். அங்கே நெருப்புக்கருகில் இராயப்பர் இருக்கிறார். சேசு இராயப்பரைப் பார்க்கிறார். ஆனால் இராயப்பர் அவரைக் காணவில்லை . அருளப்பர் அங்கே இல்லை. என்னால் அவரைக் காணக்



கூடவில்லை. அவர் நிக்கோதேமுஸுடன் போயிருக்கிறார் என நினைக்கிறேன்...

உதய காலையாகிறது. ஆகாயம் பசுமை நிறமாகிறது. அப்போது ஓர் உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது: கைதியை சங்கம் கூடிய அறைக்கு கூடுதல் சட்டபூர்வமான விசாரணைக்குக் கொண்டு போகும்படி. அச்சமயம்தான் இராயப்பர் தனக்கு கிறீஸ்துவைத் தெரியாது என்று மூன்றாம் முறையாக மறுதலிக்கிறார். அந்நேரம்தான் சேசு அந்தப் பக்கம் கடந்து செல்கிறார். அவருடைய வேதனைகளின் அடையாளங்கள் காணப்படுகின்றன. அந்தப் பசுமை கலந்த உதய வெளிச்சத்தில் சேசுவின் வெளிறிய முகத்தின் காயங்கள் மேலும் பயங்கரமாகத் தெரிகின்றன. அவருடைய கண்கள் குழிவிழுந்து மங்கியிருக்கின்றன. உலகத்தின் துயரத்தால் தொய்வடைந்த சேசு...

அதிகாலையின் உதய வேளையில் ஆகாயம் சலனமடையத் தொடங்குகிறது. அதைக் கிழித்துக் கொண்டு கேட்கிறது ஒரு ஏளனமாய்க் குத்திக் காட்டும் குறும்புத்தனமான சேவலின் கூவுதல். அந்நேரம் கிறீஸ்து அங்கு வருகிறார். ஒரே மவுனம் எங்கும். அப்போது கேட்கிறது இராயப்பரின் கரகரத்த குரல்: "ஸ்திரீயே, நான் ஆணையிட்டுச் சொல்கிறேன்: அம்மனிதனை நான் அறியேன்." இந்த உறுதியான, தீர்மானமாய்ச் சொல்லப்பட்ட வாக்கிற்கு உடனே பதில் கொடுக்கிறது பரிகசிக்கிற ஆணவமான சேவலின் கூவுதல்.

இராயப்பர் அதிர்ச்சியடைகிறார். அங்கிருந்து ஓடி விடும்படி திரும்புகிறார். அங்கே சேசு தமக்கெதிரே நிற்கக் காண்கிறார். அளவற்ற இரக்கத்துடன் சேசு அவரைப் பார்க்கிறார். அது எவ்வளவு ஆழமான துயரப் பார்வையென்றால் என் இருதயம் உடைகிறது. அதற்குப் பின் என் சேசு எக்காலத்திற்கும் மறைந்து விட வேண்டும் போலிருக்கிறது. இராயப்பர் அழுது கொண்டே தள்ளாடியபடி வெளியே செல்கிறார். தெருவிற்குப் போகிற இரு ஊழியர்கள் பின்னால் ஓடுகிறார்கள். அரை இருட்டாயிருக்கிற தெருவில் மறைந்து விடுகிறார்.

சேசுவை மறுபடியும் அந்நீண்ட அறைக்குள் கொண்டு செல்கிறார்கள். கண்ணி வைக்கிற கேள்வியான: "மெய்யங் கடவுளின் நாமத்தினால் எங்களுக்குச் சொல்: நீ கிறீஸ்துவா?" என்பதை பல்லவி போல் மீண்டும் மீண்டும் கேட்கிறார்கள். முந்திக்

கிடைத்த அதே பதில் கிடைப்பதால் அவர்கள் அவருக்கு மரணத் தீர்ப்பிட்டு அவரை பிலாத்துவிடம் கொண்டு போகக் கட்டளையிடுகிறார்கள்.

சேசுவைச் சுற்றிலும் அன்னாஸ், கைப்பாஸ் தவிர அவருடைய எதிரிகள் சூழ்ந்து வர, அவர் மீண்டும் அந்த மண்டபங்கள் வழியாகச் செல்கிறார். அந்த இடங்களிலே அவர் எத்தனையோ தடவை போதித்திருக்கிறார். ஜனங்களுக்கு உதவியிருக்கிறார். சௌக்கியம் கொடுத்திருக்கிறார். காவல் செய்யப்பட்டுள்ள அடைப்புகளைத் தாண்டி பட்டணத்தின் தெருக்கள் வழியாக நடத்தப்படுகிறார். நடத்தப்படுகிறார் என்பதைவிட, இழுத்துச் செல்லப்படுகிறார் என்று சொல்ல வேண்டும். அப்படியே பட்டணத்தை நோக்கி இறங்குகிறார். வானம் உதய வேளையைக் காட்டும் இளஞ் சிவப்பாயிருக்கிறது.

சேசுவை கூடுதல் நேரம் வதைப்பதற்காகவே அவரை அவர்கள் ஜெருசலேமைச் சுற்றி நெடுந்தூரம் கஷ்டமாக நடக்கச் செய்கிறார்களென நினைக்கிறேன். வேணுமென்றே. பாஸ்காப் பண்டிகை சமயத்தில் ஜனங்கள் நிரம்பிய விடுதிகள், சந்தைகள், மிருக சாலைகளைக் கடந்து செல்ல வைக்கிறார்கள். சந்தைக் கடைகளில் அழுகிய காய்கறிகளும், மிருக சாலைகளில் மிருகங்களின் சாணமும் மாசற்றவர்மேல் வீசப்படும் பொருள்களாகின்றன. அவருடைய முகத்தில் வர வர பெரிய கீறல்களும் இரத்தம் வடியும் சிறு வெட்டுகளும் காணப்படுகின்றன. பற்பல அசுத்தப் பொருள்கள் அம்முகத்தில் திரை போல் படர்ந்துள்ளன. அவருடைய தலை உரோமம் இரத்த வியர்வையால் ஏற்கெனவே பாரமாகி சற்று விறைப்பாகியுள்ளது. அது நிறம் மங்கி கலைந்து தொங்குகிறது. வைக்கோல் துண்டுகளும் அசுத்தங்களும் தெளிக்கப்பட்டிருக்கின்றன. அதை அவர்கள் அவருடைய முகத்தை மூடும்படி விரித்து விடுவதால் அது கண்களை மறைக்கிறது.

சந்தைக் கடைகளில் இருக்கிறவர்கள், வாங்குகிறவர்கள், விற்கிறவர்கள் எல்லாவற்றையும் விட்டு விட்டு, பரிதாப மனிதன் பின்னால் செல்கிறார்கள். அது அன்பினாலல்ல. மிருகங்களைப் பராமரிக்கிறவர்களும், விடுதிகளின் ஊழியர்களும், அவர்களுடைய எஜமாட்டிகளின் கட்டளைகளையும், கூப்பிடுதல்களையும் சட்டை செய்யாமல் மொத்த மொத்தமாய்



வெளியேறி வருகிறார்கள். அந்த எஜமாட்டிகள் எல்லாப் பெண்களையும் போலவே அவருக்குச் செய்யப்படுகிற நிந்தைகளை எல்லாரும் எதிர்க்காவிட்டாலும், அந்தக் குழப்ப கூச்சல்களைப் பற்றி நிர்க்கவலையாயிருக்கிறார்கள். அவர்கள் அத்தனை வாடிக்கைக்காரர்களுக்கும் தாங்களே பரிமாற வேண்டியுள்ளதே என்று முணுமுணுத்தபடி பின்வாங்கிச் செல்கிறார்கள்.

இப்படியாக அந்த கூச்சலிடும் கும்பல் வர வர கூடுகிறது. மனங்களும், முக பாவனைகளும் மாறுகின்றன. ஒரு திடீர் கொள்ளை நோய் பரவியது போலிருக்கிறது. மனங்கள் பாதகர்களின் மனங்களாகவும், முகங்கள் பகையால் பச்சையாகி கோபத்தால் சிவந்து கொடூர முகமூடிகள் போலவும் காட்சியளிக்கின்றன. கைகள் நகங்களாகவும், வாய்கள் ஓநாய் வாய்களையும் போலாகி ஊளையிடுகின்றன. கண்கள் கபட பார்வை பார்த்துச் சிவந்து பைத்தியங்களைப் போல சோங்கண்களாகின்றன. சேசு மட்டும் மாறாமல் அப்படியே இருக்கிறார். ஆனால் இதற்குள் அவர் உடல் முழுவதும் அசுத்தம் தெளிக்கப்பட்டுவிட்டது. அவருடைய அங்கங்கள் கீறல்களினாலும் வீக்கத்தினாலும் உருவமிழந்து விட்டன.

தெருவைச் சுருங்க வைக்கிற ஒரு கவான் உள் வளைவில் அவர்கள் வருகிறார்கள். நடை தடுக்கப்பட்டு வேகம் குறைகிறது. அப்பொழுது: "சேசு!" என்றொரு குரல் ஆகாயத்தைப் பிளக்கிறது. அது இடையனாகிய எலியாஸ். கையில் ஒரு கனத்த தடியை அசைத்தபடி வருகிறான். வயதான, வலுவுள்ள, பயமூட்டக் கூடிய பலசாலியான அவன் ஏறக்குறைய சேசுவின் பக்கத்தில் வந்து விட்டான். ஆனால் அந்தக் கும்பல் முதலில் தளர்ந்தாலும், பின் நெருக்கி வந்து இடம் விடாமல் அடைத்துக் கொள்கிறது. அவனை மேற்கொண்டு அந்த தனிப்பட்ட சீடனை பின்னால் தள்ளி விடுகிறது. அப்பெருங் கூட்டத்துடன் அவன் போராடுகிறான். "ஆண்டவரே!" என்று அலறுகிறான். ஆனால் கூட்டத்தின் சுழற்சி மையம் அவனை உள் இழுத்து, வெளியே தள்ளி விடுகிறது.

"நீ போ... என் தாய்... உன்னை ஆசீர்வதிக்கிறேன்..."

கூட்டம் அந்த ஒடுக்கமான பாதையைத் தாண்டிச் செல்கிறது. அணையில் அடைபட்ட தண்ணீர் திறந்த வெளியைக் கண்டதும் இரைந்து பாய்வது போல், கூட்டம் ஒரு பரந்த வீதியில் வந்ததும் கூச்சலிட்டுக் கொண்டு பாய்கிறது. அந்த வீதி இரு

குன்றுகளின் நடுவிலுள்ள திறந்த வெளியில் அமைந்துள்ளது. அதன் ஓரங்களில் பணக்காரர்களின் விநோதமான கட்டிடங்கள் அமைந்துள்ளன.

இப்பொழுது நான் தேவாலயத்தை அதன் குன்றின் உச்சியில் மீண்டும் காண்கிறேன். பட்டணம் முழுவதும் சேசுவைப் பரிகசிக்கும்படியாகவும், எல்லாரும் அவரை நிந்திக்கும் படியாகவும் அவரை ஊரைச் சுற்றி இழுத்துக் கொண்டு போயிருக்கிறார்கள் என்பதை நான் கண்டுபிடிக்கிறேன். ஒவ்வொரு அடிக்கும் நிந்திக்கிறவர்களின் எண்ணிக்கை கூடுகிறது. பயணம் புறப்பட்ட இடத்துக்கே மீண்டும் வந்து சேர்கிறது.

ஒரு கட்டிடத்திற்குள்ளிருந்து ஒரு குதிரை வீரன் பாய்ச்சலில் வருகிறான். ஊதா நிறத்தில் அணிமணி பூட்டிய அவனுடைய வெள்ளை அராபியக் குதிரையும், அதன் பிரமிக்கத்தக்க தோற்றமும், அவனுடைய உருவிய வாளின் தட்டைப் பாகமும், நுனியும் பட்டு, இரத்தம் வடியும் தலைகளும் அவனை ஒரு அதிதூதரைப் போல் காட்டுகின்றன. வலமும் இடமும் பின்னங்காலில் துள்ளிப் பாயும் அக்குதிரை, தன்னையும் தன் எஜமானையும் தன் குளம்புகளாலேயே காத்துக் கொள்வதோடு அவற்றையே கூட்டத்தினூடே செல்வதற்கும் பயன்படுத்திக் கொள்கிறது. குதிரை வீரனுடைய தலையில் பொன் இடுக்கியால் மாட்டப்பட்டிருந்த ஊதாவுடன் பொன் நிறங் கலந்த துகிலைக் கீழே விழத்தாட்டுகிறது. அது மனேயன் என நான் கண்டுபிடிக்கிறேன்.

"திரும்புங்கள்! சதுர்பாக ஆளுநனின் ஒய்வை எப்படி உலைக்கத் துணிந்தீர்கள்?" என்று அவன் கத்துகிறான். ஆனால் இதெல்லாம் அவன் இப்படித் தலையிட்டதை நியாயப்படுத்தி சேசுவிடம் போய்ச் சேர அவன் கையாண்ட உத்தியே. "இந்த மனிதனை... அவரை நான் பார்க்கட்டும்... ஒதுங்கி நில்லுங்கள்... இல்லாவிடில் நான் காவல் சேவகரைக் கூப்பிடுவேன்..." என்கிறான்.

ஜனங்கள் அவனுடைய வாளின் பின்புறத்தால் தாக்கப்பட்டதாலும், குதிரையின் உதைகளாலும் குதிரை வீரனின் பயமுறுத்தல்களாலும் விலகி விடுகிறார்கள். அதனால் சேசுவும் அவரைப் பிடித்திருக்கிற ஆலய சேவகரும் நிற்கிற இடத்திற்கு வந்து சேர மனேயனால் கூடுமாயிருக்கிறது.



"போங்கள்! உங்களை விட சதுர்பாக ஆளுநன் முக்கியமானவன். அசுத்த கூலிக்காரரே, போங்கள். அவரிடம் நான் பேச வேண்டும்." மனேயன் மிக இரக்கமற்ற சிறைக் காவலனை நோக்கிப் பாய்ந்து தன் வாளை வீசி அதில் வெற்றி பெறுகிறான்.

"குருவே!..." என்கிறான் மனேயன்.

"நன்றி உனக்கு. ஆனால் நீ போய்விடு! கடவுள் உனக்கு ஆறுதலளிப்பாராக!" என்று கூறிய சேசு, கட்டப்பட்ட தம் கரங்களை முடிந்த மட்டும் ஆசீர்வதிக்கிற பாவனையாய் அசைக்கிறார்.

கூட்டம் தள்ளி நின்று சீறுகிறது. மனேயன் பின்வாங்கிப் போவதைக் கண்டவுடன், தாங்கள் பின்னால் தள்ளப்பட்டதற்குப் பழி வாங்குவதற்காக கற்களையும், குப்பைகளையும் வாரி, கைதியின் மேல் வீசி எறிகிறது.

அந்த சாலை ஏறுமுகமாயிருக்கிறது. சூரிய வெயிலில் வெப்பமாக இருக்கிறது. அவர்கள் அந்தோனியா கோட்டையை நோக்கிச் செல்கின்றனர். அக்கோட்டையின் கட்டிடங்கள் தூரத்தில் தெரிகின்றன.

அப்போது ஒரு பெண்ணின் கீச்சுக் குரல் அழுகை ஆகாயத்தை ஊடுருவிக் கேட்கிறது: "ஓ என் இரட்சகரே! ஓ நித்திய கடவுளே, அவர் உயிருக்குப் பதிலாக என் உயிரை ஏற்றுக் கொள்ளும்!"

சேசு தலையைத் திருப்பிப் பார்க்கிறார். அங்கே ஒரு அழகிய வீட்டைச் சுற்றியுள்ள மலர்களுள்ள மாடியில் சூசாவின் ஜோஹான்னாவைக் காண்கிறார். அவளுடன் அவளுடைய ஊழியக்காரர்களும், பணிப்பெண்களும், சின்ன மேரியும், மத்தியாசும் அவளைச் சூழ்ந்து நிற்கிறார்கள். அவள் அப்படிக் கூறியபடியே வானத்தை நோக்கிக் கரங்களை உயர்த்துகிறாள். ஆனால் இன்று மோட்சம் ஜெபங்களுக்குப் பதிலளிப்பதில்லை! சேசு தம் கரத்தை உயர்த்தி, அசைத்து வழியனுப்பும் ஆசீரளிக்கிறார்.

அப்போது கூட்டத்திலிருந்து அவ்வுயர்ந்த மாடியை நோக்கி கற்கள் வீசப்படுகின்றன. "மரணம்! தேவதூ□ணிக்கு, கெடுக்கிறவனுக்கு, பிசாசுக்கு மரணம்! அவனுக்கும் அவன் நண்பர்களுக்கும் மரணம்!" என்று கத்துகிற கூட்டம் சீறிக் கொண்டு நிற்கிறது. யாரும் காயம்பட்டார்களா என்று எனக்குத்

தெரியவில்லை. ஒரு சத்தமான கீச்சுக் குரலோடு மாடியில் நின்ற கூட்டம் கலைந்து போகிறது.

கூட்டம் முன்னேறிச் செல்கிறது... சூரிய ஒளியில் ஜெருசலேமின் வீடுகள் காட்சியாகத் தெரிகின்றன. வீடுகள் காலியாக உள்ளன. பட்டணத்தில் வசிக்கிறவர்களையும், பாஸ்கா பண்டிகைக்காக வந்து தற்காலிகமாகத் தங்கியிருக்கிறவர்களையும் பகையானது பாதுகாப்பில்லாத ஒரு மனிதனுக்கெதிராக வீடுகளைக் காலியாக்கி வெளியே கொண்டு வருகிறது.

சில உரோமைப் படை வீரரும், ஒரு போரணிப் பிரிவு முழுவதும் தங்கள் ஈட்டிகளை கூட்டத்தை நோக்கி நீட்டியபடி கோட்டையிலிருந்து ஓடி வருகிறார்கள். பெருஞ்சத்தமிட்டு கூட்டம் சிதைகிறது. வீதியின் நடுவில் காவல் சேவகருடன் சேசு விடப்படுகிறார். பெரிய குருவும், வேதபாரகரும், ஜனங்களின் மூப்பரும் அங்கே நிற்கிறார்கள்.

ஒரு செந்தூரியன் வந்து: "இந்த மனிதனா? இந்தக் கலகமா? இதற்கு நீங்கள் உரோமைக்குப் பதில் சொல்லுவீர்கள்" என்று ஆங்காரத்துடன் சொல்கிறான்.

"எங்கள் சட்டப்படி இவன் சாகப் பாத்திரவானாயிருக்கிறான்."

"வாளின் நீதியும், இரத்தத்தின் நீதியும் எப்போது உங்களிடம் திரும்பக் கொடுக்கப்பட்டன?" என்று மறுபடியும் கேட்கிறான் அந்த மூத்த செந்தூரியன். அவன் ஓர் உண்மையான உரோமையன். அவன் முகம் கடுமையாக உள்ளது. அவன் கன்னத்தில் ஒரு ஆழமான தழும்பு உள்ளது. அவன் பேன்பிடித்த கப்பல் அடிமைகளிடம் இகழ்ச்சியுடனும், அருவருப்புடனும் பேசுவது போல் பேசுகிறான்.

"எங்களுக்கு அந்த அதிகாரம் இல்லையென்பதை அறிவோம். நாங்கள் உரோமையின் விசுவாசமுள்ள பிரஜைகள்..."

"ஹஹ் ஹஹ் ஹா! கேட்டீரா லோஞ்ஜினுஸ்! விசுவாசமுள்ளவர்கள்! பிரஜைகள்! கெட்ட பயல்கள். என் அம்பெய்யும் வீரர்களைக் கொண்டு உங்களுக்குத் தக்க பரிசளிக்க வேண்டும்."

"அது மிக மரியாதையுள்ள மரணமாச்சுதே! கழுதைகளின் முதுகு கசையடிகளைத்தான் கேட்கும்..." என்று அர்த்தமுள்ள அமைதியுடன் சொல்கிறான் லோஞ்ஜினுஸ்.



பெரிய குருக்களும், வேதபாரகரும், மூப்பர்களும் நஞ்சால் நுரைக்கிறார்கள். ஆனால் அவர்கள் விரும்புவது அவர்களுக்குக் கிடைக்க வேண்டுமென்பதால் மவுனமாகிறார்கள். அந்த நிந்தையைக் கண்டுபிடிக்காதது போல் காட்டி விழுங்கிக் கொள்கிறார்கள். பின்னும் அந்த இரு அதிகாரிகளுக்கும் தலைபணிந்து, சேசுவை போஞ்சு பிலாத்துவிடம் கொண்டு செல்ல வேண்டுமென்றும், உரோமையின் பிரசித்தி பெற்ற நேர்மையான நீதியுடன் பிலாத்து அவனைத் தீர்ப்பிட வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறார்கள்.

"ஆகா! இவர்கள் சொல்வதைக் கேளும்! நாம் மினெர்வாவை விட ஞானிகளாகி விட்டோம்... சரி, அவனை எங்களிடம் கொடுங்கள். கொடுத்து விட்டு எங்களுக்கு முன்னால் நடங்கள். யார் அறிவார்கள்! நீங்கள் நாறும் நரிகள். எங்களுக்குப் பின்னால் நீங்கள் வந்தால் ஆபத்து. போங்கள்."

"எங்களால் கூடாது."

"ஏன் கூடாது? ஒருவன் இன்னொருவனைக் குற்றஞ் சாட்டும்போது, நீதிபதியின் முன்பாக, பிரதிவாதியும் இருக்க வேண்டும். அதுவே உரோமைச் சட்டம்."

"அஞ்ஞான மார்க்கத்தாரின் வீடு எங்கள் பார்வையில் சுத்தமற்றது. நாங்கள் ஏற்கெனவே பாஸ்காப் பண்டிகைக்கு சுத்திகரம் செய்து விட்டோம்."

"பாவம் சிறிசுகள்! இவர்கள், உள்ளே வருவதனால் தீட்டாகி விடுகிறார்கள்!... ஆனால் எபிரேயருக்குள் இருக்கிற ஒரே மனிதனை – உங்களைப் போல் நரியாகவும், இழிவான ஊரும் ஜந்துவாகவும் அவன் இல்லை – அவனைக் கொல்வது உங்களைத் தீட்டுப்படுத்தவில்லையா? ஆயினும் சரி! நீங்கள் இருக்கிற இடத்திலேயே இருங்கள். ஒரு எட்டு முதலாய் முன்வரக் கூடாது. வந்தால் ஈட்டிகளால் துளைக்கப்படுவீர்கள். பத்துச் சேவகரின் படையணி கைதியைச் சுற்றி நிற்கட்டும். மற்ற வீரர்கள் அனைவரும் இந்தக் கும்பலுக்கெதிராக நிற்கட்டும். சரியாய்க் கழுவப்படாத வெள்ளாட்டுக் கிடாய் போல் இவர்கள் நாற்றம் வீசுகிறார்கள்."

பத்துப் போர் வீரரின் மத்தியில் சேசு பிலாத்துவின் அரண்மனைக்குள் நுழைகிறார். அவர்கள் ஈட்டியாயுதம் தாங்கியிருக்கிறார்கள். சேசுவைச் சுற்றி ஈட்டிக் கோடரியாரும்

நிற்கிறார்கள். இரண்டு செந்தூரியன்களும் முன்னே செல்கிறார்கள். சேசு ஒரு முன் மண்டபத்தில் நிற்கிறார். அதற்கப்பால் ஒரு முற்றம் உள்ளது. காற்றில் அசைகிற ஒரு திரையின் வழியாக அது மங்கலாகத் தெரிகிறது.

உள்ளே போன இரு செந்தூரியன்களும் ஆளுநனோடு திரும்புகிறார்கள். பிலாத்து பனி போல் வெள்ளை அங்கியும், ஒரு சிவந்த மேல் வஸ்திரமும் அணிந்திருக்கிறான். உத்யோகப் பிரகாரம் உரோமைப் பிரதிநிதியாக இருக்கும்போது இப்படி அவர்கள் உடையணியக் கூடும். அவன் ஊக்கமில்லாமல் சந்தேகப் புன்முறுவலோடு வருகிறான். முக சவரம் செய்துள்ளான். எலுமிச்சை வாசனையுள்ள மருந்துப் பூண்டு இலைகளைக் கசக்கி ஆவலுடன் முகர்ந்து கொண்டு வருகிறான். சூரிய நிழற் கடிகாரத்தைச் சென்று பார்க்கிறான். ஒரு தெய்வ விக்ரகத்தின் முன்னால் வைக்கப்பட்டுள்ள தூபக்கலசத்தில் சாம்பிராணிப் பரல்களை எடுத்துப் போடுகிறான். நாரத்தையிட்ட தண்ணீர் கொண்டுவரச் சொல்லி தொண்டை கழுவி கொப்பளிக்கிறான். நன்கு தீட்டப்பட்ட உலோகக் கண்ணாடியில் அலை போல் சரியும் தன் முடியைப் பார்த்துக் கொள்கிறான். மரிப்பதற்கு அவனுடைய ஒப்புதலுக்காக நிற்கும் கைதியை அவன் மறந்து விட்டது போல் தோன்றுகிறது. அவன் போக்கு கற்களுக்குக்கூட கோபத்தை மூட்டும்.

அந்த மண்டபத்தின் முன்பாகம் முழுவதும் திறந்திருக்கிறது. கூடத்திலிருந்து அது மூன்று உயர்ந்த படிகளுக்கு மேலிருக்கிறது. கூடம் இன்னும் மூன்று படிகள் உயர்ந்து தெருவில் திறக்கிறது. இதனால் யூதர்கள் நடக்கிறவை அனைத்தையும் நன்கு பார்க்க முடிகிறது. அவர்கள் கோபத்தால் பரபரக்கிறார்கள். ஆனால் ஈட்டிகளுக்கும், எறிவேல்களுக்கும் அஞ்சி எதிர்ப்புக் காட்டாமல் இருக்கிறார்கள்.

இறுதியாக அந்த மண்டபத்தில் சுற்றிச் சுற்றி வந்த பிலாத்து நேராக சேசுவிடம் போகிறான். அவரை உற்றுப் பார்க்கிறான். இரண்டு செந்தூரியன்களிடமும்: "இவனா?" என்று கேட்கிறான்.

"ஆம். இந்த மனிதன்தான்."

"இவன் மேல் குற்றஞ்சாட்டுகிறவர்கள் வரட்டும்" என்று கூறி அங்குள்ள மேடை மேல் போட்டிருக்கிற ஆசனத்தில் போய் அமருகிறான். அவன் தலைக்கு மேலே உரோமையின் விருதுச்



சின்னங்களும், பொன் கழுகுகளும், அவர்களின் அதிகாரத் தலைப்பு எழுத்துக்களும் கலந்து காணப்படுகின்றன.

"அவர்கள் இங்கு வர மாட்டார்கள். தீட்டாகி விடுவார்கள்."

"ஃபூ! அதே தாவிளை! அவர்களின் வெள்ளாட்டு நாற்றத்தை இவ்விடத்திலிருந்து அகற்ற தேவைப்படும் நறுமண நீரோடைகள் நமககு மிச்சம். அவர்களை சற்று பக்கத்திலாவது வரச் செய்யுங்கள். இதோ இங்கே கீழே, அவர்கள் உள்ளே வந்து விடாமல் பார்த்துக் கொள்ளுங்கள். அவர்கள் அப்படி விரும்புவதால். இந்த மனிதனைச் சாக்காக வைத்துக் கொண்டு ஆட்சி எதிர்ப்புப் புரட்சியே நடந்து விடலாம்."

ஆளுநனின் ஆணையைச் சொல்ல ஒரு போர்வீரன் போகிறான். மற்றவர்கள் நுழை மண்டபத்தின் முன்பாக சம தூரத்தில் ஒன்பது வீரர்களின் அழகிய சிலைகள் போல் வரிசையாக நிற்கின்றனர்.

பிரதான ஆசாரியரும், வேதபாரகரும், மூப்பர்களும் முன்னால் வருகிறார்கள். அடிமைத்தனமாய் தலை பணிகிறார்கள். கூடத்தின் படிகளுக்கப்பால் இருக்கிற ஆளுநர் இல்லத்தின் முன்பாக உள்ள சிறிய சதுக்கத்தில் நின்று விடுகிறார்கள்.

அவர்களை நோக்கி வந்து கொண்டே பிலாத்து: "சொல்லுங்கள் சீக்கிரமாக. ஏற்கெனவே இரவின் அமைதியைக் கெடுத்து வாசல்களை வலுவந்தமாய்த் திறந்த குற்றம் உங்கள் மேலிருக்கிறது. அதை நான் விசாரித்துக் கொள்வேன். தலைவர்களும் ஜனங்களின் பிரதிநிதிகளும் சட்டத்துக்குக் கீழ்ப்படியாமைக்குப் பதில் கூறுவார்கள்" என்கிறான். அவன் முற்ற அறைக்குள்ளே நின்று கொள்கிறான்.

"இம்மனிதன் மேல் நாங்கள் செய்துள்ள தீர்ப்பை உரோமைக்குச் சமர்ப்பிக்கவே வந்திருக்கிறோம். உரோமையின் தெய்வீக சக்கரவர்த்தியின் பிரதிநிதியாக நீர் இருக்கிறீர்."

"இவனுக்கெதிராக நீங்கள் கொண்டு வந்திருக்கும் குற்றச்சாட்டுக்கள் என்ன? இவன் குற்றமற்றவனாக எனக்குத் தெரிகிறது..."

"இவன் தீமை செய்கிறவனாயிராவிட்டால் இவனை உம்மிடம் நாங்கள் கொண்டு வந்திருக்க மாட்டோம்" என்று கூறிய அவர்கள், அவரைக் குற்றஞ்சாட்டும் ஆவலினால் முன்னுக்கு

வருகிறுர்கள்.

"இந்தக் கும்பலே விரட்டுங்கள். மூன்று படிகளிலிருந்து ஆறு அடிகள் பின்னுல்! இரண்டு நூற்றுவர் படைகள் ஆயுதந் தாங்கி வரட்டும்!"

படைவீரர்கள் உடனே கீழ்ப்படிகிறுர்கள். நூறு பேர் வெளியே இறங்கும் படிகளின் மேல்படியில் கும்பலேப் பார்த்தபடி வரிசையாய் நிறக, இன்னெரு நூறு பேர் அந்தச் சிறிய சதுக்கத்தில் வரிசைப்பட நிற்கிறுர்கள். பிலாத்துவின் வீட்டுப் பெரிய கதவு இந்தச் சதுக்கத்தில் திறக்கிறது. கதவு என்பதைவிட அதை ஒரு பெரும் வெற்றி வளேவு என்று சொல்ல வேண்டும். காரணம், ஒரு அகலக் கதவைக் கொண்டுள்ள அகலமான திறப்பு அது. கூடத்திலிருந்து வருகிற நீண்ட நடைக்கூடத்தின் வழியாக வந்து முற்றத்தில் சேருகிறது. அந்த நடைக்கூடம் குறைந்தது ஆறு மீட்டர் அகலமிருக்கும். இதனுல் உயரத்திலிருக்கிற முற்றத்தில் நடக்கிறதெல்லாவற்றையும் தெளிவாய்ப் பார்க்க முடியும். அகன்ற கூடத்திற்கு அப்பால் யூதர்களின் மிருகத்தனமான முகங்கள் காணப்படுகின்றன. பயங்கரமான பசாசுக்களேப் போல் போர்வீரரின் அணிகளேத் தாண்டி அவை உள்ளே நோக்கிக் கொண்டிருக்கின்றன. இருநூறு கூரிய ஈட்டி முனேகள், கோழைத்தனமுள்ள கொலேகாரர்களின் கும்பலே நோக்கிக் கொண்டிருக்கின்றன.

"திரும்பவும் கேட்கிறேன். இம்மனிதனுக்கெதிராக நீங்கள் என்ன குற்றச்சாட்டைக் கொண்டு வருகிறீர்கள்?"

"எங்கள் மூதாதையரின் சட்டத்திற்கெதிராய் இவன் குற்றங்கள் செய்திருக்கிறுன்."

"அதற்காக என்னேத் தொந்தரவு பண்ண வந்திருக்கிறீர்களா? உங்கள் சட்டப்படி இவனேக் கொண்டுபோய்த் தீர்ப்பிட்டுக் கொள்ளுங்கள்."

"நாங்கள் யாருக்கும் மரணத் தீர்ப்பிட முடியாது. நாங்கள் படித்தவர்களல்ல. உத்தம உரோமைச் சட்டத்துடன் ஒப்பிட்டால் யூத நியாயச் சட்டம் மன வளர்ச்சி பெருத குழந்தையைப் போன்றது. அறிவில்லா மக்களும் எஜமாட்டியாகிய உரோமையின் பிரஜைகளுமாயிருக்கிற எங்களுக்குத் தேவையாயிருக்கிற..."

"எப்பொழுதிலிருந்து நீங்கள் தேனும் வெண்ணெயுமாக ஆனீர்கள்?... ஆனுல் ஓ! பொய் சொல்வதில் வல்லவர்களே,



இதிலே உண்மையைக் கூறினீர்கள். உங்களுக்கு உரோமை தேவைப்படுகிறது. ஆம். உங்களுக்கு உபத்திரவமூட்டுகிற இவனே ஒழித்துக் கட்டுவதற்கு. எனக்குப் புரிகிறது" என்று கூறி, பிலாத்து சிரிக்கிறுன், தெளிந்த வானத்தைப் பார்த்தபடி. பனி போன்ற வெள்ளேச் சுவர்களின் பின்னணியில் வானம் நீல நீண்ட சதுரத் தகடு போல் தெரிகிறது. மேலும் பிலாத்து கேட்கிறுன்:

"சொல்லுங்கள். இவன் என்னென்ன குற்றங்கள் செய்திருக்கிறுன் உங்கள் சட்டத்திற்கெதிராக?"

"இவன் எங்கள் நாட்டில் குழப்பங்களே உண்டாக்கியிருப்பதாகக் கண்டுபிடித்திருக்கிறேம். செசாருக்கு வரி செலுத்தாதபடி ஜனங்களேத் தடைசெய்திருக்கிறுன். தானே கிறீஸ்தென்னும் இராஜா என்று கூறினுன்."

பிலாத்து அந்த முற்றத்தின் நடுவில் கட்டுண்டவராய், ஆனுல் காவலர்கள் இல்லாமல் விடப்பட்டிருக்கிற சேசுவிடம் போகிறுன். சேசுவின் சாந்த குணம் அப்படி யிருக்கிறது. அவன் அவரிடம்: "நீ யூதர்களின் இராஜாவோ?" என்று கேட்கிறுன்.

"இதை நீராகக் கேட்கிறீரா? அல்லது மற்றவர்களின் தூண்டுதலால் கேட்கிறீரா?"

"உன்னுடைய இராச்சியத்தைப் பற்றி எனக்கென்ன கவலே? நான் யூதனு? உன்னுடைய நாடும் அதன் தலேவர்களும் என்னே நான் தீர்ப்பிடும்படி என்னிடம் கையளித்தார்கள். நீ என்ன செய்தாய்? நீ இராஜ விசுவாசமுள்ளவனென்று நான் அறிந்திருக்கிறேன். பேசு. நீ அரசாள விரும்புகிறுய் என்பது உண்மையா?"

"என்னுடைய இராச்சியம் இந்த உலகத்திலிருந்து வருவதல்ல. அது இவ்வுலகத்தின் இராச்சியமாயிருந்தால், யூதர்கள் என்னேக் கைது செய்வதைத் தடைசெய்ய என் அதிகாரிகளும், படைவீரர்களும் போராடியிருப்பார்கள். அதனுல் என் இராச்சியம் இப்பூமியைச் சார்ந்ததல்ல. மேலும் நான் அதிகாரத்தைத் தேடவில்லேயென்பதும் உமக்குத் தெரியும்."

"அது சரியே. எனக்குத் தெரியும். நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆயினும் நீ ஒரு இராஜா என்பதை நீ

மறுக்கவில்லையே!''

''நீரே அதை உறுதிப்படுத்துகிறீர். நான் இராஜாதான். அதனாலேயே நான் உலகிற்கு வந்தேன். சத்தியத்திற்கு சாட்சி சொல்ல சத்தியத்தின் பக்கம் இருக்கிறவர்கள் என் குரலுக்குச் செவி கொடுக்கிறார்கள்.''

''சத்தியமென்றால் என்ன? நீ ஒரு தத்துவ ஞானியா? சாவுக்கெதிரே நிற்கும்போது அதனால் பயனில்லை. சாக்ரட்டீசும் இறந்தாரே!''

''ஆனால் அவருடைய வாழ்நாளில் அவர் நேர்மையாக வாழ்வதற்கு அது உதவியது. நன்றாக சாவதற்கும் உதவியது. சமூக நற்பண்புகளை மீறியவர் என்று அழைக்கப்படாதபடி மறுவாழ்வில் நுழைய உதவியது.''

''ஓ ஜோவ்!''

பிலாத்து சற்று நேரம் சேசுவை வியந்தபடி பார்க்கிறான். பின் தன் ஐயங்கொள்ளும் வடுப் பேச்சைத் தொடர்கிறான். சலிப்புற்ற சைகை செய்து மறுபுறந் திரும்பி யூதேயர்களிடம் போய்:

''இவனிடம் நான் ஒரு குற்றமும் காணவில்லை'' என்கிறான்.

கூட்டம் புரட்சி செய்கிறது. கிடைத்த இரையும் மரண ஆக்கினையின் காட்சியும் தவறிவிடும் என்ற திகில் அதைப் பற்றிக் கொள்கிறது. ''இவன் ஒரு கிளர்ச்சிக்காரன்,'' ''இவன் தேவ தூ□ணி,'' ''இவன் தன்னாட்சியுரிமையை ஆதரிக்கிறவன்,'' ''இவன் புரட்சி செய்ய மக்களைத் தூண்டி விடுகிறான்,'' ''செசாரை இவன் மதிப்பதில்லை,'' ''தான் தீர்க்கதரிசி போல் நடிக்கிறான்,'' ''இவன் மாயவித்தை செய்பவன்,'' ''இவன் ஒரு பிசாசு,'' ''இவன் தான் வந்த கலிலேயா நாடு முதல் யூதேயா எங்கும் ஜனங்களைக் கலகப்படுத்துகிறான்,'' ''இவன் சாக வேண்டும்,'' ''இவன் சாகட்டும்!''

''இவன் கலிலேயனா? நீ ஒரு கலிலேயனா?'' என்று கேட்டுக் கொண்டே பிலாத்து சேசுவிடம் போய்:

''இவர்கள் உன்னை எப்படி குற்றஞ்சாட்டுகிறார்கள் என்று கேட்கிறாயா? உன் குற்றமற்ற தன்மையை எண்பி'' என்கிறான். சேசுவோ மவுனமாயிருக்கிறார்.

பிலாத்து சிந்தனை வசமாகிறான். பின் இப்படித் தீர்மானிக்கிறான்: ''ஒரு நூற்றுவர் படை ஏரோதிடம் இவனைத்



தீர்ப்பிடக் கொண்டு செல்லட்டும். இவன் ஏரோதின் பிரஜை. அந்த சதுர்பாக ஆளுநரின் உரிமையை நான் ஒப்புக்கொண்டு அவருடைய தீர்ப்புக்கு முன்கூட்டியே சம்மதம் தெரிவிக்கிறேன். அப்படி அவரிடம் சொல்லுங்கள், சொல்லுங்கள்.''

சேசு ஒரு கயவனைப் போல் நூறு போர்ச் சேவகரால் சூழப்பட்டு திரும்பவும் பட்டணத்தின் வழியாகச் செல்கிறார். அவர் இதற்கு முன் ஒரு சந்தை கூடுமிடத்தின் பக்கத்தில் யூதாசைச் சந்தித்திருந்தார். இப்போது மறுபடியும் அவனைச் சந்திக்கிறார். சனக் கும்பலின் சச்சரவால் வெறுப்படைந்த நான் இதை முன்னால் சொல்ல மறந்து விட்டேன். இப்பொழுதும் அதே இரக்கத்துடனேயே அந்தத் துரோகியை சேசு பார்க்கிறார்...

இப்போது அவரை உதைக்கவும், கம்பால் அடிக்கவும் எளிதாகக் கூடவில்லை. ஆனால் கற்களும் குப்பையும் தாராளமாய் வீசப்படுகின்றன. அவை சேவகரின் தலைக்கவசத்தில் பட்டு அவர்களுக்குக் காயம் ஏற்படாமல் எதிரொலி செய்கின்றன. ஆனால் சேசுமீது படும்போது பட்ட அடையாளம் காணப்படுகிறது. சேசு தம் சால்வையை ஜெத்சமெனியில் விட்டு விட்டதால் அங்கி மட்டுமே அணிந்திருக்கிறார்.

சேசு ஏரோதனின் ஆடம்பரமான அரண்மனைக்குள் நுழையும்போது அங்கே சூசாவைக் காண்கிறார்... ஆனால் சேசுவை அந்தக் கோலத்தில் காணச் சகிக்காத சூசா தன் தலையை சால்வையால் மூடிக் கொண்டு அங்கிருந்து ஓடி விடுகிறார்.

சபை மண்டபத்தில் சேசு ஏரோதனின் முன்பாக நிற்கிறார். வேதபாரகரும், பரிசேயரும் அவருக்குப் பின்னால் நிற்கிறார்கள். அவர்கள் இவ்விடத்தில் சாவகாசமாகப் பழகி தங்கள் பொய்க் குற்றச்சாட்டுக்களை செய்கிறார்கள். செந்தூரியனும் நான்கு போர்ச் சேவகரும் மட்டுமே சதுர்பாக ஆளுநனிடம் சேசுவை தொடர்ந்து வந்துள்ளார்கள்.

சேசுவின் எதிரிகள் சொல்கிற குற்றச்சாட்டுகளைக் கேட்டபடியே ஏரோது தன் ஆசனத்தை விட்டு இறங்கி சேசுவைச் சுற்றி நடக்கிறான். சிரித்துக் கொள்கிறான், ஏளனம் செய்கிறான்.

பிறகு போலியாக இரங்குகிறான். மரியாதை காட்டுகிறான். அவனுடைய பகடி பரிகாசம் வேதசாட்சியைக் கலங்கச் செய்யாதது போல இதுவும் அவரை நிலைமாறச் செய்யவில்லை.

“நீர் பெரிய ஆள். எனக்குத் தெரியும். உம்மைப் பற்றி நான் விசாரித்திருக்கிறேன். சூசா உம் நண்பன், மனேயன் உம் சீடன் என்பதைப் பற்றி எனக்குச் சந்தோஷமே. நான்... அந்த மாகாணத்தின் தொல்லைகள்... ஆனுல் நீர் பெரிய மனிதன் என்று சொல்ல நான் எவ்வளவு ஆவலாயிருந்தேன்!... அருளப்பரின் கண்கள்... அவருடைய குரல்... அவை எப்போதும் என் முன்னே நிற்கின்றன. உலகத்தின் பாவங்களை ரத்துச் செய்கிற புனிதர் நீர்தான். கிறீஸ்துவே எனக்கு மன்னிப்புக் கொடும்” என்று சொல்லுகிறுன்.

சேசு மவுனமாயிருக்கிறுர்.

“நீர் உரோமைக்கெதிராய்ப் புரட்சி செய்வதாகக் கேள்விப்பட்டேன். அசூரை அடித்து வீழ்த்த வாக்களிக்கப்பட்ட கோல் நீரல்லவா?”*

சேசு பேசவில்லை.

“நீர் தேவாலயத்தின் முடிவையும் ஜெருசலேமின் முடிவையும் தீர்க்கதரிசனமாய்க் கூறியதாக அவர்கள் என்னிடம் சொன்னுர்கள். ஆனுல் ஒரு ஞான வஸ்துவைப் போலவே தேவாலயமும் நித்தியமானதல்லவா? ஏனென்றுல் நித்தியரான கடவுளால் விரும்பப்பட்டதால்?”

சேசு இதற்கும் பேசவில்லை.

“உனக்குப் பைத்தியமா? உன் சக்தியை நீ இழந்து விட்டாயா? நீ பேச சாத்தான் தடை செய்கிறுனு? உன்னைக் கைவிட்டுப் போய்விட்டானு?” என்று கேட்ட ஏரோது சிரிக்கிறுன்.

பின் ஒரு கட்டளை கொடுக்கிறுன். சில வேலைக்காரர்கள் கால் ஒடிந்த ஒரு வேட்டை நாயை ஒரு தூக்குக் கட்டிலில் வைத்துக் கொண்டு வருகிறுர்கள். அது துயரமாய் உறுமுகிறது. மேலும் வேலையாட்களின் பரிகசிப்பிற்கு ஆளான மூளை வளர்ச்சியற்று கோழை ஒழுகும் ஒதுக்கப்பட்ட ஒரு மனிதனையும் கூட்டி வருகிறுர்கள். நாயின் தூக்குக் கட்டிலைக் கண்டதும் அந்த அவசங்கையைப் பற்றி கூச்சலிட்டபடி வேதபாரகரும், குருக்களும் ஓடிப் போகிறுர்கள்.

ஏரோது பொய்யாகவும் கேலியாகவும் விளக்கம்

* அசூர்: இசை. 30:31.



கொடுக்கிறுன்: “இது ஏரோதியாளின் செல்லப் பிராணி. உரோமையின் பரிசு. அது நேற்று தன் காலை ஒடித்துக் கொண்டது. அவள் அழுது கொண்டிருக்கிறுள். அதைக் குணப்படுத்தும். ஒரு புதுமை செய்யும்” என்கிறுன்.

சேசு அவனைக் கண்டிப்புடன் பார்க்கிறுர். மவுனமாகிறுர்.

உமக்கு வருத்தம் கொடுத்து விட்டேனு? அப்படியானுல் இவனைக் குணப்படுத்தும். இவன் ஒரு மனிதன்தான். காட்டு விலங்கை விட சற்று மேலானவன். பிதாவின் அறிவாக நீர் இருக்கிறீரே. இவனுக்கு அறிவைக் கொடும்... நீர் அப்படித்தானே சொல்லுகிறீர்?” என்று சொல்லி குத்தலாகச் சிரிக்கிறுன்.

சேசு மீண்டும் அவனைக் கடுமையாகப் பார்க்கிறுர். பேசவில்லை.

“இம்மனிதன் அதிகம் துறப்பவனுயிருக்கிறுன். இப்பொழுது நிந்தையால் செயலற்று நிற்கிறுன். மதுவும், மங்கைகளும் இங்கே கொண்டு வரப்படட்டும். இவனையும் கட்டவிழ்த்து விடுங்கள்.”

அவர்கள் சேசுவின் கையைக் கட்டவிழ்க்கிறுர்களா. நிறைய வேலையாட்கள் ஜாடிகளையும் பானக் கிண்ணங்களையும் கொண்டு வருகிறுர்கள். சில நடனக்காரிகள் உள்ளே வருகிறுர்கள்... அவர்கள் அணிந்திருக்கும் ஒரே ஆடை அவர்களுடைய ஒல்லியான இடையையும், இடுப்பையும் மூடியிருக்கும் பல நிறமுள்ள சணல் நூல் தொங்கல் மட்டும்தான். வேறெதுவுமில்லை. அவர்கள் ஆப்பிரிக்கர்களாதலால் வெண்கல வண்ணத்திலிருக்கிறுர்கள். இள அராபிய மான்களைப் போல் துரித அசைவுடையவர்கள். அவர்கள் ஒரு மவுன ஆபாச நடனத்தை ஆரம்பிக்கிறுர்கள்.

சேசு பருக மறுத்து விடுகிறுர். கண்களை மூடிக் கொள்கிறுர். எதுவும் பேசவில்லை. அவர் அதைப் புறக்கணிப்பதைக் கண்டு அரச சபையிலுள்ளவர்கள் சிரிக்கிறுர்கள்.

“நீர் விரும்பும் பெண்ணை எடுத்துக் கொள்ளும். வாழும். வாழக் கற்றுக் கொள்ளும்...” என்று தூண்டுகிறுன் ஏரோது.

சேசு ஒரு சிலை போல் காணப்படுகிறுர். கைகளைக் கட்டிக் கொண்டு கண்களை மூடிக் கொண்டு அசையாமல் நிற்கிறுர். அந்த ஆபாச ஆட்டக்காரிகள் தங்கள் நிருவாண உடல்களால் அவரை

இலேசாகத் தொட்டபோதும் அப்படியே நிற்கிறார்.

"நிறுத்துங்கள். உன்னை நான் கடவுளாக நடத்தினேன். நீ கடவுளாக நடந்து கொள்ளவில்லை. உன்னை மனிதனாக நடத்தினேன். நீ மனிதனாகவும் நடந்து கொள்ளவில்லை. உனக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறது. வெள்ளை வஸ்திரம்! அதை இவனுக்கு உடுத்துங்கள். சதுர்பாக ஆளுநன் தன்னுடைய பிரஜையை பைத்தியமாகக் கண்டான் என்று பிலாத்து அறியட்டும். செந்தூரியனே! தயவுசெய்து பிலாத்துவிடம் சொல்லும்: ஏரோது தாழ்மையுடன் தன் உபசாரங்களை அவருக்கும், தன் வணக்கங்களை உரோமைக்கும் தெரிவிப்பதாக. போங்கள்."

சேசு மறுபடியும் கட்டப்பட்டவராய், அவருடைய சிவப்புக் கம்பளி அங்கியின் மேல் அந்த வெள்ளை வஸ்திரம் அவருடைய முழங்கால் வரையிலும் தொங்க, வெளியே வருகிறார்.

அவர்கள் மறுபடியும் பிலாத்துவிடம் போகிறார்கள்.

அங்கே தேசாதிபதியின் அரண்மனை முன்பாக ஜனக் கும்பல் காத்து நிற்பதில் களைத்துப் போகவில்லை. அந்த இடத்தில் அத்தனை ஜனங்கள் அங்கேயும் அக்கம்பக்கங்களிலும் காணப்படுவது நூதனமாயிருக்கிறது. பட்டணத்தின் மற்ற பாகங்கள் காலியாக கிடப்பதாகத் தோன்றுகிறது. நூறு போர்ச் சேவகர்களும் கூட்டத்தில் கஷ்டத்தோடேயே நுழைகிறார்கள். சேசு இடையர்களை அங்கே ஒரு கூட்டமாகக் காண்கிறார். எல்லாரும் அங்கே நிற்கிறார்கள்: ஈசாக், ஜோனத்தாஸ், லேவி, யோசேப், எலியாஸ், மத்தியாஸ், அருள், சிமியோன், பெஞ்சமின், தானியேல் அனைவரும் ஒரு சில கலிலேயரின் கூட்டத்துடன் நிற்கிறார்கள். அவர்களுள் அல்பேயுஸ், அல்பேயுஸின் ஜோசப் ஆகியோரை அடையாளம் காண்கிறேன். இன்னும் இரண்டு பேரை யாரென்று எனக்குத் தெரியவில்லை. அவர்களின் தலையலங்காரப் பாணியிலிருந்து அவர்கள் யூதேயர்களாயிருக்க வேண்டும். சற்று தூரத்தில் சேசு அருளப்பரைக் காண்கிறார். அவர், உரோமையன் என்று நான் நினைக்கிற ஓர் ஊழியனுடன் ஒரு தூணில் பாதி மறைந்தபடி அங்கே நுழைந்திருக்க வேண்டும். சேசு அருளப்பரைப் பார்த்தும் புன்முறுவல் செய்கிறார்... ஆனால் இந்தச் சிலரும், ஜோஹான்னாவும், மனேயனும், சூசாவும், பகையினால் கொதிக்கிற இந்தக் கடலின் மத்தியில் எம்மாத்திரம்?

செந்தூரியன் பிலாத்துவை வணங்கி விவரம் சொல்கிறான்.



"மறுபடியும் இங்கேயா? ஃபூ! இந்த இனத்துக்கு சாபம்! கூட்டத்தை முன்னால் வரச் சொல்லி குற்றம் சுமத்தப்படுகிறவனை இங்கே கொண்டு வாருங்கள். என்ன உபத்திரவம் இது!"

பிலாத்து கும்பலை நோக்கிப் போகிறான். மீண்டும் நீண்ட கூடத்தின் நடுவில் நிற்கிறான்.

"யூதர்களே! கவனியுங்கள். ஜனங்களைக் கலகப்படுத்துகிறவன் என்று இவனை நீங்கள் என்னிடம் கொண்டு வந்திருக்கிறீர்கள். உங்கள் முன்பாகவே இவனை விசாரித்து நீங்கள் சுமத்துகிற எந்தக் குற்றத்தையும் இவன் செய்ததாக நான் காணவில்லை. நான் கண்டதற்கதிகமாக ஏரோதுவும் எதையும் காணவில்லை. அவர் இவனை நம்மிடம் திருப்பி அனுப்பியுள்ளார். இவன் மரணத்துக்குப் பாத்திரவானல்ல. உரோமாபுரி பேசி விட்டது. ஆனால் உங்கள் விருப்பப் பொழுதுபோக்கை மறுத்து உங்களுக்கு மகிழ்ச்சிக் கேடு ஏற்படாதபடி பரபாஸை உங்களுக்குக் கொடுக்கிறேன். இவனுக்கு நாற்பது பிரம்படிகளை விதித்திருக்கிறேன். அது போதுமானது."

"கூடாது, கூடாது! பரபாஸ் வேண்டாம்! பரபாஸ் வேண்டாம்! சேசுவுக்கு மரணம்! பயங்கர மரணம்! பரபாஸை விடுதலை செய்யும். நசரேயனை மரணத்திற்குத் தீர்ப்பிடும்!"

"கேளுங்கள்! இவனை அடிப்பிப்பேன் என்கிறேனே! அது பற்றாதா? இவனுக்கு சாட்டையடித் தண்டனை கொடுக்கிறேன். அது பயங்கரமானதென்று உங்களுக்குத் தெரியும். அதிலே அவன் செத்துப் போகக் கூடும். இவன் என்ன குற்றம் செய்தான்? இவனிடத்தில் நான் ஒரு குற்றமும் காணவில்லை. இவனை விடுதலை செய்வேன்."

"இவனைச் சிலுவையில் அறையும்! இவனைச் சிலுவையில் அறையும்! குற்றவாளிகளைக் காப்பாற்றுகிறீர்! அஞ்ஞானி! நீயும் சாத்தானே!"

கும்பல் முன்னேறி வருகிறது. முதல் வரிசைப் போர்ச் சேவகர்கள் தயங்குகிறார்கள். ஏனென்றால் அவர்கள் தங்கள் ஈட்டிகளைக் கொண்டு தாக்கக் கூடாது. ஆனால் இரண்டாம் வரிசை ஒரு படி கீழே இறங்கி வந்து ஈட்டிகளை வீசி தங்கள் தோழர்களை விடுவிக்கிறார்கள்.

"இவன் சாட்டைகளால் அடிக்கப்படட்டும்!" என்று ஒரு செந்தூரியனுக்குக் கட்டளையிடுகிறான் பிலாத்து.

“எத்தனை அடிகள்?”

“எத்தனை முடியுமோ, அத்தனை... எப்படியும் காரியம் முடிந்து போனது. எனக்குச் சலிப்பாகி விட்டது. போங்கள்.”

நீண்ட கூடத்திலிருந்து நான்கு போர்ச் சேவகர் சேசுவை அதற்கப்பாலிருக்கிற மண்டப முற்றத்திற்குக் கொண்டு செல்கிறார்கள். வண்ண சலவைக்கல் பதித்த அந்த முற்றத்தின் நடுவே, மண்டபத்தில் உள்ளது போன்ற ஒரு உயர்ந்த தூண் இருக்கிறது. அத்தூணில், தரையிலிருந்து சுமார் மூன்று மீட்டர் உயரத்தில் ஒரு இரும்புப் பட்டை குறைந்தது ஒரு மீட்டராவது வெளியே நீட்டிக் கொண்டிருக்கிறது. அதன் நுனியில் ஒரு வளையம் உள்ளது. சேசுவின் ஆடைகளை எடுத்துவிட்டு அவரை அந்த வளையத்தில் கட்டுகிறார்கள். இரு கைகளையும் சேர்த்து அவரது தலைக்கு மேலாக சேசு கட்டப்படுகிறார். லினன் குட்டைக் காற்சட்டையுடனும், பாதரட்சைகளுடனும் மட்டுமே விடப்பட்டிருக்கிறார். அவருடைய மணிக்கட்டுகள் சேர்த்துக் கட்டப்பட்டு அந்த வளையம் வரையிலும் உயர்த்தப்பட்டுள்ளதால், அவர் உயரமுடையவராயிருந்த போதிலும் தம் காலின் பெருவிரல் நுனிகளாலேயே தரையில் ஊன்றிக் கொள்ள முடிகிறது... அந்த நிலையே ஒரு வதைப்பாக இருக்கிறது.

நான் வாசித்திருக்கிறேன், எதிலே என்று தெரியவில்லை. அந்தத் தூண் தாழ்ந்தும் சேசு அதன் மேல் குனிந்து நின்றதாகவும். அது அப்படி இருந்திருக்கலாம். நான் காண்கிறதை நான் கூறுகிறேன்.

அவருக்குப் பின்னால், பக்கத் தோற்றத்தில் தெளிவான யூத சாயலோடு, கொலைஞனைக் காணப்படும் ஒருவன் நிற்கிறான். அவனைப் போலவே இன்னொருவன் அவருக்கு முன்னால் நிற்கிறான். அவர்கள் சாட்டைகளை வைத்திருக்கிறார்கள். ஏழு தோல் வார்களைக் கொண்டது ஒரு சாட்டை. அந்த ஏழு வார்களும் ஒரு கைப்பிடியில் ஒன்றாகப் பிணைக்கப்பட்டிருக்கின்றன. அந்த வார்களின் நுனிகளில் சிறு சம்மட்டி போன்ற ஈயக் குண்டுகள் உள்ளன. அவர்கள் அவரை அடிக்கத் தொடங்குகிறார்கள். ஓசை தாளமாக, பயிற்சி செய்வதுபோல் அடிக்கிறார்கள். ஒருவன் சேசு முன்னாலும் ஒருவன் அவர் பின்னாலும் நின்று அடிப்பதால் சேசுவின் உடல், அடிக்கும் சாட்டைகளின் சுழற்சிக்கு நடுவே அகப்பட்டிருக்கிறது. சேசு ஒப்படைக்கப்பட்ட நான்கு போர்ச் சேவகரும் நிர்க்கவலையாய் அப்போது அங்கு வந்த மூன்று



சேவகருடன் சொக்கட்டான் ஆடுகிறார்கள். சாட்டையடிகளின் தாளத்துக்கேற்ப, இவர்களும் குரல் கொடுத்துக் கொண்டே ஆடுகிறார்கள். சாட்டையடிகளின் ஓசை ஸ் ஸ் ஸ் ஸ் என்று பாம்புகளின் சீறல்போல் முதலில் கேட்கிறது. பின் முரசில் விரித்துக் கட்டப்பட்ட தோலில் கல் விழுவது போல் எதிரொலிக்கிறது. எவ்வளவோ மென்மையான, பழந்தந்தம் போல் வெளிறிய அந்தப் பரிதாபத்திற்குரிய உடலில் அவர்கள் அடிக்கிறார்கள். உடல் முழுவதும் கசையடியால் நிரம்புகிறது. அடி படப்பட நிறம் இளஞ்சிவப்பாகிறது. பின் ஊதா நிறமாகிறது. பின் நீலம் கட்டுகிறது. இரத்தம் உள்ளே பெருகி நிற்கிறது. அடுத்து தோல் கிழிந்து விட இரத்தம் எல்லாப் பக்கமும் கொட்டுகிறது. அவருடைய நெஞ்சுக் கூட்டிலும் அடிவயிற்றிலும் அதிக குரூரமாய் அடிக்கிறார்கள். கால்களிலும் கைகளிலும் தலையிலும் கூட அடிகள் விழுகின்றன. இதனால் அவருடைய சருமத்தின் ஒரு சிறு இடமாவது வேதனையின்றி விடப்படவில்லை.

சேசுவிடமிருந்து ஒரு முனகல் சத்தம் கூட வெளிவரவில்லை... அவர் மேலே கட்டப்பட்டிராவிட்டால் கீழே விழுந்திருப்பார். எத்தனை எத்தனை அடிகள்! அவற்றால் மயக்கமுற்றது போல் அவருடைய சிரசு அவர் நெஞ்சில் கவிழ்ந்து தொங்குகிறது.

அப்போது ஒரு சேவகன்: “ஏய்! நிறுத்துங்கள். அவன் கொல்லப்படும்போது உயிரோடிருக்க வேண்டும்” என்கிறான் கேலியோடு. இரண்டு கொலைஞரும் அடிப்பதை நிறுத்தி வியர்வையைத் துடைக்கிறார்கள்.

“களைத்துப் போனோம். எங்கள் கூலியைக் கொடுங்கள். தெம்புக்கு ஏதாவது குடிக்கட்டும்...” என்கிறார்கள்.

“உங்களுக்குக் கழுமரம் கொடுக்கிறேன் – சரி சரி... இந்தாருங்கள்” என்று கூறும் தச படைத் தலைவன் ஆளுக்கொரு பெரிய நாணயத்தை வீசுகிறான்.

“உங்கள் வேலையை நன்றாகச் செய்திருக்கிறீர்கள். இவன் பலநிறப் பட்டைகள் பதித்த சிலை போலிருக்கிறான். டைட்டஸ், இவன் உண்மையிலேயே அலெக்ஸாண்டருடைய* நண்பன் என்கிறாயா? அவனுக்கு இதை நாம் அறிவிக்க வேண்டும். இவன் மரணத்தைப் பற்றி அவன் துக்கங் கொண்டாடட்டும். இவனை

* சேசு மேல் மரியாதையுள்ள ஒரு உரோமைப் படைவீரன்.

அவிழ்த்து விடுவோம்.''

சேசுவைக் கட்டவிழ்க்கிறுர்கள். அவர் செத்த சரீரம் போல் தரையில் விழுகிறுர். அவரை அப்படியே போட்டு விடுகிறுர்கள். இடைக்கிடையே அவர் முனகுவாரா என்று பார்க்க குதிமுள் உள்ள சப்பாத்துக் காலால் தள்ளிப் பார்க்கிறுர்கள். ஆனுல் அவரோ மவுனமாயிருக்கிறுர்.

''இறந்து விட்டானு? இறந்திருக்க முடியுமா? இவன் ஒரு இளைஞன், கை வேலை செய்கிறவன் என்று சொல்லக் கேட்டிருக்கிறேன்... ஆனுல் மென்மையான பெண்ணைப் போலிருக்கிறான்.''

''இவனை நான் கவனித்துக் கொள்கிறேன்'' என்று ஒரு போர்ச் சேவகன் கூறுகிறுன். அவன் சேசுவை அந்தத் தூணில் சாய்த்து இருத்துகிறுன். அவர் விழுந்து கிடந்த இடத்தில் இரத்தம் உறைந்து காணப்படுகிறது... அந்தச் சேவகன் ஒரு மண்டபத்திற்கடியில் கொப்பளிக்கிற நீர்ச்சுனைக்குப் போய் ஒரு பாத்திரத்தில் தண்ணீர் எடுத்து வந்து சேசுவின் தலையிலும், உடலிலும் ஊற்றி: ''பூக்களுக்கு தண்ணீர் நல்லது. இதுதான் சரியானது'' என்கிறுன்.

சேசு ஆழ்ந்த பெருமூச்சு விட்டு எழ முயற்சிக்கிறுர். அவருடைய கண்கள் முடியே உள்ளன.

''நல்லது செல்லப் பிள்ளை! வா, உன் சீமாட்டி உனக்காகக் காத்திருக்கிறுள்...''

ஆனுல் சேசுவோ எழுந்திருக்கும் முயற்சியில் கைகளை தரையில் ஊன்றிப் பார்க்கிறுர். முடியவில்லை.

''வா. சீக்கிரம். பலவீனமாயிருக்கிறதா? இதோ சிற்றுண்டி'' என்று ஏளனமாகச் சொல்லிக் கொண்டே இன்னெரு படைவீரன் தன் ஈட்டிக் கோடாரிக் காம்பினுல் அவர் முகத்தில் வலது கன்ன எலும்பிற்கும் நாசிக்கும் நடுவே அடிக்கிறுன். அதிலிருந்து இரத்தம் வடிகிறது.

சேசு கண் திறந்து சுற்றுமுற்றும் பார்க்கிறுர். அவருடைய விழிகள் திரையிடப்பட்டுள்ளன... அவரை அடித்த போர்ச் சேவகனைப் பார்க்கிறுர். கையால் இரத்தத்தைத் துடைக்கிறுர். பின் அதிக சிரமத்துடன் எழுந்து நிற்கிறுர்.

''உடுத்திக் கொள் ஆபாச மனிதா, இப்படி நிற்பது



ஒழுக்கமில்லை'' என்று சொல்லி எல்லாரும் சுற்றி நின்று சிரிக்கிறுர்கள்.

எதுவும் பேசாமல் சேசு கீழ்ப்படிகிறுர். ஆடைகளை எடுக்க அவர் குனியும்போது, அவர் ஒருவரே அறிவார் அவர் எவ்வளவு வேதனைப்படுகிறுர் என்பதை. உடல் அடிகளால் கன்றிப் போயிருக்கிறது. குனிகிற சமயம் சருமம் இழுக்கப்படுவதால், காயங்கள் மேலும் அதிகமாகத் திறக்கப்படுகின்றன. பொக்குளமாக இருக்கிற காயங்கள் வெடிக்கின்றன. தம் ஆடைகளை அவர் எடுக்கக் குனிந்தபோது, ஒரு சேவகன் அதைக் காலால் உதைத்துச் சிதறி விடுகிறுன். அவற்றைப் பொறுக்க சேசு தள்ளாடியபடி அவற்றை நெருங்கும் ஒவ்வொரு தடவையும் ஒருவன் அதைத் தூர தள்ளி விடுகிறுன். அல்லது இன்னெரு திசையில் எறிந்து விடுகிறுன். சேசு கொடூரமாய் வேதனைப்பட்டுக் கொண்டே ஒரு வார்த்தைகூடச் சொல்லாமல் அவற்றைத் தேடி அலைகிறுர். போர்ச் சேவகர் அவரை ஆபாசமாய்ப் பரிகசிக்கிறுர்கள்.

கடைசியாக அவர் தம் ஆடைகளை அணிய முடிகிறது. ஒரு ஓரத்தில் வைக்கப்பட்டு இன்னும் சுத்தமாக இருந்த வெள்ளைத் துகிலையும் அணிந்து கொள்கிறுர். தம்முடைய சிவப்பு அங்கியை அவர் மறைக்க விரும்புவது போலிருக்கிறது. அது நேற்று எவ்வளவோ அழகாயிருந்தது. இப்பொழுது குப்பையாலும், ஜெத்சமெனியில் வியர்த்த் இரத்தத்தாலும் அசுத்தமடைந்து விட்டது. மேலும் தம் குட்டை உள் வஸ்திரத்தை அணியுமுன் நனைந்துள்ள தம் முகத்தைத் துடைத்து அதில் படிந்த தூசிகளையும் எச்சில்களையும் சுத்தஞ் செய்து கொள்கிறுர். பரிதாபமான அந்தத் திருமுகம் சுத்தமாக இருக்கிறது. காயங்களும் கீறல்களும் தெரிகின்றன. கலைந்து கிடக்கிற தம் தலைமுடியையும் தாடியையும் ஒழுங்குபடுத்துகிறுர். துப்புரவாயிருப்பது அவருடன் பிறந்த ஒரு தனித் தேவை.

பின்னர் சேசு சூரிய ஒளியில் உட்காருகிறுர். ஏனென்றுல் என் சேசு நடுங்குகிறுர்... காய்ச்சலில் ஏற்படும் குளிர் நடுக்கம் அவரை வாட்டுகிறது. அவர் இரத்தத்தை இழந்ததாலும், ஒன்றும் சாப்பிடாததாலும், இவ்வளவு தூரம் நடந்ததாலும் பலவீனமாய் உணருகிறுர்.

அவர்கள் மறுபடியும் அவருடைய கரங்களைக்

கட்டுகிறார்கள். கயிறு அவருடைய மணிக்கட்டுகளை அறுக்கிறது. கைகளிலே கயிறு உராய்ந்த இடத்தில் சிவப்புக் காப்பு போல் காணப்படுகிறது.

அப்போது ஒரு போர்ச் சேவகன்: "பொறு. யூதர்களுக்கு ஒரு அரசன் வேண்டுமாம். அவர்களுக்கு ஓர் அரசனை நாம் கொடுப்போம். இவனைத்தான்..." என்று சொல்கிறான்.

அவன் கட்டிடத்தின் பின்னால் உள்ள வளவுக்குள் ஓடிச் செல்கிறான். அங்கிருந்து ஒரு கத்தை ஹாதார்ன் என்ற முட்செடியின் கிளைகளோடு திரும்புகிறான். அந்தக் கிளைகள் இன்னும் வளையக் கூடியவைகளாக உள்ளன. ஏனென்றால் இளவேனிற்காலம் அவைகளை ஏறக்குறைய இளங்கிளைகளாகவே வைத்துள்ளது. ஆயினும் அவற்றின் கூரிய முட்கள் கடினமடைந்துள்ளன. ஒரு பெரிய கத்தியால் அக்கிளைகளிலிருந்து இலைகளையும், மொட்டுகளையும் அவர்கள் அகற்றுகிறார்கள். பின், வட்டமாக கிளைகளை வளைத்து, பாவம் சேசுவின் சிரசில் வைக்கிறார்கள். ஆனால் அக்குரூர முடி தலையின் வழியாக அவருடைய கழுத்தில் விழுகிறது.

"இது சரியாயில்லை. சின்னதாக்குங்கள். இதை எடுங்கள்."

கழுத்தில் விழுந்த முள் வளையத்தை எடுக்கிறார்கள். அவருடைய கன்னங்களை முட்கள் கீறுகின்றன. கண்களைக் குத்திக் குருடாக்கி விடுமோ என்றிருக்கிறது. அப்படிக் கழற்றும்போது அவருடைய தலைமுடியையும் பிடுங்குகிறார்கள். முள்முடியைச் சிறிதாக்குகிறார்கள். இந்தத் தடவை அது அதிக சிறிதாகி விட்டது. அதை அவர் தலையில் வைத்து அழுத்துகிறார்கள். முட்களை தலைக்குள் இறக்குகிறார்கள். ஆயினும் அது கீழே விழுந்து விடும் போலிருக்கிறது. மறுபடியும் முடியைக் கழற்றுகிறார்கள். இந்தத் தடவை கூடுதலான முடி பிடுங்கப்படுகிறது. மறுபடியும் முள்முடியைத் தலையில் வைத்து சரி செய்கிறார்கள். இப்போது அது பொருந்திக் கொள்கிறது. முன்பாகத்தில் மூன்று முட்கிளைகள் நிற்கின்றன. தலையின் பின்புறத்தில் அந்த மூன்று கிளைகளும் ஒன்றோடொன்று பின்னி ஒரு முட்கொத்தாக உள்ளது. அது சேசுவின் பிடரிக்குள் குத்தி இறங்குகிறது.

"நீ எவ்வளவு நன்றாகக் காட்சியளிக்கிறாய் தெரிகிறதா? இயற்கையான வெண்கல நிறம், உண்மையான சிவப்பு மாணிக்கங்கள். என் உடற்கவசத்தில் உன்னையே பார் இராஜாவே"



என்று அந்தக் குரூரத்தைக் கண்டுபிடித்தவன் கேலியாய்ப் பேசுகிறான்.

"அரசனாவதற்கு கிரீடம் மட்டும் போதாது. ஊதாவும், செங்கோலும் தேவை. கொர்னேலியுஸ், குதிரை லாயத்தில் ஒரு மூங்கில் கழியும், கழிவு நீர்க் குழாயருகில் ஒரு சிவப்பு மேல் வஸ்திரமும் இருக்கின்றது. போய் அவற்றை எடுத்து வா."

அவை கொண்டுவரப்பட்டதும் அந்த சுத்தமில்லாத கந்தல் துணியை சேசுவின் தோள்மேல் போடுகிறார்கள். மூங்கில் கழியை அவர் கையில் கொடுக்குமுன் அதைக் கொண்டு அவர் தலையில் அடிக்கிறார்கள். "யூதர்களின் இராஜாவே வாழ்க" என்று சொல்லிப் பணிகிறார்கள். இடி முழங்குவது போல் சிரிக்கிறார்கள்.

சேசு யாதொன்றும் செய்யாமல் இருக்கிறார். குதிரைகளின் தண்ணீர்த் தொட்டி ஒன்றைக் கவிழ்த்தி அந்த "அரியாசனத்தில்" அவர்கள் தம்மை இருத்த விடுகிறார். தம்மை அடிக்கவும் பரிகாசம் செய்யவும் விட்டுக் கொடுக்கிறார். ஒரு வார்த்தை கூட அவர் வாயிலிருந்து வெளிவரவில்லை. அவர்களைப் பார்க்க மட்டும் செய்கிறார். அவருடைய பார்வையில் எத்தனை கருணையும் எப்படிப்பட்ட கொடிய துயரமும் காணப்படுகிறதென்றால், என் இருதயம் உடைகிறதாக உணராமல் என்னால் அதைப் பார்க்க முடியவில்லை.

ஒரு மேலதிகாரியின் கரகரத்த குரல், குற்றவாளியான கைதியை பிலாத்துவிடம் கொண்டு போங்கள் என்று கட்டளையிடுகிற வரையிலும் போர்ச் சேவகர் அவரைப் பரிகாசம் செய்வதை நிறுத்தவில்லை. குற்றவாளி! என்ன குற்றம்?

சேசு மறுபடியும் கூட மண்டபத்திற்குக் கொண்டு செல்லப் படுகிறார். சூரிய வெயிலுக்காக அம்மண்டபம் இப்பொழுது ஒரு விலையேறப்பெற்ற திரையால் மறைக்கப்பட்டிருக்கிறது. சேசு முள்முடியுடனும் சிவப்பு சகலாத்துடனும் மூங்கில் கழியுடனும் இருக்கிறார்.

"உன்னை நான் ஜனங்களுக்குக் காட்டும்படியாக முன்னால் வா" என்கிறான் பிலாத்து.

சேசு முழுவதும் களைத்துப் போய்விட்டாலும் கண்ணியம் பொருந்த நிமிர்ந்து நிற்கிறார். ஓ! அவர் உண்மையாகவே அரசர்தான்!

"கேளுங்கள் யூதர்களே! இதோ அம்மனிதன்! அவனை

நான் தண்டித்து விட்டேன். இப்போது அவனைப் போக விடுங்கள்.''

''முடியாது! முடியாது! அவனை நாங்கள் பார்க்கட்டும். அவன் வெளியே வரட்டும்! தேவ தூ□ணம் சொல்கிறவனை நாங்கள் பார்க்க வேண்டும்.''

''அவனை வெளியே கொண்டு வாருங்கள். அவர்கள் அவனைக் கைப்பற்றி விடாதபடி பார்த்துக் கொள்ளுங்கள்.''

சேசு மேடையின் முகப்புக்கு வருகிறார். போர்வீரர்கள் அணிவகுத்து நிற்கும் சதுக்கத்தில் அவர் காணக் கூடியதாக வரவும், பிலாத்து தன் கையால் அவரைச் சுட்டிக்காட்டி:

''இதோ மனிதன்! உங்கள் அரசன்! இவ்வளவும் உங்களுக்குப் போதாதா?'' என்கிறான்.

வெப்பமான இந்நாளில் சூரியன் கிட்டத்தட்ட உச்சிக்கு வருகிறது. மூன்றும் மணிக்கும் ஆறும் மணிக்கும் இடைப்பட்ட நேரம். முகங்களும் கண்களும் துலக்கமாகத் தெரிகின்றன. இவர்கள் மனிதர்கள்தானா? இல்லை. இவர்கள் வெறி கொண்ட வேங்கைகள். அவர்கள் கூச்சல் போடுகிறார்கள், முஷ்டிகளை அசைக்கிறார்கள். அவருடைய மரணத்தைக் கேட்கிறார்கள்...

சேசு நேராக நின்று கொண்டிருக்கிறார். இப்போது அவரிடம் காணப்படும் கண்ணிய மகத்துவத் தோற்றம் வேறு ஒருபோதும் இருந்ததில்லையென்று நான் நிச்சயமாகச் சொல்கிறேன். மிக ஆச்சரியமான புதுமைகளை அவர் செய்த போது கூட அவர் இப்படி இல்லை. துயரத்தின் கண்ணியமாய்க் காணப்படுகிறார். ஆயினும் அவரைக் கடவுள் என்று குறிப்பிடப் போதுமான அளவு தெய்வீகமாயிருக்கிறார். ஆனால் அந்தப் பெயரைக் கூறுவதற்கு குறைந்த பட்சம் மனிதர்களாகவேனும் இருப்பது அவசியம். ஆனால் இன்று ஜெருசலேமில் மனிதர்களே இல்லை! பசாசுக்கள் மட்டுமே உள்ளன!

சேசு கூட்டத்தை சுற்றிலும் பார்க்கிறார். கடும் வெறுப்பைக் காட்டும் கடல் போன்ற முகங்களின் நடுவில் அன்பான முகங்களைத் தேடுகிறார். சில நண்பர்களின் முகங்களைக் காண்கிறார். எத்தனை பேர்? ஆயிரக்கணக்கான எதிரிகளின் மத்தியில் இருபது பேர் கூட இல்லை... அவர் இப்படிப்பட்ட கைவிடப்படுதலால் பாதிக்கப்பட்டு தம் தலையைத் தாழ்த்துகிறார். ஒரு கண்ணீர்த் துளி விழுகிறது... இன்னொன்று... மேலும் கண்ணீர் விழுகிறது...



அவருடைய கண்ணீர் இரக்கத்தை ஏற்படுத்தவில்லை. அதை விடக் கொடிய பகையுணர்வைத் தூண்டி விடுகிறது.

சேசு கூடத்திற்கு மறுபடியும் கொண்டு செல்லப் படுகிறார்.

''ஆகவே? இவன் போகட்டும். அதுவே நீதி.''

''இல்லை! அவனுக்கு மரணம்! அவனைச் சிலுவையில் அறையும்.''

''உங்களுக்கு நான் பரபாஸைத் தருகிறேன்.''

''வேண்டாம்! கிறீஸ்துவை!''

''அப்படியென்றால் நீங்களே இவனைக் கொண்டு போங்கள். நீங்களே இவனைச் சிலுவையில் அறையுங்கள். ஏனென்றால் அப்படிச் செய்ய இவனிடம் நான் எந்தக் குற்றத்தையும் காணவில்லை.''

''அவன் தன்னை சர்வேசுரனுடைய குமாரன் என்று சொன்னான். அப்படிப்பட்ட தேவ தூ□ணம் சொல்லும் எவனுக்கும் எங்கள் சட்டம் மரண தண்டனை விதிக்கிறது.''

பிலாத்து சிந்திக்கிறான். அவன் உள்ளே போய்த் தன் ஆசனத்தில் அமருகிறான். முழங்கையை முழங்காலில் ஊன்றி கையில் தலையைச் சார்த்தி சேசுவை ஆராய்கிறான். ''கிட்ட வா'' என்கிறான்.

சேசு மேடையின் அடிக்குப் போகிறார்.

''இது உண்மையா? எனக்குச் சொல்.''

சேசு மவுனமாயிருக்கிறார்.

''நீ எங்கிருந்து வருகிறாய்? கடவுள் யார்?''

''அவரே சர்வமுமானவர்.''

''அப்புறம்? சர்வம் என்பதன் அர்த்தமென்ன? சாகிற ஒருவனுக்கு சர்வம் என்பதென்ன? உனக்குப் பைத்தியம்... கடவுள் இல்லை! நான் இருக்கிறேன்.''

சேசு மவுனமாகிறார். அந்தப் பெரிய வார்த்தையை உதிர்த்து விட்டு அதற்குப் பின் தம்மை மவுனத்தால் மூடிக் கொள்கிறார்.

''போன்ஸியுஸே! கிளாடியா புரோக்குலாவின் விடுவிக்கப்பட்ட அடிமை உள்ளே வர அனுமதி கேட்கிறாள்.

உமக்கொரு குறிப்புச் சீட்டு வைத்திருக்கிறாள்.''

"ஐய! இப்பொழுதும் ஸ்திரீகளா? அவள் வரட்டும்.''

ஒரு உரோமைப் பெண் உள்ளே வந்து முழங்காலிட்டு மெழுகிடப்பட்ட ஒரு எழுது தகட்டைக் கொடுக்கிறாள். சேசுவைத் தீர்ப்பிட வேண்டாமென்று புரோக்குலா தன் கணவனைக் கேட்டுக் கொள்ளும் குறிப்பாக அது இருக்க வேண்டும். அந்தப் பெண் போய் விடுகிறாள். பிலாத்து அதை வாசிக்கிறான்.

"நீ கொல்லப்படுவதைத் தவிர்க்கும்படி எனக்கு ஆலோசனை கூறப்பட்டுள்ளது. நீ ஒரு நிமித்திகனை விடப் பெரியவன் என்பது உண்மையா? நீ எனக்கு அச்சமூட்டுகிறாய்.''

சேசு அதற்குப் பதில் கூறவில்லை.

"உன்னை விடுதலை செய்யவோ, அல்லது சிலுவையில் அறையவோ எனக்கு அதிகாரம் உள்ளதென்று உனக்குத் தெரியாதா?''

"உந்நதரிடமிருந்து கொடுக்கப்படாவிட்டால் உமக்கு எந்த அதிகாரமும் இராது. ஆதலால் என்னை உம்மிடம் கையளித்தவன் உம்மைவிட அதிக குற்றமுள்ளவனாகிறான்.''

"உந்நதர் யார்? உன் கடவுளா? எனக்குப் பயமாய் இருக்கிறது...''

சேசு பதில் கூறவில்லை.

பிலாத்து நுட்பமான கட்டத்திலிருக்கிறான். அவனுக்கு விருப்பம் இருக்கிறது. இல்லாமலும் இருக்கிறது... கடவுளின் தண்டனைக்குப் பயப்படுகிறான். உரோமைக்கு அஞ்சுகிறான். யூதேய பழிவாங்குதலுக்கும் பயமாயிருக்கிறது. ஒரு கணம் தெய்வ பயத்தால் மேற்கொள்ளப்படுகிறான். மண்டபத்தின் முகப்பிற்கு வந்து முழங்கும் குரலில் கத்திச் சொல்கிறான்: "இவன் குற்றவாளியல்ல'' என்று.

"அப்படியானால் நீர் செசாரின் நண்பரல்ல. தன்னை அரசன் என்று சொல்லுகிறவன் எவனும் செசாருடைய எதிரியாகிறான். நீர் நசரேயனை விடுதலை செய்யத் தேடுகிறீர். இதை செசாருக்கு நாங்கள் தெரிவிப்போம்.''

மனித பயம் பிலாத்துவைப் பற்றிக் கொள்கிறது.

பிலாத்து ஓர் அகன்ற பாத்திரம் கொண்டுவரச் சொல்லி ஜனங்களின் முன்பாக தன் கைகளைக் கழுவுகிறான். ஜனங்களோ



வெறி கொண்டவர்களைப் போலாகி, "இவன் இரத்தம் எங்கள் மேலும் எங்கள் பிள்ளைகள் மேலும் இருக்கட்டும். இவனைப் பற்றி நாங்கள் பயப்படவில்லை. இவனைச் சிலுவையில் அறையும்! சிலுவையில் அறையும்'' என்று கத்துகிறார்கள்.

போஞ்சு பிலாத்து திரும்பவும் தன் ஆசனத்திற்குப் போகிறான். லோஞ்ஜினுஸ் என்ற செந்தூரியனையும் ஒரு அடிமையையும் கூப்பிடுகிறான். ஒரு பலகை கொண்டு வரும்படி அடிமைக்குக் கட்டளையிடுகிறான். அதிலே ஒரு அறிவிப்பை வைத்து, "சேசு நசரேன் யூதர்களின் அரசன்'' என்ற வார்த்தைகளை அதில் எழுதச் செய்கிறான். பின் அதை ஜனங்களுக்குக் காண்பிக்கிறான்.

"அல்ல. அப்படியல்ல! யூதர்களின் இராஜா அல்ல; இவன் தன்னை யூதர்களின் இராஜா என்று சொன்னான் என்று எழுதும்'' என்று பலரும் கத்துகிறார்கள்.

பிலாத்து கோபத்துடன்: "நான் எழுதியது எழுதியதே'' என்று சொல்லிய பின் நேராய் நிமிர்ந்து நின்று தன் கையின் உள்ளங்கை கீழ் நோக்க நீட்டி கட்டளை கொடுக்கிறான். "இவன் சிலுவையில் அறையப்படுவானாக. போர்ச் சேவகா! போ. சிலுவையை ஆயத்தஞ்செய்.'' இப்படிக் கட்டளையிட்டு விட்டு தன் ஆசனத்திலிருந்து இறங்கி கொந்தளிக்கும் கும்பலையோ, நலிந்த தீர்ப்படைந்த மனிதனையோ எட்டிப் பாராமல் மண்டபத்தை விட்டு அகன்று விடுகிறான்...

சேசு மண்டபத்தின் நடுவில் காவலர்கள் சூழ சிலுவையை எதிர்பார்த்து நிற்கிறார்.

அத்தியாயம் 3 [601]

## யூதாஸ் இஸ்காரியோத்தின் மரணம்

*31 மார்ச் 1941*

*திருப்பாடுகளின் வெள்ளிக்கிழமை அதிகாலையில் என் மிக வேதனையான காட்சி இது. வியாகுல மாதாவின் மணித்தியால ஜெபங்களை நான் சொல்லிக் கொண்டிருக்கையில் அது காணப்பட்டது. ஏழு வியாகுலங்களின் கன்னிகையின் சபையில் என் வார்த்தைப்பாட்டைக் கொடுப்பதற்கு, அதற்கு முந்திய இரவை வியாகுலக் கன்னிகையுடன் செலவிடுவதே மிகச் சிறந்த தயாரிப்பு என்று நான் கருதினேன்.*

*யூதாஸைக் காண்கிறேன். அவன் தனியே இருக்கிறான். வெளிறிய மஞ்சள் நிற ஆடை உடுத்தி, இடையில் சிவப்புக் கயிறு கட்டியிருக்கிறான். என்னுடைய அந்தரங்க அறிவிப்பாளர் எனக்குத் தெரிவிக்கிறார்: சற்று நேரத்திற்கு முன் சேசு கைது செய்யப்பட்டார்; அவர் கைதான பின் அங்கிருந்து ஓடிவிட்ட யூதாஸ் குழப்பமான கருத்துகளுக்கு ஆளாகியுள்ளான் என்று. உண்மையாக யூதாஸ் பார்ப்பதற்கு பயங்கர நாய்க் கூட்டத்தால் துரத்தப்பட்டுக் கோபத்தால் நிரம்பிய காட்டு மிருகம் போலிருக்கிறான். இலைகளை சரசரக்க வைக்கிற காற்றும், தெருவில் கேட்கிற எந்த ஓசையும், சுனையின் கொப்பளிக்கும் சத்தமும் அவனுக்கு அச்சமூட்டுகின்றன. பயந்து போய் சந்தேகத்துடன் சுற்றிப் பார்க்க வைக்கின்றன. ஒரு கொலைகாரன் தன்னைப் பிடித்துக் கொண்டது போலப் பதறுகிறான். தலையைத் தாழ்த்தி கழுத்தைத் திருப்பி சுற்றிலும் நோக்குகிறான். பார்க்க விரும்புகிற ஒருவன் பார்க்கப் பயப்படுவதுபோல் கண்களை உருட்டுகிறான். நிலா வெளிச்சத்தில் நிழல் மனித உருவம் போல் காணப்பட்டால் அவன் கண்களை அகலத் திறந்து வழக்கமாயிருப்பதை விட அதிகமாய் வெளிறி, பின்னால் குதித்து ஒரு கணம் நின்று வந்த வழியே வேகமாய் ஓடுகிறான். வேறு ஒடுக்கமான சந்துகளில் புகுகிறான். அங்கே இன்னொரு சத்தம், இன்னொரு நிழலுருவம் அவனை நிறுத்துகிறது, அல்லது இன்னொரு திசையில் ஓட வைக்கிறது.*

*பைத்தியம் பிடித்த இந்த ஓட்டத்தில் அவன் பட்டணத்தின் மத்தியை நோக்கி வருகிறான். ஜனங்களின் கூச்சல், கைப்பாஸின் அரண்மனைப் பக்கம் தான் இருப்பதாக அவனை உணர வைக்கிறது. அவன் தன் தலையைக் கைகளால் அமுக்குகிறான். அந்தக் கூச்சல்களெல்லாம் அவன் மேல் எறியப்பட்ட கற்கள் போல் குனிகிறான், ஓடிப் போகிறான். அவன் ஓடுகிற சந்து அவனை நேராக கடைசி இராப்போஜனம் உட்கொள்ளப்பட்ட வீட்டிற்குக் கொண்டு வருகிறது. வீட்டின் முன்பாக வந்ததும் அதைக் கண்டுபிடிக்கிறான். ஏனென்றால் சரியாக அந்த இடத்திலே ஒரு சுனை துளிர்த்து விழுகிறது. அந்த நீர்த்துளிகள் சிறிய கல் தொட்டியில் விழுகிற ஓசையும், ஒடுக்கமான சந்து வழியே வீசுகிற மென் காற்றின் சத்தமும் ஒரு அமுக்கிய முனகல் ஒலியை எழுப்புகின்றன. காட்டிக் கொடுக்கப்பட்டு வதைக்கப்பட்ட தன் குருவின் கண்ணீராகவும், முனகலாகவும் அவை அவனுக்கு எட்டியிருக்க வேண்டும். அதைக் கேளாதிருக்கும்படி கைகளால் காதுகளைப் பொத்துகிறான். அந்த வீட்டின் வாசலைக் காணாதிருக்கும்படி கண்ணை மூடிக் கொண்டு ஓட்டம் பிடிக்கிறான். சில மணி நேரத்திற்கு முன்புதான் அவன் தன் குருவோடு அந்த வாசல் வழியாக நுழைந்தான்; அவரைக் கைது செய்ய ஆயுதமணிந்த வீரர் படையைக் கொண்டுவர அந்த வாசல் வழியாகவேதான் அவன் வெளியே சென்றான்.*

*இப்படிக் குருட்டுத்தனமாய் அவன் ஓடும்போது ஒரு தெரு நாய் மேல் மோதுகிறான். காட்சிகள் பெறத் தொடங்கியபின் நான் காணும் முதல் நாய் இதுதான். அது ஒரு பெரிய மர நிற சடைநாய். அது தன்னைத் தொந்தரவு செய்தவன் மேல் பாய்வதற்குத் தயாராக உறுமியபடி ஒரு பக்கமாக ஒதுங்குகிறது. யூதாஸ் கண்களைத் திறந்து, இரண்டு எரிகிற கண்களையும், வெண்மையான கோரப் பற்களையும் காண்கிறான். அவை பசாசைப் போல் தன்னைப் பார்த்துக் கேலியாய்ச் சிரிப்பது போலிருக்கிறது. அவன் பயந்து அலறுகிறான். அந்த சத்தம் தனக்கு ஆபத்தானது என்று அந்த நாய் கருதியதோ என்னவோ. அவன் மேல் பாய்கிறது. இருவரும் புழுதியில் புரளுகிறார்கள். அச்சத்தால் செயலிழந்து அடியில் கிடக்கிறான் யூதாஸ். நாய் அவன் மேலே. அது அவனுடன் சண்டையிடுவதைத் தனக்குத் தகுதியற்ற ஒன்றாக எண்ணியிருக்கலாம் – அவனை அது விட்டு விட்டது. யூதாசை அது கடித்த மூன்று இடங்களில் இரண்டிலிருந்து இரத்தம் வடிகிறது. அவனுடைய மேல் வஸ்திரமும் தாறுமாறாகக் கிழிந்திருக்கிறது.*

ஒரு கடி யூதாஸின கன்னத்தைக் காயப்படுத்தியிருக்கிறது – அவன் சேசுவை முத்தமிட்ட அதே இடத்தில்! அதிலிருந்து இரத்தம் வடிந்து அவனுடைய மஞ்சள் ஆடையின் கழுத்தை நனைக்கிறது. அந்த ஆடையைக் கழுத்தில் பொருத்திக் கட்டும் சிவப்புக் கயிற்றிலும் இரத்தம் ஊறி அதை அதிகம் சிவப்பான கழுத்துப் பட்டிபோல் காட்டுகிறது. யூதாஸ் தன் கன்னத்தைத் தொட்டுப் பார்க்கிறான். திரும்பிப் போய்க் கொண்டிருக்கிற நாயை ஒரு கதவு இடைவெளி வழியாய்ப் பார்த்து: "பெயல்செபூப்" என்று முனகுகிறான். நாய் மறுபடியும் அவனை விரட்டுகிறது. அவன் மீண்டும் அலறியபடி ஓடுகிறான். ஜெத்சமெனி பக்கத்திலிருக்கிற பாலம் வரையிலும் அவனை விரட்டிய நாய், அவனைத் துரத்திக் களைத்ததினாலோ, அல்லது அது வெறி நாயாயிருந்ததால் தண்ணீர் அதைத் திரும்பச் செய்வதாலோ, அது உறுமிக் கொண்டே போய் விடுகிறது. நாய் மேல் எறிவதற்கு கல் எடுப்பதற்காக ஓடைக்குள் ஓடி இறங்கிய யூதாஸ், நாய் திரும்பிப் போவதைக் காண்கிறான். சுற்று முற்றும் பார்க்கிறான். முழங்காலுக்குக் கீழ் வரை தண்ணீரில் நிற்பதை உணருகிறான். துணி நனைவதையும் பொருட்படுத்தாமல் தாகத்தால் தகிக்கிறவனைப் போல் அப்படியே தண்ணீர் வரை குனிந்து நீரைக் குடிக்கிறான். இரத்தம் ஒழுகும் கன்னத்தைக் கழுவுகிறான். அது அவனுக்கு வேதனையாக இருந்திருக்க வேண்டும்.

அதிகாலையின் வெளிச்சம் தெரிகிறது. ஆற்றின் கற்களின் படுகையிலிருந்து மறுபக்கமாய் மேலே வருகிறான். இன்னும் நாயின் பயம் விடாதது போல் பட்டணத்தை நோக்கிப் போகாமல் எதிர்த் திசையில் சில மீட்டர் தூரம் நடந்து போகிறான். அங்கே ஒலிவ மலையின் தோட்ட வாசல் தெரிகிறது. அந்த இடத்தைக் கண்டுபிடித்தவுடன்: "வேண்டாம்! வேண்டாம்!" என்று கத்துகிறான். பின் எந்த தடுக்க முடியாத சக்தியோ, எந்த சாத்தானுக்குரிய பாதக கொடுமை வெறியோ, அதை நோக்கியே போகிறான். சேசு பிடிபட்ட இடத்தைத் தேடுகிறான். பல காலடிகளால் மிதிபட்ட மண்ணும், ஒரு இடத்தில் கலைந்து நிற்கும் புல்லும், ஒரு இடத்தில் காணப்பட்ட இரத்தமும் – ஒருவேளை மால்குஸின் இரத்தமாயிருக்கலாம் – அங்குதான் அவன் கொலைஞர்களுக்கு மாசற்றவரைக் காட்டிக் கொடுத்தான் என்று கண்டுபிடிக்க வைக்கின்றன.

பார்த்துக் கொண்டே நிற்கிறான்... பின் ஒரு கோரமான



சத்தத்துடன் பின்னால் குதிக்கிறான். "அந்த இரத்தம்! அந்த இரத்தம்!..." என்று கத்துகிறான். அதைச் சுட்டிக் காட்டுகிறான்... யாருக்கு? அவன் கை நீட்டப்பட்டும் விரல் சுட்டிக் காட்டியபடியும் உள்ளது. காலை ஒளி அதிகரிப்பதால் அவன் முகம் தெரிகிறது. சாம்பல் பூத்து, அகோரமாக, ஒரு பைத்தியனைப் போலக் காணப்படுகிறான். அவன் கண்கள் ஜன்னி கண்டவனைப் போல அகன்று பளபளக்கின்றன. பயத்தாலும் ஓட்டத்தாலும் கலைந்த முடியுடன் அவன் தலை பரட்டையாகக் காட்சியளிக்கின்றது. கன்னம் வீங்கியுள்ளதால் வாய் கோணி இளிந்து காணப்படுகிறது. அவனுடைய அங்கி கிழிந்து இரத்தம் துவைந்து ஈரத் துணியில் பட்ட தூசியில் சேறாகி அவனை ஒரு பிச்சைக் காரனைப் போலக் காட்டுகிறது. அவனுடைய அங்க வஸ்திரமும் கிழிந்து சேறாகி கந்தைபோல் ஒரு தோளிலிருந்து தொங்குகிறது. அவன் "அந்த இரத்தம்! அந்த இரத்தம்!" என்று கத்திக் கொண்டே அந்த இரத்தம் ஒரு கடலாக எழும்பி அவனை மூழ்கடிப்பது போல். அவன் பின்னால் நகரும்போது, அந்தக் கிழிந்த அங்க வஸ்திரம் அவனைச் சுற்றிக் கொள்கிறது.

அப்படியே யூதாஸ் பின்புறமாய் விழ, அவன் தலை ஒரு கல்லில் மோதுகிறது. பயத்தாலும், நோவாலும் அவன் முனகுகிறான். "அது யார்?" என்று கத்துகிறான். தன்னை அடிப்பதற்கு யாரோ தன்னை விழத்தாட்டியதாக அவன் நினைத்திருக்க வேண்டும். நடுங்கியபடி சுற்றிப் பார்க்கிறான். அங்கே ஒருவருமில்லை! அவன் எழுகிறான். இப்பொழுது அவன் தலையின் பின்புறத்திலும் இரத்தம் சொட்டுகிறது. அவன் துணியில் இரத்த அடையாளம் விரிவடைகிறது. இரத்தம் தரையில் விழவில்லை – அந்த அளவிற்கு அது இல்லை. அவன் உடையே அதை உறிஞ்சிக் கொள்கிறது. சிவப்புத் தூக்குக் கயிறு ஏற்கெனவே அவன் கழுத்தைச் சுற்றுவது போல் தெரிகிறது.

அவன் நடக்கிறான். ஒரு ஒலிவ மரத்தடியில் இராயப்பர் மூட்டியிருந்த சிறு நெருப்பின் அடையாளங்களை அவன் காண்கிறான். அது இராயப்பர் செய்தது என அவனுக்குத் தெரியாது. சேசுதான் அங்கே இருந்திருப்பார் என அவன் நினைத்திருக்க வேண்டும். "போய் விடு! போய் விடு" என்று இரண்டு கைகளையும் முன்னால் நீட்டி சத்தமிடுகிறான். தன்னை வாதிக்கிற ஒரு பூதத்தை விரட்டுவது போலிருக்கிறது. அங்கிருந்து அவன் ஓடுகிறான். சேசு அவஸ்தைப்பட்ட பாறையின் எதிரே வந்து

நிற்கிறான்.

சூரியோதயமாகிறது. தெளிவாகவும் நேரடியாகவும் பார்க்க முடிகிறது. சேசுவின் மேல் வஸ்திரம் மடிக்கப்பட்டு பாறையில் இருப்பதைப் பார்க்கிறான். அதை அடையாளம் கண்டு கொள்கிறான். அதைத் தொட விரும்புகிறான். பயப்படுகிறான். கையை நீட்டிவிட்டு இழுத்துக் கொள்கிறான். விரும்புகிறான், விரும்பாமலுமிருக்கிறான். ஆனால் அந்த மேல் வஸ்திரம் அவனைக் கவருகிறது. "வேண்டாம் வேண்டாம்" என்று முனகுகிறான். பின்: "வேண்டும்! சாத்தானால். அது வேண்டும்! நான் அதைத் தொட வேண்டும். எனக்குப் பயமில்லை! நான் பயப்படவில்லை!" என்கிறான்.

அவன் பயப்படவில்லை என்று சொல்கிறான். ஆனால் பயங்கரத்தினால் அவன் பற்கள் மோதிக் கொள்கின்றன. காற்றினால் அசைகிற ஒரு ஒலிவ மரக் கிளை, அவன் தலைக்கு மேலே மரத்துடன் மோதும் சத்தம் அவனை மறுபடியும் கத்த வைக்கிறது. அப்படியிருந்தும் அவன் மீண்டும் ஒரு முயற்சி செய்து அந்த மேல் வஸ்திரத்தைப் பற்றிக் கொள்கிறான். சிரிக்கிறான். அது ஒரு பைத்தியக்காரனின் சிரிப்பு. பசாசின் சிரிப்பு. இசிவு நோய்ப்பட்ட, உடைந்த, சோர்ந்த, முடிவற்ற சிரிப்பு அது. காரணம் அவன் தன் பயத்தை மேற்கொண்டு விட்டான். அப்படியே சொல்லவும் செய்கிறான்: "கிறீஸ்துவே உன்னைக் கண்டு நான் அதிகம் பயந்தேன். ஏனென்றால், நீ ஒரு கடவுளென்றும், வலிமை வாய்ந்த மனிதன் என்றும் எண்ணினேன். இப்போது உன்னைக் கண்டு எனக்குப் பயமில்லை. ஏனென்றால் நீ கடவுளல்ல. நீ ஒரு எளிய பைத்தியக்காரன், பலவீனன். உன்னையே தற்காத்துக் கொள்ள உனக்குத் தெரியவில்லை. என்னை நீ சாம்பலாக்கி விடவில்லை. என் இருதயத்திலிருந்த துரோகத்தையும் நீ கண்டுபிடிக்கவில்லை. என்னுடைய அச்சங்கள்!... எப்படிப்பட்ட முட்டாள்! நேற்று மாலையில் நீ பேசும்போது கூட நீ அறிந்திருப்பாயென நினைத்தேன். ஆனால் நீ எதையுமே அறியவில்லை. உன்னுடைய சாதாரண வார்த்தைகளுக்கு தீர்க்கதரிசன தொனியைக் கொடுத்தது என்னுடைய பயம்தான். நீ ஒன்றுமேயில்லை. விற்கப்படவும், காட்டிக் கொடுக்கப்படவும், பிடிக்கப்படவும் உன்னை விட்டுவிட்டாய். உன் வல்லமை! உன் பிறப்பு! ஹ ஹ ஹா! அட கோமாளி! சாத்தானே வலிமையுள்ளவன். உன்னை விட வல்லவன். அவன் உன்னைத் தோற்கடித்து விட்டான்; ஹ ஹ ஹா!





தீர்க்கதரிசி! மெசையா! இஸ்ராயேலின் இராஜா! நீ என்னை மூன்று ஆண்டுகள் கீழ்ப்படுத்தியிருந்தாய்! என் இருதயத்தில் எப்போதும் நான் அச்சத்தோடிருந்தேன். வாழ்க்கையை நான் அனுபவிக்க விரும்பிய போது உன்னை நுட்பமாக ஏமாற்றுவதற்கு நான் பொய் சொல்ல வேண்டியிருந்தது. நான் வழக்கமாகக் கையாளுகிற தந்திரமெல்லாம் இல்லாமலே நான் திருடியிருந்தாலும், ஒழுக்கக் கேடாய் நடந்திருந்தாலும், நீ என்னை எதுவுமே செய்திருக்க மாட்டாய். நெஞ்சுரமில்லாதவன்! முட்டாள்! கோழை! வாங்கிக் கொள்! இதை வாங்கிக் கொள். நீ என்னை பயத்திற்கு அடிமையாக வைத்திருந்த காலத்திற்குப் பழி வாங்குவதற்காக இப்பொழுது நான் உன் அங்க வஸ்திரத்திற்குச் செய்வதை உனக்குச் செய்யாமல் விட்டது தவறாகி விட்டது. அந்தப் பயம் ஒரு முயலின் பயம்... இதை வாங்கிக் கொள்! இங்கே! இதை வாங்கிக் கொள்!"

"இதை வாங்கிக் கொள்" என்று அவன் சொன்ன ஒவ்வொரு தடவையும் அவன் சேசுவின் அங்கவஸ்திரத்தைக் கடித்து அதைக் கிழிக்கப் பார்க்கிறான். கையால் கசக்கி உருக்குலைக்கிறான். அப்படிச் செய்வதில் அதை விரிக்கிறான். அதிலே அதை நனைத்த கறை தெரிகிறது. கோபத்துடன் நிறுத்துகிறான். அந்தக் கறைகளை உற்றுப் பார்க்கிறான். தொட்டுப் பார்க்கிறான், முகருகிறான். அது இரத்தம்... அங்க வஸ்திரத்தை முழுவதும் விரிக்கிறான். சேசு அந்தத் துணியைத் தம் இரு கரங்களாலும் முகத்தோடு வைத்து அழுத்திய போது பதித்த இரு கரங்களின் அடையாளங்கள் அதிலே தெளிவாகத் தெரிகின்றன.

"ஆ!... இரத்தம்! இரத்தம்! அவனுடைய... இல்லை!" யூதாஸ் அந்தத் துணியைக் கீழே போட்டு விட்டு சுற்றிலும் பார்க்கிறான். சம்மனசானவர் வந்து சேசுவைத் தேற்றியபோது சேசுவின் முதுகு சாய்ந்திருந்த அந்தப் பாறையில் இருண்ட சிவப்பாக அவருடைய இரத்தம் உறைந்திருந்தது. "அங்கேயும்!... அங்கேயும்!... இரத்தம்! இரத்தம்!..." அதைப் பாராமலிருக்கும்படி யூதாஸ் கண்களைத் தாழ்த்துகிறான். அங்கேயிருக்கிற புல்லில் சிந்திய இரத்தத்தால் அவை கறைபட்டிருக்கின்றன. அதன் மேல் பெய்த பனியினால் அது இளகியிருப்பதால் இப்பொழுது சிந்திய இரத்தம் போல் இருக்கிறது. சிவப்பாக காலை ஒளியில் பிரகாசிக்கிறது. "வேண்டாம், வேண்டாம், வேண்டாம்! அதை நான் பார்க்க வேண்டாம். அந்த இரத்தத்தை என்னால் பார்க்கக்

கூடவில்லே'' என்று கூறிய யூதாஸ் தன் தொண்டையைக் கைகளால் பிடித்துக் கொண்டு தான் ஒரு இரத்தக் கடலில் மூழ்குகிறவனைப் போல் துழாவுகிருன். ''திரும்பிப் போகிறேன், திரும்பிப் போகிறேன். என்னை விட்டு விடு. என்னை விட்டு விடு. சபிக்கப்பட்டவன். இந்த இரத்தம் ஒரு சமுத்திரம். அது பூமியை மூடுகிறது. பூமியே! பூமியே! பூமியில் எனக்கொரு இடமில்லே. ஏனென்ருல் அதை மூடும் இரத்தத்தை என்னுல் பார்க்க முடியவில்லை. மாசற்றவருடைய காயீன் நானுகி விட்டேன்!'' என்கிருன் யூதாஸ். இந்தச் சமயத்தில்தான் தற்கொலே செய்யும் எண்ணம் அவன் இருதயத்திற்குள் புகுந்திருக்க வேண்டுமென நினைக்கிறேன். யூதாஸின் முகம் பயங்கரமாயிருக்கிறது.

அந்த மேட்டிலிருந்து குதித்து ஒலிவத் தோப்பு வழியே தான் வந்த பாதையை விட்டு வேறு பாதை வழியாக அவன் ஓடுகிருன். காட்டு மிருகங்களால் துரத்தப்பட்டு ஓடுகிறவனைப் போலிருக்கிருன். பட்டணத்துககுத் திரும்பிப் போகிருன். தன் மேல் வஸ்திரத்தால் எப்படி தன்னை மூட முடியுமோ அப்படி மூடிக் கொள்கிருன். தன் காயத்தையும், முகத்தையும் முடிந்த அளவு மூடியபடி தேவாலயத்தை நோக்கி நடக்கிருன்.

அப்படிப் போகிற வழியில் ஒரு சந்தியில் சேசுவைப் பிலாத்துவிடம் இழுத்துக் கொண்டு போகிற கும்பலேச் சந்திக்கிருன். அவனுல் திரும்பிச் சென்று விட முடியவில்லே. ஏனென்ருல் பின்னுலிருந்து மற்ற ஜனங்கள் பார்க்கும்படி நெருக்குவதால் முன்னே தள்ளுகிருர்கள். அவன் உயர்ந்த ஆளாயிருப்பதால் கட்டாயமாக மேலே காணப்படுகிருன். அவனும் காண்கிருன். அப்போது சேசுவின் கண்களேச் சந்திக்கிருன்... ஒரு கணம் இருவரும் பார்க்கிருர்கள். சேசு கட்டப்பட்டு அடிக்கப்பட்டவராய்க் கடந்து போகிருர். அப்போது யூதாஸ் மயங்கியவனைப் போல பின்புறமாகச் சாய்ந்து விழுகிருன். ஜனக்கூட்டம் இரக்கமற்று அவனை மிதிக்கிறது. அவனே எதிர்ப்புக் காட்டவில்லே. அவன் அந்தக் கண்களேச் சந்திப்பதற்குப் பதில் உலக முழுவதாலும் மிதிக்கப்பட தயாராக இருக்கிருன்.

கடவுட் கொலே செய்கிறவர்கள் வேதசாட்சியுடன் கடந்து போய், தெரு காலியான பின், யூதாஸ் எழுந்து மீண்டும் தேவாலயத்திற்குள் ஓடிப் போகிருன். தேவாலய அடைப்புக் காவலாள் மீது மோதி அந்த ஆளே கீழே விழத்தாட்டப் பார்த்தான்.



வெறி கொண்ட அவனே உள்ளே நுழைய விடாதபடி தடுக்க மற்றக் காவலர்கள் ஓடி வருகிருர்கள். மூர்க்கமடைந்த காளே போல் அவன் அவர்களேயெல்லாம் தட்டி விடுகிருன். காவலரில் ஒருவன் யூதாஸை விடாமல் பிடிக்கிருன். ஆலோசனேச் சங்க சாலேக்குள் அவன் நுழைந்து விடாதபடி அவனேப் பற்றிக் கொள்கிருன். யூதாஸ் அவனுடைய குரல் வளேயைப் பிடித்து நெரித்து மூன்று படிகளுக்கும் கீழே தள்ளி செத்தவனுக, அல்லது நிச்சயம் சாகும் தருணத்தில் போட்டு விடுகிருன். அங்கே யூத ஆலோசனேச் சங்கம் கூடி இன்னும் விவாதித்துக் கொண்டிருக்கிறது.

யூதாஸ் சாலேக்குட் புகுந்து ஆலோசனேச் சங்க நடுவில் – சற்று முன் சேசு நின்ற அதே இடத்தில் – நின்று கொண்டு: ''உங்கள் பணம் எனக்கு வேண்டாம். நீங்கள் நாசமாய்ப் போங்கள்'' என்று கத்துகிருன். நரகத்திலிருந்து வெளியேறிய பசாசு போலிருக்கிருன். இரத்தம் வடிந்து கொண்டு அலங்கோலமாய் ஜன்னி கண்டவன் போல் கோபாவேசமாய் கோழை ஒழுக, கைகள் நகங்களேப் போலிருக்க கத்துகிருன் – அது குரைப்பது போலிருக்கிறது. அப்படி கிரீச்சிட்டுக் கோரமாய் ஊளேயிட்டுப் பேசுகிருன்: ''உங்கள் பணம் எனக்கு வேண்டாம். சபிக்கப்பட்டவர்களே! என்னை அழித்து விட்டீர்கள். மிகப் பெரிய மகா பாவத்தை நான் செய்ய வைத்து விட்டீர்கள். உங்களேப் போல் நானும் சபிக்கப்பட்டவன். குற்றமில்லாத இரத்தத்தைக் காட்டிக் கொடுத்தேன். அந்த இரத்தமும், என் மரணமும் உங்கள் மேல் விழட்டும்! உங்கள் மேலே... வேண்டாம், ஹா...!'' அந்தத் தரை இரத்தத்தால் கறைப்பட்டிருப்பதை யூதாஸ் காண்கிருன். ''இங்கே, இங்கேயுமா இரத்தம்? எல்லா இடத்திலும்! அவன் இரத்தம் எங்கும் இருக்கிறது! சர்வேசுரனின் செம்மறியிடம் எவ்வளவு இரத்தம் உள்ளது. அது சாகாமல் உலக முழுவதையும் நிரப்ப? அதை நானே சிந்தினேன். நீங்கள் தூண்டி விட்டதால், சாபம்! நித்தியத்துக்கும் உங்களுக்கு சாபம்! இந்தச் சுவர்கள் சபிக்கப்படட்டும்! கடவுட் கொலேகாரன் பெரிய குரு சபிக்கப்படட்டும்! அருகதையில்லாக் குருக்களும், போலி சாஸ்திரிகளும், வே[illegible]தாரிகளான பரிசேயரும், குரூர யூதர்களும், பதுங்கும் வேதபாரகரும் சபிக்கப்படட்டும்! நானும் சபிக்கப்படுவேனுக! என்னேச் சபியுங்கள். உங்கள் பணத்தை வைத்துக் கொள்ளுங்கள். தூக்குக் கயிறு என்னை நெரிப்பது போல் அது உங்கள் ஆன்மாக்களே உங்கள் தொண்டைகளில்

நெரிக்கட்டும்" என்று கூறிய யூதாஸ் பணப்பையை கைப்பாஸின் வாயில் வீசி எறிந்து விட்டு ஊளையிட்டபடி வெளியேறுகிறான். நாணயங்கள் தரையில் சிதறி விழுகின்றன. கைப்பாஸின் வாயில் இரத்தம் வடிகிறது. யாருமே அவனைத் தடுக்கத் துணியவில்லை.

யூதாஸ் வெளியே வநது தெருக்கள் வழியே ஓடுகிறான். சேசு ஏரோதிடம் போகையிலும் அங்கிருந்து திரும்பி வருகையிலும் இரு முறை இறுதியாக அவரைச் சந்திக்கிறான்.

பட்டணத்தின் மத்திய பாகத்தை விட்டு மிக ஒதுங்கிய சநதுகளின் வழியாக கண்டபடி ஓடி மறுபடியும் இராப் போஜன வீட்டை வந்தடைகிறான். அது ஆளில்லா வீடு போல பூட்டிக் கிடக்கிறது. அவன் நின்று அவ்வீட்டை நோக்குகிறான். "தாய்..." என்று சொல்கிறான். அவனால் எதுவும் தீர்மானிக்க முடியவில்லை... "எனக்கும் ஒரு தாய் இருக்கிறாள்!... நான் ஒரு தாயின் மகனைக் கொன்று விட்டேன்!... அப்படியும்... நான் உள்ளே போக வேண்டும்... அந்த அறையை மீண்டும் பார்க்க வேண்டும். அங்கே இரத்தம் இல்லை..." என்கிறான்.

கதவைத் தட்டுகிறான். திரும்பவும் தட்டுகிறான்... இன்னொரு முறையும் தட்டுகிறான். வீட்டெஜமானி கதவைத் திறக்க வருகிறாள். பாதிக் கதவைத் திறக்கிறாள். யூதாஸ் இப்படிக் கொந்தளித்து, அடையாளம் தெரியாத அளவு மாறிப் போயிருந்ததைக் கண்டதும் ஒரு கூக்குரலிடுகிறாள். கதவைத் தள்ளித் திறந்து, பயந்தபடி நின்ற அந்த ஸ்திரீயைக் கீழே தள்ளிவிட்டு உள்ளே போகிறான்.

இராப்போஜன சாலைக்குத் திறக்கிற சிறிய கதவை நோக்கி ஓடிச் செல்கிறான். அதைத் திறந்து உள்ளே நுழைகிறான். திறந்திருக்கும் ஜன்னல்கள் வழியாக அழகிய சூரிய வெளிச்சம் உள்ளே பாய்ந்து கொண்டிருக்கிறது. யூதாஸ் ஒரு விடுதலைப் பெருமூச்சு விடுகிறான். மேலும் உள்ளே செல்கிறான்.

அங்கே எல்லாம் அமைதியாகவும், நிசப்தமாகவும் இருக்கிறது. தட்டுக்கள் எல்லாம் முன்பு வைக்கப்பட்டபடியே உள்ளன. அவைகளை யாரும் சீர்ப்படுத்தவில்லையென்று தெரிகிறது. சாப்பிடப் போகிறார்களோ என்று நினைக்கத் தோன்றும்.

யூதாஸ் மேசையை நோக்கிப் போகிறான். ஜாடியில் திராட்ச ரசம் இருக்கிறதா என்று பார்க்கிறான். இருக்கிறது. இரு



கைகளாலும் ஜாடியைத் தூக்கிப் பிடித்து ஆவலுடன் இரசத்தைக் குடிக்கிறான். பின் உட்காருகிறான். கைகளை மடித்து மேசையில் வைத்து அதிலே தலையைச் சாய்த்து ஓய்வு கொள்கிறான். அவன் சேசு அமர்ந்த அதே இடத்தில் தான் அமர்ந்திருப்பதைக் கவனிக்கவில்லை. தனக்கு முன்னால் நற்கருணைக்குப் பயன்படுத்தப்பட்ட பாத்திரம் இருப்பதையும் கவனிக்கவில்லை. இவ்வளவு ஓட்டத்திற்குப் பின் மூச்சு வாங்குதல் நிற்கும் வரை கொஞ்ச நேரம் அமைதியாக இருக்கிறான். பின் ஏறிட்டுப் பார்த்து பாத்திரத்தைக் காண்கிறான். தான் உட்கார்ந்திருப்பது எங்கே என்பதையும் உணருகிறான். பேய் பிடித்தவனைப் போல் எழுகிறான். ஆனால் அந்தப் பாத்திரம் அவனைக் கவருகிறது. அதனடியில் கொஞ்சம் சிவப்பு திராட்ச ரசம் இன்னும் இருக்கிறது. சூரிய ஒளி பாத்திரத்தில் பட்டு (அப்பாத்திரம் வெள்ளியால் செய்யப்பட்டதாகத் தெரிகிறது. இரசத்தை சிவப்புச் சுவாலை போல் காட்டுகிறது. "இரத்தம்! இரத்தம்! இங்கேயும் இரத்தம்! அவனுடைய இரத்தம்! அவனுடைய இரத்தம்!... "இதை என் நினைவாகச் செய்யுங்கள்!... அதை வாங்கிப் பருகுங்கள். இது என் இரத்தம்... உங்களுக்காகச் சிந்தப்படும் புதிய உடன்படிக்கையின் இரத்தம்... ஆ! நான் சபிக்கப்பட்டேன்! அது என் பாவத்தைப் போக்கும்படி எனக்காக இனி அது சிந்தப்பட முடியாது. நான் மன்னிக்கப்பட வேண்டுமென்று கேட்கவில்லை. ஏனென்றால் அவன் என்னை மன்னிக்க முடியாது. ஓடிவிடு! ஓடிவிடு! கடவுளுக்குக் காயீனாக ஆனவன் அமைதி காண ஒரு இடமும் இல்லை! மரணம்! எனக்கு மரணம்!..."

யூதாஸ் வெளியேறுகிறான். அங்கே மாதாவின் முன்பாக வந்து நிற்கிறான். சேசு மாதாவை வைத்து விட்டுப் போன அறையின் வாசலில் அவர்கள் நிற்கிறார்கள். வெளியில் சத்தம் கேட்டு பார்க்க வந்தார்கள் – வெகு நேரமாய்த் திரும்பி வராத அருளப்பராக இருக்கக்கூடும் என்று. அவர்கள் இரத்தமெல்லாம் இழந்து விட்டது போல் வெளிறிக் காணப்படுகிறார்கள். அவர்களின் துயரம் அவர்கள் கண்களை இன்னும் கூடுதலாக சேசுவின் கண்களைப் போலாகச் செய்துள்ளது. யூதாஸின் கண்கள் மாதாவின் கண்கள். தெருவில் சேசு அவனைப் பார்த்த அதே அர்த்தமுள்ள துயரப் பார்வையால் யூதாஸை நோக்குகின்றன. "ஓ!" என்று பயந்து ஓலமிட்டு அவன் சுவரில் சாய்கிறான்.

"யூதாஸ்!" என்றழைக்கிறார்கள் மாதா. மீண்டும்: "யூதாஸ்,

எதற்காக வந்திருக்கிருய்?'' என்று கேட்கிருர்கள். சேசு கூறிய அதே வார்த்தைகள்! துயரமான அன்புடன் அவை கூறப்படுகின்றன. அந்த வார்த்தைகளை யூதாஸ் நினைத்துக் கொண்டு கத்துகிருன்.

"யூதாஸ்!'' என்று மறுபடியும் கூப்பிட்டு, "நீ என்ன செய்தாய்? இவ்வளவு அன்புக்கு, காட்டிக் கொடுத்தா பதிலளித்தாய்?'' என்கிருர்கள். அவர்களின் நடுங்கும் குரலே அன்பு பாராட்டுவதாக உள்ளது.

யூதாஸ் ஓடப் பார்க்கிருன். "யூதாஸ்! யூதாஸ்! நில்! நில்! கேள்! அவருடைய பெயரால் சொல்லுகிறேன்: மனந்திரும்பு யூதாஸ்! அவர் மன்னிக்கிருர்...'' மாதா அவனைக் கூப்பிட்ட குரல் ஒரு பசாசையே மனந்திருப்பியிருக்கும். யூதாஸோ ஓடிப் போய் விட்டான். மாதாவின் குரலும் தோற்றமும் வரப்பிரசாதத்தின் முடிவான முயற்சியாயிருந்தது. ஆனுல் அவன் அதை எதிர்த்து நின்றதால், அதுவே தயவை இழந்த முடிவான செயலாயிற்று.

யூதாஸ் தடுமாறிக் கொண்டே போகிருன். மாதாவை அழைக்க வீட்டை நோக்கி வருகிற அருளப்பரைச் சந்திக்கிருன். தீர்ப்பு வழங்கப்பட்டு விட்டது. சேசு கல்வாரிக்குச் புறப்படப் போகிருர். மாதாவை அவர்கள் குமாரனிடம் கூட்டிப் போகும் சமயமாயிற்று. அருளப்பர் யூதாஸை அடையாளம் கண்டு கொள்கிருர். சற்று முன்பிருந்த வடிவான யூதாஸின் அடையாளம் இப்பொழுது இல்லாதிருந்தும் கூட, "நீயா? இங்கே?'' என்று எரிச்சலுடன் கேட்கிருர். "தேவ குமாரனின் கொலைகாரா! நீ சபிக்கப்படக்கடவாய். ஆண்டவர் தீர்ப்பிடப்பட்டு விட்டார். சந்தோ□ப்படு. உனக்கு முடிந்தால் வழியை விட்டு விலகு. நான் தாயை அழைக்கப் போகிறேன். உன் அடுத்த பலிப் பொருளான அவர்கள் உன்னைச் சந்திக்க வைத்து விடாதே ஈனனே.''

யூதாஸ் ஓடி விடுகிருன். அவன் தன் கிழிந்த மேலாடையைக் கொண்டு, கண்களுக்கு ஒரு திறப்பு தவிர தலை முழுவதும் மூடியிருக்கிருன். பிலாத்துவின் அரண்மனைக்குப் போகாத வெகு சில மக்கள் ஒரு பைத்தியக்காரனைக் கண்டு விலகுவது போல் யூதாஸைக் கண்டு ஒதுங்குகிருர்கள். அவன் அப்படியே காணப்படுகிருன்.

யூதாஸ் புறநகர்ப் பகுதியில் அலைகிருன்.



இடைக்கிடையே, சேசுவின் பின்னுல் போகிற ஜனக்கும்பல் போடும் கூச்சலின் எதிரொலி காற்று வாக்கில் வந்து கேட்கிறது. ஒவ்வொரு தடவை அது கேட்கும்போதும் யூதாஸ் நரியைப் போல ஊளையிடுகிருன்.

நான் நினைக்கிறேன் அவனுக்கு உண்மையிலேயே பைத்தியம் பிடித்து விட்டதென்று. ஏனென்ருல் அவன் ஓயாமல் தாழ்ந்த கல்சுவர்களில் தன் தலையை மோதிக் கொள்கிருன். அல்லது அவனுககு நீர் வெறுப்புக் கோளாறு ஏற்பட்டிருக்க வேண்டும். ஏனென்ருல் அவன் நீர் வடிவமான எதைக் கண்டாலும் – தண்ணீர், ஒரு குழந்தை கொண்டு செல்லும் பால் பாத்திரம், ஒரு ஆட்டுத் தோற்பையிலிருந்து வடியும் எண்ணெய் – அவன் "இரத்தம்! இரத்தம்!'' என்று ஊளையிடுகிருன். ஓடையிலும், சுனைகளிலும் நீர் அருந்த விரும்புகிருன். ஆனுல் அருந்த முடியவில்லை. காரணம் தண்ணீர் அவனுக்கு இரத்தமாகத் தெரிகிறது. அப்படியே சொல்லவும் செய்கிருன்: "இது இரத்தம்! இது இரத்தம்! அது என்னை மூழ்கடிக்கிறது! என்னை எரிக்கின்றது! நேற்று அவன் தன் இரத்தத்தை எனக்குத் தந்தான். அது என்னிடத்தில் நெருப்பாகி விட்டது! நான் சபிக்கப்படக் கடவேனுக! நீயும் சபிக்கப்படு'' என்கிருன்.

ஜெருசலேமைச் சுற்றியுள்ள குன்றுகளில் ஏறி இறங்கித் திரிகிருன். தன்னைத் தடுக்கக் கூடாமலே கொல்கொத்தாவை நோக்கி இழுக்கப்படுகிருன். ஊர்வலம் கொல்கொத்தா குன்றில் சுற்றி வளைந்து ஏறுவதை தூரத்திலிருந்து இரண்டு தடவை காண்கிருன். பார்த்து ஊளையிடுகிருன்.

ஊர்வலம் குன்றின் உச்சியை வந்தடைந்து விட்டது. யூதாசும் ஒலிவ மரங்களால் மூடப்பட்ட ஒரு குன்றின் உச்சியில் நிற்கிருன். ஒரு நாட்டுப்புற வேலியை அதன் சொந்தக் காரனைப் போல் அல்லது அங்கே நன்ருகப் பழக்கப்பட்டவன் போல் திறந்து கொண்டு அவ்விடத்திற்கு வந்திருக்கிருன். யூதாசுக்கு மற்றவர்களின் உடமைகளைப் பற்றி ஒரு மதிப்புக் கிடையாது என்பதே என் கருத்து. ஒரு மேட்டின் ஓரத்தில் ஒரு ஒலிவ மரத்தடியில் நேராக நின்று கொல்கொத்தாவைப் பார்க்கிருன். சிலுவைகள் நாட்டப்படுவதைக் கண்டு சேசு சிலுவையில் அறையப்பட்டு விட்டார் என்று கண்டுபிடிக்கிருன். அவனுல் எதையும் காணவோ கேட்கவோ கூடவில்லை. ஆனுல் அவனுடைய பிறழ்ந்த மனநிலையோ

அல்லது சாத்தானுடைய மாயச் செயலோ, அவன் கல்வாரியின் உச்சியிலே இருப்பது போலவே அவன் காணவும், கேட்கவும் செய்கிறது.

மாயக் கவர்ச்சிக்கு உட்பட்டவனைப் போல் அவன் பார்க்கிறுன். மேலும் பார்க்கிறுன். போராடுகிறுன்: "பார்க்காதே! பார்க்காதே! என்னை நோக்கிப் பார்க்காதே! என்னேடு பேசாதே. என்னுல் தாங்க முடியவில்லை. சாகு! சாகு! சபிக்கப்பட்டவனே. என்னைப் பயமுறுத்துகிற அந்தக் கண்களை மரணம் மூடட்டும். என்னைச் சபிக்கிற அந்த வாயை மூடட்டும். நானும் உன்னைச் சபிக்கிறேன். ஏனென்றுல் நீ என்னைக் காப்பாற்றவில்லை."

யூதாஸின் முகம் எவ்வளவு கலங்கி விட்டதென்றுல் யாரும் அதைப் பார்க்கக் கூடாததாகி விட்டது. அவனுடைய ஊளையிடும் வாயிலிருந்த இரண்டு பெரிய கோழைத் தாரைகள் பாய்கின்றன. கடிபட்ட கன்னம் வெளிறி வீங்கிப் போயிருக்கிறது. அதனுல் அவன் முகம் திருகித் தெரிகிறது. அவனுடைய பிசுபிசுத்த முடியும், இவ்விடைப்பட்ட மணிகளில் மிகக் கறுப்பாக வளர்ந்துள்ள தாடியும் அம்முகத்தை துக்கமிறங்கியதாகக் காட்டுகின்றன. அவன் கண்கள்...! அவை உருள்கின்றன, ஒருக்கணிக்கின்றன, நெருப்புப் போலிருக்கின்றன. அசல் பசாசின் கண்கள்!

யூதாஸ் தன் இடையை மூன்று சுற்றுச் சுற்றிக் கட்டியிருந்த தடித்த சிவப்புக் கம்பளிக் கயிற்றை உருவியெடுக்கிறுன். ஒரு ஒலிவ மரத்தில் அதைச் சுற்றி தன் பலமெல்லாம் கூட்டியிழுத்துப் பார்த்து அதன் பலத்தைப் பரிசோதிக்கிறுன். அது தாக்குப்பிடிக்கிறது. கட்டியாயிருக்கிறது.

ஒரு பொருத்தமான ஒலிவ மரத்தைத் தேடுகிறுன். இதோ அது அந்த மேட்டிலிருந்து வெளியே நீண்டு நிற்கிறது. கலைந்த இலைகளுடன் – சரிதான். அம்மரத்தில் அவன் ஏறுகிறுன். தரை இல்லாத வெற்றிடத்தில் நீண்டு கொண்டிருக்கிற கெட்டியான கிளையில் ஒரு முடிச்சை இறுகக் கட்டுகிறுன். ஒரு சுருக்காங் கண்ணியையும் கட்டியிருக்கிறுன். கடைசித் தடவையாக கல்வாரியைப் பார்க்கிறுன். தலையை சுருக்காங் கண்ணிக்குள் நுழைக்கிறுன். இப்பொழுது அவன் கழுத்தைச் சுற்றி இரண்டு சிவப்பு கழுத்தணிகள் இருப்பது போல் தெரிகிறது. பின் மண்மேட்டின் ஓரமாய் உட்கார்ந்து கொண்டு உன்னி ஒரு உதை உதைத்து ஆகாய வெளியில் தன்னை வீழ்த்துகிறுன்.



முடிச்சு அவன் கழுத்தை நெரிக்கிறது. சில விநாடிகள் போராடுகிறுன். கண்கள் அகோரமாய்ச் சுழல்கின்றன. மூச்சுத் திணறலால் முகம் இருளடைகிறது. வாய் திறக்கிறது. கழுத்து நரம்புகள் பருத்து கறுப்பாகின்றன. கடைசி வலிப்புகளால் கால்களை நாலைந்து தடவை ஆகாயத்தில் உதைக்கிறுன். திறந்த வாயிலிருந்து இருண்ட சோளை நாக்கு வெளியே தொங்குகிறது. கண்விழிகள் வெளியே பிதுங்கி இரத்தம் பட்ட வெள்ளை விழிகள் தெரிகின்றன. கருவிழிகள் மேலே மறைகின்றன. அவன் இறந்து விட்டான்.

புயல் காற்றுக்கு முன் வந்த பலத்த காற்று இந்தக் கொடிய ஊசல் குண்டை அங்குமிங்கும் ஆட்டுகிறது. தன் நூலில் தொங்கும் பயங்கர சிலந்திப் பூச்சியைப் போல் சுழலச் செய்கிறது.

காட்சி இவ்வாறு முடிகிறது. இதையெல்லாம் நான் சீக்கிரம் மறந்து விடுவேன் என்று நம்புகிறேன். ஏனென்றுல், நிச்சயமாக இது ஒரு மிகப் பயங்கரமான காட்சியாகும்.

அத்தியாயம் 4 (603)

# அருளப்பர் மாதாவை அழைத்து வரப் போகிறார்

*பெரிய வெள்ளி காலை 10.30 (7 ஏப்ரல் 1944)*

**இ**ந்த நேரத்தில்தான் அருளப்பர் மாதாவிடம் சென்றார் என்று என் அந்தரங்க எச்சரிப்பாளர் எனக்குத் தெரிவிக்கிறார்.

பிரியப்பட்ட சீடனை நான் காண்கிறேன். அவர் கைப்பாஸின் அரச சபையில் இராயப்பரோடு காணப்பட்டதை விட அதிகமாக வெளிறிப் போயிருக்கிறார். ஒரு வேளை அங்கே நெருப்பின் வெளிச்சம் அவருடைய கன்னங்களுக்கு உஷ்ணத்தின் எதிரொளியைக் கொடுத்திருக்கலாம். இப்போது அவை குழிவிழுந்து அவர் ஏதோ பெரிய நோயால் பாதிக்கப்பட்டு இரத்தம் இல்லாதது போல் காணப்படுகின்றன. அவருடைய இளஞ்சிவப்பான மேல் வஸ்திரத்தின் மத்தியில் தெரிகிற அவர் முகம், நீரில் மூழ்கி இறந்தவனின் முகம் போல் அவ்வளவு மரணத் தன்மையோடிருக்கிறது. அவர் கண்களும் மங்கியுள்ளன. அவர் தலைமுடி மங்கலாயும், கலைந்தும் கிடக்கிறது. இம்மணி நேரங்களில் வளர்ந்துள்ள தாடி அவருடைய கன்னங்களிலும் நாடியிலும் ஒரு மெல்லிய நிழலைப் பரப்புகின்றது. அது மென்னிறமாயிருப்பதால் அவருடைய தோற்றம் மேலும் வெளிறிக் காணப்படுகிறது. கருணையும் மகிழ்ச்சியுமுடைய அருளப்பரின் அடையாளம் அங்கே ஒன்றுமில்லை. சற்று முன் யூதாஸைத் தாக்குவதிலிருந்து கஷ்டத்துடன் தன்னைக் கட்டுப்படுத்திய அவரின் எரிச்சலால் சிவந்திருந்த கோபங் கொண்ட தோற்றமும் இப்பொழுது இல்லை.

அருளப்பர் வீட்டின் கதவைத் தட்டுகிறார். யூதாஸை தன் முன்னே மீண்டும் கண்டு விடுவோமோ என்று பயந்து விட்டது போல் ஒரு ஆள் உள்ளேயிருந்து தட்டுவது யார் என்று கேட்கிறது. “நான்தான், அருளப்பன்” என்கிறார். கதவு திறக்க, உள்ளே செல்கிறார்.





வீட்டெஜமானி அவரிடம்: “பட்டணத்தில் என்ன நடக்கிறது?” என்று கேட்டதற்குப் பதில் சொல்லாமலே அருளப்பர் இராப் போஜன அறைக்குப் போகிறார்.

போய், கதவைப் பூட்டிக் கொண்டு சேசு அமர்ந்திருந்த இருக்கையின் முன்பாக முழந்தாளிட்டு அழுது கொண்டே ஆண்டவரைத் துயரமாய்க் கூப்பிடுகிறார். சேசு தம் கரங்களைச் சேர்த்து வைத்திருந்த இடத்தில் மேசைத் துணியை முத்தமிடுகிறார். ஆண்டவர் தம் விரல்களால் பிடித்திருந்த பாத்திரத்தைத் தொட்டுத் தடவுகிறார்... பின்: “மிக உந்நத சர்வேசுரா! எனக்கு உதவி செய்யும். என் தாயிடம் சொல்வதற்கு உதவி செய்யும். என்னால் கூடவில்லை... அப்படியிருந்தாலும் அவர்களிடம் நான் சொல்ல வேண்டுமே! நான் சொல்ல வேண்டும். ஏனென்றால் நான் மட்டுமே இருக்கிறேன்” என்று சொல்லுகிறார்.

பின் எழுந்து நின்று சிந்திக்கிறார். ஆண்டவர் தொட்ட அந்தப் பாத்திரத்திலிருந்து திடனைப் பெற்றுக் கொள்ள விரும்புகிறவர் போல் அதை மறுபடியும் தொடுகிறார். சுற்றிலும் பார்க்கிறார்... அப்போஸ்தலர்களுடைய பாதங்களைக் கழுவிய பின் சேசு தம் கரங்களைத் துடைத்த துணியும், அவர் தம் இடையில் கட்டியிருந்த துகிலும், மூலையில் சேசுவால் வைக்கப்பட்டபடி இருப்பதைக் காண்கிறார். அருளப்பர் அவற்றை எடுத்து மடித்து அன்புடன் தடவி முத்தமிடுகிறார்.

என்ன செய்ய என்றபடி அந்த வெறும் நடுவில் நிற்கிறார். “போவோம்” என்கிறார். ஆனால் கதவின் பக்கம் போகாமல் திரும்பவும் மேசைப் பக்கம் போய் பாத்திரத்தை எடுக்கிறார். யூதாசுக்கு கறியில் தோய்த்துக் கொடுப்பதற்காக சேசு ஓர் ஓரத்தில் பிட்ட ரொட்டியையும் எடுக்கிறார். அவற்றை முத்தமிட்டு, பின் முன் சொன்ன இரு துணிகளையும் எடுத்து அவற்றை புனித பண்டங்கள் போல் நெஞ்சுடன் அணைத்துக் கொள்கிறார். மறுபடியும் “போவோம்” என்று கூறி பெருமூச்சு விடுகிறார். பின் நடந்து சின்னப் படிக்கட்டிற்குப் போய் அதில் ஏறுகிறார். கூனிக் குறுகியவராய் விருப்பமில்லாத தம் பாதங்களை இழுத்துச் செல்கிறார். கதவைத் திறந்து கொண்டு போகிறார்.

“அருள், வந்து விட்டாயா?” என்று கூறியபடி மாதா தன் வாசலில் வந்து நிற்க சக்தியற்றவர்களைப் போல் கதவு நிலையில்

சாய்ந்து நிற்கிறார்கள்.

தன் தலையை நிமிர்த்தி அருளப்பர் மாதாவைப் பார்க்கிறார். பேச விரும்பி வாயைத் திறக்கிறார். ஆனால் அவரால் கூடவில்லை. இரு கண்ணீர்ப் பெருந்துளிகள் அவர் கன்னங்களில் வழிந்தோடுகின்றன. தன் பலவீனத்தைப் பற்றி வெட்கத்தோடு தலை கவிழ்கிறார்.

"அருள், இங்கே வா. அழாதே. நீ அழக் கூடாது. நீ அவரை எப்போதும் நேசித்தாய். அவரை மகிழ்ச்சிப்படுத்தினாய். அது உனக்கு ஆறுதலாயிருக்கட்டும்."

இவ்வார்த்தைகள் அருளப்பரின் கண்ணீர் மடைகளைத் திறந்து விட்டன. அவர் எவ்வளவு சத்தமிட்டு அழுதாரென்றால் வீட்டெஜமானி, மரிய மதலேன், செபதேயுவின் மனைவி மற்றும் ஸ்திரீகள் அங்கே வருகிறார்கள்.

"அருள், என்னுடன் வா" என்று கூறிய மாதா, கதவு நிலையை விட்டு விட்டு அருளப்பரை ஒரு சிறுவனைப் போல் மணிக்கட்டில் பிடித்து அறைக்குள் இழுத்துக் கொண்டு போய் அவருடன் தனிமையில் இருக்கும்படி கதவை மெல்ல சாத்துகிறார்கள்.

அருளப்பர் தட்டவில்லை. மாதாவின் நடுங்கும் கரம் தன் தலையின் மேல் வைக்கப்பட்டிருப்பதை உணர்ந்த அவர் தன் நெஞ்சுடன் அணைத்துப் பிடித்திருந்த அப்பொருள்களைக் கீழே வைத்து விட்டு அப்படியே முழங்காலிட்டு, தரையில் முகம்படி விழுந்து மாதாவின் மேல் வஸ்திரத்தைத் தன் பொங்கிய முகத்தில் வைத்து அழுதபடியே: "மன்னியுங்கள்! அம்மா என்னை மன்னியுங்கள்" என்கிறார்.

மிகவும் சஞ்சலப்பட்டவர்களாய் நிற்கிற மாதா தன் ஒரு கரத்தால் இருதயத்தைப் பற்றியபடி, மறு கரம் பக்கத்தில் தொங்க விடப்பட்டிருக்க, இருதயத்தைப் பிளக்கும் குரலில்: "எதை நான் மன்னிக்க வேண்டும் என் மகனே? எதை? உன்னை மன்னிக்கவா?" என்கிறார்கள்.

அருளப்பர் தலையை நிமிர்த்துகிறார். அதிலே மனித செருக்கின் எந்த அடையாளமுமில்லை. அது அழுகிற ஒரு எளிய குழந்தையின் முகம். அவர் மாதாவிடம் கத்திச் சொல்கிறார்: "அவரைக் கைவிட்டதற்காக! அவரை விட்டு ஓடியதற்காக! அவரைத் தற்காக்காமல் விட்டதற்காக! ஓ என் ஆண்டவரே, என்



ஆண்டவரே! என்னை மன்னியும்! உம்மைக் கைவிடுவதை விட நான் செத்திருக்க வேண்டும். அம்மா, அம்மா! இந்தக் குற்ற மனச் சாட்சியிலிருந்து யார் என்னை விடுவிப்பார்கள்?"

"அமைதி, அருள்! அவர் உன்னை மன்னிக்கிறார். ஏற்கெனவே மன்னித்து விட்டார். உன்னுடைய தத்தளிப்பை அவர் பொருட்படுத்தவேயில்லை. உன்னை நேசிக்கிறார்." மாதா நிறுத்தி நிறுத்திப் பேசுகிறார்கள். மூச்சு வாங்குவது போல் ஒரு கையால் அருளப்பரின் தலையையும் மறு கையால் வேதனைப்பட்டுத் துடிக்கிற தன் இருதயத்தையும் தொட்டிருக்கிறார்கள்.

"நேற்று மாலையில் கூட என்னால் கண்டுபிடிக்கக் கூடவில்லை... அவர் நாங்கள் விழித்திருந்து அவருக்கு ஆறுதலளிக்கும்படி கேட்ட போதும் நான் உறங்கி விட்டேன். என் சேசுவை நான் தன்னந்தனியே விட்டு விட்டேன். பின் அந்த சபிக்கப்பட்ட மனிதன் அந்தக் கயவர்களுடன் வந்த போது நான் ஓடிப் போனேனே..."

"அருள், சபிக்காதே. பகைக்காதே அருள். பிதா அதைத் தீர்ப்பிடட்டும். கேள். இப்பொழுது அவர் எங்கே இருக்கிறார்?"

அருளப்பர் மறுபடியும் முகம் தரையில்பட விழுந்து, அதிக சத்தமாய் அழுகிறார்.

"அருள் சொல்லு, என் குமாரன் எங்கேயிருக்கிறார்?"

"அம்மா!... அவர்... அம்மா நான்..."

"அவர் தீர்ப்பிடப்பட்டு விட்டார். எனக்கது தெரியும். தற்பொழுது அவர் எங்கேயிருக்கிறார் என்று கேட்கிறேன்."

"அவர் என்னைக் காணும்படி என்னால் முடிந்ததைச் செய்தேன்... பெரிய அதிகாரிகளிடம் அவருக்கு இரக்கம் காட்டும்படி கேட்க முயன்றேன்... அவர் குறைவாய் வேதனைப்படச் செய்ய... அவர்கள் அவரை மிக மோசமாய் நோகச் செய்யவில்லை..."

"அருள் பொய் சொல்லாதே – ஒரு தாயின் மீதுள்ள பரிவினால் கூட. அதில் நீ வெற்றி பெற மாட்டாய். அது பயன் தராது. நான் அறிவேன். நேற்று மாலை முதல் அவருடைய துயரத்தில் நான் அவரைப் பின்தொடர்கிறேன். நீ அதைக் காண முடியாது. ஆனால் அவரை அடித்த சாட்டைகளால் என் சரீரம் காயமடைந்திருக்கிறது. அவருடைய முட்களே என் நெற்றியைத் துளைத்துக் கொண்டிருக்கின்றன. அவருடைய

அடிகளை நான் பட்டுணர்ந்தேன்... அனைத்தையும். ஆனால் இப்பொழுது எனக்குப் பார்க்க முடியவில்லை. என் குமாரன் எங்கேயிருக்கிறார் என்று தெரியவில்லை. அவர் சிலுவைக்குத் தீர்ப்பிடப்பட்டிருக்கிறார்... சிலுவைக்கு!... சிலுவைக்கு... ஓ சர்வேசுரா, எனக்குத் திடனைத் தாரும்! அவர் என்னைப் பார்க்க வேண்டும். அவர் தம் துயரத்தை உணரும் வேளையில் என் துயரத்தை நான் உணரக் கூடாது... பிறகு, அனைத்தும் முடிவடைந்த பின்... அப்போது நான் இறக்கிறேன். ஓ! சர்வேசுரா, அது உம் விருப்பமானால். இப்பொழுது வேண்டாம், வேண்டாம். அவருக்காக. அவர் என்னைக் காணும்படியாக. அருள், நாம் போகலாம். சேசு எங்கேயிருக்கிறார்?"

"சேசு பிலாத்துவின் அரண்மனையை விட்டு வெளியே வந்து கொண்டிருக்கிறார். இந்தச் சத்தம் அவரைச் சுற்றி நிற்கும் கூட்டத்தின் கூச்சல். கட்டப்பட்டவராய் தேசாதிபதியின் வீட்டின் படிகளில் சிலுவைக்காக காத்து நிற்கிறார். அல்லது கொல்கொத்தாவுக்குப் போய்க் கொண்டிருப்பார்."

"அருள், உன் தாய்க்கும், மற்ற ஸ்திரீகளுக்கும் செய்தியைச் சொல். நாம் போவோம். அந்தப் பாத்திரம், அப்பம், துணி... எல்லாவற்றையும் எடுத்து இங்கே வை. அவற்றில் நாம் பின்னால் ஆறுதலடையலாம்... நாம் போவோம்."

தரையில் இருந்த அந்தப் பொருள்களை அருளப்பர் எடுத்துக் கொடுத்துவிட்டு ஸ்திரீகளைக் கூப்பிடப் போகிறார். மாதா அவருக்காகக் காத்து நிற்கிறார்கள். தன் குமாரனின் அன்பை அந்தத் துணிகளில் காண விரும்புவது போல் அவற்றால் முகத்தை ஒற்றிக் கொண்டு பாத்திரத்தையும் அப்பத்தையும் முத்தமிட்டு எல்லாவற்றையும் ஒரு மூடுதட்டில் வைக்கிறார்கள். பின் தன் மேல் வஸ்திரத்தால் தன்னை மூடி, கண் வரையிலும் அதைத் தாழ்த்தி விட்டு, தலையையும் கழுத்தையும் சுற்றிக் கொள்கிறார்கள். அழவில்லை. ஆனால் நடுங்குகிறார்கள். மூச்சு விட கஷ்டப்படுகிறார்கள். வாய் திறந்திருக்கிறது. அருளப்பரும் அவரைத் தொடர்ந்து அழுகின்ற மற்றப் பெண்களும் வருகிறார்கள்.

"என் குமாரத்திகளே! அமைதியாயிருங்கள். நான் அழாமலிருக்க எனக்கு உதவுங்கள். நாம் போவோம்" என்று கூறிய மாதா, அருளப்பர் மீது சாய்கிறார்கள். அவர்களைத் தாங்கி அவர்களுக்குப் பார்வையற்றது போல் அவர்களை வழிநடத்துகிறார் அருளப்பர்.



அத்தியாயம் 5 (604)

## சிலுவைப் பாதை: பிலாத்துவின் அரண்மனையிலிருந்து கல்வாரி வரை.

*26 மார்ச் 1945.*

சற்று நேரம் கடருகிறது. அரை மணிக்கு மேல் இராது. அதற்கும் குறைவாகக் கூட இருக்கலாம். சேசுவைக் கொலைப்படுத்தும் அலுவல் ஒப்படைக்கப்பட்டுள்ள லோஞ்ஜினுஸ் கட்டளை கொடுக்கிறான். சேசு தம் சிலுவையைப் பெற்றுக் கொண்டு புறப்படுவதற்கு அவரை இன்னும் வெளியே தெருவிற்குக் கொண்டு வரவில்லை. இரண்டு மூன்று தடவை லோஞ்ஜினுஸ் சேசுவை உற்றுப் பார்த்துக் கொண்டான். அந்தப் பார்வையில் இரக்கம் தோய்ந்திருந்தது. அது சில சந்தர்ப்பங்களுக்குப் பழக்கப்பட்ட பயிற்சி பெற்ற பார்வையாயிருந்தது. அவன் இன்னொரு படை வீரனுடன் சேசுவை அணுகி அவருக்குத் தாக சாந்திக்காக பானம் வழங்குகிறான்: நான் நினைக்கிறேன், அது ஒரு பாத்திரம் திராட்ச ரசம் என்று. இளஞ் சிவப்பு மஞ்சளான ஒரு பானத்தை ஒரு இராணுவ பருகு கலத்திலிருந்து ஊற்றிக் கொடுத்து: "இது உமக்கு நல்லது. நீர் தாகமாயிருக்க வேண்டுமே. வெளியே வெயிலாயிருக்கிறது. இடமும் தூரம்" என்கிறான்.

"உம்முடைய இரக்கத்திற்காக கடவுள் உமக்கு சன்மானமளிப்பாராக. ஆனால் உம்முடைய தேவைக்கு அது இல்லாமல் போக வேண்டாம்" என்று சேசு பதில் கூறுகிறார்.

"நான் ஆரோக்கியமாகவும், திடமாகவும் இருக்கிறேன்... நீர்... எனக்கு அது இல்லாமல் போகாது... அப்படி இல்லாவிட்டாலும்கூட... உம்மைக் கொஞ்சம் தேற்றும்படியாக இதைத் தாராளமாய்ச் செய்வேன்...ஒரு மிடறு... அஞ்ஞான மார்க்கத்தாரை நீர் வெறுக்கவில்லை என்று எனக்குக் காட்டும்படி."

இப்போது சேசு அதை மறுக்கவில்லை. அந்தப் பானத்தில் ஒரு மிடறு பருகுகிறார். அவரே அதை வாங்கிப் பருக முடிகிறது. ஏனென்றால் அவருடைய கரங்கள் அவிழ்த்து விடப்பட்டுள்ளன. அவர் கையில் கோலும் இல்லை. சிவப்புச் சால்வையும் அகற்றப்பட்டிருந்தது. அந்த நல்ல குளிர்ந்த பானம் அவருடைய

காய்ச்சலுக்கு ஒரு பெரும் ஆறுதலாக இருந்திருக்குமென்றாலும், அதற்கு மேல் பருக அவர் மறுத்து விட்டார். வெளிறிய அவருடைய கன்னங்களில் சிவப்புக் கோடுகளாகவும் உதடுகளின் வறட்சியிலும் அந்தக் காய்ச்சல் காணப்படுகிறது.

“இன்னும் கொஞ்சம் பருகும்! இது தண்ணீரும், தேனும்தான். இது உமக்குத் திடமாயிருக்கும். உம் தாகத்தையும் தணிக்கும்... உம்மைப் பார்த்து எனக்கு இரக்கமாயிருக்கிறது... மெய்தான்... நான் பரிதாபப்படுகிறேன்... யூதர்களுக்குள் கொல்லப்பட வேண்டியவர் நீரல்ல... யாரறிவார்கள்!... உம்மை நான் பகைக்கவில்லை... அவசியமான வேதனையை மாத்திரமே நீர் அனுபவிக்கச் செய்ய நான் முயற்சி பண்ணுவேன்.”

ஆயினும் சேசு அதற்கு மேல் பருகவில்லை... அவர் உண்மையாகவே தாகமாயிருக்கிறார்... அதிக இரத்தம் இழந்தவர்களும், காய்ச்சல் கண்டவர்களும் அனுபவிக்கும் கொடிய தாகம். நோவுணர்ச்சியை மாற்றுகிற மருந்து எதுவும் அதில் இல்லையென்பது அவருக்குத் தெரியும். ஆயினும் அதை அவர் பருகவில்லை. குறைவான வேதனைப்பட அவர் விரும்பவில்லை. இப்போது நான் சொல்வதை ஓர் உள் ஒளியால் சொல்கிறேனென்று அறிகிறேன்: அந்த உரோமையனுடைய இரக்கம் தேனினால் இனிப்பூட்டப் பெற்ற தண்ணீரை விட அவருக்கு அதிக தேற்றரவாயிருந்தது.

சேசு அவனை நோக்கி: “இந்த ஆறுதலுக்காக கடவுள் தம் ஆசீர்களால் உமக்கு வெகுமானமளிப்பாராக” என்று கூறி சிறு புன்னகை செய்கிறார். அவருடைய காயப்பட்டு வீங்கிய உதடுகளால் இருதயத்தை அறுக்கும் புன்னகை அது. அந்தத் திரு அதரங்கள் கஷ்டத்தோடுதான் அசைகின்றன. கசைகளால் அடிபட்ட பின் அரண்மனை முற்றத்தில் வைத்து அவருடைய மூக்கிற்கும், வலது கன்ன எலும்பிற்கும் நடுவே குண்டாந் தடியால் அவர் பட்ட அடியின் காயம் பெரிதாக வீங்கியிருந்ததும் அதற்குக் காரணமாயிருந்தது.

இரு கள்வர்களும், ஒவ்வொருவனும் பத்து படை வீரர்கள் சூழ வந்து சேருகிறார்கள. புறப்பட நேரமாயிற்று. இறுதிக் கட்டளைகளைக் கொடுக்கிறான் லோஞ்ஜினுஸ்.

நூறு போர்ச் சிப்பாய்கள் இரண்டு வரிசைகளாக ஒரு சேவகனுக்கும் அடுத்தவனுக்குமிடையில் சுமார் மூன்று மீட்டர்



இடைவெளியில் நிறுத்தப்படுகிறார்கள. அங்கே வேறு நூறு சேவகர்கள் சதுர வடிவில் ஆள் தடுப்பு வேலியாக நிறுத்தப்பட்டிருக்கிறார்கள் – கூட்டத்தைப் பின்னால் தள்ளும்படி. ஊர்வலத்தை ஜனக் கூட்டம் தடை செய்யாமலிருக்க இந்த ஏற்பாடு. சதுக்கத்தில் ஏற்கெனவே பத்துப் பேர் கொண்ட குதிரைப் படை நிற்கிறது. படையில் பதவி வகிக்காத, உரோமைச் சின்னம் தாங்கும் ஓர் இளம் ஆணையன் அதற்குத் தலைமை தாங்குகிறான். செந்தூரியனை லோஞ்ஜினுஸ் கறுப்புக் குதிரையின் கடிவாளம் ஒரு காலாட்படை வீரனின் கையில் உள்ளது. லோஞ்ஜினுஸ் தன் குதிரையில் ஏறி குதிரைப் படையின் பதினொரு பேருக்கும் முனால் சுமார் இரண்டு மீட்டர் தூரத்தில் தன் இடத்தில் போய் நிற்கிறான்.

சிலுவைகள் கொண்டு வரப்படுகின்றன. இரண்டு கள்வரின் சிலுவைகளும் குட்டையானவை. சேசுவின் சிலுவை அதிக நீளமாயிருக்கிறது. அதன் நேர் கம்பு நான்கு மீட்டர் நீளத்துக்குக் குறையாது.

சிலுவையை அவர்கள் கொண்டு வந்த போதே அது முழுவதும் பொருத்தப்பட்டுள்ளது. இவ்வி யமாக, நான் முன்பு புத்தகங்கள் வாசிக்கிற காலத்தில்... அதாவது பல ஆண்டுகளுக்கு முன்: சிலுவை கொல்கொத்தாவின் உச்சியில் வைத்துத்தான் பொருத்தப்பட்டதாகவும், தீர்ப்பிடப்பட்ட மனிதர்கள் இரண்டு கோல்களையும் மட்டுமே ஒன்றாய்க் கட்டி தோளில் சுமந்து கொண்டு போனார்கள் என்று வாசித்திருக்கிறேன். எப்படியும் நடந்திருக்கக் கூடும். ஆனால் நான் காண்பது நல்ல வடிவமாய்ப் பொருத்தப்பட்டுள்ள சிலுவையைத்தான். சிலுவை உறுதியாக இருக்கிறது. சிலுவையின் கரங்கள் பொருந்துகிற இடத்தில் நன்றாக துளைப் பொருத்தம் செய்யப்பட்டு, ஆணிகளாலும், திருகு தளையாலும் இறுக்கப்பட்டுள்ளது. முழு வளர்ச்சியடைந்த ஒரு மனிதனின் பளுவான உடலைத் தாங்கவும், விசே மாய், அதன் இறுதி வலிப்புக் குலுக்கங்களில் தாக்குப்பிடிக்க வேண்டியிருப்பதையும் கருதினால், அந்தச் சிலுவை கல்வாரியின் வசதிக்குறைவான உச்சியில், அந்நேரத்தில் பொருத்தப் படுவதென்பது முடியாது என்று கண்டுபிடிக்கலாம்.

சேசுவிடம் சிலுவையைக் கொடுப்பதறகு முன், “சேசு நசரேன யூதர்களின் இராஜா” என்று எழுதப்பட்ட பலகையை அவருடைய கழுத்தில் கட்டுகின்றனர். அதன் கயிறு சேசுவின்

முள்முடியில் சிக்கிக் கொள்கிறது. அதனுல் முள்முடி அசைக்கப்பட்டு, முன்பு முட்கள் கீருத இடங்கள் கீறப்படுகின்றன. புது இடங்களில் முட்கள் இறங்குகின்றன. ஆண்டவருக்குப் புது வேதனைகளைத் தருகின்றன. மீண்டும் இரத்தம் பீறிட்டுப் பாய்கிறது. கொடுமை வெறியால் ஜனக் கூட்டம் சிரிக்கிறது. வசை பேசிச் சபிக்கிறது.

எல்லாம் தயாராகி விட, நடக்கும்படி லோஞ்ஜினுஸ் உத்தரவிடுகிருன். "நசரேயன் முதலில். அதற்குப் பின் இரு கள்வர்களும். பத்து சிப்பாய் கொண்ட அணி ஒவ்வொருவரைச் சுற்றியும். மற்ற எழுபது பேரும் இரு பக்கங்களிலும் – கூடுதல் காவலராக. தீர்ப்பிடப்பட்டவர்கள் மரணமடையக் கூடிய வகையில் தாக்கப்பட அனுமதிக்கிறவர்கள் அதற்குப் பொறுப்பாளிகளாவார்" என்று கூறுகிருன்.

முகப்பு மண்டபத்திலிருந்து சதுக்கத்துக்கு இறங்குகிற மூன்று படிகளிலும் சேசு இறங்கி வருகிருர். அவர் மிக மிகப் பலவீனமான நிலையில் இருக்கிருர் என்பது உடனே தெரிந்து விடுகிறது. ரணங்களால் நிரம்பியிருக்கிற அவருடைய திருத்தோளின் மீது பாரமாய்ப் படிந்திருக்கிற சிலுவையும், அவருடைய கழுத்தில் அறுத்தபடி முன்னுல் தொங்கி ஆடுகிற எழுத்துப் பலகையும், அந்தப் படிகளிலும், நிரப்பில்லாத தரையிலும் பட்டு எவ்வுகிற சிலுவையின் நெடுங்கோலும் தடை செய்வதால், சேசு இறங்கி வரும்போது ஆடி அசைந்து தள்ளாடுகிருர்.

சேசு இப்படி தயங்கித் தள்ளாடுவதைக் கண்ட யூதர்கள் சிரிக்கிருர்கள். அவர்கள் போர்ச் சேவகரைப் பார்த்து: "அவனைத் தள்ளி விடுங்கள். கீழே விழத்தாட்டுங்கள். தூ[illegible]ணம் சொன்னவன் தூசியில் கிடக்கட்டும்" என்கின்றனர். ஆனுல் சேவகர் தாங்கள் செய்ய வேண்டியதை மட்டுமே செய்கிருர்கள். அதாவது, தீர்ப்பிடப்பட்டவரை பாதையின் நடுவிலே நடந்து செல்லும்படி கூறுகிருர்கள்.

லோஞ்ஜினுஸ் தன் குதிரையைச் செலுத்த, ஊர்வலம் மெல்ல அசைகிறது. செந்தூரியன், சேசு எவ்வளவு தூரம் தாங்குவார் என்பதைப் பற்றி கொல்கொத்தாவுக்கு சீக்கிரம் போய்ச் சேர குறுக்குப் பாதை வழியே செல்ல எண்ணுகிருன். ஆனுல் கட்டுப்பாடற்ற கூட்டம் அதை விரும்பவில்லை. அவர்களில் அதிக தந்திரமுடையவர்கள் முன்கூட்டி ஓடிச் சென்று பாதை பிரிகிற



சந்தியில் நின்று கொள்கிருர்கள். பாதையின் ஒரு பிரிவு மதில்களை நோக்கியும், மற்றொரு பிரிவு பட்டணத்தை நோக்கியும் செல்கின்றது. லோஞ்ஜினுஸ் மதில்கள் பக்கம் போகிற பிரிவில் ஊர்வலத்தைச் செலுத்தத் தொடங்கிய போது அவர்கள் கலகம் பண்ணிக் கூச்சலிட்டு: "நீர் இப்படிச் செய்யக் கூடாது. செய்யக் கூடாது. தீர்ப்பிடப்பட்டவர்கள் தாங்கள் குற்றம் புரிந்த பட்டணத்தில் காட்டப்பட வேண்டும் என்று சட்டம் சொல்லுகிறது" என்று கத்துகிருர்கள். பின் வரிசைகளில் இருந்த யூதர்கள், முன்னுல் போகிறவர்கள் தங்களின் ஒரு உரிமையைப் பறிப்பதாகக் கருதி தங்கள் கூட்டாளிகளுடன் சேர்ந்து கூச்சலிடுகிருர்கள்.

அமைதியைக் காப்பதற்காக லோஞ்ஜினுஸ் பட்டணத்தை நோக்கிச் செல்லும் பாதை வழியே திரும்புகிருன். அதில் கொஞ்சத் தூரம் சென்ற பின் பத்துச் சேவகரில் ஒருவனை வரும்படி சயிக்கினை காட்டுகிருன். (பத்துச் சேவகரில் ஒருவன் என்று குறிப்பிடுவது பதவி வகிக்காத சிப்பாயைத்தான். ஒழுங்கு காக்கும் உத்யோகஸ்தன் என அவனைக் கூறலாம்.) அவனிடம் செந்தூரியன் ஏதோ மெல்லக் கூறுகிருன். அவன் போய் ஒவ்வொரு பத்துச் சேவகர் தலைவனிடமும் அதைத் தெரிவிக்கிருன். அதன்பின் லோஞ்ஜினுஸிடம் திரும்ப வந்து கட்டளையை நிறைவேற்றி விட்டதைக் கூறுகிருன். பின் அவன் லோஞ்ஜினுஸின் பின்னுல் தன் இடத்தை அடைகிருன்.

பெருமூச்சு வாங்கியபடியே சேசு நடக்கிருர். தரையில் காணப்படும் ஒவ்வொரு குண்டும் குழியும் அவருடைய தள்ளாடும் பாதங்களுக்கு ஒரு கண்ணி போலிருக்கிறது. காயங்களால் நிறைந்த அவருடைய திருத்தோள்களுக்கு வதைப்பாக இருக்கிறது. முள்முடி சூட்டப்பட்ட அவருடைய திருச்சிரசு சித்திரவதைப்படுகிறது. மிகவும் வெப்ப அனலாயிருக்கிற வெயிலும் அவ்வாதனைக்குக் காரணமாகிறது. சமயாசமயம் சூரியன் கனத்த மேகங்களுக்குப் பின்னுல் மறைந்தாலும் அது நேரே உச்சியில் பிரகாசிப்பதால் வெயில் எரியத்தான் செய்கிறது. சேசு களைப்பாலும் காய்ச்சலாலும் உஷ்ணத்தாலும் இறுக்கமுற்றிருக்கிருர். வெயில் வெளிச்சமும், கேட்கிற கூச்சல்களும் அவருக்குக் கொடிய வேதனையாயிருக்கிறதென நினைக்கிறேன். இவ்வளவு கரடான கூச்சல்களைக் கேட்காமலிருக்க அவரால் தம் காதுகளை மூட முடியவில்லை. ஆனுல் பாதை சூரிய ஒளியில் மினுங்குவதைப்

பாராமலிருக்க கண்களைப் பாதி மூடிக் கொள்கிறார். ஆயினும் கண்களை அவர் திறக்காமலும் இருக்க முடியவில்லை. ஏனென்றால் அவர் கற்களிலும் குழிகளிலும் இடறுகிறார். ஒவ்வொரு இடறுதலும் சிலுவையைக் குலுக்குகிறது. முள்முடியுடன் மோத வைக்கிறது. திருத்தோளுடன் உராயச் செய்து காயங்களை அகலப்படுத்தி வேதனையை அதிகரிக்கச் செய்கிறது.

இப்போது யூதர்கள் நேரடியாக சேசுவைத் தாக்க முடியவில்லை. ஆயினும் சமயாசமயத்தில் சில கற்கள், குண்டாந்தடிகள் அவர் மேல் வீசப்பட்டு விழுகின்றன. ஜனக் கும்பல் கூடி நிற்கும் சதுக்கங்களிலிருந்து முக்கியமாக கற்கள் வீசப்படுகின்றன. ஒடுக்கமான தெருக்களின் வளைவுத் திருப்பங்களில் சேசு மேல் கம்பால் அடி விழுகிறது... அந்த இடங்களில் ஊர்வலம் மெல்லத்தான் போக முடிகிறது. அப்போது, உரோமையரின் ஈட்டிகளுக்கும் சவால் கொடுக்கும் சிலர், வதைக்கப்பட்டு, வேதனையின் சிகரமாக இருக்கிற சேசுவின் வேதனையை முழுமை பெறச் செய்ய எப்போதும் முன்வருகிறார்கள்.

போர்ச் சேவகர் தங்களால் முடிந்த வரை சேசுவைப் பாதுகாக்கிறார்கள். ஆனால் அப்படிப் பாதுகாக்க முயலும்போது அவர்களாலும் ஆண்டவர் மேல் அடி விழுகிறது. ஏனென்றால் அவர்களுடைய நீண்ட ஈட்டிகளை அவ்வளவு குறுகலான தெருக்களில் வீசும்போது அவை அவர் மேல் தாக்க அவரைத் தடுமாறச் செய்கின்றன. ஊர்வலம் ஒரு குறிப்பட்ட இடத்திற்கு வந்ததும் போர்ச் சேவகர்கள் கூச்சல்களையும், எச்சரிப்புகளையும் சட்டை பண்ணாமல் திடீரென திசையை மாற்றி நேராக மதில்களை நோக்கி கீழிறங்கிப் போகிற பாதையில் அதைச் செலுத்துகிறார்கள். கொலைக் களத்திற்கு சரியான குறுக்குப் பாதை அது. சேசு மேலும் மேலும் மூச்சுத் திணறுகிறார். அவருடைய முகத்திலிருந்து வடியும் வியர்வை முள்முடியின் காயங்களிலிருந்து ஒழுகும் இரத்தத்துடன் கலந்து பாய்கிறது. ஈரமாயிருக்கும் அவருடைய முகத்தில் புழுதி ஒட்டிக் கொண்டு அதில் ஒருவிதமான கறையாகப் படிகிறது. காரணம் இப்பொழுது காற்றும் வீசுகிறது. காற்று சுழன்று வீச, தூசி மேலே எழுப்பப்பட்டு பின் கண்களுக்குள்ளும் தொண்டைக்குள்ளும் புகுகிறது...

நியாயவாத வாசலின் அருகே அநேக மக்கள் கூடி நிற்கிறார்கள். அதாவது, முன்யோசனையோடு, நின்று பார்ப்பதற்கு



நேரத்தோடே வந்த நல்ல இடமாக பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த இடத்திற்கு சேசு வந்து சேருமுன் அவர் கீழே விழப் பார்த்தார். ஒரு போர்வீரன் சடாரெனறு அங்கு வந்து அவர் கீழே விழாதபடி காப்பாற்றுகிறான். அவன் மேல் சேசு சாய்ந்ததால் தரையில் விழாமல் தப்பினார். ஜனக் கும்பல் சிரிக்கிறது. "அவனை அப்படியே விடுங்கள். அவன் எல்லோரையும் "எழுந்திரு" என்று சொல்வான். இப்பொழுது அவனே எழும்பட்டும்..." என்று பரிகாசம் செய்கிறது.

அந்த வாசலுக்கு அப்புறமாக ஒரு சிற்றோடையும் ஒரு சின்னப் பாலமும் உள்ளன. அதிலே போட்டிருக்கிற சமமில்லாத பலகைகளில் நடப்பது சேசுவுக்கு வேறு விதமான களைப்பைக் கொடுக்கிறது. ஏனென்றால் சிலுவையின் நெடுங்கோல் அதிலே பட்டு கூடுதலாக எவ்வுகிறது. மேலும் அங்கே யூதர்களுக்கு அவர் மேல் வீச நிறைய கற்கள் கிடைக்கின்றன. ஓடையின் கற்கள் பறந்து வந்து அவரைத் தாக்குகின்றன...

அதிலிருந்து கல்வாரியின் ஏற்றம் தொடங்குகிறது. ரோடு வெறுமையாயிருக்கிறது. ஒரு சிறு நிழல் கூட இல்லை. ரோட்டில் பதிக்கப்பட்டுள்ள கற்கள் நிரப்பில்லாமல் உள்ளன. ரோடும் நேரே மேலே ஏறுகிறது. நான் முன்பு நூல்களை வாசித்து வந்த போது கல்வாரி ஒரு சில மீட்டர்கள் உயரத்தில் இருப்பதாக படித்திருக்கிறேன். அது அப்படியிருக்கலாம். கல்வாரி நிச்சயமாக ஒரு மலையல்ல. அது ஒரு குன்று. பிளாரன்ஸில் அர்ச். மினியாற்றோவின் பேராலயம் இருக்கிற இடத்திலுள்ள லுங்கார்னிக்கு சிலுவைகளின் குன்று எவ்வளவு தாழ்ந்திருக்கிறதோ, அதைவிட நிச்சயமாக அது தாழ்ந்ததாயில்லை. "அவ்வளவு உயரமில்லையே" என்று சிலர் சொல்லலாம். ஆம். நல்ல ஆரோக்கியத்துடனும் வலிமையுடனும் இருக்கிற ஒருவனுக்கு அது அவ்வளவு உயரமில்லைதான். ஆனால் பலவீனப்பட்ட ஒரு இருதயம் அது உயரமா இல்லையா என்று உணர்ந்து கொள்ளும்... இருதய நோயால் நான் துன்பப்படத் தொடங்கியபின், அது ஒரு சிறிய அளவில் இருந்தபோதிலும், மிகவும் வேதனைப்படாமல் மேலே ஏறிப் போக என்னால் கூடவில்லை. அடிக்கடி நின்றுதான் நான் ஏற முடிந்தது. என் தோளில் எந்தச் சுமையையும் நான் கொண்டு செல்லவுமில்லை. சேசுவின் இரத்த வியர்வைக்கும் அவருடைய கசையடிக்கும் பிறகு அவருடைய இருதயம் மிக மோசமான நிலையில் இருந்திருக்க வேண்டுமென நினைக்கிறேன்...

ஆகவே மேலே ஏறுவதில் சேசு மிகவும் அதிகமாக வேதனைப்படுகிறார். சிலுவையும் அவ்வளவு நீளமாயிருந்ததினால் மிகவும் பாரமாக இருந்திருக்க வேண்டும். பாதையிலே ஒரு கல் நிமிர்ந்து நிற்கிறது. அவர் மிகுந்த சோர்வடைந்துள்ளதால் பாதங்களை ஒரு சிறு அளவுதான் உயர்த்த அவரால் முடிகிறது. அதனால் அவர் இடறி, வலது முட்டு ஊன்றிக் கீழே விழுகிறார். இடது கையால் தம்மையே பிடித்துக் கொள்கிறார். ஜனக் கும்பல் அக்களிப்பால் ஊளையிடுகிறது.

சேசு மீண்டும் எழுகிறார். தளர்ந்து போய் குனிந்து மேலும் மேலும் மூச்சு வாங்கியபடி, இறுக்கமுற்று காய்ச்சலால் தகித்து முன்செல்கிறார். அவருடைய கழுத்திலிருந்து முன்னால் தொங்குகிற தீர்ப்புப் பலகை அவருடைய பார்வையை மறைக்கிறது. அவருடைய அங்கியின் முன்பாகம், இப்பொழுது அவர் குனிந்தபடி நடப்பதால் காலுக்கடியில் அகப்பட்டு அவரை நடக்க விடாமல் தடுக்கிறது. மறுபடியும் அவர் இடறி இரண்டு முழங்காலில் கீழே விழுகிறார். ஏற்கெனவே காயம்பட்ட அந்த முழங்கால்களில் மறுபடியும் காயம் ஏற்படுகிறது. சிலுவை அவருடைய பிடியிலிருந்து விலகுகிறது. அவருடைய முதுகிலே வலுவாகத் தாக்கி கீழே விழுகிறது. அவரோ குனிந்து அதை எடுத்து திரும்பவும் தோளில் வைக்க மிக்க வேதனையோடு சிரமப்படுகிறார். அப்படி அவர் செய்யும்போது, அவருடைய வலது தோளில் சிலுவை அழுத்தி தேய்த்ததினால் ஏற்பட்ட காயத்தைத் தெளிவாகப் பார்க்க முடிகிறது. அந்தக் காயம் கசையடியால் ஏற்பட்ட பல வடுக்களையும் திறந்து எல்லாம் சேர்ந்து ஒரே காயமாகி விட்டது. இரத்தமும், இரத்த நிணநீரும் சவ்வூடு கசிவாக வெளிவருகின்றன. அதனால் அவருடைய வெள்ளை உள் அங்கி சிவப்பாகக் கறைபட்டிருக்கிறது. அவர் அவ்வளவு மோசமாய்க் கீழே விழுந்ததைப் பற்றி சந்தோ த்தால் கைகொட்டுகிறது ஜனக்கூட்டம்...

லோஞ்ஜினுஸ் அவசரப்படுத்துகிறான். போர்ச் சேவகர் தங்கள் உடைவாளின் தட்டைப் பகுதியால் சேசுவைத் தள்ளி முன்செல்லச் செய்கிறார்கள். அவர் அப்படி உந்தப்பட்டாலும் மிக மெதுவாகவே நகர்கிறார். மயக்கமுற்றவர் போல் அங்குமிங்கும் தள்ளாடுகிறார். ரோட்டில் அங்குமிங்கும் அலைந்து காவலர் வரிசையில் மோதுகிறார். அதைக் கவனித்த ஜனக் கூட்டம் கூச்சலிட்டு: "அவனுடைய போதனை அவன் தலைக்கேறி



விட்டது. எப்படி ஆடுகிறான் பார்!" என்கிறது. குருக்களும் வேதபாரகரும் சிரித்துக் கொண்டு: "இல்லை. இது லாசர் வீட்டு விருந்தின் மதுபானம்" என்கிறார்கள். "விருந்து நன்றாயிருந்ததா? எங்கள் விருந்தை இப்போது புசி" என்றும் இதுபோல பலதும் சொல்கிறார்கள்.

இடைக்கிடையே திரும்பிப் பார்த்துக் கொள்கிற லோஞ்ஜினுஸ் அவருக்காக வருத்தப்படுகிறான். சில நிமிடங்கள் ஊர்வலத்தை நிறுத்தி வைக்கிறான். அதற்காக ஜனக்கும்பல் அவனை வைது திட்டுகிறது. அது அதிகரிக்கவும் அவன் படைவீரர்களுக்கு ஜனங்களைத் தாக்க உத்தரவிடுகிறான். கோழையரின் கூட்டம் ஆபத்தாகப் பிரகாசிக்கிற ஈட்டிகளைக் கண்டதும் கூச்சலிட்டபடி ஓடுகிறது. அங்கும் இங்கும் குன்றின் பக்கங்களில் இடறி விழுகிறது.

இவ்விடத்தில், ஓடாமல் நிற்கிற கொஞ்சம் மக்களுள் ஒரு சிறு கூட்டமான இடையர்கள் சில இடிபாடுகளுக்குப் பின்னாலிருந்து வருவதைக் காண்கிறேன். அது இடிந்த ஒரு குட்டைச் சுவராயிருக்கக் கூடும். இடையர்கள் ஆறுதலற்றவர்களாய்க் குழம்பிப் புழுதி படிந்து கந்தைகள் அணிந்த காணப்படுகிறார்கள். தங்கள் பார்வையின் சக்தியால் சேசுவின் கவனத்தை ஈர்க்கிறார்கள். அவர் தம் திருச்சிரசைத் திருப்பி அவர்களைக் காண்கிறார்... அவர்களின் முகங்களை சம்மனசுக்களின் முகங்களைப் போல் கண்ணெடுக்காமல் நோக்குகிறார். அதிலே தம் தாகத்தைத் தணித்துக் கொள்பவர் போலவும், அவர்களின் கண்ணீரைக் கொண்டு தம்மைத் திடப்படுத்துவது போலவும் காணப்படுகிறார். மெல்ல புன்னகை புரிகிறார்... முன்செல்லும்படி கட்டளை பிறக்கிறது. சேசு அவர்கள் முன்பாக கடந்து செல்கிறார். அவர்களுடைய மனங்கசிந்த அழுகை அவருக்குக் கேட்கிறது. கஷ்டத்தோடு சிலுவை நுகத்தின் அடியிலேயே தம் முகத்தைத் திருப்பி இன்னொரு சிறுநகை புரிகிறார்... அவருடைய ஆறுதல்... அந்தப் பத்து முகங்கள்... எரியும் வெயிலில் ஒரு இளைப்பாற்றி...

உடனேயே மூன்றாம் முறை தரையில் விழும் வேதனை – முழு வீழ்ச்சி. இந்தத் தடவை அவர் இடறவில்லை. திடீரென ஏற்பட்ட பலக் குறைவினால் விழுகிறார். தலைகீழாய் விழுந்து நிரப்பில்லாத கற்களின் மேல் அவருடைய திருமுகம் மோதி, அவர் மேல் விழுந்த சிலுவைக்கடியில் அகப்பட்டு புழுதியில் கிடக்கிறார். போர்ச் சேவகர் அவரைத் தூக்க முயல்கிறார்கள். ஆனால் அவர்

செத்தவர் போலாகி விட்டதால் அவர்கள் செந்தூரியனிடம் போய்ச சொல்கிறார்கள். அவர்கள் போய்த் திரும்பும் இடையில் சேசு உணர்வு பெறுகிறார். மிக மெதுவாக சேசு இரண்டு சேவகரின் உதவியால் எழுகிறார். ஒருவன் சிலுவையைப் பிடித்துக் கொள்ள, மற்றவன் அவர் எழுந்து நிற்க உதவி செய்கிறான். சேசு மீண்டும் சிலுவையைத் தோளில் ஏந்தி நிற்கிறார். ஆனால் அவர் மெய்யாகவே முழுவதும் களைத்துப் போய்விட்டார்.

"அவன் சிலுவையில்தான் சாக வேண்டும் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்" என்று கூட்டம் கத்துகிறது.

யூதர்களைப் போலவே லோஞ்ஜினுஸும் கிறீஸ்துநாதர் எங்கே வழியில் இறந்து போவாரோ என்று அஞ்சுகிறான். அதனால் சங்கடங்கள் ஏற்பட அவன் விரும்பவில்லை. கொலைக்குப் பொறுப்பான உத்யோகஸ்தன் என்கிற முறையில் நினைப்பூட்டப்படாமலே தன் கடமை என்ன என்பதை அவன் அறிந்திருக்கிறான். ஆகவே செயல்படுகிறான். யூதர்களுக்குப் பிடிக்காத ஒன்றைச் செய்கிறான். யூதர்கள் கல்வாரிக்குச் செல்கிற இந்தப் பாதைக்கு அந்தக் குன்றைச் சுற்றிலுமிருந்து வந்து சேர்ந்திருக்கிறார்கள். அப்பாதையின் வழியே மேலே முன்கூட்டியே ஏறிச் சென்று கொண்டிருக்கிறார்கள். வெறுமையான அந்த மலையில் காணப்படும் சில முட்செடிகளூடே வந்ததினால் உராயப்பட்ட இடங்களைச் சொரிந்து கொண்டும், வியர்த்துக் கொண்டும், ஜெருசலேமுக்கு ஒரு குப்பை மேடு போலிருக்கிற இடிபாடுகளில் விழுந்து எழும்பியும் வருகிறார்கள். அதனால் ஏற்பட்ட வேதனை அவர்களுக்கு ஒன்றுமேயில்லை. மரிக்கப் போகிறவரின் தாபத்தை, அவருடைய துயரமுள்ள பார்வையை, வேதனையால் அவரிடம் அவர் அறியாமலே கூட ஏற்படும் ஏதாவது ஒரு அசைவைக் காணத் தவறி விடுவோமோ என்பதுதான் அவர்களின் கவலை. மலையுச்சியில் இக்கொலையைக் கண்டு களிக்க ஒரு நல்ல இடம் கிடைக்காமல் போகுமோ என்ற ஒரு பயம்தான் அவர்களிடம் உள்ளது. ஆனால் லோஞ்ஜினுஸ் மலையைச் சுற்றிக் கொண்டு மேலே செல்லும் பாதை வழியாக ஊர்வலம் போகும்படி கட்டளையிடுகிறான் – அது இந்த அளவு செங்குத்தாயிராது என்பதனால்.

இந்தப் பாதையை அநேக ஜனங்கள் – அடிக்கடி பயன்படுத்தியதால் அது ஒரு வசதியான ரோடாக மாறியுள்ளது. இப்பாதை பிரிகிற இடம் கல்வாரிக் குன்றிற்கு நடுவழியில்



அமைந்திருக்கிறது. நான் மேலே நோக்கிப் பார்க்கும் போது, இந்தச் சுற்றுப் பாதை, நேர்ப்பாதையை நான்கு தடவை வெட்டிச் செல்கிறது. அநேகர் இந்த நீண்ட பாதை வழியாகவும் வருகின்றனர். ஆனால் அவர்கள் சேசுவின் சித்திரவதைகளில் சந்தோஷமடைகிற பேய் பிடித்த ஜனங்களின் வெட்கத்துக்குரிய கூச்சலில் கலந்து கொள்ளவில்லை. அவர்கள் கூடுதலும் பெண்கள்தான். அழுது கொண்டும், முக்காடிட்டபடியும் காணப்படுகிறார்கள். சில சிறு குழுக்களாக ஆண்களும் இந்தப் பெண்களுக்கு முந்திச் செல்கிறார்கள். பாதை, மலையைச் சுற்றும் இடத்தில் அவர்கள் போவது மறைந்து விடுகிறது.

இங்கிருந்து கிடைக்கிற கல்வாரியின் காட்சி ஒரு பக்கம் அலகு போல் நீட்டிக் கொண்டும், மறுபுறம் செங்குத்து இறக்கமாகவும் தெரிகிறது...

சேசுவைப் பின்தொடர்ந்து போகிறவர்கள் கோபாவேசத்துடன் கத்துகிறார்கள். அவர் கீழே விழுவதைக் காண்பது அவர்களுக்கு அதிக சுவையாயிருக்கிறது. தீர்ப்படைந்த அவரையும் அவரை இட்டுச் செல்கிறவர்களையும் அசுத்த மொழிகளால் வசை பேசும் அவர்களில் சிலர் ஊர்வலத்துடன் வருகிறார்கள். சிலர் இங்கு தங்களுக்குக் கிடைத்த ஏமாற்றத்தை நிவிர்த்தி செய்து கொள்ள மேலே நல்ல இடம் பிடிப்பதற்காக நேர் பாதை வழியாக மேலே ஓடுகிறார்கள்.

இந்தக் கோபாவேச கத்துதலைக் கேட்கிறார்கள். அழுது கொண்டு செல்கிற பெண்கள். அவர்கள் திரும்பிப் பார்க்கையில், ஊர்வலம், தாங்கள் செல்லும் பாதையிலேயே வருவதைக் காண்கிறார்கள். ஆகவே அவர்கள் நிற்கிறார்கள். மூர்க்கமாக நிற்கிற யூதர்களால் தாங்கள் மலைச்சரிவில் தள்ளிவிடப்படாதபடி பாறையிலே சாய்ந்து கொள்கிறார்கள். தங்கள் முக்காடுகளை இழுத்து மேலும் மூடிக் கொள்கிறார்கள். ஒரு ஸ்திரீ முஸ்லிம்களைப் போல் தன் கண்களைத் தவிர மற்றதெல்லாம் மூடியபடி நிற்கிறாள். அவர்கள் எல்லோருமே நிறை ஆடை தரித்துள்ளார்கள். ஒரு வலுவுள்ள முதியவர் அவர்களுக்குப் பாதுகாப்பாக நிற்கிறார். அவரும் தன் அங்கவஸ்திரத்தால் தன்னை முழுவதும் மூடியிருப்பதால் அவர் முகம் எனக்குத் தெளிவாகத் தெரியவில்லை. அவருடைய இருண்ட மூடாங்கிற்கு வெளியே தெரிகிற நரைத்த தாடிதான் காணப்படுகிறது.

சேசு அவர்களின் பக்கமாக வந்த போது அவர்கள் சத்தமாக

அழுது அவருக்குத் தாழ்ந்த வணக்கம் செய்கிறார்கள். பின் திடமாக முன்னால் நடக்கிறார்கள். போர்ச் சேவகர்கள் அவர்களைத் தங்கள் ஈட்டியால் பின்னால் விரட்டியிருப்பார்கள். ஆனால், அங்கே என்ன இடையூறு நடக்கிறது புதிதாக என்று பார்க்க வந்த உரோமைச் சின்னம் தாங்கிய பதவி வகிக்காத சேவகன், அப்போது குதிரையில் அங்கு வரவும், அவன் முன்பாக முஸ்லிம் போல் முழுவதும் தன்னை மூடியுள்ள ஸ்திரீ ஒரு கணம் தன் முக்காட்டை அகற்றுகிறாள். உடனே அவன் அவர்களை விட்டுவிடும்படி போர்வீரர்களுக்கு ஆணையிடுகிறான். நான் அவளுடைய முகத்தையோ உடலையோ பார்க்க முடியவில்லை. ஏனென்றால் எல்லாம் ஒரு வீச்சில் நடந்து விட்டது. அவளுடைய உடையை தரைவரை தொங்கும் மேலாடை முழுவதுமாக மூடியிருக்கிறது... லோஞ்ஜினுஸுடைய துணையாளன் இவ்வளவு சுருக்காகக் கீழ்ப்படிகிறான் என்றால் அந்த நெட்டையான ஸ்திரீ நிச்சயம் செல்வாக்குடையவளாகவே இருக்க முடியும்.

அந்த ஸ்திரீகள் அழுதபடியே வந்து சேசுவின் பாதத்தருகே முழந்தாளிடுகிறார்கள். மூச்சு வாங்கியபடி சேசுவும் நிற்கிறார். அந்நேரத்திலும் அந்தப் பரிதாபப்படும் ஸ்திரீகளுக்குச் சிறு புன்னகை செய்கிறார். அவர்களுக்குத் துணையாக வந்துள்ள மனிதனும் தன் மூடாங்கை நீக்கி தான் ஜோனத்தான் என்று காட்டுகிறார். ஆயினும் அவரை சேவகர் போக அனுமதிக்கவில்லை. பெண்களை மட்டுமே விடுகிறார்கள்.

அவர்களுள் ஒருத்தி சூசாவின் ஜோஹான்னா. அவள் முன்பு சாகக் கிடந்ததைக் காட்டிலும் அதிக நலிந்த தோற்றமுடையவளாயிருக்கிறாள். அவளுடைய கண்ணீர் பாயும் சுவடுதான் சிவப்பாயிருக்கிறதேயன்றி முகம் முழுவதும் வெளுத்துப் போயிற்று. அவளுடைய விழிகள் மங்கிப் போய் இருண்ட ஊதாவாகி விட்டன. அவளுடைய கையில் ஒரு வெள்ளிப் பருகு பாத்திரம் இருக்கிறது. அதை அவள் சேசுவிடம் நீட்டுகிறாள். ஆனால் அவரோ மறுக்கிறார். அவர் எவ்வளவு மூச்சற்றவராயிருக்கிறாரென்றால், அவரால் பருகியிருக்கவும் இயலாது. அவர் தமது இடது கையால் தமது கண்களுக்குள் வழியும் வியர்வையையும் இரத்தத்தையும் துடைக்கிறார். நீலம் பூத்த அவருடைய முகத்திலும் கழுத்திலும் அவை வடிகின்றன. கழுத்தின் நரம்புகள் அவருடைய இருதயம் கஷ்டப்பட்டு துடிப்பதினால் தெறித்துக் காணப்படுகின்றன. அந்த வியர்வையும்



இரத்தமும் அவருடைய நெஞ்சில் அங்கியையெல்லாம் நனைத்து விட்டன.

இன்னொரு ஸ்திரீ, தன் ஊழியக்காரி கையில் ஏந்தியிருக்கும் ஒரு சிறு பெட்டகத்தைத் திறந்து அதிலிருந்து ஒரு சதுர லினன் துகிலை எடுத்து அதை ஆண்டவரிடம் நீட்டுகிறாள். சேசு அதை ஏற்றுக் கொள்கிறார். அவரால் ஒற்றைக் கையைக் கொண்டு அதை உபயோகிக்க முடியவில்லை. அந்த இரக்கமுள்ள ஸ்திரீ அதை அவருடைய முகத்திற்குக் கொண்டு செல்ல உதவுகிறாள். அவருடைய முள்முடியைத் தாக்கி விடாதபடி எச்சரிக்கையாகச் செய்கிறாள். சேசு குளிர்ச்சியான அந்த லினன் துகிலை பரிதாபத்துக்குரிய தம் முகத்தில் வைத்து, அதிலே ஒரு பெரிய ஆறுதல் உள்ளது போல் பிடித்துக் கொள்கிறார். பின் அந்தத் துகிலைத் திருப்பிக் கொடுத்துச் சொல்கிறார்:

“நன்றி ஜோஹான்னா, நன்றி நிக்ஹோ... சாரா... மார்செல்லா... எலிசா... லீடியா... அன்னா... வலேரியா... நீங்கள்... ஜெருசலேமின்... குமாரத்திகளே... எனக்காக அழ வேண்டாம்... உங்கள் பாவங்களுக்காக... அழுங்கள்... ஜோஹான்னா... கூடுதல் மகன்கள்... இல்லாததற்கு... கடவுளை ஆசீர்வதி... அது... அவரின் இரக்கம்... மகன்கள் இல்லாதது... காரணம்... அதற்காக... அவர்கள் கஷ்டப்படுகிறார்கள்... எலிசபெத்... நீயும்... கடவுளை கொலை செய்வோர் நடுவில்... இருப்பதை விட அது தாவிளை... தாய்மாரே... உங்கள் மகன்களுக்காக... அழுங்கள்... ஏனெனில்... இந்நேரம்... தண்டனையில்லாமல்... போகாது... எப்படித் தண்டனை... மாசற்றவனுக்கு... இப்படியென்றால்... அப்போது நீங்கள்... கருத்தாங்கியதற்கும்... பாலூட்டியதற்கும்... அநேக மகன்களைப் பெற்றதற்கும்... அழுவீர்கள்... அந்நாட்களின்... தாய்மார்... அழுவார்கள்... ஏனென்றால்... நான் சொல்லுகிறேன்... அப்போது... அழிபாட்டுக்குள்... முதலில் விழுகிறவன்... கொடுத்து வைத்தவன்... உங்களை நான்... ஆசீர்வதிக்கிறேன்... வீடு திரும்புங்கள்... எனக்காக... மன்றாடுங்கள்... போய் வா ஜோனத்தான்... இவர்களைக் கூட்டிப் போ...”

ஸ்திரீகள் சத்தமாக அழுகிறார்கள். யூதேயர்கள் சபிக்கிறார்கள். சேசு மீண்டும் புறப்படுகிறார்.

மறுபடியும் சேசு வியர்வையால் நனைகிறார். போர்ச் சேவகரும் தீர்ப்பிடப்பட்ட மற்ற இருவரும் வியர்த்து வடிகிறார்கள். காற்று பலமாக வீசும் இந்நாளில் சூரியன் தீச்சுவாலையைப் போல்

எரிகிறது. தன்னிலே உஷ்ணமாயிருக்கும் மலையின் பக்கம் வெயிலின் அனலை அதிகரிக்கச் செய்கிறது. சேசுவின் கம்பளி ஆடை கசையடியால் ஏற்பட்ட காயங்களில் பதிந்திருக்கும்போது வெயிலின் உஷ்ணம் எப்படியிருக்கும் என்பதை உணர்ந்து கொள்ளலாம்... ஆனால் அவர் முனகவில்லை. இந்தப் பாதை அதைப் போல் செங்குத்தாக இல்லை. இப்பொழுது அவர் இழுத்து இழுத்து நடக்கிற கால்களுக்கு ஆபத்தாயிருந்த கரடுமுரடான கற்களும் இல்லை. அப்படியிருந்தும் சேசு மேலும் மேலும் தள்ளாடுகிறார். போர்ச் சேவகரின் வரிசைகள் மீது இங்கு ஒரு தடவை அங்கு ஒரு தடவையாக மோதுகிறார். முன்னை விட கூடுதலாக கூனிக் காணப்படுகிறார்.

இந்நிலையை சமாளிக்க அவர்கள் அவருடைய இடையைச் சுற்றி ஒரு கயிற்றைக் கட்டி இரு முனைகளையும் கடிவாளக் கயிறு போல் பிடித்துக் கொள்கிறார்கள். இது அவரைத் தாங்கினாலும் அவருடைய சுமையைக் குறைக்கவில்லை. மாறாக, கயிறு சிலுவையுடன் மோதி அதை ஓயாமல் அதை ஓயாமல் அசைக்கிறது. சிலுவையின் அசைவால் முள்முடி தாக்கப்படுகிறது. முள்முடியால் ஆண்டவரின் நெற்றி முழுவதும் வடுக்காயமாக மாறியுள்ளது. மேலும் அக்கயிறு பல காயங்களுள்ள அவருடைய இடையில் உராய்ந்து அவை மேலும் இரத்தம் சொரியக் காரணமாகிறது. அவருடைய வெள்ளை அங்கி இளஞ்சிவப்பாக நிறம் மாறித் தெரிகிறது. இப்படியாக அவருக்கு உதவி செய்யப் போய் அவரை அதிக வேதனைக்குத்தான் உட்படுத்துகிறார்கள்.

மலையைச் சுற்றிச் செல்லும் ரோடு செங்குத்தான பாதையின் பக்கத்தில் வந்து கொண்டிருக்கிறது. அங்கே மாதா அருளப்பருடன் நிற்கிறார்கள். மலைச் சரிவிலுள்ள நிழலடியில் அருளப்பர் மாதாவைக் கூட்டிக் கொண்டு வந்திருக்கிறார் – அவர்களுக்கு சற்று விடுதலையாயிருக்கும் பொருட்டு. அந்த இடம்தான் மிக செங்குத்தானது. அதைச் சுற்றி வேறு ரோட்டுப் பாதை இல்லை. அவ்விடத்திற்கு மேலும் கீழும் மலைச் சரிவு செங்குத்தாய்த் தெரிகிறது. அதனாலேயே அக்கொடியவர்கள் அதை விட்டு விட்டார்கள். அது வடக்குப் பக்கமாயிருப்பதால் நிழல் ஏற்படுகிறது. மாதா மலையில் சாய்ந்து நிற்கிறார்கள். அவர்கள் மிகவும் களைப்படைந்து மூச்சு வாங்கி மரண வெளிறுதலுடன் காணப்படுகிறார்கள். கருமையான நீல ஆடையணிந்திருக்கிறார்கள். கைவிடப்பட்ட பரிதாபத்துடன் அருளப்பர் மாதாவைப்



பார்க்கிறார். அவருடைய முகமும் வெளிறி தேய்ந்து களைப்புற்று அகன்ற கண்களுடன் குழி விழுந்த கன்னங்களுடன் நோய் பிடித்தது போல் தோன்றுகிறது.

மற்ற ஸ்திரீகள் – லாசரின் மரியா மார்த்தா, அல்பேயுஸின் மேரி, செபதேயுவின மேரி, கானாவூர் சூசான்னா, இராப் போஜன வீட்டின் எஜமானி, இன்னும் எனக்குத் தெரியாத சிலரும் ரோட்டின நடுவில் நின்று சேசு வருகிறாரா என்று பார்க்கிறார்கள். லோஞ்ஜினுஸ் வருவதைக் காண்கிறார்கள். கண்டதும் அவர்கள் மாதாவை அருளப்பர் முழங்கையால் பிடித்துத் தாங்கிக் கொள்ள, மாதா மலைப் பக்கத்தை விட்டு ரோட்டின் மத்தியில் வந்து தயங்காமல் நிற்கிறார்கள். லோஞ்ஜினுஸ் தலையசைத்து விட்டு பதினொரு குதிரை வீரர்களும் பின்தொடர கடந்து செல்கிறான்.

குதிரைகளை விட்டு இறங்கி நிற்கிற போர்ச் சேவகரினூடே மாதா போக முடியுமா என்று பார்க்கிறார்கள். அவர்களோ சீக்கிரம் போய்ச் சேர வேண்டுமென்ற அவசரத்தில், தங்கள் ஈட்டிகளைக் கொண்டு மாதாவைத் திரும்பிச் செல்ல வைக்க முயல்கிறார்கள். மேலும் கற்களும் வீசப்படுகின்றன. சேவகரின் இந்தக் கருணைக்கு எதிர்ப்புக் காட்டும்படியாக பக்தியுள்ள ஸ்திரீகளால் ஏற்பட்ட இந்தத் தாமதத்தை முன்னிட்டு யூதர்கள் மறுபடியும் சபித்துப் பேசுகிறார்கள்: "ஜல்தி! நாளை பாஸ்கா விழா. இன்று மாலைக்குள் எல்லாம் செய்து முடிக்கப்பட வேண்டும். எங்கள் சட்டத்தைப் பரிகசிக்கிற நீங்கள் கூட்டுக் குற்றவாளிகள்! எங்களுக்கு நெருக்கிடை செய்கிறவர்களே! எங்களைத் தாக்குகிறவர்களும், அவர்களுடைய கிறீஸ்துவும் சாகட்டும்! இவர்கள் அவனை நேசிக்கிறார்கள்! பாருங்கள், எப்படி இவர்கள் அவனை நேசிக்கிறார்களென்று! சரி சரி... அவனைக் கொண்டு போங்கள். அவனை சபிக்கப்பட்ட உங்கள் நித்திய நகரத்தில் கொண்டு வையுங்கள். அவனை உங்களிடம் ஒப்படைத்து விடுகிறோம். எங்களுக்கு அவன் வேண்டாம்... வீணர்கள் வீணர்களுடன்! குஷ்டம் குஷ்டரோகிகளுடன்!"

லோஞ்ஜினுஸ் எரிச்சல் கொள்கிறான். பத்து ஈட்டி வீரர்களும் பின்தொடர வசை பேசும் அந்த வேட்டை நாய்களை எதிர்த்துத் தன் குதிரையுடன் பாய்கிறான். அவர்கள் இரண்டாம் முறையாக ஓடிப் போகிறார்கள். அப்போது அவன் அங்கே ஒரு வண்டி நிற்கக் காண்கிறான். குன்றின் அடிவாரத்திலுள்ள காய்கறித் தோட்டங்களிலிருந்து அது வந்திருக்க வேண்டும். காய்கறிகளுடன்

கீழேயிருக்கிற பட்டணத்திற்குப் போவதற்காக, கூட்டம் கடரட்டும் என்று அது காத்து நிற்கிறது. சீரேனேயூரானும், அவன் மகன்களும் விநோதப் பிரியத்தால் அங்கு ஏறி வந்திருக்க வேண்டும். மற்றப்படி அவர்கள் மேலே ஏறி வரக் காரணமில்லே. அவன் இரண்டு மகன்களும் காய்கறிப் பாரத்தின் மேல் படுத்துக் கொண்டு யூதேயர்கள் ஓடுவதைப் பார்த்துச் சிரிக்கின்றனர். அந்த மனிதனுக்கு நாற்பது, ஐம்பது வயதிருக்கும். நல்ல திடகாத்திரனுக இருக்கிறான். வண்டியில் பூட்டப்பட்ட கழுதை பயந்து பின்னுல் இழுக்கப் பார்க்கிறது. அதனருகில் நிற்கிற அம்மனிதன் ஊர்வலத்தை உற்றுப் பார்க்கிருன்.

லோஞ்ஜினுஸ் அந்த சீரேனேயூரானே மேலும் கீழும் பார்க்கிருன். அவன் பயன்படக் கூடும் என்று எண்ணிய அவன் உத்தரவிடும் தோரணேயில்: "மனிதா, வா இங்கே" என்கிருன். அவனே கேளாதவனைப் போல் இருக்கிருன். ஆனுல் லோஞ்ஜினுஸோடு யாரும் விளேயாட முடியாது. தன் கட்டளேயை அவன் மறுபடியும் எப்படி கூறினுனென்ருல், சீரேனேயூரான் கழுதையின் கடிவாளக் கயிறுகளே தன் மகன்கள் மேல் எறிந்து விட்டு, செந்தூரியனிடம் வந்து நிற்கிருன்.

லோஞ்ஜினுஸ்: "அந்த மனிதன் தெரிகிறதா?" என்று கேட்டு, சேசுவைச் சுட்டிக் காட்டும்படி திரும்புகிருன். அப்போது தன்னே சேசுவிடம் போக அனுமதிக்குமாறு போர்ச் சேவகரிடம் கேட்கிற மாதாவைக் காண்கிருன். அவனுக்கு மாதா மேல் இரக்கம் உண்டாகிறது. "அந்த ஸ்திரீயைப் போக விடுங்கள்" என்று உத்தரவிடுகிருன். பின் சீரேனேயூரானிடம்: "அந்த மனிதனுல் இந்தச் சுமையோடு இதற்கு மேல் போக முடியாது. உனக்குப் பலமிருக்கிறது. அவனுக்குப் பதிலாக நீ சிலுவையை மலே உச்சி வரையிலும் கொண்டு போ."

"என்னுல் முடியாது... என் கழுதை. அது அடங்காது. என் பையன்கள் அதை அடக்க முடியாது..."

"உன் கழுதையையும் பறிகொடுத்து, தண்டனேயாக இருபது அடிகளும் பட வேண்டாம் என்ருல் சொன்னபடி செய்."

அதற்கு மேல் அம்மனிதன் மறுப்புச் சொல்லவில்லே . அவன் தன் மகன்களிடம்: "சீக்கிரமாக வீட்டிற்குப் போங்கள். நான் உடனே வந்து விடுவேன் என்று சொல்லுங்கள்" என்று கத்திச் சொல்லி விட்டு சேசுவை நோக்கிப் போகிருன்.



அப்போதுதான் சேசு தம் தாய் தம்மிடம் வருகிறதைக் காண்கிருர். ஏனென்ருல் அவர் அவ்வளவு கூனிப் போயிருக்கிருர். அவருடைய கண்கள் ஏறக்குறைய மூடியிருக்கின்றன. அவர்: "**அம்மா!**" என்று கதறுகிருர்.

அவர் சித்திரவதை செய்யப்படத் தொடங்கியபின் இந்த வார்த்தைதான் அவருடைய வேதனேகளே வெளிப்படுத்துவதாயிருக்கிறது. அந்தக் கதறுதலில் எல்லாமே வெளிப்படுகின்றன – அவருடைய உள்ளத்தின் பயங்கர துயரம். அவருடைய மனதின் வேதனே, உடலின் வாதனே எல்லாம். வதைக்கிறவர்களின் நடுவில் மிகக் கொடூரமான சித்திரவதைப்பட்டுத் தன்னந்தனியே சாகிற ஒரு சிறுவனுடைய, இருதயம் உடைந்த, இருதயங்களே உடைக்கிற கதறல் அது... தன் சுவாசத்தைக் கண்டே பயப்படுகிற சிறுவனின் நிலே அது. இரவில் கோர பயங்கரக் காட்சிகளால் அவதிப்பட்டு அறிவிழந்து அழுகின்ற சிறுவனின் ஓலம் போல் அது இருக்கிறது... அவன் தன் தாயைத் தேடுகிருன் – தன்னே நேசிப்பவளே. அவளுடைய அன்பின் முத்தங்கள்தான் அச்சிறுவனின் காய்ச்சலின் அனலேத் தணிக்கும். அவளுடைய குரல்தான் பயமூட்டும் காட்சிகளே அகற்றும். அவளுடைய அரவணேப்புத்தான் மரணத்தின் அச்சத்தைக் குறைக்கும்...

மாதா கத்திக் குத்தால் தாக்கப்பட்டது போல் தன் இருதயத்தைக் கையால் அழுத்திப் பிடிக்கிருர்கள். சற்றுத் தள்ளாடுகிருர்கள். ஆனுல் சுதாரித்துக் கொண்டு துரிதமாய்த் தன் கரங்களே வதைக்கப்படும் தன் குமாரனே நோக்கி நீட்டியபடி முன்சென்று: "**மகனே!**" என்று கதறிச் சொல்கிருர்கள். அவர்கள் அதை எப்படிச் சொல்கிருர்கள்!! எவ்வளவு துயரம் அதில் தெறிக்கிறதென்ருல் ஓநாயின் இதயம் படைத்தோர் தவிர மற்ற இதயங்கள் உடைந்துபோவதை உணராமல் இருக்க முடியாது.

இரக்க உணர்வின் அடையாளங்களே உரோமையரிடமும் நான் காண்கிறேன்... இவ்வளவிற்கும் அவர்கள் போர்ச் சேவகர்கள், கொலேகளுக்குப் பழக்கப்பட்டவர்கள், தழும்புகளேப் பெற்றவர்கள்... ஆயினும் நான் மறுபடியும் சொல்கிறேன். ஓநாய்களிலும் மோசமானவர்களேத் தவிர மற்ற எல்லாருக்கும் "அம்மா!" "மகனே!" என்ற வார்த்தைகள் எல்லா இடத்திலும் ஒரே மாதிரிதான ஒலிக்கின்றன. எல்லா இடத்திலும் இரக்கத்தின்

அலைகள் எழும்புகின்றன.

சீரேனே ஊர் மனிதன் இரக்கத்தால் இளகுகிறான்... சிலுவையினால்தான் மாதா தன் மகனை அரவணைக்கக் கூடாதிருப்பதைக் காண்கிறான். நீட்டிய தன் கரங்களை மாதா கீழே விழ விடுகிறார்கள். அவர்கள் சேசுவை உற்றுப் பார்க்க மட்டுமே செய்கிறார்கள். அவரை ஊக்கப்படுத்த வேதசாட்சியைப் போல புன்னகை புரிய முயல்கிறார்கள். அவர்களின் நடுங்கும் உதடுகள், கண்ணிலிருந்து வழியும் கண்ணீரைப் பருகுகின்றன. அவரோ சிலுவையின் நுகத்தடியிலிருந்தே தம் தலையைத் திருப்பி மாதாவைப் பார்த்து புன்னகை புரிய முயல்கிறார். அவருடைய உதடுகள் பாவம்! காயப்பட்டு காய்ச்சலாலும், அடிகளாலும் பிளந்திருக்கிற அந்த உதடுகளின் முத்தத்தைத் தம் அன்னைக்கு அனுப்ப முயற்சிக்கிறார். அப்போது சீரேனேயன் துரிதமாய், ஒரு தந்தையின் பரிவோடு, முள்முடிக்கு அசைவு கொடுக்காமல், காயங்களில் உராயாதபடி சிலுவையை எடுத்துக் கொள்கிறான்.

ஆயினும் மாதா தன் மகனை முத்தமிட முடியாது... மிக மெதுவான தொடுதலும் கூட அவருடைய கிழிக்கப்பட்ட சரீரத்திற்கு சித்திரவதையாகவே இருக்கும். ஆகவே அவர்கள் நிறுத்திக் கொள்கிறார்கள். மேலும் அந்த மிகப் புனிதமான உணர்வுகளுக்கும் ஒரு ஆழ்ந்த தன்னடக்கம் உண்டு. அவை மரியாதையை அல்லது குறைந்த பட்சம் இரக்கத்தைக் கேட்கின்றன. ஆனால் இங்கே வினோதப் பிரியமும் அதற்கும் மேலாக பரிகசிப்பும்தான் உள்ளன. அவஸ்தைப்படும் இரு ஆன்மாக்களும்தான் முத்தமளித்துக் கொள்கின்றன.

ஊர்வலம் மீண்டும் தொடருகிறது. கோபம் பொங்கிய கூட்டத்தின் நெரிப்பு அவ்விருவரையும் பிரிக்கின்றது. மாதா மலைப்பக்கமாகத் தள்ளப்படுகிறார்கள். அங்கே எல்லாரும் அவர்களைப் பரிகாசம் செய்கிறார்கள்.

இப்பொழுது சீரேனேய மனிதன் சிலுவையுடன் சேசுவின் பின்னால் வருகிறான். அந்தப் பாரத்திலிருந்து விடுபெற்ற சேசு முன்னைவிட எளிதாக முன்செல்கிறார். அவருக்குக் கடுமையாக மூச்சு வாங்குகிறது. இருதயத்திலே ஒரு பெரும் வேதனை உள்ளது போல கையால் அடிக்கடி நெஞ்சை மார்பின் நடு எலும்புப் பகுதியில் அமுக்குகிறார். இப்பொழுது அவருடைய கரங்கள் கட்டவிழ்க்கப்பட்டிருப்பதால், இரத்தத்தாலும் வியர்வையாலும் சிக்குப் பிடித்து முன்னால் விழுந்து கிடக்கிற முடியை காதுகளின்



பின்னால் ஒதுக்குகிறார். அதனால் நீலம் பூத்த முகத்தில் சற்று காற்றுப்பட ஏதுவாகிறது. மூச்சு விட கஷ்டமாக்குகிற கழுத்தைச் சுற்றிய கயிறு முடிச்சை அவிழ்க்கிறார்... முன்னை விட நன்றாக நடக்கிறார்.

மாதா மற்றப் பெண்களுடன் பின்னால் வந்துவிட்டார்கள். ஊர்வலத்தின் பின்னே வருகிறார்கள். அது கடந்து போனபின் ஒரு குறுக்குப் பாதையில் மலை உச்சியை நோக்கிப் போகிறார்கள். மனித மாமிசம் தினனும் கூட்டத்தின் நிந்தைகளைப் பொருட்படுத்தாமல் போகிறார்கள்.

சேசு தடையின்றி நடக்க முடிவதால் மலையைச் சுற்றிய ரோட்டின் கடைசிப்பாகம் சீக்கிரமே கடரப்படுகிறது. மலை உச்சிக்குப் பக்கத்தில் வந்து விட்டார்கள். உச்சியோ கூச்சலிடும் கும்பலால் நிறைந்திருக்கிறது.

லோஞ்ஜினுஸ் நிற்கிறான். கொலைக்களமாகிய மலையின் உச்சியில் இடம் ஏற்படும்படியாக அங்கு கூடி நிற்கிற அத்தனை பேரையும் தயவு தாட்சண்யமின்றி கீழே இறங்கச் செய்யும்படி தன் வீரர்களுக்கு உத்தரவிடுகிறான். நூறு படைவீரர்களில் பாதிப்பேர் மேலே ஓடி வந்து தங்கள் உடைவாள்களையும் ஈட்டிகளையும் கொண்டு அங்கே நின்ற எல்லாரையும் இரக்கமின்றி விரட்டுகிறார்கள். பட்டயங்களின் பக்கங்களாலும் குண்டாந்தடிகளாலும் அவர்கள் கொடுக்கிற யூதர்கள் மலையுச்சியிலிருந்து ஓடுகிறார்கள். சற்றுக் கீழேயிருக்கிற திறப்பு வெளியில் நிற்க அவர்கள் விரும்பினாலும் அங்கே ஏற்கெனவே இடம் பிடித்து நிற்கிறவர்கள் அதற்கு சம்மதியாமல் கடுமையாய்ச் சச்சரவு பண்ணுகிறார்கள். அவர்கள் எல்லோருக்குமே பைத்தியம் பிடித்து விட்டது போலிருக்கிறது.

கல்வாரியின் மேல்தளம், சென்ற ஆண்டு நான் கூறியது போல, ஒழுங்கில்லாத நீண்ட சதுர வடிவாக உள்ளது. அதன் வலது பக்கம் சற்று உயர்ந்து காணப்படுகிறது. அதற்கப்பால் மலையின் பாதி அளவு வரையிலும் திடீரென செங்குத்தாய் இறங்குகிறது. சொற்ப இடமான மேல்தளத்தில் ஏற்கெனவே மூன்று ஆழமான குழிகள் செங்கல் அல்லது தட்டைக் கற்களால் அருகு கட்டப்பட்டுள்ளன... அவைகளின் பக்கத்தில் கற்களும் மண்ணும் சிலுவைகளைக் குழிகளில் நட்டு இறுக்குவதற்காக குவிக்கப்பட்டிருக்கின்றன. அங்கே காணப்படுகிற இன்னும் பல குழிகளைக் காலி செய்து கொள்வார்கள் என்பது

தெளிவாயிருக்கிறது.

மலையுச்சி செங்குத்தாக இறங்காத மறுபக்கத்தில், மெதுவாக சரிந்து செல்லும் ஒருவகை மேட்டு நிலம் இருக்கிறது. மேல்தளத்திற்கு அடுத்து இதுவும் ஒரு சமதளம் போல் உள்ளது. அங்கிருந்து இரண்டு பாதைகள் மலை உச்சியைச் சுற்றியபடி புறப்படுவதால் மேல்தளமானது, பக்கங்களில் குறைந்தது இரண்டு மீட்டர் உயரத்துடன் காணப்படுகிறது.

போர்ச் சேவகர்கள் ஜனக் கூட்டத்தின் குழப்பங்களை அடக்கியபின் ஊர்வலம் எந்தத் தடையுமின்றி முன்னேறி மலையுச்சிக்குப் பக்கத்தில் வந்து விட்டது. அங்கே இரண்டு பேர் கொண்ட அணி வரிசையாக அவர்கள் வேலி போல் நிற்க, குதிரைப் படையின் நடுவே தீர்ப்பிடப்பட்ட மூன்று பேரும் வருகிறார்கள். நூறு சேவகரில் எஞ்சிய பாதிப்பேர் இவர்கள் எல்லாருக்கும் பாதுகாப்பாக வர, மலையுச்சியின் கீழுள்ள சமதள ஸ்தலத்திற்கு ஊர்வலம் வந்து சேருகிறது.

இது நடந்து கொண்டிருக்கையில் நான் ஸ்திரீகளில் மேரிகளைப் பார்க்கிறேன். அவர்களுக்குச் சற்றுப் பின்னால் சூசாவின் ஜோஹான்னாவும் முன்பு குறிப்பிடப்பட்ட நான்கு பெண்களும் நிற்கிறார்கள். மற்றவர்கள் போய்விட்டார்கள். ஜோனத்தானும் அவன் மனைவியும் இங்கு நிற்பதால் அவர்கள் தாங்களாகவேதான் போயிருக்க வேண்டும். நாம் வெரோணிக்கா என்று அழைக்கிற – சேசு நிக்ஹே என்றழைக்கிற ஸ்திரீயும், அவளுடைய வேலைக்காரியும் அங்கில்லை. போர்ச் சேவகர்கள் கீழ்ப்படிந்தார்களே, துகிலால் தன்னை மூடியிருந்த நெட்டையான ஸ்திரீ, அவளும் அங்கில்லை. ஜோஹான்னாவையும், எலிஸா என்ற மூப்படைந்த ஸ்திரீயையும், அன்னாளையும் (சேசுவின் பகிரங்க வாழ்வின் முதல் ஆண்டு திராட்சை அறுவடை காலத்தில் அவர் சென்றிருந்த வீட்டெஜமானி), இன்னும் எனக்கு அடையாளம் காட்ட முடியாத இரண்டு பேரையும் நான் காண முடிகிறது.

இந்த ஸ்திரீகளுக்கும், மேரிகளுக்கும் பின்னால் ஜோசேப்பையும், அல்பேயுஸின் சீமோனையும், சாராவின் அல்பேயுஸையும் இடையர்களின் குழுவையும் நான் காண்கிறேன். இவர்களை நிந்தித்து விரட்டிவிட நினைத்தவர்களுடன் இவர்களுக்குக் கைகலப்பு ஏற்படுகிறது. இவர்களுடைய அன்பினாலும் துயரத்தாலும் இவர்களின் வலிமை வளர்ந்து எவ்வளவு பலமுடையதாயிருந்ததென்றால், தங்களை



எதிர்த்தவர்களை தோற்கடித்து விட்டார்கள். பின் இவர்கள் அரைவட்டமாக நின்று கொண்டார்கள். சில்லரைத் தனமுள்ள யூதர்கள் தங்கள் முஷ்டிகளை அசைத்து சாகுங்கள் என்று கத்த மட்டுமே துணிகிறார்கள். ஏனென்றால் இவ்விடையர்களின் மேய்ப்புக் கோல்கள் முடிச்சு விழுந்த திடமாயிருக்கின்றன. வீரத் தன்மையுள்ள அவர்களுக்கு வலிமையும் குறி தவறாத திறமையும் உண்டு. கலிலேயர்கள் அல்லது கலிலேய குருவின் பின்சென்றவர்கள் என்று அழைக்கப்பட்ட ஒரு சிலர் பகைமையுள்ள ஒரு ஜனத்தையே எதிர்த்து நிற்பதென்றால் அதற்கு உண்மையான தைரியம் வேண்டும். அவர்கள் நின்ற இடம் மட்டுமே கல்வாரியில் கிறீஸ்துநாதரை சபிக்காத இடம்.

கல்வாரி உச்சியிலிருந்த மெல்ல சரிவாக கீழே பள்ளத்தாக்கை நோக்கி இறங்குகிற மூன்று பக்கங்களும் ஜனங்களால் நிரம்பியுள்ளன. செம்மண் நிறமுள்ள நிலம் காணப்படவில்லை. எல்லா நிறங்களிலும் தெரிகிற அவர்களின் உடைகளும் தலைத் துகில்களும், தோன்றியும் மறைந்தும் பிரகாசிக்கிற சூரிய ஒளி அவ்விடத்தை ஒரு பூமேடை போல் காட்டுகிறது. அனைவரும் குரூர விரும்பிகள். நீரோடைக்கு அப்புறமாக சாலையில் மேலும் அதிகமாக ஆட்கள் நிற்கிறார்கள். மதில்களுக்கு அப்பால் இன்னும் அதிகம் பேர் காணப்படுகிறார்கள். பக்கங்களில் உள்ள மேடுகளிலும் கூடுதலாக மக்கள் நின்று கொண்டிருக்கிறார்கள். பட்டணத்தின் இதர பாகங்கள் ஆளற்று வெறிச்சோடிக் கிடக்கின்றன. நிசப்தம் நிலவுகிறது. எல்லாரும் இங்கே கூடி வந்து விட்டார்கள்: எல்லா அன்பும் எல்லாப் பகையும் ஒரே இடத்தில் கூடி நிற்கிறது: நேசித்து மன்னிக்கிற அனைத்து மவுனமும், பகைத்து சபிக்கிற அனைத்துக் கூச்சலும். கொலைப்படுத்தும் பொறுப்புள்ளவர்கள் தங்கள் ஆயுதங்களைத் தயாரிக்கிறார்கள். குழிகளைக் காலி செய்து ஆயத்தமாக்குகிறார்கள். தீர்ப்பிடப்பட்டவர்கள் போர்ச் சேவகரின் சதுர வடிவ அணிவகுப்பின் நடுவில் காத்து நிற்கிறார்கள். மேரிகள் நிற்கிற இடத்திற்கு எதிரில் ஒரு மூலையில் இடம் பிடித்திருக்கிற யூதர்கள் அவர்களை நிந்தித்துப் பழித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பரிசுத்த மாதாவையும் அவமானமாய்ப் பழிக்கிறார்கள்: "கலிலேயர்கள் சாகட்டும், சாகட்டும்! அவர்கள் சாகட்டும்! அவர்கள் சபிக்கப்படட்டும். தேவ தூஷணம் சொன்ன கலிலேயன் சாகட்டும். அவனைப் பெற்ற உதரத்தையும் சிலுவையோடு சேர்த்து

அறையுங்கள். பிசாசுகளைப் பெற்றெடுக்கும் விரியன் பாம்புகள் ஒழியட்டும். அவர்கள் சாகட்டும்..."

தன் குதிரையிலிருந்து இறங்கிய லோஞ்ஜினுஸ் மாதாவைப் பார்க்கிறான்... ஜனங்களின் கூச்சலை அடக்கும்படி சிப்பாய்களுக்கு உத்தரவிடுகிறான்... தீர்ப்பிடப்பட்ட மூவருக்கும் பின்னால் நின்ற அனைவரையும் துரத்தி வெளியேற்றுகிறார்கள். யூதர்கள் ஒருவர் மேல் ஒருவர் மிதித்துக் கொண்டு மலையின் பக்கங்களில் ஓடிப் போகிறார்கள். மற்ற போர்வீரர்கள் குதிரையை விட்டு இறங்க, ஒருவன் செந்தூரியனுடைய குதிரையையும் மற்ற பதினொரு குதிரைகளையும் நிழலுள்ள ஒரு சரிவிற்குக் கொண்டு செல்கிறான்.

இப்பொழுது லோஞ்ஜினுஸ் உச்சிக்கு ஏறுகிறான். கூசாவின் ஜோஹான்னா முன்வருகிறாள். அவள் அவனை நிறுத்தி, ஒரு பருகு கலத்தையும் பண முடிப்பையும் கொடுக்கிறாள். பின் அவள் அழுது கொண்டே பின்வாங்கி மற்றப் பெண்களுடன் போய்ச் சேர்ந்து கொள்கிறாள்.

கல்வாரியின் உச்சியில் எல்லாம் தயாராகி விட்டன. தீர்ப்புப் பெற்ற மூவரையும் மேலே கொண்டு போகிறார்கள். சேசு தம் தாயின் பக்கமாகக் கடந்து செல்கிறார். மாதா தன் மேல் துகிலை வாயில் அமுக்கி தன் வேதனை முனகலை அடக்குகிறார்கள்.

அதைப் பார்த்து விட்ட யூதர்கள் சிரித்து ஏளனம் செய்கிறார்கள். மாதாவின் தோளிலே கை கொடுத்து அவர்களைத் தாங்கிக் கொண்டிருக்கிற சாந்தமான அருளப்பர் திரும்பி அவர்களை முறைத்துப் பார்க்கிறார். அவருடைய கண்கள் பற்றி எரிகின்றன. ஸ்திரீகளைப் பாதுகாக்கும் பொறுப்பு அவருக்கு இல்லாதிருந்தால் அவர்களில் ஒருவனுடைய குரல்வளையை அவர் நெரித்திருப்பார் என எனக்குத் தோன்றுகிறது.

தீர்ப்பிடப்பட்டவர்கள் கல்வாரியின் உச்சித் தளத்தை அடைந்த உடனே போர்ச் சேவகர் மூன்று பக்கமும் சூழ்ந்து கொள்கிறார்கள், செங்குத்தான பக்கம் தவிர.

சீரேனேய மனிதனை லோஞ்ஜினுஸ் போகும்படி சொல்கிறான். அவனோ இப்பொழுது அரை மனதோடு போகிறான். கொடுமையினால் அல்ல, அன்பினால். அவன், கலிலேயர்கள் நிற்கிற இடத்தில் தானும் நின்று கொள்கிறான். கிறீஸ்துவின் மேல் விசுவாசம் கொண்டு சிதைக்கப்பட்டவர்களாய் நிற்கிறவர்கள் மேல்



வீசப்படும் நிந்தைகளில் அவனும் பங்கு கொள்கிறான்.

இரண்டு கள்வர்களும் தங்கள் சிலுவைகளை சபித்துக் கொண்டே தரையில் எறிகிறார்கள். சேசு மவுனமாக நிற்கிறார். துயர வழிப் பயணம் முடிந்துள்ளது.

## அத்தியாயம் – 635

### சேசு சிலுவையில் அறையப்படுதல்.

*27 மார்ச் 1945.*

**யூ**தேயர்களைப் போலிருக்கிற நான்கு வலுவுள்ள முரடர்கள் – தீர்ப்புப் பெற்றவர்களை விட சிலுவையில் அறையப்படத் தகுதி பெற்ற யூதேயர்கள் – கசையடியை நடத்தியவர்களின் இனத்தைப் போன்றவர்கள், ஒரு பாதையினின்று கொலைக்களத்திற்கு குதித்து வருகிறார்கள். அவர்கள் குட்டையான கையில்லாத அங்கி அணிந்திருக்கிறார்கள். கைகளிலே ஆணிகளையும், சுத்தியல்களையும், கயிறுகளையும் வைத்துக்கொண்டு, தீர்ப்புப் பெற்றவர்களைப் பரிகாசம் செய்து கொண்டே அவைகளைக் காண்பிக்கிறார்கள். ஜனக் கூட்டமோ குரூர பைத்தியம் பிடித்து ஆர்ப்பரிக்கிறது.

செந்தூரியன் பருகு கலத்திலுள்ள, உணர்வை மழுக்கும் மீறை கலந்த பானத்தைப் பருகும்படி சேசுவிடம் கொடுக்கிறான். அவரோ அதை மறுக்கிறார். இரு கள்வர்களும் அதிலே நிறைய குடித்துக் கொள்கிறார்கள். அகன்ற வாயுள்ள அந்தப் பருகுகலம் ஒரு பெரிய கல்லின் அருகே உச்சியின் ஓரமாக வைக்கப்படுகிறது.

தீர்ப்பிடப்பட்ட மனிதர்கள் உடைகளைக் கழற்றும்படி உத்தரவிடப்படுகிறார்கள். கள்வரிருவரும் வெட்கமற்றவர்களாய் அப்படிச் செய்கிறார்கள். அவர்கள் ஜனக் கும்பலை நோக்கி அசுத்த அபிநயம் காட்டி வேடிக்கை செய்கிறார்கள். குறிப்பாக வெள்ளைச் சணலாடை அணிந்து நிற்கும் ஒரு குருக்கள் கூட்டத்தைப் பார்த்து அப்படிச் செய்கிறார்கள். இக்குருக்கள் தங்கள் இனத்தின் சலுகையைப் பயன்படுத்தி உச்சிக்கு அடுத்த திடலில் கொஞ்சங் கொஞ்சமாய் இடம்பிடித்து நின்று கொண்டார்கள். அவர்களுடன் இரண்டு மூன்று பரிசேயர்களும் மற்றும் ஆதிக்க குணமுடைய சிலரும் சேர்ந்து கொண்டார்கள். பகை அவர்களை நண்பர்களாக்கியுள்ளது. எனக்குத் தெரிந்த சிலரையும் நான் காண்கிறேன்: பரிசேயர்களான ஜோஹனன், இஸ்மாயேல், வேதபாரகனான சாதோக், கப்பர்னும் ஏலி...

கொலைஞர்கள், தீர்ப்பிடப்பட்டவர்கள் தங்கள் இடையில் கட்டிக் கொள்ளும்படி மூன்று கிழிந்த பழந்துணிகளைக்



கொடுக்கிறார்கள். கொடிய சாபங்களைச் சொல்லிக் கொண்டே கள்வர்கள் அவைகளை எடுத்துக் கொள்கிறார்கள். தன் காயங்களால் ஏற்படும் கொடூரமான வேதனைகளின் காரணமாக சேசு மெதுவாகவே உடைகளைக் கழற்றுகிறார். கந்தல் பழந்துணியை மறுத்துவிடுகிறார். அவர் தாம் கசையடி பட்டபோது அணிந்திருந்த குறுகிய உட்காற் சட்டையை அப்படியே வைத்துக் கொள்ளலாம் என எண்ணியிருப்பார். ஆனால் அதையும் கழற்றி விடும்படி கூறப்பட்டபோது, அவர் கொலைஞர்கள் கொடுத்த அந்த கந்தைத் துணிக்குக் கை நீட்டிக் கேட்கிறார். உண்மையாகவே அவர் நிர்மூலமாக்கப்பட்டு விட்டார். குற்றவாளிகளின் கந்தைக்கு கைநீட்ட வேண்டிய அளவிற்கு வந்து விட்டார்.

ஆனால் எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருந்த மாதா தன் இருண்ட முக்காட்டிற்கடியில் தலையை மூடியிருந்ததும் தன் கண்ணீரால் நனைத்திருந்ததுமாகிய வெள்ளைத் துகிலை தன் முக்காடு கீழே விழாமலே எடுத்து அருளப்பரிடம் கொடுத்து தன் மகனிடம் சேர்க்கும்படியாக லோஞ்ஜினுஸிடம் கொடுக்கச் செய்கிறார்கள். செந்தூரியன் எந்த மறுப்பும் சொல்லாமல் அதை வாங்குகிறான். சேசு ஆளில்லாத பக்கமாகத் திரும்பி நின்று தம் உட்காற் சட்டையையும் கழற்றப் போகையில் லோஞ்ஜினுஸ் அதை அவரிடம் கொடுக்கிறான். சேசு அது தம் தாயுடையது என அடையாளம் கண்டுகொண்டு, அதைத் தம் இடையைச் சுற்றி அவிழ்ந்து விடாதபடி கவனமாக இறுக்கிக் கொள்கிறார்... இதுவரையிலும் மாதாவின் கண்ணீரால் மட்டும் நனைந்த அந்தத் துகிலின் மேல் அவருடைய இரத்தம் படத் துவங்குகிறது. ஏனென்றால் காய்ந்த இரத்தத்தினால் மூடப்பட்டிருந்த அநேக காயங்கள் அவர் தம் காலணிகளைக் கழற்றவும் ஆடைகளை அகற்றிக் கீழே வைக்கவும் குனிந்த போது திறக்கப்பட்டு, இரத்தம் பாயத் தொடங்குகிறது. சேசுவின் முதுகுப்புறம் இப்படி ஜனங்கள் பக்கமாய்த் திரும்பியிருந்த போது அவர் முதுகில் சால் போல் நெடும் பள்ளங்களால் ஏற்பட்டிருந்த காயங்களும், கிழிவுகளும் வெடித்த கொப்பளங்களும், புண்களும் காய்ந்த பொருக்குகளும் மீண்டும் இரத்தம் சொரியத் தொடங்குகின்றன.

இப்போது சேசு ஜனங்கள் பக்கமாகத் திரும்புகிறார். ஆதலால் அவருடைய மார்பிலும் கால்களிலும் கைகளிலும் எல்லா இடத்திலும் சாட்டையடிகளின் தாக்குதல்களைக் காண முடிகிறது. ஈரலுக்கு நேராக உள்ள இடத்திலே அவருடைய மார்பில் ஒரு

பெரிய கிழிசல் காயம் ஏற்பட்டிருக்கிறது. மேலும் அவருடைய இடது விலா எலும்புக் கூட்டிற்கு சற்று கீழாக ஏழு சாட்டையடி காயங்கள் ஏழு சிறு வெட்டுகளுடன் செந்நீல வட்டத்தில் இரத்தம் வடிந்து கொண்டிருக்கின்றன... உந்துசவ்வுப் பகுதியில், அதிகமான உணர்வுள்ள அந்த இடத்தில் சாட்டைகளால் அடிபடுவது எவ்வளவு குரூரமானது! அவர் கைது செய்யப்பட்டதிலிருந்தே கல்வாரியில் சேருமட்டும் மறுபடியும் மறுபடியும் கீழே விழுந்ததால் காயப்பட்டுக் கிழிந்த அவருடைய முழங்கால்கள் இரத்த உறைவால் கறுத்துக் காணப்படுகின்றன. முட்டுச் சில்லுகள் கிழியப்பட்டுள்ளன. விசே஁மாக வலது முட்டுச் சில்லுவில் இரத்தம் வடிகிற ஒரு பெரிய காயம் ஏற்பட்டுள்ளது.

ஜனக் கும்பல் சேர்ந்து கொண்டு: ''ஆ மனித புத்திரர்களுக்குள்ளே அதிக சௌந்தரியமானவனே! ஜெருசலேம் குமாரத்திகள் உன்னை வணங்குகிறார்கள்'' என்று பரிகாசமாய்ப் பாடுகிறார்கள். பின்னும் ஒரு சங்கீத இராகத்தில் இப்படிப் பாடிப் பரிகசிக்கிறார்கள்: ''என் நேசர் வெண்மையும் சிவப்புமாயிருந்து – ஆயிரம் பேர்களில் சிறந்தவர் – அவர் சென்னி பத்தரைமாற்றுத் தங்கம் போல் விளங்கும் – அவர் தலைமுடியோ – பனங்குருத்துப் போல் அழகும், காகம் போல் கருமையுமாயிருக்கிறது. அவர் கண்களோ – பாலில் கழுவப்பட்டு – மகா நதிகளின் ஓரமாய் வாசம் பண்ணி – மலையருவி அருகே தங்கும் – வெண்புறுவை நிகரும் – அவர் கன்னங்களோ – பரிமள வர்க்க பாத்திகள் போன்றவை – அவர் உதடுகளோ – தெளிந்த வெள்ளைப் போளத்தின் சாரத்தை வடிய விடும் லீலிமலர்கள் – அவர் கரங்களோ – சீராய்க் கடையப்பட்ட – சொக்கப் பச்சை பதித்த பொற்கரங்களேயாம் – அவர் மார்போ இந்திர நீல இரத்தினங்கள் பதித்த – யானைத் தந்தமேயாம் – அவர் கால்களோ – பசும்பொன் பாதங்களின மேல் நிறுத்தப்பட்ட – பளிங்குத் தூணுக்கொப்பானவை – அவர் முகத்தைக் கண்டால் – லீபான் மலையைக் காண்பது போலும் – அவரை நிற்கக் கண்டால் – சிறந்த கேதுரு மரத்தைக் காண்பது போலுமே – அவர் குரலோசை இனிமையானது – என் நேசர் முற்றிலும் விரும்பத் தக்கவரே'' (உந். சங். அத். 5). இப்படிப் பாடி சிரிக்கிறார்கள். மேலும் கூச்சலிட்டுக் கொண்டு: ''குஷ்டரோகி! குஷ்டரோகி! கடவுள் இப்படி உன்னை அடித்ததால் நீ ஒரு விக்கிரகத்தோடு சோரம் போனாயோ? இஸ்ராயேலின் புனிதர்களுக்கெதிராய் மோயீசனின் மரியாள் செய்தது போல் நீ



முறுமுறுத்தாயா? ஆ! ஆ! உத்தமமானவனே! நீயா கடவுளின் குமாரன்? நிச்சயமாக இல்லை! நீ சாத்தானின் கருவின் சிதைவு. மாம்மோனாவது வல்லமையும் வலிமையும் உடையவனாயிருக்கிறான். நீ? ... நீ கந்தைகளில் இருக்கிறாய். நீ வலிமையற்றவன். அருவருப்பானவன்'' என்கின்றனர்.

கள்வர்கள் இருவரும் தங்கள் சிலுவையில் கட்டப்பட்டு அவர்களின் இடங்களுக்கு, ஒருவன் சேசுவுக்கு வலது பக்கத்திலும், ஒருவன் இடது பக்கத்திற்கும் தூக்கிச் செல்லப்படுகிறார்கள். அவர்கள் ஓலமிட்டு ஆணையிட்டு சபிக்கிறார்கள். விசே஁மாக சிலுவையின் குழிகளில் அவை நாட்டப்படும்போது கயிறுகள் அவர்களுடைய மணிக்கட்டுகளை இறுக்கி உள்ளே அறுத்துக் கொண்டு போகும்போது ஏற்பட்ட வேதனையால் அவர்கள் கடவுளைப் பழித்தும் சட்டத்தையும் உரோமையரையும் யூதேயரையும் பழித்தும் நரகக் கூச்சலிடுகிறார்கள்.

இனி சேசு சிலுவையில் அறையப்பட வேண்டும். அவர் சாந்தமாக சிலுவையில் படுக்கிறார். இரு கள்வர்களும் சிலுவைகளில் கட்டப்பட்ட போது கொலைஞர்களை அவர்கள் உதைத்துத் தள்ளிவிடாமல் இருப்பதற்காக நான்கு பேர் போதாமல் சில போர்ச் சேவகரும் தலையிட வேண்டியிருந்தது. சேசு வி஁யத்தில் யாருமே தேவைப்படவில்லை. அவரே படுத்துக் கொள்கிறார். தலையை வைக்கச் சொன்ன இடத்தில் வைக்கிறார். சொன்னபடியே தம் கரங்களையும் கால்களையும் நீட்டுகிறார். தம் இடையில் துகில் சரியாயிருக்கும்படி மட்டும் பார்த்துக் கொள்கிறார். செம்மண் நிலத்திலிருந்தும் இருண்ட சிலுவை மரத்திலிருந்தும் அவருடைய வளர்ந்த ஒல்லியான வெண்மையான திரு உடல் எடுப்பாகத் தெரிகிறது.

அவரை அமுக்கிக் கொள்ளும்படி இரு கொலைஞர்கள் அவருடைய நெஞ்சில் உட்கார்ந்து கொள்கின்றனர். அப்போது அந்தப் பாரத்தால் அவர் அனுபவிக்கிற இறுக்கத்தையும் வேதனையையும் நான் நினைக்கிறேன். மூன்றாம் கொலைஞன் அவருடைய வலது கரத்தை எடுக்கிறான். ஒரு கையால் சேசுவின் முழங்கைக்குக் கீழாகவும் மற்றொரு கையால் அவருடைய விரல் நுனிகளையும் பிடித்திருக்கிறான். நான்காம் கொலைஞனின் கையில் நீண்ட, கூர்மையான, நான்கு பட்டமும் உருட்டைத் தலையுமுள்ள ஆணியை வைத்திருக்கிறான். அந்த உருண்டை பழங்கால நாணயத்தளவாக இருக்கிறது. அவர் சிலுவை மரத்தில்

ஏற்கெனவே இடப்பட்டிருக்கிற துளை சேசுவின் முன் கை எலும்புகளின் மணிக்கட்டுப் பொருத்தில் சேர்கிறதா என்று பார்க்கிறான். அது சேருகிறது. அவன் ஆணியில் நுனியை சேசுவின் மணிக்கட்டுப் பொருத்தில் ஊன்றுகிறான். சுத்தியலை உயர்த்தி முதல் அடியை அடிக்கிறான்.

தம் கண்களை மூடியிருந்த சேசு ஒரு சத்தம் கொடுக்கிறார். அவர் உடல் நடுங்கி சுருங்குகிறது கூரிய வேதனையால். கண்களைத் திறக்கிறார். கண்ணீர் நிறைந்து வழிகிறது. அவர் படும் வேதனை மிகப் பயங்கரமாயிருக்க வேண்டும்... ஆணி இறங்குகிறது. தசை நார்களையும், இரத்தத் தாரைகளையும், நரம்புகளையும் கிழித்துக் கொண்டு எலும்புகளைச் சிதைத்துக் கொண்டு இறங்குகிறது.

வாதைப்படும் தன் குமாரனின் குரலுக்கு மாதா தேம்பும் முனகல் ஒலியால் பதிலளிக்கிறார்கள். அது வெட்டப்படும் ஆட்டுக் குட்டியின் குரல் போலிருக்கிறது. தன் தலையைத் தன் கைகளால் பிடித்துக் கொண்டு, மிதிக்கப்படுவது போல் கவிழ்கிறார்கள். சேசு தம் தாய்க்கு வேதனை கொடுக்கக் கூடாதென்று, அதற்குப் பின், எந்தக் குரல் ஒலியும் எழுப்பவில்லை. ஆனால் சுத்தியல் அடிகள் தொடருகின்றன – முறையாக, கடினமாக இரும்பால் இரும்பை அடிக்கிறார்கள்... ஒரு உயிருள்ள உடலின் அங்கம் அதைப் பெறுகிறதென்பதை நாம் நினைக்க வேண்டும்.

வலது கையை அறைந்தாயிற்று. இடது கைக்கு வருகிறார்கள். மரத்தில் இடப்பட்ட துளைக்கு மணிக்கட்டு எட்டவில்லை. அதனால் அவர்கள் ஒரு கயிற்றை எடுத்து அவருடைய இடது மணிக்கட்டில் கட்டி தோளின் மூட்டு விடுகிற வரையிலும் இழுக்கிறார்கள். தசை நாண்கள் அறுகின்றன. தசை நார்கள் கிழிகின்றன. அவரைக் கைது செய்யும்போது கட்டிய கயிறுகள் முன்பே அறுத்திருந்த தோல், மேலும் அறுபட்டுக் கிழிகிறது. இதனால் வலது கையிலும் வேதனை. அதுவும் இழுக்கப்படுகிறது. அதன் காரணமாக மணிக்கட்டின் காயம் ஆணியைச் சுற்றி விரிகிறது. இவ்வாறாக இடது கையின் பெருவிரல் பக்கமான உள்ளங்கை கஷ்டத்துடன் துளையை எட்டுகிறது. அவ்வளவு போதும் என்று எண்ணிய அவர்கள், எங்கே முடிகிறதோ அங்கே ஆணியைச் செலுத்துகிறார்கள். அதாவது பெருவிரலுக்கும், மற்ற விரல்களுக்கும் மத்தியில் – பெருவிரலுக்குச் சமீபமாக உள்ளங்கையில். அங்கே ஆணி எளிதாக இறங்கி விட்டது. ஆனால் கூடுதலான வேதனையுடன். ஏனென்றால்



முக்கியமான நரம்புகள் வெட்டப்படுகின்றன. இதனால் விரல்கள் அசைவிழந்து விட்டன. வலது கரத்தின் விரல்கள் சுருங்கி நடுங்குகின்றன. காரணம் அவற்றின் உயிர் மூலம் மடியவில்லை. சேசுவோ எந்த வேதனைக் குரலும் எழுப்பவில்லை. ஆழ்ந்த கரகரத்த குரலில் முனகமட்டும் செய்கிறார். உதடுகள் இறுக மூடியிருக்கின்றன. அவருடைய வேதனையால் கண்ணீர் பெருகி சிலுவை மரத்தில் விழுந்து தரையில் வடிகின்றது.

இனி கால்கள். சிலுவையின் அடி முனையிலிருந்து இரண்டு மீட்டர் சற்றுக் கூடுதலான இடத்தில் ஒரு சிறிய ஆப்பு உள்ளது. ஒரு பாதத்திற்குக் கூட அது பற்றாது. இரண்டு பாதங்களையும் அதில் வைத்து அது சரியான இடத்தில் வைக்கப்பட்டுள்ளதா என்று பார்க்கிறார்கள். அது சற்றுக் கீழே இறங்கியிருப்பதால் பாதங்கள் அதற்கு எட்டவில்லை. அதனால் அவர்கள் அவருடைய குதிங்கால்களைப் பிடித்து அவரைக் கீழே இழுக்கின்றனர். அப்போது சிலுவையின் கரடுமுரடாயிருக்கிற மரத்தில் அவருடைய காயங்கள் உராய்கின்றன. அப்படி இழுத்தது அவருடைய சிரசில் இருந்த முள்முடியைப் பெயர்த்து விட்டது. முள்முடி கழன்று விழப் போகின்றது. அப்போது ஒரு கொலைஞன் அவர் முகத்தில் அடித்து மறுபடியும் அதை அவர் தலையில் அமுக்கி வைக்கிறான்...

சேசுவின் நெஞ்சில் உட்கார்ந்திருந்தவர்கள் எழுந்து அவருடைய முழங்கால்களை நீட்ட வருகிறார்கள். ஏனென்றால் கால்களில் அறையப்போகிற பெரிய ஆணியைக் கண்டு விட்ட சேசு தம்மையறியாமலே கால்களை மேலே இழுத்துக் கொள்கிறார். அந்த ஆணி, கரங்களை அறைந்த ஆணிகளை விட இரட்டை நீளமும், தடிப்பும் உள்ளது. சூரிய ஒளியில் அது மின்னுகிறது. அவர்கள் தோலுரித்த அவருடைய முட்டுக்களை அமுக்கி காயப்பட்டிருக்கிற முழங்கால் தண்டுகளை அழுத்துகிறார்கள். அவர்கள் அவ்வாறு பிடித்திருக்க, மற்ற இரு கொலைஞரும் இரண்டு பாதங்களையும் ஒன்றாக அறையும் அதிக கடினமான வேலையைச் செய்கிறார்கள். அவர்கள் ஒரு பாதத்தை மற்றப் பாதத்தின் மேலே வைத்து கணைக்கால் மூட்டுகள் இரண்டையும் ஒன்றாய்ச் சேர்க்க முயல்கிறார்கள்.

சேசுவின் இரு பாதங்களையும், அவற்றின் குதிங்கால்களையும் விரல்களையும் அமுக்கிப் பிடித்து அசையாமல் இருக்கும்படி செய்ய அவர்கள் முயலுகிறார்கள். ஆனால் அடியில் வைக்கப்பட்டிருக்கிற

இடது பாதம் அதற்கு மேலே வைக்கப்பட்ட வலது பாதத்தில் ஆணி அடிக்கப்படுவதால் அதிர்ந்து இடம் பெயருகிறது. வலது பாதத்தைத் துளைத்து மழுங்கியுள்ள ஆணியை, இடது பாதத்தில் அது இறங்கியுள்ளதிலிருந்து பிடுங்கி, சற்றுத் தள்ளியிருக்கிற நடு இடத்திற்குக் கொண்டு வர வேண்டியிருக்கிறது. அப்படிக் கொண்டு வந்து அவர்கள் அதில் அடிக்கிறார்கள் – அடிக்கிறார்கள் – மேலும் மேலும் அடிக்கிறார்கள்... அந்த ஆணி அறையும் சத்தம் மட்டுமே கல்வாரியெங்கும் ஒலிக்கிறது. காரணம், எல்லாருடைய கண்களும், காதுகளும், அங்கே நடைபெறும் அசைவுகளைப் பார்த்தும் ஓசைகளைக் கேட்டும் களிப்படைவதிலேயே கவனமாயிருக்கின்றன.

சுத்தியலின் கடினமான ஓசையோடு தொடர்ந்து கேட்கிறது ஒரு புறாவின் மெல்லிய இரக்க அழுகுரல் – அது மாதாவின் சிதைந்து குரலின் முனகல். ஒவ்வொரு அடிச் சத்தத்திலும் அவர்கள மேலும் மேலும் கூனிப் போகிறார்கள். ஒவ்வொரு அடியும் அவர்களையே தாக்குவது போல் அவதிப்படுகிறார்கள். வேதசாட்சியான தாய்! அந்தக் கொடிய வாதையில் அவர்கள் நசுங்குண்டு போகிறார்கள் என்பதை யாரும் கண்டுகொள்ள முடிகிறது. சிலுவையில் அறையப்படுவது மகா பயங்கரமானது. அதன் வேதனையில் அது கசையடிக்கு ஒப்பாகும். ஆனால் கசையடியையும் விட காண அதிக குரூரமானது. சதைக்குள் ஆணி மறைவதைக் காணக் கூடியதாயிருக்கிறது. அறையப்படுவது கசையடியை விட குறுகிய காலத்தில் முடிகிறது. கசையடி அதன் நீளுதலினால் நரம்பையெல்லாம் தளர்த்தி விடுகிறது.

ஜெத்சமெனியின் இரத்த வியர்வையும் கசைகளால் அடிபட்டதும் சிலுவையில் அறைபட்டதும் மூன்று மிகக் கொடூரமானவை என்று எண்ணுகிறேன். கிறீஸ்துவின் அனைத்து வாதனைகளையும் அவை எனக்குக் காட்டுவதாகத் தெரிகிறது. அவருடைய மரணம் எனக்கு ஒரு விடுதலை போலிருக்கிறது. ஏனென்றால் "ஆ, முடிந்தது" என்று என்னால் சொல்ல முடிகிறது. ஆனால் வேதனைகளின் முடிவு அது அல்ல. வேறு வேதனைகளின் தொடக்கம்.

சேசு அறையப்பட்டிருக்கிற சிலுவையை இப்பொழுது அதன் குழிக்கு இழுத்துச் செல்கிறார்கள். நிரப்பில்லாத தரையில் சிலுவை மோதி அதிர்வதால் சேசுவும் குலுக்கப்படுகிறார். அவர்கள் சிலுவையைத் தூக்கி உயர்த்தும்போது இரண்டு தடவை அது தவறி



விழுகிறது. முதல் தடவை தடாரென்று அப்படியே விழுகிறது. இரண்டாம் தடவை சிலுவையின் வலது கரத்தில் குத்தி விழுகிறது. சேசுவின் புண்பட்ட கை, கால், தலை அனைத்தும் வெகுவாய்க் குலுங்கி தாக்கப்பட்டு அவர் அகோர கொடிய வேதனைப்படுகிறார்.

சிலுவையை அவர்கள் குழிக்குள் விழ விடும்போதும், அது கற்களாலும் மண்ணாலும் இறுக்கப்படுமுன்னும், அது எல்லாப் பக்கமும் ஆடி அசைகிறது. மூன்று ஆணிகளில் தொங்கிக் கொண்டிருக்கிற அந்தப் பரிதாபமான சேசுவின் சரீரம் எப்படி அசைக்கப்பட்டு எத்தகைய நிஷ்டூரமான கொடிய ஆக்கினையை அவர் அனுபவிக்கிறார்! அவருடைய சரீரத்தின் முழுப் பாரமும் முன பக்கமாகவும் கீழ்நோக்கியும் இழுக்கப்பட்டு காயங்களின் துவாரங்கள் பெரிதாகின்றன. குறிப்பாக இடது கரத்தின் காயமும் கால்களின் காயங்களும் விரிகின்றன. இரத்தம் அதிகமாய்க் கொட்டுகிறது. திருப்பாதங்களின் காயங்களிலிருந்து இரத்தம் சொரிந்து விரல்களின் மேல் பாய்ந்து சிலுவையின் மரத்தில் வடிந்து தரையை நனைக்கிறது. திருக்கரங்களின் காயங்களிலிருந்து வடியும் இரத்தம் முன்னங்கை வழியாகப் பாய்கிறது. தோளைவிட கரங்கள் உயரமாக அறையப்பட்டிருப்பதால் இரத்தம் தோளின் அடிக்கு வந்து அதிலிருந்து இடுப்பை நோக்கிப் பாய்கின்றது. சிலுவை இறுக்கப்படுமுன் அது சாய்ந்து ஆடுகிற போது சேசுவின் சிரசு பின்புறமாய் சிலுவையுடன் மோதுகிறது. முள்முடியின் பின்புறத்தில் கொத்தாக இருக்கிற முட்களை பிடரியுடன் சேர்த்து நெருக்குகிறது. முன் நெற்றியில் இருக்கிற முட்கள் இரக்கமில்லாமல் அதைக் கீறிக் காயப்படுத்துகின்றன. கடைசியாக சிலுவை மரம் நடப்பட்டு இறுக்கப்பட்டு விட்டது. சேசு அதிலே தொங்கும் கொடூரத்தை அனுபவிக்கிறார்.

கள்வர்களின் சிலுவைகள் குழிகளுக்குள் நிறுத்தப்படுகின்றன. நேர் நிலைக்கு வந்ததும் அவர்கள் உயிருடன் தோலுரிக்கப்படுவது போல் கத்துகின்றனர். கயிறுகள் மணிக்கட்டின் சதைக்குள் அறுத்துக் கொண்டு போவதால் அந்த வேதனை. மேலும் அவர்களின் கைகள் நீலமாகி இரத்த நரம்புகள் கயிறு போல் புடைக்கின்றன.

சேசு மவுனமாயிருக்கிறார். ஆனால் ஜனக் கூட்டமோ ஆரவாரம் செய்த நரக நாராசம் போல் கூச்சலிடுகிறது.

இப்பொழுது கல்வாரியின் உச்சி தன் வெற்றிப் பொருளையும்

அதன் அணிவகுப்பு மரியாதையையும் பெற்றுக் கொண்டது. உச்சியில் சேசுவின் சிலுவை நிற்கிறது. பக்கங்களில் மற்ற இரண்டு சிலுவைகளும், அரை நூற்றுச் சேவகர்கள் போர்ச் சீருடையில் உச்சியைச் சுற்றிலும் அணிவகுக்கின்றனர். அந்த வட்டத்திற்குள்ளே வாகனம் விட்டிறங்கிய பத்து குதிரை வீரர்கள் உள்ளனர். தீர்ப்பிடப்பட்டவர்களின் ஆடைகளின் மேல் அவர்கள் பகடைக்காய் போடுகின்றனர். சேசுவின் சிலுவைக்கும் வலது பக்கச் சிலுவைக்கும் நடுவே லோஞ்ஜினுஸ் நேராக நின்று கொண்டிருக்கிறான். அது வேதசாட்சியான அரசருக்கு உபசார மெயக்காவல் காப்பது போலிருக்கிறது. லோஞ்ஜினுஸின் துணை – ஆணையனுடைய பொறுப்பில் மற்ற அரை நூற்றுச் சேவகர்கள் கல்வாரியின் உச்சிக்குக் கீழேயுள்ள இடது பக்க மேட்டிலும் பாதையிலும் ஓய்வில் இருக்கிறார்கள். அவசியம் ஏற்பட்டால் உதவ இருக்கிறார்கள். போர்ச் சேவகர் முழு நிர்க்கவலையாக காணப்படுகிறார்கள். யாராவது ஒரு சேவகன் எப்பொழுதாவது சிலுவையிடப்பட்டவர்களை எட்டிப் பார்க்கிறான்.

ஆனால் லோஞ்ஜினுஸ் அறிய வேண்டுமென்ற ஆவலுடன் எல்லாவற்றையும் கவனத்துடன் பார்க்கிறான். ஒப்பிட்டுப் பார்த்து மனதில் கணித்துக் கொள்கிறான். சிலுவையேற்றப்பட்டவர்களை, விசேஷமாய் கிறீஸ்துவை ஒத்துப் பார்க்கிறான். வேடிக்கை பார்க்கிறவர்களையும் ஒப்பிடுகிறான். எந்த ஒரு நுட்ப விவரமும் அவன் கண்ணுக்குத் தப்பவில்லை. வெயில் உபத்திரவமாயிருப்பதால் நன்றாகக் காணும் பொருட்டு கையால் கண்களுக்கு நிழல் செய்து கொள்கிறான்.

சூரியனும் வினோதமாகவே உள்ளது. அது நெருப்புப் போல் மஞ்சட்சிவப்பாயிருக்கிறது. பின் திடீரென அது அணைந்து விடுவது போலிருக்கிறது. காரணம் யூதேய மலைத் தொடர்களுக்குப் பின்னாலிருந்து கருமேகப் படலம் கிளம்பி வந்து ஆகாயத்தின் குறுக்காகக் கடந்து சென்று மற்ற மலைகளுக்குப் பின்னால் மறைந்து விடுகிறது. மேகமூட்டம் கடந்த பின் சூரியன் தோன்றும்போது அது எவ்வளவு காட்டமாயிருக்கிறதென்றால் கண்களுக்கு அதைத் தாங்குவது கடினமாயிருக்கிறது.

இப்படிப் பார்க்கிற லோஞ்ஜினுஸ், குன்று சரிந்து இறங்கும் பக்கத்தின் கீழ் உள்ள சமதளத்தில் மாதாவைக் காண்கிறான். மாதாவின் சித்திர வேதனைப்படுகிற முகம் தன் குமாரனை நோக்கி



உயர்த்தப்பட்டிருக்கிறது. அவன் பகடை ஆடிக் கொண்டிருக்கிற ஒரு போர்ச் சேவகனைக் கூப்பிட்டு: “இவருடைய தாய், தன்னோடிருக்கிற மகனுடன் இங்கே வர விரும்பினால் வரட்டும். அவர்களுக்கு உதவி செய்து இங்கு கொண்டு வா” என்கிறான்.

மாதாவும் அவர்களுடைய “மகன்” எனக் கருதப்பட்ட அருளப்பரும் இறுகிய சரல் மண்ணில் வெட்டப்பட்டதாக எனக்குத் தெரிகிற படிகளில் ஏறி, போர்ச் சேவகரின் அணி வரிசையைக் கடந்து சிலுவையின் அடிக்குப் போகிறார்கள். சேசுவைப் பார்க்கவும், அவர் அவர்களைப் பார்க்கவும் ஏதுவாக சற்று எட்ட நிற்கிறார்கள்.

உடனேயே ஜனக் கும்பல் மாதாவை சேசுவுடன் சம்பந்தப் படுத்தி மிக அவமானமான வசைகளை சபித்துப் பேசுகிறார்கள். ஆனால் அந்தத் தாய் வெளிறிப் போய், நடுங்குகிற உதடுகளால் தன் மகனை ஆறுதல்படுத்த மட்டுமே முயல்கிறார்கள். எந்தத் திட மனதாலும் தடுக்க முடியாத கண்ணீரைத் துடைக்கிற தன் வேதனையான முறுவலால் அதைச் செய்யப் பார்க்கிறார்கள்.

ஜனங்கள், குருக்களும் வேதபாரகரும் சதுசேயர்களும் ஏரோதியர்களும் அப்படிப்பட்ட மற்றவர்களும் அங்கும் இங்குமாக சுற்றி நடந்து தங்களையே களிப்புறச் செய்து கொண்டிருக்கிறார்கள். செங்குத்தான ரோட்டின் வழியே ஏறியும் அதன் மேல் தளத்தில் நடந்தும் அடுத்த ரோட்டில் இறங்கியும் இப்படி மாற்றி மாற்றிச் செய்கின்றனர். கல்வாரி உச்சிக்குக் கீழுள்ள மேட்டைக் கடந்து செல்லும்போது, மரிக்கிற பலிப் பொருளுக்குத் தங்கள் தேவ நிந்தையான பரிசு மொழிகளைக் கூற அவர்கள் தவறவில்லை. மனிதர்கள் தங்கள் நாவால் வெளிப்படுத்த முடிந்த அத்தனை கீழ்த்தரமும் குரூரமும், பகையும் பைத்தியமும், சில நரக வாய்களால் சொல்லப்படுகின்றன. இதிலே மகா மூர்க்கமாயிருப்பது தேவாலயத்தைச் சேர்ந்தவர்களே. பரிசேயர்கள் அவர்களுக்குப் பக்க பலமாயிருக்கிறார்கள்.

“நல்லது! நீ மனுக்குலத்தின் இரட்சகன், உன்னையே ஏன் இரட்சிக்கக் கூடாது? உன் அரசனாகிய பெயயேல்செபூப் உன்னைக் கைவிட்டுவிட்டானா? அவன் உன்னை அங்கீகரிக்க மறுத்து விட்டானா?” என்று கத்துகிறார்கள் யூத குருக்கள்.

ஒரு கும்பலாக நிற்கிற யூதேயர்கள் சத்தமிட்டு: “நீ, ஐந்து நாளைக்கு முன்புதானே சாத்தானுடைய உதவியைக் கொண்டு, பிதா

உன்னை மகிமைப்படுத்துவார் என்று சொல்ல வைத்தாய்! ஹஹ் ஹா!! அவர் தம் வாக்கைக் காப்பாற்றும்படி நீ அவருக்கு ஞாபகமூட்டாததேன்?" என்கிறார்கள்.

மூன்று பரிசேயர்கள் சொல்கிறார்கள்: "தேவதூ ணி! இவன் கடவுளின் உதவியைக் கொண்டு மற்றவர்களைக் காப்பாற்றியதாகச் சொன்னான். தன்னையே காப்பாற்றக் கூடாமலிருக்கிறான். உன்னை நாங்கள் விசுவசிக்க வேண்டுமா? அந்தப் புதுமையைச் செய். ஓ! இப்பொழுது உன்னால் கூடவில்லையோ? இதோ உன் கரங்கள் அறையப் பட்டிருக்கின்றன! நீ வஸ்திரமில்லாமல் இருக்கிறாய்!" என்கிறார்கள்.

சில சதுசேயர்களும், ஏரோதியர்களும் போர்ச் சேவகரிடம்: "இவனுடைய ஆடைகளை எடுத்துள்ள நீங்கள் இவனுடைய மந்திர மாயத்தைக் கவனித்துக் கொள்ளுங்கள். பாதாளத்தின் அடையாளம் இவனுக்குள்ளே இருக்கிறது" என்கிறார்கள்.

ஒரு ஜனக்கும்பல் ஊளையிட்டு: "சிலுவையை விட்டு இறங்கி வா. அப்போது நாங்கள் உன்னை விசுவசிப்போம். தேவாலயத்தை அழித்து விட விரும்புகிறவனே... மூடா... அதோ அங்கே பார் அதை! இஸ்ராயேலின் மகிமை பொருந்திய புனித தேவாலயத்தை அவசங்கை செய்கிறவனே, அது தொடப்பட முடியாதது! நீதான் செத்துக் கொண்டிருக்கிறாயே!" என்கின்றனர்.

வேறு சில குருக்கள்: "தேவதூ ணம்! நீயா தேவ குமாரன்? அப்படியானால் அங்கிருந்து கீழே இறங்கி வா. நீ கடவுளாயிருந்தால் எங்களை இடி மின்னலால் தாக்கு. உன்னைக் கண்டு நாங்கள் பயப்படவில்லை. உன்னைக் காறித் துப்புகிறோம்."

அவ்வழியாய்ப் போகும் மற்றும் சிலர் தங்கள் தலைகளை அசைத்து: "இவனால் அழத்தான் முடியும். தெரிந்து கொள்ளப்பட்டவன் நீ என்பது உண்மையானால் உன்னையே இரட்சித்துக் கொள்" என்கிறார்கள்.

போர்ச் சேவகர் இப்படிச் சொல்கிறார்கள்: "ஆமாம். உம்மையே நீர் காப்பாற்றிக் கொள்ளும். சண்டை சச்சரவான இடங்களில் எல்லாம் பெரிய சண்டை சச்சரவின் இடமாகிய இப்பகுதியை எரித்து சாம்பலாக்கி விடும். ஓ யூதேய சச்சரவுக் கும்பலே, இந்த சாம்ராஜ்ஜியத்தின் சச்சரவு நிலப் பகுதி நீங்களே. நீர் அதைச் செய்யும். உரோமை உம்மைத் தலைநகரில் வைத்து ஒரு கடவுளாக வழிபடும்."



ஆலயக் குருக்களும், அவர்களின் கூட்டாளிகளும் "சிலுவையின் கரங்களை விட பெண்களின் கரங்கள் அதிக நன்றாயிருந்தன அல்லவா? ஆனால் பார்! உன்னுடைய... (இவ்விடத்தில் ஒரு அசிங்கமான வார்த்தையைச் சொல்லி) உன்னை ஏற்றுக் கொள்ள காத்திருக்கிறார்கள். ஜெருசலேம் முழுவதும் உனக்கு ஜோடி பார்த்துக் கொடுக்கும்" என்று சொல்லி பாம்புகளைப் போல் சீறுகிறார்கள்.

வேறு சிலர் கற்களை வீசி: "நீ அப்பங்களைப் பலுகச் செய்கிறாயே, இவற்றை அப்பமாக மாற்று" என்கிறார்கள்.

இன்னும் சிலர் குருத்து ஞாயிறின் ஓசான்னாக்களைப் பகடி செய்து, அவர் மேல் கிளைகளை எறிந்து, சத்தமாக: "பசாசின் பெயரால் வருகிறவன் மேல் சாபங்கள் வரட்டும். அவனுடைய இராச்சியம் சபிக்கப்படட்டும். அவனை வாழ்வோரிடையிலிருந்து வெட்டி விடுகிற சீயோனுக்கு மகிமையுண்டாகட்டும்" என்கின்றனர்.

ஒரு பரிசேயன் சிலுவையின் முன்னே வந்து நின்று கைகளை உயர்த்தி ஒரு அசுத்த அபிநயஞ் செய்து சொல்லுகிறான்: "சீனாயின் கடவுளிடம் உன்னை ஒப்படைக்கிறேன் என்று நீ சொன்னாயோ? ஆனால் இப்பொழுது சீனாயின் சர்வேசுரன் நித்திய நெருப்புக்கு உன்னைத் தயார் ஆக்குகிறார். நீ ஏன் யோனாவைக் கூப்பிடக் கூடாது? உன் கருணைக்கு அவன் பதில் ஈடு செய்யும்படி?" என்கிறான்.

மேலும் ஒருவன் பரிகசிக்கிறான் இப்படிக் கூறி: "உன் தலையால் சிலுவையில் மோதி அதைக் கெடுத்து விடாதே. உன்னைப் பின்பற்றுகிறவர்களுக்கு அது பயன்பட வேண்டும். ஜெஹோவாவில் நான் சத்தியம் பண்ணிச் சொல்கிறேன். ஒரு படை போல் அவர்கள் உன் சிலுவையில் சாவார்கள். முதலில் லாசரைத்தான் நான் அதில் ஏற்றுவேன். அவனை மரணத்திலிருந்து நீ மீட்பாயோ என்று பார்ப்போம்" என்கிறான்.

"அது சரி. நாம் லாசரிடம் போவோம். அவனை சிலுவையின் மறுபுறத்தில் அறைவோம்" என்று மற்றவர்கள் சொல்கிறார்கள். பின் கிளிப்பிள்ளைப் பாடம் போல் அவர்கள் சேசு சொன்ன வார்த்தைகளை நிறுத்திச் சொல்கிறார்கள்: "லாசரே என் நண்பா! வெளியே வா! அவனைக் கட்டவிழ்த்துப் போகவிடுங்கள்" என்று.

“அப்படியல்ல! அவன் தன்னுடைய ஸ்திரீகளான மார்த்தாளிடமும் மரியாளிடமும் நானே உத்தானமும் உயிரும் என்று சொல்லுவான். ஹாஹ்ஹா! ஹா! உத்தானம் மரணத்தை விரட்ட முடியவில்லை. உயிர் இறந்து கொண்டிருக்கிறது.”

“மரியாளும் மார்த்தாளும் அதோ நிற்கிறார்கள். அவர்களிடம் லாசர் எங்கே என்று கேட்போம். அவனைத் தேடுவோம்.” இப்படிக் கூறியவர்கள் ஸ்திரீகள் நிற்கிற இடத்திற்கு வந்து மிடுக்காக: “லாசர் எங்கேயிருக்கிறான்? அவன் அரண்மனையிலா?” என்று கேட்கிறார்கள்.

அதைக் கண்ட மற்றப் பெண்களெல்லாம் பயந்து இடையர்களுக்குப் பின்னால் ஓட, மரிய மதலேன் முன்னுக்கு வருகிறாள். அவளுடைய இத்துயர வேதனையில் அவளுடைய பாவ நாட்களின் தைரியம் அவளுக்கு ஏற்படுகிறது. அவள் பேசுகிறாள்: “அங்கே போங்கள். அந்த அரண்மனையில் உரோமைப் படைவீரர்கள். என்னுடைய நாட்டின் ஐந்நூறு ஆயுதபாணிகளுடன் இருப்பார்கள். அவர்கள் இயந்திரக் கல் வெட்டும் அடிமைகளுக்கு சமைத்துப் போட குறிக்கப்பட்ட கிழட்டு வெள்ளாட்டுக் கிடாய்களைப் போல உங்களை மலடாக்கிப் போடுவார்கள்” என்று.

“வெட்கங் கெட்டவள்! இப்படியா குருக்களிடம் நீ பேசுகிறாய்?”

அதற்கு மரியா: “தேவ துரோகிகளே! அசுத்தர்களே! சபிக்கப்பட்டவர்களே! திரும்புங்கள்! உங்கள் பின்னால் உங்கள் நாக்குகளை, நரக நெருப்பின் நாவுகளைக் காண்கிறேன்” என்கிறாள்.

மரிய மதலேனின் வார்த்தைகள் எவ்வளவு உறுதியுடன் ஒலிக்கின்றனவென்றால், பயத்தால் பீடிக்கப்பட்ட அக்கோழைகள் திரும்பி விடுகிறார்கள். அவர்கள் முதுகில் நெருப்புச் சுவாலைகள் இல்லையென்றாலும், உரோமையரின் கூரிய ஈட்டிகள் நீட்டியபடி நிற்கின்றன. லோஞ்ஜினுஸின் உத்தரவுப்படி ஓய்வில் இருந்த ஐம்பது போர்ச் சேவகரும் களத்தில் இறங்கி முதலில் ஏற்பட்ட யூதேயரைப் பிட்டத்தில் குத்துகிறார்கள். யூதேயர் கத்திக் கொண்டு ஓடுகிறார்கள். சேவகர் திறந்த வெளியைப் பாதுகாக்க இரண்டு பாதைகளிலும் நின்று மறித்துக் கொள்கிறார்கள். யூதர்கள் சபித்துத் திட்டினாலும் உரோமையரை ஒன்றும் செய்ய இயலவில்லை.

பகடி பேசியவர்களை எதிர்த்துப் பதில் கொடுக்க தன்



முக்காட்டை விலக்கியிருந்த மதலேன் இப்பொழுது மறுபடியும் முக்காடிட்டுக் கொண்டு தன் இடத்திற்குப் போகிறாள். மற்ற ஸ்திரீகளும் அவளுடன் சேர்ந்து கொள்கிறார்கள்.

இடது பக்கத்துக் கள்வன் சிலுவையிலிருந்தபடியே சேசுவை தொடர்ந்து நிந்திக்கிறான். மற்றவர்களின் வசைகளையெல்லாம் அவன் திருப்பிச் சொல்கிறான். அவற்றின் சுருக்கம் போல் அது இருக்கிறது. முடிவாக இப்படிச் சொல்கிறான்: “ஜனங்கள் உன்னை விசுவசிக்க வேண்டுமென்றால் நீ உன்னையே இரட்சித்துக் கொள். நீயா கிறீஸ்து? உனக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறது. தந்திரக்காரர்களுக்கே உலகம். கடவுள் இல்லை. ஆனால் நான் இருக்கிறேன். இதுவே உண்மை. எதையும் செய்ய எனக்கு உரிமையுண்டு. கடவுள்?... முட்டாள்தனம்! நம்மைக் கட்டுப்படுத்த கற்பிக்கப்பட்ட கதை. நான் என்னும் சுயம் நீடூழி வாழ்க! மனித சுயமே இராஜா. அவனே கடவுள்!” என்கிறான்.

வலது பக்கத்துக் கள்வன் தன் பக்கத்தில் நிற்கிற மாதாவைப் பார்க்கிறான். சேசுவைப் பார்ப்பதை விட கூடுதலாக மாதாவையே உற்றுப் பார்க்கிறான். சற்று நேரமாக அவன் அழுதபடி: “என் அம்மா!” என்று தனக்குள்ளே முனகுகிறான். பின் மற்றவனைப் பார்த்து: “நீ பேசாதே. இந்த வேதனை அனுபவிக்கிற இந்த நேரத்திலுமா நீ கடவுளுக்குப் பயப்படவில்லை? நல்லவரை நீ எதற்காக நிந்திக்கிறாய்? அவருடைய வேதனை நம் வேதனையை விட அதிகமானது. அவரோ எந்தக் குற்றமும் செய்யவில்லை” என்கிறான்.

ஆனால் மற்றவன் தொடர்ந்து சபித்துக் கொண்டிருக்கிறான்.

சேசு மவுனங் காக்கிறார். அந்த நிலையில் அவர் இருப்பதற்கு அவர் செய்ய வேண்டியிருக்கிற முயற்சியின் காரணமாக மூச்சுத் திணறுகிறார். அவ்வளவு கொடூரமான முறையில் அவர் அடிபட்டதாலும், அவரை இரத்தம் வியர்க்கச் செய்த ஆழமான மரண அவஸ்தையாலும் ஏற்பட்ட காய்ச்சல், இருதயத்தின் நிலை, அவரைப் பாதித்து விட்டது. அவருடைய பாதங்களில் சுமரும் பாரத்தைக் குறைப்பதால் சற்றேனும் விடுதலை தேட முயல்கிறார். அதற்காக தம்மையே மேலே இழுத்து கைகளிலிருந்தே தொங்கப் பார்க்கிறார். அவர் இப்படிச் செய்வது அவருடைய பாதங்களை வதைக்கிற தசை நார்களின் சுரிப்பை நீக்குவதற்காகவும் இருக்கக்கூடும். சுரிப்பு ஏற்பட்டிருப்பதை

அவருடைய தசை நார்களின் துடிப்பு காட்டுகிறது. அவருடைய கரங்களிலும் இதே துடிப்பு தெரிகிறது. கை விரல்கள் நெருக்கப்பட்டிருக்க அந்நிலையில் அவற்றின் நுனிகள் இரத்தம் இல்லாமையால் விறைத்துப் போயிருக்கின்றன. இருதயத்திலிருந்து உயரமாக அவை இருப்பதாலும், கஷ்டத்தோடு மணிக்கட்டு வரையிலும் வருகிற இரத்தம் ஆணியறைந்த துவாரத்தின் வழியாக வெளியேறி விடுவதாலும் விரல்களுக்கு இரத்த ஓட்டம் அற்றுப் போகிறது. குறிப்பாக இடது கரத்தின் விரல்கள் உள்ளங்கை நோக்கி வளைந்து அசைவிழந்து இறந்து விட்டன. காலின் விரல்களும் வேதனைப்படுகின்றன. கால் பெருவிரல்கள் மேலும் கீழும் அசைந்து விரிகின்றன. அதிலுள்ள நரம்பு அதிக சேதம் அடையாமலிருக்கலாம்.

சேசுவின் உடலின் பெரிய வேதனைகள் அதன் அசைவிலிருந்து புலப்படுகிறது. உடல் வேகமாய் அசைகிறது. அது ஆழ்ந்த அசைவாக இல்லை. அவருக்கு சோர்வளிக்கிறது. எந்த வேதனைத் தணிவும் அவருக்கில்லை. அவரின் உடல் அமைப்பு மிகச் சிறந்தது என்பதால் அவருடைய விலா எலும்புகள் உயர்ந்தும் அகன்றுமே இருக்கும். அவை இப்போது அவருடைய சரீரம் வைக்கப்பட்டுள்ள நிலையினாலும், உள்ளே நுரையீரலில் ஏற்பட்டிருக்கும் இழைம அழற்சியாலும் மிக அதிகமாக விரிவடைந்துள்ளன. ஆயினும் அதனால் அவருடைய சுவாசம் எளிதடையவில்லை. அவருடைய அடிவயிற்றின் அசைவு, செயலற்றுப் போன ஈரல் தாங்கிச் சவ்வை ஏந்தினாலும்கூட, மூச்சுவிட அவர் செய்யும் முயற்சிக்கு எந்த உதவியும் ஏற்படவில்லை.

நிமிடம் நிமிடமாக அவருடைய இறுக்கமும் மூச்சுத் திணறலும் கூடிக்கொண்டே வருகின்றன. கடுங் காய்ச்சலினால் சிவந்த அவருடைய உதடுகள் நீலம் பூத்துப் போவதிலிருந்து அது தெரிகிறது. கழுத்தின் வீங்கிய நரம்புகளின் வழியே ஊதாச் சிவப்புக் கோடுகள் விழுகின்றன. அவை கன்னம் வரைக்கும் விரிந்து பரவுகின்றன. காதுகளையும் சென்னியையும் எட்டுகின்றன. நாசி சுருங்கியும் இரத்தமற்றும் காணப்படுகிறது. கண்களோ வட்டங்களுக்குள் இறங்கிக் கிடக்கின்றன. முள்முடியிலிருந்து சொட்டும் இரத்தம் படாத இடங்களில் வெளிறித் தெரிகின்றன.

இடது விலாக் கூட்டின் கீழே இருதயத்தின் முனை வந்து மோதித் துடிப்பதைக் காண முடிகிறது. அது ஒரே



சீராயில்லாமலும் வேகமுள்ள துடிப்பாகவும் இருக்கிறது. உள்ளே இடைக்கிடையே ஏற்படும் ஒரு வலிப்பினால் ஈரல் தாங்கிச் சவ்வு ஆழ்ந்த துடிப்படைகிறது. அது தோளின் மிகக் கூடுதலான முழு விரிசலினால் காட்டப்படுகிறது. அந்தக் காயப்பட்ட, இறந்து கொண்டிருக்கிற சரீரத்தின் தோல் இதற்கு மேலும் எங்கே விரிக்கப்பட முடியும்?

சேசுவின் திருமுகம் புனித துகிலின் படத்தில் நாம் காண்கிற சாயலுக்கு வருகிறது. நாசி இரு பிரிவாகி ஒரு பக்கத்தில் வீங்கிக் காணப்படுகிறது. வலது கண் பக்கத்தில் ஏற்பட்ட வீக்கத்தினால் அது ஏறக்குறைய மூடிப் போய் விட்டது. அவருடைய வாய் திறந்து காணப்படுகிறது. மேலுதட்டின் காயம் இரத்தம் உறைந்து மூடியவாறிருக்கிறது.

இரத்த இழப்பினாலும், காய்ச்சலாலும், எரியும் வெயிலாலும் அவருக்கு ஏற்பட்ட தாகம் எவ்வளவென்றால் துளிர்த்து விழுகிற வியர்வையையும் வடிகிற இரத்தத்தையும் பாய்கிற கண்ணீரையும் தன்னாலே அசைகிற வாயால் பருகுகிறார். அவருடைய நெற்றியிலிருந்து ஒழுகும் இரத்தம் அவர் வாயில் வடிகிறதைக் கொண்டு தம் நாவை நனைக்கிறார்...

அவர் கரங்களால் தொங்கும் வேதனையையும் அவருடைய பாதங்களில் சுமரும் பாரத்தின் வலியையும் சிலுவை மரத்தில் சற்று தலையைச் சாய்த்து குறைக்கலாமென்றால் முள்முடி அப்படிச் செய்ய விடாமல் தடுக்கிறது. அவருடைய சிறுநீரகங்களும், முதுகெலும்பும் இடுப்பிலிருந்து சிலுவையை விட்டு வெளிப்புறமாக வளைந்திருக்கின்றன. சேசுவின் சரீரத்தைப் போல் தொங்கவிடப்பட்டுள்ள கனப்பொருள் எதுவும் சடத்துவ பலத்தால் இவ்வாறுதான் தொங்கும்.

திறந்த இடத்திற்கு அப்பால் விரட்டப்பட்ட யூதர்கள் சேசுவை வதை பேசுவதை நிறுத்தவில்லை. மனந்திரும்பாத கள்வனும் அந்த நிந்தைகளைத் திருப்பிச் சொல்கிறான்.

வலது புறக் கள்வன் இப்போது மேலும் மேலும் ஆழ்ந்த இரக்கத்தோடு மாதாவை நோக்கிப் பார்க்கிறான், அழுகிறான். மாதாவையும் மற்றவன் சேர்த்து நிந்திப்பதைக் கேட்டதும் அவனுக்கு சூடாகப் பதில் கொடுக்கிறான்: "உன் வாயை மூடு. நீயும் ஒரு ஸ்திரீயிடம் பிறந்தாயென்பதை மறக்காதே. நம் தாய்மார் தங்கள் மகன்களின் பொருட்டு அழுதார்கள் என்பதை நினை. அவை வெட்கத்தின் கண்ணீர்கள்... ஏனென்றால் நாம்

குற்றவாளிகள் நம் தாய்மார் இறந்து போனுர்கள்... என்னை மன்னிக்கும்படி என் தாயிடம் நான் கேட்க விரும்புகிறேன்... ஆனுல் அது முடியுமா? என் அம்மா ஒரு புனித ஸ்திரீயாயிருந்தார்கள். அவர்களுக்கு நான் வருவித்த துயரத்திஞல் அவர்களைக் கொன்று விட்டேன்... நான் ஒரு பாவி... என்னை யார் மன்னிப்பார்கள்?'' பின் மாதாவிடம்: ''அம்மா! மரிக்கிற உங்கள் குமாரனின் பெயரால் எனக்காக வேண்டிக் கொள்ளுங்கள் தாயே!'' என்று கேட்கிருன்.

மாதா வாதைப்படும் தன் முகத்தை உயர்த்தி அவனைப் பார்க்கிருர்கள். தன்னைப் பெற்றவளின் நினைவாலும் மாதாவைப் பார்த்துச் சிந்தித்ததாலும் மனஸ்தாபத்தை நோக்கி வந்து கொண்டிருக்கிற பரிதாபமான அவனைத் தன் சாந்தமான பார்வையால் நேசிக்கிருர்கள்.

அப்போது தீஸ்மாஸ் சத்தமாக அழுகிருன். அதனுல் ஜனக் கும்பலும் அடுத்த கள்வனும் அவனை கூடுதலாக ஏளனம் செய்கிருர்கள். ஜனக் கும்பல் கத்துகிறது: ''ரொம்பச் சரி! அவளை உன் தாயாக எடுத்துக் கொள். அவளுக்கு அப்போது இரண்டு குற்றவாளி மகன்கள் இருப்பார்கள்!'' என்று. ''நீ அவளுடைய மகனுடைய சிறு பிரதி போலிருக்கிருயென்றுதான் அவள் உன்னை நேசிக்கிருள்'' என்று சொல்லி சந்தர்ப்பத்தைக் கூடுதல் மோசமாக்குகிருன் மற்ற கள்வன்.

சேசு அப்போதுதான் முதல்முறையாகப் பேசுகிருர்: ''பிதாவே இவர்களை மன்னியும். ஏனெனில் தாங்கள் செய்வது இன்னதென்று அறியாதிருக்கிருர்கள்'' என்கிருர்.

சேசுவின் இந்த மன்ருட்டு தீஸ்மாஸிடம் இருக்கிற எல்லா அச்சத்தையும் மேற்கொள்ளுகிறது. அவன் கிறீஸ்துநாதரை ஏறிட்டுப் பார்க்கத் துணிந்து சொல்கிருன்: ''ஆண்டவரே! நீர் உம்முடைய இராச்சியத்தில் இருக்கும்போது என்னை நினைத்தருளும். நான் துன்பப்படுவது நீதியே. ஆனுல் இதற்குப் பின் எனக்கு இரக்கத்தையும் சமாதானத்தையும் தாரும். நீர் போதித்ததை ஒரு தடவை நான் கேட்டேன். ஆனுல் நான் மூடத்தனமாய் உம் வார்த்தையைப் புறக்கணித்தேன். இப்பொழுது மனஸ்தாபப்படுகிறேன். நீர் கடவுளிடமிருந்து வருகிறீர் என நான் விசுவசிக்கிறேன். உம்முடைய வல்லமையை நான் விசுவசிக்கிறேன். உம்முடைய இரக்கத்தை நம்புகிறேன். கிறீஸ்துவே! உமது தாயின் பெயராலும் என்னை மன்னித்தருளும்'' என்கிருன்.



சேசு திரும்பி ஆழ்ந்த இரககத்தோடு அவனைப் பார்க்கிருர். அவருடைய வதைக்கப்பட்ட உதடுகளால் அழகிய புன்முறுவல் கொள்கிருர். அவனிடம்: ''உனக்குச் சொல்கிறேன், இன்றே நீ என்னுடன் பரகதியிலிருப்பாய்'' என்கிருர்.

மனஸ்தாபக் கள்வன் அமைதியடைகிருன். அவன் குழந்தையாயிருக்கும்போது கற்ற ஜெபங்கள் அவன் நினைவில் இல்லாததால் ஒரு மனவல்லய ஜெபம் போல் இப்படிச் சொல்கிருன். ''சேசு நசரேன் யூதர்களின் இராஜாவே, என் மேல் இரக்கமாயிரும். சேசு நசரேயன் யூதர்களின் இராஜாவே உம்முடைய தெய்வீகத்தை விசுவசிக்கிறேன்.''

அடுத்த கள்வன் தொடர்ந்து சபித்துக் கொண்டிருக்கிருன்.

ஆகாயம் மேலும் மேலும் மங்கலாகி வருகிறது. மேகங்கள் சூரிய ஒளியை விழவிடாமல் அடைத்துக் கொண்டிருக்கின்றன. ஈயப் பாளங்கள் போல் ஒன்றின் மேலொன்ருய், வெண்மையாயும், பச்சை கலந்தும் அடுக்கிக் கொள்கின்றன. சமயாசமயத்தில் ஒரு குளிர்ந்த காற்று வீசுவதைப் பொறுத்து அவை கலைகின்றன. காற்று நின்றவுடன் ஆகாயம் கடுமையாகி மங்கி புழுக்கமாகிறது. அது வேகமாய் வீசும்போது உடலைக் கடித்தது போல் தோன்றுகிறது.

வெளிச்சம் குறைகிறது. பச்சை கலருகிறது. முகங்கள் விஞேதமாய்க் காணப்படுகின்றன. பக்கவாட்டில் தெரிகிற போர்ச் சேவகரின் உருவங்கள் முன்பு பளபளத்த அவர்களின் தலைச் சீராக்களுடனும் கவசங்களுடனும் காணப்பட்டன. இப்பொழுது அவை சாம்பல் பச்சை நிறத்தால் கறைபட்டு செதுக்கிய கடின சிலைகளைப் போலிருக்கின்றன. யூதேயர்களின் முகங்களும் பொதுவாக மர நிறத்தில் காணப்படும் அவர்களின் தலை ரோமம் தாடிகளும் நீரில் மூழ்கி இறந்தவர்களைப் போல் ஒருவகையாக வெளிறிப் போயிருக்கின்றன. ஸ்திரீகளின் நீலம் பூத்து வெளிறிய உருவங்கள் சிலைகளைப் போல் தெரிகின்றன.

சேசு மிகுதியாக வெளிறி, இறந்து விட்டவர் போல் காணப்படுகிருர். அவருடைய சிரசு அவர் நெஞ்சில் கவிழ்ந்து தொங்குகிறது. அவருடைய உடற்பலம் எல்லாம் துரிதமாய் வற்றிவிட்டது. காய்ச்சல் அவரை எரிக்கிறது. அவர் நடுங்குகிருர். இதுவரையிலும் அவர்தம் இருதயத்தின் அடியில் மட்டும் உச்சரித்த வார்த்தையை இப்பொழுது மெல்ல முனகுகிருர்: ''அம்மா! அம்மா!'' என்று. தாழ்ந்த குரலில் ஒரு பெருமூச்சு விடுவது போல்

அவ்வார்த்தையை முனகிச் சொல்கிறார். சற்று ஜன்னி ஏற்பட்டு, அவருடைய சித்தம் வெளிப்படுத்த விரும்பாத அதனைத் தடுக்க முடியாத நிலையில் இருப்பவர் போல் அப்படிச் சொல்கிறார். அவர் அப்படிச் சொல்லும் ஒவ்வொரு தடவையும் மாதா தன்னால் தடுக்கக் கூடாதபடி, அவருக்கு உதவ விரும்புவது போல் தன் கரங்களை நீட்டுகிறார்கள். ஆனால் அக்கொடியவர்கள், இறந்து கொண்டும் அவஸ்தை அனுபவித்துக் கொண்டுமிருக்கிற இவர்களின் ஊடுருவும் வேதனையைக் கண்ட சிரிக்கிறார்கள்.

கல்வாரி உச்சிக்கு அடுத்த மேட்டில் இடையர்கள் நிற்கிற பககம் வரையிலும் குருக்களும் வேதபாரகர்களும் மறுபடியும் ஏறி வருகிறார்கள். போர்ச் சேவகர்கள் அவர்களைத் துரத்திவிட வநத போது, அவர்கள் எதிர்த்து: "இந்தக் கலிலேயர் இங்கே நிற்கிறதாயிருந்தால், நாங்களும் நிற்போம். கடைசி வரையிலும் நீதி செலுத்தப்படுகிறதா என்று நாங்கள் பார்க்க வேண்டும். தூரத்திலிருந்து இந்த வெளிச்சத்தில் எங்களால் பார்க்க முடியவில்லை" என்கிறார்கள்.

எதார்த்தமாகவே உலகத்தை மூடியிருக்கிற இருளைப் பறறி பலர் குழப்பமடைகிறார்கள். படைவீரர்கள், ஆகாயத்தைச் சுட்டிக் காட்டி அங்கே ஒரு மலையுச்சிக்குப் பின்னாலிருந்து எழுந்து வருகிற கருநிறக் கூம்பு வடிவப் பொருள் ஒன்றைக் காட்டுகிறார்கள். அது மிகக் கறுப்பாக, பைன் மரம் போல, தண்ணீர் பாயும் கெண்டி வாய் போலிருக்கிறது. அது உயர உயர எழும்பி அதிக கறுப்பான மேகங்களை உற்பத்தி செய்வது போலிருக்கிறது. அது புகையும் நெருப்புக் குழம்பும் கக்குகிற பூகம்பம் போல் காணப்படுகிறது.

இந்தப் பயங்கரமான அந்திப்பட்ட வெளிச்சத்தில்தான் சேசு, மாதாவுக்கு அருளப்பரையும், அருளப்பருக்கு மாதாவையும் கொடுக்கிறார். ஏனென்றால் மாதா அவரை நன்றாகப் பார்க்கும் பொருட்டு சிலுவையை நெருங்கிப் போய் நிற்கிறார்கள். அப்போது அவர்: "ஸ்திரீயே உன் மகன். மகனே இதோ உன் தாய்" என்று சொல்கிறார்.

மாதா இந்த வார்த்தையைக் கேட்டபின் கூடுதலாக குழம்பித் துயரப்படுகிறார்கள். இது சேசுவின் சித்தம். அதன்படி அவரிடம், தம் தாய்க்கு ஒரு மனிதனைக் கொடுப்பதைத் தவிர வேறு எதுவும் இல்லை. அவர் மனிதர் மேல் கொண்ட சிநேகத்தினால் தம் தாயிடமிருந்து பிறந்த கடவுள்–மனிதனை அவர்களிடமிருந்து எடுத்துக் கொள்கிறார். இதனால் அத்தாயால் அழாதிருக்கக்



கூடவில்லை. ஆயினும் மவுனமாகவே அழுகிறார்கள்... தாரையாக அவர்கள் கன்னங்களில் கண்ணீர் வழிந்து பாய்கிறது. எவ்வளவு முயன்றாலும் அவர்களால் அதைத் தடை செய்யக் கூடவில்லை. அந்த நேரத்திலும் அவருக்கு ஆறுதலளிப்பதற்காக அவர்களுடைய உதடுகள் ஒரு உள்ளம் உடைந்த சிறுநகையைக் காட்டுகின்றன...

சேசுவின் வேதனை மேலும் அதிகரிக்கிறது. வெளிச்சமும் குறைந்து கொண்டே போகிறது.

கடலுக்கடியில் காணப்படுவது போன்ற இருண்ட வேளையில் நிக்கோதேமுஸும் அரிமத்திய சூசையும் வருகிறார்கள். யூதேயர்களுக்குப் பின்னால் வந்து "வழிவிடுங்கள்" என்கிறார்கள்.

"உங்களுக்கு அனுமதி இல்லை. என்ன வேண்டும்?" என்று போர்ச் சேவகர் கேட்கிறார்கள்.

"அனுமதிச் சீட்டு உள்ளது. நாங்கள் கிறீஸ்துவின் நண்பர்கள்."

அப்போது பெரிய குருக்கள் திரும்பிப் பார்த்து: "புரட்சிக் காரனுடைய நண்பன் என்று தன்னைக் கூறிக் கொள்பவன் யார்?" என்று எரிச்சலுடன் கேட்கிறார்கள்.

சூசை அதற்குத் தீர்மானமாய்ப் பதிலளிக்கிறார்: "அது மூப்பனும், உயர்ந்த ஆலோசனைச் சங்கத்தின் கண்ணியமுள்ள உறுப்பினனும், அரிமத்தியா சூசையுமாகிய நானும், என்னோடிருக்கிற யூதேயர்களின் தலைவராகிய நிக்கோதேமுஸும்" என்கிறார்.

"புரட்சிக்காரனுடன் சேருகிறவர்களும் புரட்சிக் காரர்களே."

"அன்னாஸின் எலெயெசாரே! கொலைகாரர்களுடன் சேருகிறவர்களும் கொலைகாரர்கள்தான். நீதியுள்ள மனிதனாக நான் வாழ்ந்திருக்கிறேன். இப்பொழுது மூப்படைந்து மரணத்திற்கு சமீபமாயிருக்கிறேன். பரலோகமும் அதனுடன் நித்திய நீதிபதியும் ஏற்கெனவே என் மேல் இறங்கி வந்து கொண்டிருக்கும்போது நான் அநீதனாக மாற விரும்பவில்லை."

"நிக்கோதேமுஸ்! நீருமா? எனக்கு ஆச்சரியமா யிருக்கிறதே!"

"நானும்தான் ஆச்சரியமடைகிறேன். அதுவும் இஸ்ராயேல் எவ்வளவு கெட்டு விட்டதென்றால், கடவுளை அடையாளம்

கண்டுகொள்ள உங்களால் கூடவில்லை.''

''எனக்கு அருவருப்பு மூட்டுகிறீர்.''

''அப்படியானால் வழி விடுங்கள். நான் போகட்டும். அதுதான் எனக்குத் தேவை.''

''இன்னும் கூடுதல் அசுத்தப்படவா?''

''உம்முடன் நான் இருப்பதனால் நான் அசுத்தப்படாவிட்டால் வேறு எதுவும் என்னை அசுத்தப்படுத்தாது. சேவகா! இதோ பணம். இதோ என் அனுமதிச் சீட்டு.'' இப்படிக் கூறி நிக்கோதேமுஸ், அருகில் நிற்கும் பத்துச் சேவகர் தலைவனிடமும் பணப்பையையும் மெழுகிட்ட அட்டையையும் கொடுக்கிறார்.

பன்மருக்குத் தலைவன் பணப்பையையும், அட்டையையும் சரிபார்க்கிறான். பின் சேவகரிடம்: ''இவ்விருவரையும் போக விடுங்கள்'' என்கிறான்.

சூசையும் நிக்கோதேமுஸும் இடையர்களிடம் வருகிறார்கள். மேலும் மேலும் கூடிக் கொண்டே வருகிற இருள் மூட்டத்தில் சேசு அவர்களைக் காண முடிகிறதா என்றே தெரியவில்லை. அவருடைய கண்கள் மரண அவஸ்தையால் திரையிடப்பட்டுள்ளன. ஆனால் அவர்கள் அவரைப் பார்க்கிறார்கள். மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் என்ற நினைவே இல்லாமல் அவர்கள் அழுகிறார்கள். குருக்கள் அவர்களை வைகிறார்கள்.

சேசுவின் வேதனைகள் மேலும் கூடிக் கொண்டே போகின்றன. அவருடைய சரீரம் தசை சுருக்கத்தினால் வளைகிறது. அக்கும்பலின் கூச்சல் அதை அதிகரிக்கச் செய்கிறது. தசை நார்களும், நரம்புகளும் கைகால்களில் தொடங்கி உடலை நோக்கி வருகின்றன. இதனால் சுவாசம் போவது அதிக கடினமாகிறது. ஈரல் தாங்கி சவ்வின் சுருங்குதல் பலவீனமாகி இருதயத் துடிப்பு சமமில்லாமல் போகிறது. கிறீஸ்துவின் முகம் மிக ஆழ்ந்த சிவப்பாவதும், பின் இரத்தப் போக்கினால் இறக்கிறவனைப் போல் பச்சையாக வெளிறிப் போவதும் மாறி மாறிக் காணப்படுகிறது. அவருடைய உதடுகள் மிகக் கஷ்டத்தோடு அசைகின்றன. காரணம் அவருடைய கழுத்தும் தலையும்கூட சிலுவையின் குறுக்கு மரத்தில் முழு உடலுக்கும் நெம்புகோல் போல அடிக்கடி ஊன்றப்பட்டதால் அதிக சிரமமடைந்துள்ள கழுத்து நரம்புகளும்,



தலையின் நரம்புகளும் அதனால் ஏற்பட்ட சதைச் சுரிப்பைத் தாடைகளுக்கும் பரவச் செய்கின்றன. அவருடைய தொண்டை தடுக்கப்பட்ட கழுத்தின் இரத்த நாளம் காரணமாக வீங்கியிருப்பதால் வேதனையளிக்க வேண்டும். அந்த அழற்சி நாக்கிற்கும் பரவியிருக்க வேண்டும். அது வீங்கியிருக்கிறது. மெதுவாகவே அசைகிறது. அவருடைய பிடரியிலிருந்து கீழ் முதுகு வரையிலும், தசைச் சுருக்கும் இழுப்புகளினால் முழுவதும் வளைக்கப்படாத சமயங்களிலும் மேலும் மேலும் முன்பாக வளைந்து வருகிறது. ஏனென்றால் அவருடைய அங்கங்கள் இறந்த தசைகளின் பாரத்தால் தொடர்ந்து கீழ் நோக்கி இழுக்கப்படுகின்றன.

இந்த நிலையை ஜனங்களால் தெளிவாகப் பார்க்க முடியவில்லை. ஏனெனறால் வெளிச்சம் இருண்ட சாம்பலைப் போல் ஆகி விட்டது. சிலுவையின் அடியிலுள்ளவர்களால்தான் நன்றாகப் பார்க்க முடிகிறது.

ஒரு தருணத்தில் சேசு இறந்து விட்டது போல், முன்னாலும் கீழ் நோக்கியும் துவண்டு விழுகிறார். மூச்சுத் திணறல் நின்று விட்டது. தலை முன்பக்கமாக அசைவின்றித் தொங்குகிறது. அவருடைய சரீரம் அடி முதுகிலிருந்து மேல் நோக்கி முற்றிலும் சிலுவையில் படாமல் அதன் மரத்துக்கெதிராய் ஒரு கோணம் போல் காட்சியளிக்கிறது.

''இறந்து விட்டாரே!'' என்ற மாதாவின் அபயக் குரல் இருண்ட ஆகாயத்தில் பரவுகிறது. சேசு உண்மையிலே இறந்தவராகக் காணப்படுகிறார்.

மாதாவின் குரலுக்குப் பதிலாக ஒரு ஸ்திரீயிடமிருந்து அழுகுரல் வருகிறது. பெண்கள் நடுவில் பரபரப்புக் காணப்படுகிறது. பின் சுமார் பத்து ஆட்கள் புறப்பட்டுப் போகிறார்கள். எதையோ கொண்டு செல்கிறார்கள். அவர்கள் யாரென்று என்னால் பார்க்க முடியவில்லை. வெளிச்சம் இல்லை. எல்லாமே எரிமலைச் சாம்பலுக்குள் மூழ்கியது போலிருக்கிறது.

சில குருக்களும் யூதேயர்களும்: ''அது சாத்தியமில்லை. நம்மைப் போக்கடிப்பதற்கு இது ஒரு நாடகம். சேவகா, உன் ஈட்டியால் அவனைக் குத்திப்பார். அவனைப் பேச வைக்க அது நல்ல மருந்து'' என்கிறார்கள். சேவகர் அப்படிச் செய்யவில்லை. அதனால் கற்களும் மண்கட்டிகளும் சிலுவையை நோக்கி

வீசப்படுகின்றன. அவை சேசு மேல் பட்டு சிப்பாய்களின் போர்க் கவசங்களில் விழுகின்றன.

யூதேயர்கள் மருந்து என்று குறிப்பிட்டது போல் சில கற்கள் சேசுவின் கரத்தில் காயங்களில் அல்லது தலையில் பட்டிருக்க வேண்டும். ஏனென்றால் அவர்கள் மேல்நோக்கியே எறிந்தார்கள். சேசு பரிதாபமாய் முனகி உணர்வு பெறுகிறார். கஷ்டத்தோடு நெஞ்சு மறுபடி மூச்சு விடுகிறது. தலை, வேதனையைக் குறைக்க எங்கே தங்கலாமென்று இடமிருந்து வலப்பக்கமாய் அசைகிறது. ஆனால் அதிக வேதனையின்றி ஆறுதல் எதுவுமில்லை.

அப்போது சேசு மிகக் கஷ்டத்துடன் பெரும் முயற்சி செய்து தமது சித்தத்தின் திடத்தில், அதில் மட்டுமே தம் திடனைக் கொண்டு, சித்திரவதைப்பட்ட தம் பாதங்களில் ஊன்றி நின்று நேராய் தம்மைக் கொண்டு வருகிறார். தம் பலமெல்லாம் ஒன்றுகூட்டி தம் முகத்தை உயர்த்துகிறார். கண்களை அகலத் திறந்து தம் பாதத்திற்கடியில் பரந்து கிடக்கும் உலகத்தைப் பார்க்கிறார். எட்டத் தெரிகிற பட்டணத்தையும் பார்க்கிறார். புகைப்படம் போல் தெளிவில்லாமல் அது தெரிகிறது. எங்குமே வெளிச்சம் இல்லை. வானம் தாழ்ந்து இறுகி இருண்டு கிடக்கிறது. சேசு தம் சித்த வலிமையாலும் தம் ஆன்மாவின் தேவையாலும் தமது வீங்கிய நாவையும் அழற்சிப்பட்ட தொண்டையையும் மேற்கொண்டு உரத்த குரலில்: "எலோயி எலோயி லாமா சபக்தானி" (என் சர்வேசுரா, என் சர்வேசுரா, ஏன் என்னைக் கைவிட்டீர்?) என்று கதறுகிறார். இப்படி அவர் தம் பிதா தம்மைக் கைவிட்டதாக கதறினாரென்றால் அவரைப் பரலோகம் முற்றிலும் கைவிட்டதையும் தாம் அப்படியே சாகப்போகிறதையும் உணர்ந்திருக்க வேண்டும்.

ஜனங்களோ சிரித்து அவரைப் பரிகசிக்கிறார்கள். "உன்னோடு கடவுளுக்கு ஒன்றுமில்லை. பசாசுக்கள் கடவுளால் சபிக்கப்பட்டவை" என்று கூறி நிந்திக்கிறார்கள்.

"இவன் கூப்பிடுகிற எலியாஸ் வந்து இவனைக் காப்பாற்றுவாரா என்று பார்ப்போம்" என்கிறார்கள் மற்றவர்கள்.

இன்னும் சிலர்: "அவன் தொண்டையைக் கழுவிக் கொள்ள கொஞ்சம் காடி கொடுங்கள். குரலுக்கு அது நல்லது. எலியாஸோ கடவுளோ இவனுக்கு யார் வேண்டும் என்று தெரியவில்லை. அவர்கள் தூரத்தில் இருக்கிறார்கள்... அவர்களுக்குக் கேட்க



வேண்டுமானால் பெரிய சத்தம் தேவை..." என்று கூறி ஓநாய்களைப் போல, பேய்களைப் போல் சிரிக்கிறார்கள்.

ஆனால் எந்த சேவகனும் அவருக்குக் காடி கொடுக்கவில்லை. மோட்சத்திலிருந்தும் அவருக்கு ஆறுதல் கொடுக்க யாரும் வரவில்லை. இது மகா பெரிய பலிப்பொருளின் தனிமையான, முழுமையான, குரூரமான, சுபாவத்திற்கு மேலான முறையிலும் குரூரமான அவஸ்தையாகும்.

ஏற்கெனவே ஜெத்சமெனியில் அவரை அமுக்கிய பெரும் நிலச்சரிவு போன்ற ஆறுதலற்ற துயரம் இப்பொழுது திரும்பவும் வருகிறது. அனைத்து உலகத்தின் பாவ அலைகள் கப்பல் உடைந்து கிடக்கிற பரிசுத்தரைத் தாக்கி தங்கள் கசப்பில் அவரை அமிழ்த்த வருகின்றன. எல்லாவற்றிற்கும் மேலாக சிலுவையைக் காட்டிலும் அதிக சிலுவை வேதனையாகவும், எந்த சித்திரவதையை விடவும் அதிகக் குரூரமாகவும் வருகிறதென்னவென்றால் சர்வேசுரனே அவரைக் கைவிட்டு விட்டாரென்றும், தன்னுடைய மன்றாட்டு அவரிடம் எழும்பவில்லையென்றும் ஏற்படுகிற உணர்வேயாகும்.

அதுவே அவருடைய இறுதி வாதனை. அது அவருடைய மரணத்தைத் துரிதப்படுத்துகிறது. எப்படியெனில், அது அவரின் கடைசி இரத்தத்தையும் வியர்வைத் துவாரங்கள் வழியாக வெளியேற்றுகிறது. அது அவருடைய இருதயத்தில் எஞ்சிய தசை நார்களை நசுக்குகிறது; இக்கைவிடப்படுதலின் முதல் உணர்தல் தொடங்கி வைத்ததை அது முடிக்கிறது. மரணத்தைக் கொண்டு வருகிறது. அதுவே என் சேசு இறந்ததற்கு முதற் காரணம். ஓ என் சர்வேசுரா! எங்களுக்காக அவரை அடித்தீரே! ஏனெனில் நீர் கைவிட்ட பிறகு உம்முடைய கைவிடுதலினால் ஒருவன் என்ன ஆவான்? ஒன்றில் பைத்தியனாவான், அல்லது சாவான். சேசு பைத்தியனாக முடியாது. ஏனென்றால் அவருடைய புத்தி தெய்வீகமானது. அறிவு ஒரு ஞான வஸ்துவாகையால், அது கடவுள் அடித்து விட்ட அவருடைய எல்லா புற வேதனை நோவுகளையும் வென்று விட்டது. ஆதலால் அவர் இறந்த மனிதனானார்; இறந்த மானிடன்; மகா புனிதரான இறந்த மானிடன்; மகா குற்றமற்றவராய் இறந்த மானிடன்; சீவியமாயிருந்தவர் இறந்தார். உம்முடைய கைவிடுதலினாலும் எங்களுடைய பாவங்களாலும் கொல்லப்பட்டார்.

இருள் அதிகமாகிறது. ஜெருசலேம் முற்றும் மறைந்து விட்டது. கல்வாரி மலைச் சரிவுகள் கூட மறைகின்றன. மலையுச்சி

மட்டுமே தெரிகிறது. ஒரே ஒளியை, இன்னும் அணையாதிருக்கிற ஒளியை, உருகிய பல்நிற மணக்கற்களின் திரவக் குளத்தில், நேசத்தினுலும், பகையினுலும் அது பார்க்கப்படும்படியாக, அத்தெயவீக வெற்றிப் பொருளுடன் அதுவும் காணிக்கையாகும் பொருட்டு, அவ்விருளால் உயர்த்திப் பிடிக்கப்பட்டது போல் கல்வாரியின் உச்சி மட்டுமே தெரிகிறது.

அந்த ஒளியல்லாத வெளிச்சத்தில் சேசுவின் முறையிடும் குரல் கேட்கிறது: "தாகமாயிருக்கிறேன்" என்று.

அப்போது உண்மையிலேயே அங்கே வீசுகிறது நல்ல சுகமாயிருக்கிறவர்களையும் தாகங் கொள்ளச் செய்யும் காற்று. தூசி நிறைந்தும், குளிர்ந்தும், பயங்கரமாயும் ஒரு பலத்த காற்று தொடர்ந்து வீசுகிறது. அது சேசுவின் நுரையீரலுக்கும், இருதயத்திற்கும், தொண்டைக்கும், காயப்பட்டு மரத்திருக்கிற அங்கங்களுக்கும் என்ன வேதனையளித்திருக்கும் என்று நான் நினைத்துக் கொள்கிறேன். எல்லாம் சேர்ந்து அவரைச் சித்திரவதைப்படுத்துகின்றன. கொலைப்படுத்தும் அதிகாரியின் உதவியாளர்கள் ஒரு ஜாடியில் கொஞ்சம் பிச்சுக் கலந்த காடி வைத்திருக்கிறுர்கள். சிரசாக்கினை இடப்பட்டோரின் உமிழ்நீர் சுரத்தலை அதன் கசப்பு அதிகரிக்கும்படியாக அது கொடுக்கப்படும். ஒரு சேவகன் ஒரு உறிஞ்சியை திடமான பொடிக் கம்பில் மாட்டி காடியில் தோய்த்து மரிக்கிற சேசுவுக்குக் கொடுக்கிறுன். அந்த கம்பு பக்கத்தில் கிடைக்கக் கூடியது.

கொடுக்கப்படும் உறிஞ்சியை நோக்கி ஆவலுடன் சேசு முன் வருகிறுர். பட்டினி கிடந்த குழந்தை தாயின் அமுதுக்குத் தேடுவது போல் அது இருக்கிறது.

மாதா இதைப் பார்க்கிறுர்கள். அவர்கள் அருளப்பர் மேல் சாய்ந்து கொண்டு: "ஓ! அவருக்கு என் கண்ணீரில் ஒன்றைக் கூட கொடுக்க முடியவில்லையே!... ஓ சர்வேசுரா, இப்படி எங்களை ஏன் கைவிடுகிறீர்? என் மகனுக்காக ஒரு புதுமை! என் இரத்தத்தால் அவருடைய தாகத்தை தணிக்கும்படி யார் என்னைத் தூக்கி விடுவார்கள்..." என்று அழுது முனகுகிறுர்கள்.

ஆவலுடன் அந்தக் கசப்பை உறிஞ்சிய சேசு அருவருப்பால் முகம் சுளிக்கிறுர். அவருடைய காயப்பட்டு வெடித்த உதடுகளில் அது காந்தலை ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

அவர் பின்வாங்கி மனமுடைந்து தம்மையே கைவிட்டு



விடுகிறுர். அதனுல் அவருடைய முழுப்பாரமும் பாதங்களில் சுமருகிறது. அத்திருவுடல் முன்பக்கமாக சாய்கிறது. இப்படி தன்னையே விட்டுவிட்ட உடலின் நுனிப் பாகங்கள்தான் கொடிய வேதனையடைகின்றன. உடற்பாரம் இழுப்பதனுல் காயங்கள் கிழிகின்றன. அவ்வேதனையைக் குறைக்க அவர் இப்போது எந்த முயற்சியும் செய்யவில்லை. அவர் உடல், கீழ் முதுகிலிருந்து மேலாக சிலுவையினின்று பிரிந்தே நிற்கின்றது.

சேசுவின் தலை எவ்வளவு பளுவாய் முன்பாகக் கவிழ்ந்து தொங்குகிறதென்ருல் அவருடைய கழுத்தில் மூன்று இடங்களில் குழி விழுந்து காணப்படுகிறது. தொண்டைப்பகுதி பெரிய குழியாக உள் இழுக்கப்பட்டிருக்கிறது. நெஞ்சுப் பொட்டெலும்பு இரு புறமும் குழிந்து தெரிகின்றது. அவர் விட்டு விட்டு மூச்சு வாங்குகிறுர். அது மரண கரகரப்பாகக் கேட்கிறது. இடைக்கிடையே வேதனை தரும் இருமல்கள் வந்து இளஞ்சிவப்பான நுரையை அவர் உதடுகளுக்குக் கொண்டு வருகின்றன. அவர் வெளி மூச்சு விடும் இடைவெளி அதிகரிக்கிறது. அவருடைய அடிவயிற்றில் எவ்வித அசைவுமில்லை. நெஞ்சுக் கூடுதான் ஏறி இறங்குகிறது – அது மிகச் சிரமத்தோடு நடக்கிறது... நுரையீரல்கள் கூடுதல்கள் செயலற்று வருகின்றன.

அப்போது ஒரு சிசுவின் அழுகுரல் போல், ஒரு கூப்பிடுதல் போல், "அம்மா," "அம்மா" என்ற வார்த்தைகள் வருகின்றன. வர வர மெல்லியதாகின்றன. அதற்கு "என் மகனே, நான் இங்கேதான் இருக்கிறேன்" என்று பரிதாபமான தாய் மெல்லிய குரலில் கூறுகிறுர்கள். அவருடைய பார்வை மங்கும் போது, அவர், "அம்மா, எங்கேயிருக்கிறீர்கள்? உங்களைக் காண முடியவில்லையே. நீங்களும் என்னைக் கைவிடுகிறீர்களா?" என்கிறுர். இவை வார்த்தைகள் போலில்லை. ஒரு முனகல். தன் செவிகளாலல்ல, தன் இருதயத்தால், இறந்து கொண்டிருக்கும் தன் குமாரனின் ஒவ்வொரு பெருமூச்சையும் ஏற்கிற தாய்க்கும்கூட தெளிவாகக் கேட்கவில்லை. "இல்லை மகனே, உம்மை நான் விட்டுப் போக மாட்டேன். என் மகனே, என் அன்புக் குமாரனே, உம் அம்மா இங்கே இருக்கிறேன்... இங்கேதான் இருக்கிறேன். நீர் இருக்கிற இடத்திற்கு வர முடியவில்லையே என்றுதான் நான் வருத்தப்படுகிறேன்." இப்படி மாதா கூறுவது இருதயத்தைப் பிளப்பதாக உள்ளது.

இப்போது அருளப்பர் வெளிப்படையாக அழுகிறார். அவர் அழுகை சேசுவுக்கு நிச்சயம் கேட்கும். ஆனால் அவர் எதுவும் சொல்லவில்லை. விரைவிலேயே வரப்போகிற மரணத்தின் காரணமாக அவர் பேசுவது உளறல் போல் இருக்கிறது. அவர் என்ன செய்கிறார் என்பதை அவரே அறியவில்லை போல் தோன்றுகிறது. இதில் நிர்ப்பாக்கியம் என்னவென்றால் அவருடைய தாயார் கொடுக்கும் ஆறுதலையும் அவருக்குப் பிரியமான சீடனின் அன்பையும் கூட அவர் கண்டுபிடிக்கவில்லை.

லோஞ்ஜினுஸ் இவ்வளவு நேரமாக காலில் நிற்க வேண்டியிருந்ததை எளிதாக்கும் பொருட்டு கைகளை மார்பில் மடக்கிக் கட்டி கால்கள் ஒன்றின்மேல் ஒன்றாக சாவகாசமாக நின்றவன், இப்பொழுது தன் பணி நிலைக்கு மாறுகிறான். விறைப்பாக, தயார் நிலையில், இடது கையைத் தன் வாள் மீது வைத்து, வலது கையைப் பக்கவாட்டில் தொங்க வைத்து, இராஜ சிம்மாசனத்தின் படிகளில் நிற்பது போல் நிற்கிறான். அவன் இந்நிகழ்ச்சிகளால் பாதிக்கப்பட விரும்பவில்லை. ஆனால் அவன் தன் உள் உணர்வுகளை வெல்லும்படி செய்கிற முயற்சி அவன் முகத்தில் தெரிகிறது. அவனுடைய கண்களில் துளிர்க்கும் துளிகளை அவனுடைய கடும் கட்டுப்பாடுதான் கீழே விழாமல் தடுக்கிறது.

பகடை ஆடிய போர்ச் சேவகர்கள் அதை நிறுத்தி விட்டு எழுந்து பகடை குலுக்க உதவிய தலைக் கவசங்களை அணிந்து கொண்டு, சரலில் வெட்டிய படிகளின் பக்கமாக வந்து கவனத்துடன் மவுனமாக நிற்கிறார்கள். மற்றச் சேவகர்க்கு அது அலுவல் நேரமானதால் எங்கும் போக முடியாது. அவர்கள் சிலைகளைப் போல் காட்சியளிக்கிறார்கள். மாதாவுக்கு சமீபமாக நின்று அவர்கள் சொல்வதைக் கேட்ட சிலர் தங்கள் உதட்டிற்குள்ளே ஏதோ முனகி தலைகளை அசைக்கிறார்கள்.

ஒரே நிசப்தம். அப்பொழுது எல்லாம் இருண்டு போன அவ்வேளையில்: "எல்லாம் நிறைவேறிற்று" என்று சொல்லும் சேசுவின் குரல் தெளிவாகக் கேட்கிறது. அதன்பின் அவருடைய மரண இளைப்பு கூடுதல் சத்தமாகவும் நீண்ட இடைவெளியோடும் கேட்கிறது.

மிகவும் சஞ்சலத்தோடு நேசம் படிப்படியாகக் கடந்து செல்கிறது. இறக்கும் பலிப்பொருளின் மூச்சுவாங்குதல் கரடாகக்



கேட்கும் போது உயிர் வருகிறது. அந்த வேதனை மூச்சு கேட்காமலிருக்கும்போது உயிரே நிற்கிறது. அந்த ஒலியைக் கேட்பதே துன்பமாயிருக்கிறது... அந்த ஒலியைக் கேட்காவிட்டாலும் துன்பமாயிருக்கிறது. "இந்தத் துன்பம் போதும்" என்று ஒன்று கூறுகிறது. இன்னொன்று: "கடவுளே, இது அவருடைய கடைசி மூச்சாக இல்லாதிருக்கட்டும்" என்கிறது.

எல்லா மேரிகளும் கல்வாரி மேடைக்கு எழும்பும் செங்குத்தான நிலச் சரிவில் தலை சார்த்தி நின்று அழுகிறார்கள். கூட்டம் இப்பொழுது சேசுவின் மரண இளைப்புக் குரலைக் கேட்க மவுனமாயிருப்பதால், அவர்கள் அழும் குரல்கள் நன்றாகக் கேட்கிறது.

மறுபடியும் நிசப்தம். அப்போது, "பிதாவே! என் ஆத்துமத்தை உமது கரங்களில் ஒப்படைக்கிறேன்" என்ற கெஞ்சும் குரல் அளவில்லாக் கருணையோடு உருக்கத்துடன் ஒலிக்கிறது.

தொடர்ந்து மவுனம். மரண இளைப்புக் குரல் ஓசை குறைகிறது. அது அவருடைய தொண்டைக்கும் உதடுகளுக்குமிடையில் உள்ள மூச்சாக மட்டும் இருக்கிறது.

அதன்பின் சேசுவின் இறுதி உயிர்த் துடிப்பு. ஒரு பயங்கர வலிப்பு பாதம் முதல் சிரசு வரை எல்லா நரம்புகளினூடேயும் சென்று மூன்று தடவை எழும்புகிறது. மூன்று ஆணிகளிலிருந்தும் சரீரத்தைப் பிய்த்தெடுத்து விடும்போலிருக்கிறது. அடிவயிறு மும்முறை அசாதாரணமாய் எவ்வுகிறது. குடல்களைக் குழப்புவது போல் விரிந்து பின் ஓய்கிறது. பின் அது அமர்ந்து அடிவயிறு காலியாவது போல் குழிகிறது. மீண்டும் எவ்வி பருத்து நெஞ்சுக் கூட்டை வேகமாய்ச் சுருக்குகிறது. அதனால் விலா எலும்புகளின் இடையிலுள்ள தோல் உட்குழிகிறது. விலா எலும்புகள் விரிந்து கசையடியின் காயங்கள் திறக்கின்றன. தலை கடின சிலுவை மரத்துடன் பின்னோக்காக வேகமாய் ஒரு விசை, இரு விசை, மூன்று விசை மோதுகிறது. முகத்தின் எல்லாத் தசை நார்களும் இத்துடிப்பால் சுருக்கமடைகின்றன. வாயின் திறப்பு வலது பக்கமாய்ச் சரிகிறது. கண் இமைகள் அகன்று விரிவடைந்து, விழிகள் சுழல்கின்றன. வெள்ளை விழி தெரிகிறது. உடல் முழுவதும் கூனிக் காணப்படுகிறது. கடைசி மூன்று வலிப்பாலும் அது வில் போல் வளைந்து துடிக்கிறது. பார்க்கப் பயங்கரமாயிருக்கிறது. அதன் பின் முற்றிலும் செலவழிக்கப்பட்டு

விட்ட அந்தச் சரீரத்திலிருந்து எதிர்பார்க்க முடியாத ஒரு பேரொலி ஆகாயத்தைக் கிழித்துக் கொண்டு எழுகிறது. இது சுவிசேஷத்தில் "மகா சத்தத்தோடு கூப்பிட்டு"* என்று கூறப்படுகிறது. அப்படி அவர் பேரோலியாய்க் கூப்பிட்ட குரல் "அம்மா" என்ற குரலில் முதல் பாகமே... அதன் பின் எதுவுமில்லை...

அவருடைய திருச் சிரசு அவருடைய மார்பில் சாய்கிறது. அவருடைய திருச் சரீரம் முன்பாக சாய்கிறது. குலுங்குகிறது. நின்று விடுகிறது. சுவாசம் நின்று விட்டது. அவருடைய கடைசி மூச்சு அடங்கி விட்டது.

கொலை செய்யப்பட்ட மாசற்றவரின் கூப்பிடுதலுக்கு பூமி, ஒரு பயங்கர உறுமுதலால் பதிலளிக்கிறது. ஆயிரம் அரக்கர்கள் ஒரே சத்தமாய் ஊதும் எக்காளங்கள் போல் பெரு முழக்கம் கேட்கிறது. அந்த முழக்கத்தோடு இடைக்கிடையே மின்னல் கீற்றுக்கள் வானத்தின் எல்லாத் திசைகளிலும் வெட்டிப் பாய்கின்றன. பட்டணத்தில் இடிகள் விழுகின்றன... ஜனக் கூட்டத்தில் இடி விழுந்ததால் சிலர் தாக்கப்பட்டார்கள் என நினைக்கிறேன். நெளிந்து வளைந்து வீசும் மின்னல் மட்டுமே இடையிடையே காணக் கூடிய வெளிச்சமாயிருக்கிறது. இடிகள் இன்னமும் இடித்துக் கொண்டிருக்கவே பூமி ஒரு பெரும் சூறாவளிக் காற்றினால் அசைக்கப்படுகிறது. பூமியதிர்ச்சியும், சூறைப் புயலும் சேர்ந்து அந்த தேவ தூஷணிகளுக்கு ஒரு முடிவுகாலத் தண்டனையைத் தருகின்றன. கொல்கொத்தா மலையுச்சி ஒரு பைத்தியக்காரனின் கையிலகப்பட்ட தட்டு போல் குலுங்கி நடுங்குகிறது. வெட்டியிழுத்து, அசைக்கிற அதிர்ச்சி மூன்று சிலுவைகளையும் எப்படி ஆட்டுகிறதென்றால், அவை பெயர்க்கப்பட்டு விடக்கூடிய நிலையில் காணப்படுகின்றன.

லோஞ்ஜினுஸும், அருளப்பரும், போர்ச் சேவகரும் கீழே விழுந்து விடாதிருக்க கிடைத்ததைப் பற்றிக் கொள்கின்றனர். அருளப்பர் ஒரு கையால் சிலுவையைப் பிடித்துக் கொண்டு மறுகையால் மாதாவைத் தாங்கிக் கொள்கிறார். மாதா நிற்க

---

* மத்தேயு: "மகா சத்தத்தோடு கூப்பிட்டு" – *27:50.*

மாற்கு: "பேரொலியாய்க் கூப்பிட்டு" – *15:37.*

லூக்காஸ்: "உரத்த சத்தமாய்க் கூப்பிட்டு" – *23:46.*

சேசு கடைசியாகக் கூப்பிட்டது மாதாவையே என்பது கவனத்திற்குரியது.



முடியாததினாலும், துயரத்தாலும் அருளப்பரின் நெஞ்சில் சாய்ந்துள்ளார்கள். மற்றச் சேவகர், குறிப்பாக மலையுச்சியிலிருந்து நிலம் சரிந்து காணப்படுகிற பகுதியில் இருக்கிறவர்கள், தாங்கள் மலைச் சரிவில் வீசப்பட்டு விடாதபடி நடுவிற்கு வருகிறார்கள். கள்வர்கள் அதிகமாக அஞ்சி கூச்சலிடுகிறார்கள். ஜனக்கூட்டம் அதை விட அதிகமாக ஊளையிடுகிறது. ஓடப் பார்க்கிறது. ஆனால் அது சாத்தியமில்லை. அவர்கள் ஒருவர் மேல் ஒருவர் விழுந்து நிலத்தின் வெடிப்புகளில் விழுகிறார்கள். காயப்படுகிறார்கள். பைத்தியக்காரரைப் போல் உருளுகிறார்கள்.

பூமியதிர்ச்சியும், சூறைப் புயற்காற்றும் மூன்று தடவைகள் நிகழ்கின்றன. அதன் பின் செத்த உலகத்தின் முழுமையான அசைவின்மை காணப்படுகிறது. இடி முழக்கமில்லாமல் மின்னல் மட்டும் வீசுகிறது. அவ்வெளிச்சத்தில் கிறுக்குப் பிடித்தவர்களைப் போல் கைகளை முன்னாலோ அல்லது மேல் நோக்கியோ நீட்டிக் கொண்டு ஜனங்கள் எப்பக்கமும் சிதறி ஓடுவது தெரிகிறது. இவ்வளவு நேரமும் தாங்கள் பரிகசித்து, இப்பொழுது பயப்படுகிற வானத்தை நோக்கிக் கைகளை நீட்டுகிறார்கள். இருட்டு கொஞ்சம் கலைகிறது. காந்த மின்னல் அதை தெளிவுபடுத்துகிறது. அநேகம்பேர் தரையில் கிடப்பதைக் காண முடிகிறது. அவர்கள் இறந்து விட்டார்களா, மயங்கிக் கிடக்கிறார்களா என்று தெரியவில்லை. ஜெருசலேம் பட்டணச் சுவர்களுக்குள் ஒரு வீடு பற்றி எரிகிறது. நெருப்பின் சுவாலை அசைவற்ற ஆகாயத்தில் பிரகாசமான சிவப்புச் சூளையாக மேலே மங்கிய ஆகாயத்தில் நேராய் எழுந்து எரிகிறது.

மாதா தலையை நிமிர்த்தி தன் சேசுவைப் பார்க்கிறார்கள். அந்த மங்கல் ஒளியில் அவரை சரியாகப் பார்க்கக் கூடவில்லை. கண்களும் கண்ணீரால் நிரம்பியுள்ளன. ஆதலால் அவரைக் கூப்பிடுகிறார்கள். "சேசு! சேசு!! சேசு!!!" என்று மூன்று விசை அழைக்கிறார்கள். கல்வாரிக்கு வந்தபின் அவர் பெயரைச் சொல்லி அவர்கள் அழைப்பது இதுவே முதல் தடவை. அப்பொழுது ஏற்பட்ட ஒரு மின்னலின் வெளிச்சத்தில் அவர்கள் சேசுவைக் காண்கிறார்கள் – அசைவற்று, முன்பக்கமாக வளைந்து தொங்குகிறார். அவருடைய சிரசு எவ்வளவுக்கு முன்னாலும், வலது பக்கமாகவும் வந்துள்ளதென்றால் அவருடைய கன்னம் தோளைத் தொடுகிறது. அவருடைய நாடி விலா எலும்பை ஒட்டியிருக்கிறது. மாதா கண்டுபிடிக்கிறார்கள். அந்த

இருண்ட ஆகாயத்தில் தன் கரங்களை நீட்டியபடி சத்தமாக, "என் மகனே! என் மகனே!! என் மகனே!!!" என்று கூப்பிடுகிறார்கள். பின் கவனித்து கேட்கிறார்கள்... அவர்களின் திறந்திருக்கும் வாயின் வழியாகவும் கேட்க விரும்புவதாகத் தெரிகிறது. கண்களும் அகலத் திறந்திருக்கின்றன... தன் சேசு இறந்து விட்டார் என்பதை அவர்களால் நம்ப முடியவில்லை...

அருளப்பர், பார்த்தும் கேட்டும், எல்லாம் முடிந்து விட்டதெனக் கண்டுபிடித்து, மாதாவை அரவணைத்துக் கூட்டிக் கொண்டு போக முயல்கிறார். "அவர் இப்பொழுது வேதனைப்படவில்லை" என்று சொல்கிறார்.

அருளப்பர் அதைச் சொல்லி முடியுமுன் மாதா தன்னை விடுவித்துக் கொண்டு திரும்பி தரையை நோக்கிக் குனிந்து கண்களைத் தன் கைகளால் மூடிக்கொண்டு: "என் மகன் எனக்கு இல்லையே!" என்று கதறுகிறார்கள். தள்ளாடுகிறார்கள். அருளப்பர் தாங்கிக் கொள்ளாவிட்டால் கீழே விழுந்திருப்பார்கள். ஆகவே அருளப்பர் தரையில் உட்கார்ந்து பக்தியுள்ள ஸ்திரீகள் வரும் வரையில் மாதாவைத் தாங்கிக் கொண்டிருக்கிறார். யூதர்கள் ஓடிப் போய் விட்டதால் போர்ச் சேவகர்கள் உச்சிக்கு அடுத்த சமதளத்தில் நின்று அவ்வி யங்களைப் பற்றி அபிப்பிராயம் சொல்லிக் கொள்கிறார்கள். அவர்கள் ஸ்திரீகளுக்கு எந்தத் தடையும் செய்யவில்லை.

மரிய மதலேன், அருளப்பர் இருந்த இடத்தில் அமர்ந்து, மாதாவைத் தன் மடிமேல் கிடத்துகிறாள். அவள் தோளில் மாதாவின் தலை சாய்ந்திருக்கிறது. மாதாவின் வெளிறிய முகத்தில் முத்தமிட்டு தேற்றப் பார்க்கிறாள். மார்த்தாளும், சூசான்னாவும் கொஞ்சம் உறிஞ்சியாலும் லினன் துகிலாலும் காடியில் தொட்டு மாதாவின் சென்னியையும் நாசியையும் நனைக்கிறார்கள். அல்பேயுஸின் மேரி, அவர்கள் கரத்தை முத்தமிட்டு உள்ளம் உருகும் குரலில் கூப்பிடுகிறாள். மாதா கண் திறக்கிறார்கள். துயரத்தால் விழிகள் மங்கியுள்ளன. மேரி மாதாவிடம்: "மகளே! என் அருமை மகளே! கேள்... நீ என்னைப் பார்க்கிறாயா? பார்ப்பதாகச் சொல். உன் மேரி நான்தான்... என்னை இப்படிப் பாராதே..." என்கிறாள். மாதாவின் முதல் அழுகைக் குரல் அவர்களின் தொண்டையைத் திறக்கிறது. கண்ணீர் பாய்கிறது. அல்பேயுஸின் மேரி: "மகளே நீ அழு. உன் தாயின் அருகிலிருப்பது போல் அழு" என்கிறாள். மாதா அதற்கு: "ஓ மேரி, நீ கண்டாயா?"



என்று விம்முகிறார்கள். "ஆம். நான் கண்டேன்... ஆனால் மகளே..." அல்பேயுஸின் மேரிக்கு பேச வார்த்தைகள் இல்லை. மாதா ஆறுதலற்று அழ எல்லா ஸ்திரீகளும் அழுகிறார்கள் – மார்த்தா, மரியா, அருளப்பரின் தாய், சூசான்னா எல்லோரும்.

மற்ற பக்தியுள்ள ஸ்திரீகள் அங்கேயில்லை. அவர்களும் இடையர்களும் மாதாவின் கூக்குரலைக் கேட்டபின் அங்கிருந்து போய்விட்டார்கள் என நான் நினைக்கிறேன்.

போர்ச் சேவகர் தங்களுக்குள் தாழ்ந்த குரலில் பேசிக் கொள்கிறார்கள்.

"யூதேயர்களைக் கவனித்தாயா? இப்பொழுது அவர்கள் பயப்படுகிறார்கள்."

"அவர்கள் தங்கள் மார்பில் அறைந்து கொண்டார்களே!"

"குருக்கள்தான் மிக அதிகமாக அஞ்சினார்கள்."

"அப்பா! என்ன பயங்கரம்! நான் மற்ற பூமியதிர்ச்சிகளைப் பார்த்திருக்கிறேன். ஆனால் இது போல எதுவுமில்லை. பார்! தரை முழுவதும் வெடித்துக் கிடக்கிறது."

"அதோ அங்கே அந்த நீண்ட பாதையின் பெரிய ஒரு பாகம் பெயர்ந்து கீழே இறங்கி விட்டது."

"அதற்கடியில் சடலங்கள் கிடக்கின்றன."

"அவர்களை விடு. அத்தனை பாம்புகள் குறைவு."

"ஓ! நாட்டுப் புறத்தில் மற்றொரு நெருப்பு!"

"ஆனால் அந்த மனிதர் உண்மையிலே இறந்து விட்டாரா?"

"உனக்குத் தெரியவில்லையா? சந்தேகப்படுகிறாயா?"

அப்போது பாறைக்குப் பின்னாலிருந்து சூசையும், நிக்கோதேமுஸும் வருகிறார்கள். நிச்சயமாக அவர்கள் இடியிலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு மலைக்குப் பின்புறமாக ஒதுங்கியிருக்க வேண்டும். அவர்கள் லோஞ்ஜினுஸிடம் போய்:

"அவர் சரீரம் எங்களுக்கு வேண்டும்" என்கிறார்கள்.

"தேசாதிபதிதான் அதைக் கொடுக்க முடியும். சீக்கிரமாகப் போங்கள். ஏனென்றால் யூதேயர்கள் காவற் படைக்கூடம் சென்று அவருடைய கால்களை முறிக்க உத்தரவு பெறப் போவதாகக் கேள்விப்பட்டேன். அவருடைய சரீரத்தை அவர்கள் உருக்குலைப்பதை நான் விரும்பவில்லை."

“உமக்கு எப்படித் தெரியும்?”

“சின்னந்தாங்கும் வீரன் தந்த செய்தி. போங்கள். நான் காத்திருப்பேன்.”

அவ்விருவரும் செங்குத்தாக இறங்கும் பாதை வழியே ஓடி மறைகிறார்கள்.

இச்சமயத்தில் லோஞ்ஜினுஸ் அருளப்பரிடம் வந்து தாழ்ந்த குரலில் எதையோ கூறுகிறான். அது என்ன என்பது எனக்கு விளங்கவில்லை. பின் ஒரு சேவகனிடமிருந்து ஈட்டியைக் கேட்டு வாங்குகிறான். பக்தியுள்ள ஸ்திரீகளைப் பார்க்கிறான். அவர்கள் மாதாவுக்கு உதவி செய்து கொண்டிருக்கிறார்கள். மாதா மெல்ல திடமடைகிறார்கள். அவர்கள் எல்லோரும் சிலுவையின் எதிர்ப்புறமாகத் திரும்பியிருக்கிறார்கள.

லோஞ்ஜினுஸ் நேராக சிலுவையை நோக்கி வந்து நிற்கிறான். இறுதி ஈட்டித் தாக்குதலை எப்படிச் செய்வது என்று கவனமாய்ச் சிந்திக்கிறான்... பின் குத்துகிறான். வலது பக்கமிருந்து இடது பக்கம் நோக்கி கீழிருந்து ஆழமாக ஈட்டி தாக்குகிறது.

அருளப்பர் அதைக் காணும் விருப்பத்தாலும் காணக் கூடாதென்ற கஷ்டத்தாலும் முகம் சுளிக்கிறார்.

லோஞ்ஜினுஸ் சொல்கிறான்: “செய்து முடிந்தது நண்பனே. இதுவே அதிக நல்லது – ஒரு வீரத் திருமகனுக்குச் செய்வது போல – எலும்புகளை உடைக்காமல்... இவர் உண்மையாகவே நீதியுள்ள மனிதனாயிருந்தார்!” என்கிறான்.

அந்தக் காயத்திலிருந்து நிறையத் தண்ணீரும் ஏற்கெனவே கட்டிப்படத் தொடங்கியுள்ள கொஞ்சம் இரத்தமும் வெளி வருகின்றன. சரியாக வெட்டப்பட்ட அக்காயத்திலிருந்து அவை துளிர்த்து வெளியே விழுகின்றன. ஆம். துளிர்த்து விழுகின்றன. அக்காயத்தில் எந்த அசைவும் இல்லை. ஏதாவது சுவாசம் இருந்திருந்தால் அது அடி வயிற்றிலும் விலாக் கூட்டிலும் ஏற்படும் அசைவுகளுக்குத் தக்க திறந்து மூடியிருக்க வேண்டும்...

கல்வாரியில் எல்லாம் இத்துயரக் கூட்டத்தில் இருக்கும் போது நான் சூசையையும் நிக்கோதேமுஸையும் பின் செல்கிறேன். அவர்கள் சீக்கிரமாய்ச் சேரும்படியாக ஒரு குறுக்குப் பாதை வழியே போகிறார்கள்.

மலையடிவாரத்தை அவர்கள் அடையும் சமயத்தில் அங்கே கமாலியேலைச் சந்திக்கிறார்கள். அலைந்து போன தோற்றம். வெறும் தலை. அங்க வஸ்திரம் இல்லை. அவருடைய சிறந்த ஆடை மண்புழுதி படிந்து முள் குத்திக் கிழிந்திருக்கிறது. அவர் ஓடோடி வருகிறார். மலை ஏறுகிறார். மூச்சு வாங்குகிறார். முதுமையின் நரை முடியைப் பிடித்திருக்கும் கரங்கள். நிற்காமலே அவர்கள் பேசுகிறார்கள்:

“கமாலியேல்! இது நீர்தானா?”

“சூசை, நீரா அவரை விட்டுப் போகிறீர்?”

“அவரை விட்டுப் போகவில்லை. ஆனால் நீர் இங்கே வந்த காரணம் என்ன? இந்த நிலையில்?...”

“ஓ! பயங்கரமான விஷயங்கள்! நான் தேவாலயத்திலிருந்தேன். அந்த அடையாளம்! தேவாலயக் கதவு கொண்டி கழன்று விட்டது. ஊதா நீல ஆலயத் திரைச் சீலை கிழிந்து தொங்குகிறது. பரிசுத்தத்திலும் பரிசுத்த ஸ்தலம் திறந்து கிடக்கிறது. நம் மேல் சாபம் விழுந்து விட்டது!” இப்படிச் சொல்லிக் கொண்டே கமாலியேல் மேலே ஏறுகிறார், சோதனையால் பித்துப் பிடித்தவராக.

சூசையும் நிக்கோதேமுஸும் அவர் போவதைப் பார்க்கிறார்கள்... ஒருவரையொருவர் பார்க்கிறார்கள்... “இந்தக் கற்கள் என் கடைசி வார்த்தையைக் கேட்டு நடுங்கும்” என்று அவர் இவருக்கு வாக்களித்திருந்தாரே” என்று இருவருமே சொல்கிறார்கள்.

அவர்கள் வேகமாய் பட்டணத்தை நோக்கிப் போகிறார்கள்.

சுற்றுப் புறங்களில், கல்வாரி மலைக்கும் பட்டணத்தின் மதில்களுக்குமிடையிலும், அதற்கப்பாலும் பலர் புத்தி சுயாதீனமிழந்தவர்கள் போல் அந்த மங்கல் வெளிச்சத்தில் அலைந்து கொண்டிருக்கிறார்கள்... அவர்கள் ஊளைக் கூச்சலிடுகிறார்கள்... அழுது புலம்புகிறார்கள்... சிலர் “அவன் இரத்தம் நெருப்பு மழையாகப் பாய்கிறது” என்கிறார்கள். சிலர்: “ஜெஹோவா மின்னல் நடுவில் தோன்றி தேவாலயத்தை சபித்து விட்டார்” என்கிறார்கள். வேறு சிலர்: “கல்லறைகள்! கல்லறைகள்!” என்று புலம்புகிறார்கள்.

பட்டண மதில் மேல் தன் தலையை மோதிக் கொண்டிருக்கிற ஒருவனைப் பிடித்து இழுத்துக் கொண்டே பட்டணத்திற்குள் வருகிறார் அரிமத்தியா சூசை. “சீமோன்! நீ என்ன சொல்கிறாய்?” என்று கேட்கிறார்.

“என்னை விடும். நீரும் செத்து விட்டீர். எல்லாரும் செத்து விட்டார்கள். எல்லாரும் வெளியேறி விட்டார்கள். அவர்கள் என்னை சபிக்கிறார்கள்.”

“அவன் சுயாதீனம் இழந்து விட்டான்” என்கிறார் நிக்கோதேமுஸ்.

அவனை விட்டு விட்டு அவர்கள் காவல் அலுவல் கூடத்திற்கு வருகிறார்கள். பட்டணம் பயப்பிராந்தியில் மூழ்கிக் கிடக்கிறது. ஜனங்கள் தங்கள் மார்பில் அறைந்து கொண்டு அலைந்து திரிகிறார்கள். ஒரு குரல் சத்தம் அல்லது காலடி ஓசை கேட்டதும் பின்புறமாகக் குதிக்கிறார்கள். சுற்றிப் பார்க்கிறார்கள் – பயந்து கொண்டே.

நிக்கோதேமுஸ் வேகமாக நடப்பதற்கு உதவியாக தம் இருண்ட நிற அங்கவஸ்திரத்தை கொல்கொத்தாவில் விட்டுவிட்டார். அவர் வெண்மையான கம்பளி அங்கியில் இருக்கிறார். அப்படியே அவர் ஒரு தெருவில் நிழல் கவிழும் பல கவான் வளைவுகள் ஒன்றில் வரும்போது, பயந்து ஓடும் ஒரு பரிசேயன் அவரைக் கண்டு பயந்து கத்துகிறான். பின் அது நிக்கோதேமுஸ்தான் என்று கண்டுபிடித்த அப்பரிசேயன் ஒரு விநோத ஆர்வத்துடன் அவர் கழுத்தைக் கட்டிக் கொண்டு: “என்னைச் சவியாதேயும். என் தாய் எனக்குக் காணப்பட்டு, “நீ நித்தியத்திற்கும் சபிக்கப்பட்டவனாயிரு” என்று சொன்னாள்” என்கிறான். பின் அப்படியே தரையில் விழுந்து கிடந்து, “எனக்குப் பயமாயிருக்கிறது” என்று புலம்புகிறான்.

“எல்லாரும் பைத்தியமாகி விட்டார்கள்” என்று கூறியபடி சூசையும் நிக்கோதேமுஸும் காவல் அலுவல் கூடத்தை அடைகிறார்கள். அங்கே பிலாத்துவைக் காணக் காத்திருக்கும் போதுதான் இவ்வளவு பயங்கரத்திற்கும் என்ன காரணம் என்று கண்டுபிடிக்கிறார்கள். பூமியதிர்ச்சியினால் அநேக கல்லறைகள் திறக்கப்பட்டன. அவற்றிலிருந்து எலும்புக் கூடுகள் வெளியே வந்து, தற்காலிகமாக மனித உருவம் பெற்று, நடந்த தேவ கொலைக்குக் காரணமானவர்களைக் குற்றஞ்சாட்டி சபித்ததாக அநேகர் ஆணையிட்டுக் கூறியதாக அறிகிறார்கள்.

அவர்களை காவல் அலுவலகத்தின் முன்மண்டபத்தில் விட்டு விடுகிறேன். அவர்கள் மூடத்தனமாக பயங்களும், அசுத்தம் பட்டு விடக் கூடுமென்ற அச்சமுமில்லாமல் அங்கே நுழைகிறார்கள்.



நான் கல்வாரியில் கமாலியேலிடம் போகிறேன். அவர் அதன் உச்சியை அடைந்து விட்டார். களைப்படைந்து விட்டார். மார்பில் பிழை தட்டிக் கொண்டே நடக்கிறார். அவர் முதல் சமதளத்தை அடைந்ததும் தரையில் சாஷ்டாங்கமாக விழுகிறார். விழுந்து அழுது கொண்டே: “அந்த அடையாளம்! அந்த அடையாளம்! என்னை நீர் மன்னிப்பதாகச் சொல்லும்! இரகசியமாகப் போதும்! நீர் என்னைக் கேட்டு என்னை மன்னிப்பதாகச் சொல்லும்!” என்கிறார்.

சேசு இன்னும் உயிரோடிருப்பதாக நினைத்து கமாலியேல் இப்படி சொல்வதாக நினைக்கிறேன். அப்போது ஒரு சேவகன் அங்கே வந்து ஒரு ஈட்டியால் அவரை நகர்த்தி: “எழுந்திரும். அமைதியாயிரும். இனி பயனில்லை. இதை நீர் முன்பே நினைத்திருக்க வேண்டும். அவர் இறந்து விட்டார். நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த மனிதன் உண்மையிலேயே தேவ குமாரனாயிருந்தார். இதை அஞ்ஞான மார்க்கத்தானாகிய நான் உமக்குச் சொல்கிறேன்” என்கிறான். அதன்பிறகே கமாலியேல் கண்டுபிடிக்கிறார் சேசு இறந்து விட்டார் என்பதை.

“இறந்து விட்டீரா! நீரா? ஓ!...” என்று கூறிய கமாலியேல், பயம் நிரம்பிய தன் முகத்தை அம்மங்கலான மாலை வெளிச்சத்தில் மலை உச்சி வரையிலும் உயர்த்திப் பார்க்கிறார். அவரால் அதிகம் காணக் கூடாவிட்டாலும் சேசு இறந்து விட்டார் என்கிற அளவிற்குப் பார்க்க முடிகிறது. மாதாவை ஆறுதல்படுத்துகிற பரிவுள்ள கூட்டத்தையும் அவர் காண்கிறார். அருளப்பர் சிலுவையின் இடது பக்கம் நின்று அழுவதையும், லோஞ்ஜினுஸ் வலது பக்கமாக மரியாதையுடனும், கம்பீரத்துடனும் நின்று கொண்டிருப்பதையும் பார்க்கிறார்.

பின் கமாலியேல் முழங்காலிட்டு, கைகளை விரித்துக் கொண்டு கண்ணீர் சிந்தியபடி: “நீர்தான் அவர்! நீர்தான் அவர்! நாங்கள் இனி மன்னிக்கப்பட முடியாது. உம்முடைய இரத்தம் எங்கள் மேல் விழும்படி கேட்டுக் கொண்டோம். அது பரலோகத்தை நோக்கிக் கூப்பிடுகிறது. பரலோகம் எங்களுக்கு சாபமிடுகிறது... ஓ! ஆனால் நீரே இரக்கமல்லவா?... யூதாவின் சிதைக்கப்பட்டுவிட்ட ராபியாகிய நான் உம்மிடம் கேட்கிறேன். இரக்கத்தினிமித்தம் உமது இரத்தம் எங்கள்மேல் வரக்கடவது. அதை எங்கள் மேல் தெளித்தருளும். ஏனென்றால் உம்முடைய இரத்தம் மாத்திரமே எங்களுக்காக மன்னிப்பு கேட்க முடியும்.”

இப்படிச் சொல்லி அழுகிறார் கமாலியேல். பின் தாழ்ந்த குரலில் தம் உள்ளத்தின் வாதனையைச் சொல்கிறார்: "நான் கேட்ட அடையாளத்தைப் பெற்றுக் கொண்டேன்... ஆனால் யுக யுகங்களாக வந்த ஞான அந்தகாரம் என் அகப்பார்வையின் மேல் இருக்கிறது. என்னுடைய இப்போதைய விருப்பத்திற்கெதிராக என் கடந்தகால அகங்கார நினைவின் குரல் எழும்புகிறது... என் மேல் இரக்கமாயிரும், உலகத்தின் ஒளியாயிருக்கிறவரே! உம்மைக் கண்டுபிடியாத இருட்டின்மேல் உம்முடைய ஒரு ஒளிக்கதிர் இறங்கும்படி செய்யும். தான் நீதி என்று நினைத்ததற்குப் பிரமாணிக்கமாய் இருந்த முதிய யூதேயன் நான். ஆனால் அது தப்பறையாயிற்று. இப்பொழுது நான் ஒரு பாழ்நிலம். என்னிடம் புராதன விசுவாசத்தின் புராதன மரங்கள் எதுவும் இல்லை. என்னிடம் புதிய விசுவாசத்தின் எந்த விதையும் காம்பும் இல்லை. வறண்ட பாலைவனமாகி விட்டேன். பிடிவாதமுள்ள முதியோனை இந்த இஸ்ராயேலனின் பரிதாபத்திற்குரிய இருதயத்தில் உம்முடைய நாமத்தையுடைய ஒரு மலரை மலரச் செய்யும் புதுமையை ஆற்றும். நீர் விடுதலையளிப்பவராகையால் சம்பிரதாயங்களுக்குள் சிறைப்பட்ட என் சிந்தனைக்குள் வாரும். "அவர் அநேகருடைய பாவங்களைச் சுமந்தார். பாவிகளுக்காக மன்றாடினார்..." என்று இசையாஸ் உரைக்கிறாரே. ஓ! நசரேயனே! என்னுடைய பாவங்களையும்..."

கமாலியேல் எழுந்து நின்று சிலுவையை நோக்குகிறார். அது பிரகாசமடைகிற வெளிச்சத்தில் மேலும் துலக்கமாகிறது. அதன்பின் கமாலியேல் கூன்பட்டு முதுமையுற்று உடைந்தவராகத் திரும்பிச் செல்கிறார்.

கல்வாரியில் இடைக்கிடையே கேட்கும் மாதாவின் அழுகுரல் தவிர மற்றப்படி மவுனம் நிலவுகிறது. இரு கள்வர்களும் பயத்தால் மேற்கொள்ளப்பட்டு, வாய்மூடி விட்டனர்.

நிக்கோதேமுஸூம் சூசையும் ஓடோடி திரும்பி வருகின்றனர். பிலாத்துவின் உத்தரவு கிடைத்து விட்டது என்று சொல்கிறார்கள். ஆயினும் லோஞ்ஜினுஸ் ஒரு குதிரை வீரனை பிலாத்துவிடம் அனுப்புகிறான். மற்ற இரு கள்வர் வியமாக எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்றும் கேட்டு அனுப்புகிறான். அந்த சேவகன் ஓடிச் சென்று திரும்புகிறான். சேசுவை ஒப்படைத்து விடவும் யூதரின் விருப்பப்படி மற்ற இரு கள்வரின் கால்களை முறிக்கவும் உத்தரவு பெற்று வருகிறான்.



லோஞ்ஜினுஸ் நான்கு கொலைஞர்களையும் அழைக்கிறான். அவர்களோ நடந்தவைகளால் பயங்கரமடைந்து ஒரு பாறைக்கடியில் பதுங்கிக் கிடக்கிறார்கள். கள்வர்கள் இருவருக்கும் தடியால் மரண அடியைக் கொடுக்கும்படி கட்டளையிடுகிறான். தீஸ்மா எதுவும் எதிர்ப்பில்லாமல் அதைப் பெறுகிறான். அவன் முழங்கால்களில் முதலிலும் நெஞ்சில் அடுத்ததாகவும் கனத்த அடி மரணத் தாக்குதலைச் செய்கிறது. அவனுடைய வாய் அம்மரண இழுப்பொலியில் சேசுவின் பெயரை உச்சரிக்கிறது. அத்திருநாமம் அவன் உதடுகளில் மற்றுப் பெறவில்லை. மற்றக் கள்வன் கொடிய சாபங்களைச் சொல்லுகிறான். இருவரின் மரணக் குரல்களும் துயரந் தோய்ந்திருக்கின்றன.

அந்நான்கு கொலைஞர்களும் சேசுவை சிலுவையிலிருந்து இறக்க உதவ முன்வருகின்றனர். ஆனால் சூசையும், நிக்கோதேமுஸூம் அவர்களை விடவில்லை. சூசை தம் மேல் வஸ்திரத்தை எடுத்து விட்டு அருளப்பரையும் அப்படிச் செய்யச் சொல்கிறார். பின் ஏணியைப் பிடித்துக் கொள்ளும்படி கூறி அவர்கள் இருவரும் நெம்புகோல், பற்றுக் குறடு, ஆயுதங்களுடன் ஏறுகிறார்கள்.

மாதா மற்ற ஸ்திரீகளால் தாங்கப்பட்டு நடுங்கியபடி சிலுவையின் பக்கம் வருகிறார்கள்.

போர்ச் சேவகர்கள் தங்கள் கடமை முடிந்து அங்கிருந்து போகிறார்கள். லோஞ்ஜினுஸ் கீழேயுள்ள சமதளத்தைத் தாண்டிச் செல்லும் போது தன் குதிரையில் இருந்தபடியே திரும்பி மாதாவையும் சேசுவையும் பார்க்கிறான். அதற்குப்பின் குதிரையின் குளம்புச் சத்தமும் அவனுடைய ஆயுதங்கள் கவசத்தில் பட்டு எழும் ஒலியும் மங்க அப்படியே சென்று விடுகிறான்.

சேசுவின் இடது உள்ளங்கை ஆணி கழற்றப்படுகிறது. சிலுவையிலிருந்து ஒரு பாகம் விடுபட்டுள்ள சரீரத்தோடு அந்தக் கை சேர்ந்து தொங்குகிறது.

ஏணியைப் பெண்களிடம் விட்டு விட்டு அருளப்பரையும் மேலே ஏறும்படி சொல்கிறார்கள். அவர் நிக்கோதேமுஸ் நின்ற இடத்தில் ஏறி நின்று கொண்டு சேசுவின் கரத்தை தம் கழுத்தைச் சுற்றிப் போட்டுப் பிடித்துக் கொள்கிறார். சேசுவின் உடல் அவருடைய தோளில் தொங்குகிறது. அவர் சேசுவின் இடையை

கரத்தால் சுற்றியிருக்கிறார். இடது கரத்தின் பெரிய திறந்த காயத்தைத் தொடாதபடி விரல்களின் நுனிகளால் தொட்டுப் பிடித்திருக்கிறார். கால்களின் ஆணி கழற்றப்படும் போது, அருளப்பர் தன் குருவின் சரீரத்தைச் சிலுவைக்கும் தனக்குமிடையில் பெரு முயற்சி செய்து தாங்க வேண்டியிருக்கிறது.

மாதா சிலுவையின் அடியில் அதில் முதுகு சாய்ந்தபடி உட்கார்ந்திருக்கிறார்கள். தன் மடிமேல் சேசுவின் சரீரத்தை ஏற்றுக் கொள்ள ஆயத்தமாயிருக்கிறார்கள்.

வலது கரத்தின் ஆணியைக் கழற்றுவதுதான் எல்லாவற்றிலும் கடினமாயிருக்கிறது. அருளப்பர் என்ன முயற்சி செய்தும், சரீரம் முழுவதும் முன்னால் சாய்ந்து தொங்குகிறது. ஆணியின் மொட்டு சதைக்குள் ஆழமாக இறங்கியிருக்கிறது. அக்காயத்தை மோசமாக்கிவிட மனமில்லாத இரக்கமுள்ள அவ்விருவரும் கஷ்டப்பட்டு வேலை செய்கிறார்கள். கடைசியாக அந்த ஆணி குறடுகளால் பிடித்து மெதுவாக இழுக்கப்படுகிறது.

இந்நேரம் முழுவதும் அருளப்பர் சேசுவை அவருடைய தோளின் கீழாக தாங்கிப் பிடித்துக் கொண்டிருக்கிறார். சேசுவின் சிரசு அருளப்பருடைய தோளில் சாய்ந்து தொங்குகிறது. சூசையும் நிக்கோதேமுஸூம், சேசுவை ஒருவர் தொடையிலும், ஒருவர் முழங்காலிலுமாகப் பிடித்துக் கொண்டு கவனத்தோடு ஏணியில் இறங்கி வருகிறார்கள்.

கீழே சரீரம் கொண்டு வரப்பட்டதும் அவர்கள் தங்கள் மேல் வஸ்திரங்களை விரித்து அதன்மேல் விரிக்கப்பட்டிருக்கிற துகிலின் மீது ஆண்டவரை வைக்க விரும்புகிறார்கள். ஆனால் மாதா ஆண்டவரைக் கேட்கிறார்கள்.

அவர்கள் சேசுவை மாதாவிடம் கொடுக்கும்போது முள்முடி சூடிய சிரசு பின்புறமாக விழ, காயப்பட்ட கரங்கள் தரையை நோக்கித் தொங்குகின்றன. அக்கரங்கள் மண்ணில் படாதபடி பக்தியுள்ள ஸ்திரீகள் தாங்கிக் கொள்கின்றனர்.

இப்போது சேசு தம் தாயின் மடியில் வளர்த்தப்பட்டிருக்கிறார். களைத்துப் போன ஒரு பெரிய குழந்தை தன் தாயின் மடியில் சுருண்டு படுத்துத் தூங்குவது போலிருக்கிறது. மாதா தன் வலது கரத்தால் சேசுவின் தோளைச் சுற்றிப் பிடித்துக் கொண்டு, இடது கரத்தால் கீழ் முதுகுப் பக்கத்திலும், அடி வயிற்றிலும் அவரைத் தாங்கிக் கொள்கிறார்கள்.



சேசுவின் சிரசு அவருடைய தாயின் தோள்மேல் சார்த்தப்பட்டிருக்கிறது... உள்ளத்தை உருக்கும் குரலால் மாதா சேசுவைக் கூப்பிடுகிறார்கள். பின் அவருடைய கரங்களை எடுத்து நீட்டி அவற்றை முத்தமிட்டு அக்காயங்களின் மேல் கண்ணீர் சிந்துகிறார்கள். அக்கரங்களைத் திரு உடலின் மேல் மடக்கி வைக்கிறார்கள். அவருடைய கன்னங்களையும் விசேஷமாய் காயப்பட்டுக் கன்றி வீங்கிப் போன இடங்களிலும் தடவி குழிந்த போன திருவிழிகளிலும் முத்தமிடுகிறார்கள். அவருடைய திருவாய் வலது பக்கமாய் சற்றுத் திருகி பாதி திறந்திருக்கிறது.

கலைந்து இரத்தத்தால் சிக்குப் பிடித்திருக்கிற சேசுவின் தாடியை மாதா ஒழுங்குபடுத்துகிறார்கள். அதன் பின் தலை முடியையும் அப்படிச் செய்ய விரும்புகிறார்கள். ஒரு கையால் மட்டுமே அதைச் செய்கிறார்கள். முள்முடியை எடுக்க முயல்கிறார்கள். முள் அவர்கள் கையில் குத்தி விடுகிறது. தானே முள் முடியை எடுக்க விரும்பி மற்றவர்களின் உதவியை மாதா ஏற்கவில்லை: ''வேண்டாம். நானே எடுக்கிறேன்'' என்கிறார்கள். எவ்வளவு நுட்பமாக அதைச் செய்கிறார்களென்றால், இப்போதுதான் பிறந்த குழந்தையைக் கையாளுவது போல் அவ்வளவு மென்மையுடன் செய்கிறார்கள். முள்முடியை எடுத்ததும், அதனால் ஏற்பட்ட கிழிவுகளைக் குனிந்து முத்தம் செய்கிறார்கள்.

நடுங்கும் கரத்தோடு அவருடைய குழம்பிக் கிடக்கிற தலைமுடியை வகுத்து ஒழுங்கு செய்து அழுகிறார்கள். மெதுவான குரலில் பேசி அவருடைய சரீரத்தில் சிந்தி விழும் தன் கண்ணீரை விரல்களால் துடைக்கிறார்கள். சேசுவின் குளிர்ந்துவிட்ட சரீரத்தில் படிந்து மூடியிருக்கிற இரத்தக் கறைகளை தன் கண்ணீராலும், தன் துகிலாலும் சுத்தம் செய்ய எண்ணி சேசுவின் இடையைச் சுற்றியிருக்கிற துகிலின் ஒரு அற்றத்தை எடுத்து துடைக்கத் தொடங்குகிறார்கள். காயப்பட்ட அவருடைய முகத்தையும் கரங்களையும் கிழிந்து போன முழங்கால்களையும் தொட்டுத் தொட்டுப் பரிதாபப்பட்டு அழுது கொண்டே மீண்டும் இரத்தத்தைத் துடைக்கிறார்கள்.

மாதா அப்படித் துடைக்கும்போது சேசுவின் விலாக் காயத்தினுள் அதில் சுற்றிய அவர்களின் சிறு கை ஏறக்குறைய முழுவதும் நுழைந்து விடுகிறது. குனிந்து அதைப் பார்க்கிறார்கள். அங்கே கிழிக்கப்பட்ட நெஞ்சினுள் தன் மகனுடைய குத்தித்

திறக்கப்பட்ட இருதயத்தைக் காண்கிறார்கள். அப்போது அவர்களுடைய இருதயத்தையும் ஒரு வாள் குத்தித் திறப்பதை உணருகிறார்கள். அப்படியே கதறிக் கொண்டு அவருடைய திருச்சரீரத்தின் மேல் விழுந்து இறந்து விட்டது போல் கிடக்கிறார்கள்.

மற்றவர்கள் மாதாவுக்கு உதவி புரிந்து ஆறுதல் கூறுகிறார்கள். இறந்த அவர்களின் குமாரனை அவர்களிடமிருந்து எடுப்பதற்கு முயற்சி செய்கிறார்கள். ஆனால் அவர்களோ சத்தமிட்டு: "என் மகனே, எங்கே உம்மை நான் அடக்கம் செய்வேன்? பாதுகாப்பாகவும், உமக்குத் தகுதியாகவும் இடம் எங்கேயிருக்கிறது?" என்கிறார்கள்.

அப்போது அரிமத்தியா சூசை தன கைகளை மார்பில் சார்த்திக் கொண்டு மிகவும் மரியாதையுடன் குனிந்து சொல்கிறார்: "திடங்கொள்ளும் ஸ்திரீயே! என்னுடைய கல்லறை புதுக் கல்லறை. அது ஒரு பெரிய மனிதருக்குத் தகுதியானது. அதை நான் அவருக்குக் கொடுக்கிறேன். மேலும் என் நண்பரான நிக்கோதேமுஸ் பூச வேண்டிய வாசனைத் திரவியங்களை எடுத்துக் கொண்டு ஏற்கெனவே அங்கே போயிருக்கிறார். அவர் அதைக் காணிக்கையாக்க விரும்புகிறார். உம்மை நான் கேட்டுக் கொள்கிறேன்: "இதோ இருள் வரவிருக்கிறது. நாம் அலுவலைத் தொடருவோம்... இன்று ஓய்வு நாளுக்கு ஆயத்த நாள். பரிசுத்த ஸ்திரீயே, இணங்கும்" என்கிறார்.

அதேபோல் அருளப்பரும் பக்தியுள்ள ஸ்திரீகளும் சேசுவை மாதாவின் மடியிலிருந்து எடுக்க அனுமதிக்கும்படி அவர்களிடம் கேட்கிறார்கள். மாதா எழுந்து நிற்கிறார்கள். துயரக் கோலமாயிருக்கிறார்கள். மற்றவர்கள் அவரை ஒரு நீண்ட துப்பட்டியால் மூடுகிறார்கள். "மெதுவாகச் செய்யுங்கள்" என்று மாதா கெஞ்சுகிறார்கள்.

நிக்கோதேமுஸூம் அருளப்பரும் சேசுவின் தோள் பக்கமாகவும், அரிமத்தியா சூசை ஆண்டவரின் பாதங்கள் பக்கமாகவும் நின்று திருச்சரீரத்தைத் தூக்குகிறார்கள். அதை மூடியுள்ள துப்பட்டியோடும் கீழே விரித்திருந்த மேல் வஸ்திரங்களோடும் சேர்த்துத் தூக்குகிறார்கள். அப்படியே பாதை வழியாகக் கீழே கொண்டு வருகிறார்கள்.

மாதாவும் அல்பேயுஸ் மேரியாலும், மரிய மதலேனாலும்



தாங்கப்பட்டு, இறங்கி கல்லறையை நோக்கிப் போகிறார்கள். மார்த்தா பின்னால் நடந்து வருகிறாள். செபதேயுவின் மேரியும் சூசான்னாளும் தங்களுடன் ஆணிகளையும் குறடுகளையும் முள்முடியையும் உறிஞ்சியையும் அது மாட்டப்பட்ட பொடிப் பிரம்பையும் கொண்டு வருகிறார்கள்.

கல்வாரியிலே மூன்று சிலுவைகளும் நிற்கின்றன. நடுவில் நிற்கும் சிலுவை காலியாயிருக்கிறது. மற்ற இரண்டிலும் உயிர் வற்றிப் போய்க் கொண்டிருக்கிற இருவரும் இருக்கிறார்கள்.

**சேசு கூறுகிறார் :**

கவனி: கல்லறையில் அடக்கம் செய்யப்பட்ட நிகழ்ச்சியை உனக்கு இப்போது காட்டவில்லை. சென்ற ஆண்டு பெப்ருவரி 19–ல் (1944) அது நன்கு விவரிக்கப்பட்டுள்ளது. அதைப் பயன்படுத்திக் கொள். மேலும் அதன் முடிவில் 1944 அக்டோபர் 4–ல் நான் கொடுத்த மாதாவின் புலம்பலை உன் ஆன்மகுரு சேர்க்கட்டும். அதற்குப்பின் நீ காணும் புதுக்காட்சிகளை வை. அவை திருப்பாடுகளின் புதிய பாகங்கள். குழப்பமும் விடுப்பும் ஏற்படாதபடி அதனதன் இடத்தில் அவை வைக்கப்பட வேண்டும்.

**ஜெபம்**

என்னை நரகத்திலிருந்து காப்பாற்றி நித்திய ஆனந்தத்தை நான் அடையும்படி இத்தனை கொடிய பாடுகளைப் பட்டு உயிரைத் தந்த என் அன்புள்ள இரட்சகரே! எனக்காக இத்தனை வாதனைகளை சேசுவுடன் இணைந்து அனுபவித்த என் நேச மாதாவே! நான் என் பாவங்களையெல்லாம் விட்டு பரிசுத்த வாழ்வடையவும், மோட்சத்தில் உங்களிடம் வந்தடையவும் எனக்கருளும்படி உங்களை மன்றாடுகிறேன்.